190



பேரறிஞர் அண்ணாவின்

# சொர்க்க வாசல்

பூம்புகார் வெளியீடு

# சொர்க்கவாசல்

# சொர்க்கவாசல்


பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம்.ஏ.,



பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 7-90

37107

பூம்புகார் வெளியீடு எண்: 156
முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1980
உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை

---

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை-600 001.

# பதிப்புரை

நாடகம் என்பது ஒரு நாட்டின் கலையை, கலாச்சாரப் பண்பை, நாகரிக வளர்ச்சியைப் பிற நாட்டினருக்கு எடுத்துக் காட்டும் அளவுகோலாகும்.

அதுபோலவே....

நாடகம் எனப்படுவது ஒரு நாட்டில் அல்லது சமூகக் கோட்பாட்டில் இருக்கும், 'நல்லது—கெட்டது' ஆகியவற்றை விளக்கிக் காட்டுவது மட்டுமல்ல, அதற்கான பரிகாரத்தைத் தேடித் தருவதுமாகும்.

இது கலை. இந்தக் கலைக்கு, நமக்கு முன்னே வாழ்ந்த மூத்தவர்கள், 'கூத்து' என்று முடிசூட்டி முத்தமிழ் நாட்டை வலம்வரச் செய்தனர். அத்தகைய 'கூத்து' என்னும் துறையை பின்பற்றிய பின்வந்தோர், அதன் மூலமாக இனவுணர்ச்சி மங்கவும், இதிகாச புராணங்கள் தலைதூக்கவும், சுயபுத்தி சிதறவும் பெரிதும் பயன்படுத்தி வந்தனர்; அதிலே வெற்றியும் கண்டனர்.

ஆம்; மனித மனத்தைக் கவரும் சக்தி எதற்கு உண்டோ, அது கலையாகும். அந்தக் கலைக்குள் புகுத்தப்படும் கருத்து எதுவானாலும் அது மனித மனத்துக்குள் இலகுவாகப் புகுந்து, அந்தக் கருத்துக்கேற்ப நடக்கச் செய்துவிடும்.

அப்படிப்பட்ட வில்லங்கமான—விபரீதக் கருத்துக்கள் கொண்ட—காட்சி நிறைந்த கூத்தினை நடத்தி, தன்மானத்தோடு வாழ்ந்த தமிழனைத் தரைமட்டமாக்கி, வைரம் பாய்ந்த நெஞ்சை தைரியமில்லாததாக்கி, எதற்கும், 'ஏன்' என்று கேட்டு வாழ்ந்தவனை, அப்படிக் கேட்பது 'வீண்' என்று நினைக்கும்படியாகச் செய்த ஒரு காலத்தில் நாம் இல்லை.

அவ்விதம் செய்யப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு கட்டத்தில்தான் மாயக்கலையில் வல்ல மன்னன் – நமது அண்ணன், அதே நாடகக் கலையின் வாயிலாகத் தாழ்ந்து கிடந்த தமிழகத்தை உயர்த்தும் பணியை மேற்கொண்டார்.

எந்த ஒரு நாடகக் கலையின் மூலமாக நாட்டு மக்களின் சொல்—செயல் இரண்டையும் மாறுபடச் செய்தார்களோ, அதே கலையின் வாயிலாக இதே தாயகத்தை—தமிழகத்தை மீண்டும் விழிக்க வைக்க 'நாடகம்' சமைக்கத் துவங்கினார்.

இன்றளவும் உலக அரங்கில் போற்றப்பட்டு வருகின்ற ஷேக்ஸ்பியர், பெர்னார்ட்ஷா போன்ற நாடக மேதைகளின் நாடகங்களில் எல்லாம் மனத்தைத் திருத்திப் பக்குவப்படுத்தும் துளிகளையே பரவலாகக் காண முடியும். ஆனால் அறிவுலக மேதை அண்ணா அவர்கள் தீட்டிய ஒவ்வொரு நாடகமும் மனித உள்ளங்களைத் திறக்கும் திறவுகோலாகும்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று போன்ற பல்வேறு துறைகளில் மக்களுக்குப் "பற்று" வரும்படியாக நாடகத் துறையில் மறுமலர்ச்சியும், மக்கள் மனத்தில் புத்துணர்ச்சியும், பொதுவாகத் தமிழரங்கில் விழிப்புணர்ச்சியும்

ஏற்படத் செய்த ஏந்தல் டாக்டர் பேரறிஞர் அண்ணா அவர்களே யாவார்.

விழலுக்கு இறைக்கப்பட்ட நீரை வயலுக்குத் திருப்பி, மக்கள் வாழ்வுக்கு முதல் ஜீவனாக விளங்கியவர்.

நாடக இலக்கணப்படி யுக்திகளை மேற்கொண்டு, காட்சிக்குக் காட்சி நாடகத்தில் மட்டுமல்ல, நாட்டிலும் நல்ல திருப்பம் ஏற்பட வைத்த நாயகர் அவர்.

மொழி நமக்கு விழி என்றால், அவ்விழிக்குள் இருக்கும் ஒளி நாடகம்!

மக்களை வழிநடத்திச் செல்லும் மகத்தான சாதனம் இது.

இந்தச் சாதனத்தின் மூலம் தமிழகத்தின் ஜாதகத்தை மாற்றி அமைத்தவர் அமரர் அண்ணா. அவர்கள் சிருஷ்டித்த ஓரங்க நாடகங்கள் ஓராயிரம்; முழுமை நாடகம் ஒவ்வொன்றும் விலையில்லா மாணிக்கம்; இருளை அகற்றும் கைவிளக்கு. வருங்காலச் சந்ததிகள் கட்டாயம் நெஞ்சில் நிறுத்த வேண்டிய இமாலயச் சிகரம்!

ஆம்!

நாட்டுக்கென்று அவர் படைத்த அத்தனை நாடகங்களையும், கதை, கட்டுரைகளையும் புத்தக வடிவில் கொண்டு வர—உங்கள் கரங்களில், கண்களில் தவழவிட எங்களுக்கு

முழு உரிமை வழங்கி இருக்கும் திருமதி. இராணிஅண்ணா துரை அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றி.

இதோ, அமரர் அண்ணா அவர்கள் சிருஷ்டித்த சரித்திரப் புரட்சி நாடகம்.

இது கைவிளக்கு மட்டுமல்ல; கலங்கரை விளக்கும்கூட!

படியுங்கள்; பயனடையுங்கள்!

**பூம்புகார் பிரசுரத்தார்**

# சொர்க்கவாசல்

காட்சி—1.

இடம்: மதிவாணன் மலர்த்தோட்டம்.

இருப்போர்: திலகா, மதிவாணன்.

[வல்லியூரில் ஒருமலர்த்தோட்டம். தோட்டத்தின் நடுவே ஒரு சிறு வீடு. கவர்ச்சிகரமானதாக —கலையிலே நாட்டமுள்ளவனின் வீடு என்பதை விளக்கும் குறிகளும், சாதனங்களும் வீட்டிலே காணப்படுகின்றன. செடி கொடிகள் அழகாக, ஒரு புறம் புறாக்கள்; மற்றோர் புறம் ஆட்டுக் குட்டிகள்; இன்னோர் புறம் கோழிக் குஞ்சுகள்; செயற்கைக் குளம். அதிலே வாத்துக்கள், மயில்—புறாக்களுக்குத் தீனி தூவிக் கொண்டிருக்கிறாள் திலகா — சுறுசுறுப்பான சுபாவமும், களங்கமற்ற உள்ளமும் கொண்டவளாக காணப்படுகிறாள்—இனிய இசை கேட்டு ஒலி வரும் திக்கு நோக்குகிறாள் புன்னகையுடன்— மலரைப் பறித்த வண்ணம் பாடிக்கொண்டிருக்கிறான் மதிவாணன். மதிவாணன் பாடலைக் கேட்டு ரசித்தபடி திலகா அருகே வருகிறாள். அருகே வந்த திலகவதியிடம், பறித்த மலர்களையும், பூந்தோட்டத்தையும் காட்டுகிறான் மதிவாணன். திலகவதி, அண்ணன் இசை கேட்டு இன்புறுகிறாள். எனினும் கருத்தைக் கேலி செய்வது போலக் குறும்பாகப் பார்க்கிறாள். அதை உணர்ந்து கொண்ட மதிவாணன் பாடலைத் தொடர்ந்து பாடுகிறான். சலிப்புற்றவள் போலத்

[திலகா உள்ளே போகக் கிளம்பவே மதிவாணன் ஓடிச்சென்று அவளைத் தாவிப் பிடித்து இழுத்து வந்து, மலர்க் குவியலைக் காட்டியபடி மேலும் பாடுகிறான்—திலகா மேலும் பாட விடாமல் தடுத்து...]

தில: மலரால் மகுடமா?

மதி: (கனிவுடன்) ஆமாம் திலகா! இன்று இந்த மலர் முழுவதும் உனக்கேதான். மகுடம், செண்டு, மாலை...

தில: (கேலியாக) பச்சை, கெம்பு, மரகதம்...

மதி: அவையாகுமா இவை என்று கேலி செய்கிறாய், திலகா! உனக்கு மாளிகைகளைப் பார்த்துப் பார்த்து இந்த மன மயக்கம் அதிகமாகிவிட்டது.

தில: மரம், செடி, கொடிகளுடன் பழகிப் பழகி நீ தவசியாகிவிட்டாயே, அதுபோலத்தான் அண்ணா! ஏதோ, உன்னால் எனக்கு இந்த மலர்களையாவது தர முடிகிறதே... அடடா! தப்பு, தப்பு...அது கூட முடியாது—

மதி: என்ன திலகா! ஏன் தர முடியாது—இதோ மலர் மாரி பொழிகிறது பார்.

[என்று கூறியபடி பூக்குடலையைத் தூக்குகிறான், திலகா மீது கொட்ட. திலகா வெடுக்கென்று குடலையைப் பிடுங்கிக் கீழே வைத்தபடி.]

தில: ஊர்த்தலைவர் சோமநாதர் உத்தரவு. இன்று நம் தோட்டத்து மலர் அவ்வளவும் மாளிகைக்கு அனுப்பியாக வேண்டும்.

மதி: ஏனாம்?

தில: வேண்டுமாம்.

மதி: அதுதான் நான் ஏன் என்று கேட்கிறேன்.

தில: நானுந்தான் கேட்டேன். இன்று அவருடைய திருமகன் வருகிறாராம்...திருவிழாவாம் மாளிகையிலே! அதற்கு மலர் தானம் செய்ய வேண்டுமாம். (கண்டிப்புடன்) மலர் தர முடியாது என்று கூறிவிட்டேன்.

மதி: சேச்சே! பாபம்! சோமநாதருக்கு அவர் மகனிடம் உயிர் திலகா! நடுநாட்டரசன் சபையிலே பெரிய பதவியாம் அவனுக்கு. பெயர், முத்துமாணிக்கம்.

தில: அதனால்?

மதி: (பூக்குடலைகளில் மலர்களை நிரப்பியபடி) உனக்கு, நாளைக்கு; இன்று மலரை அவருக்குக் கொடுத்து விடலாம். ஆனந்தமடைவார்.

[என்று கூறிக் கொண்டே மலர்க் கூடையை எடுத்துக் கொண்டு புறப்படுகிறான்—திலகா, இந்த உரையாடலின்போது, மலர்களைக் கொண்டு, 'தவசி மதிவாணன்' என்று பொறிக்கிறாள்—அதைக் கண்டு திலகாவின் கன்னத்தைக் கிள்ளியபடி.]

மதி: குறும்பு, திலகா!

[மதிவாணன் புறப்படுகிறான்.]

காட்சி—2

இடம்: சோமநாதர் மாளிகை முன்வாயில்.

இருப்: சோமநாதர்.

நிலைமை: நாலைந்து பூட்டுகளுடன் சோமநாதர் நிற்கிறார். மலர் மாலைகள், சந்தனக் கிண்ணங்கள், வரவேற்புக்குரிய சாமான்களுடன் சிலர் நிற்கின்றனர். தோரணங்கள் கட்டுவதும், அலங்கார வளைவுகள் கட்டுவதுமாகச் சிலர் உள்ளனர்.

சோம: (கோபமாக ஆட்களைப் பார்த்து) மதிவாண னுக்கு அவ்வளவு மண்டைக் கர்வமா? போடா, நாலு பேரோடு போய், அந்தப் போக்கிரிக்குப் புத்தி வருகிறவரை பூஜை போடு—தோட்டமாம் தோட்டம்! ஒரு செடிகூட இருக்கக் கூடாது—மாலைகளை எடுத்து மந்திக்கு வீசு.

[பணியாட்கள் புறப்படுகிறார்கள்.]

காட்சி—3.

இடம்: மதிவாணன் மலர்த்தோட்டத்தின் வெளிப்புறத்தேயுள்ள சாலை.

இருப்: பணியாட்கள், மதிவாணன், திலகா, முத்துமாணிக்கம்.

நிலைமை: பணியாட்கள் வருகிறார்கள். எதிரே மலர்க் கூடையுடன் மதி வாணன் வருகிறான். பணி யாட்கள் தமக்குள் பேசிக்கொள் கிறார்கள். எதிரே வரும் மதி வாணனைத் தடுத்து...

ஒரு பணியாள்: ஏண்டா தம்பி! இப்பதான் புத்தி வந் துச்சோ?

இன்னொரு பணி: நல்ல வேளை, தப்பிக் கொண்டே!

[மதிவாணன் திகைக்கிறான்.]

ஒரு பணி: போ, போ! போய், பூக்குடலையைக் கொடுத்துவிட்டு, மன்னிப்பு கேட்டுக்க.

[மதிவாணன் ஏதோ பேச வாய் திறக்க.]

இ. பணி: எங்கே புறப்பட்டோம் தெரியுமேல்லோ. உன் தோட்டம் வீடு எல்லாம் படுசூரணமாக்கத்தான் அனுப் பினாரு.

மதி: (கோபங்கொண்டு) யார், சோமநாதரா?

பணி: அனுப்ப மாட்டாரா? அவர் பூ கேட்டனுப் பினா, அவ்வளவு ஆணவமா, தர முடியாதுன்னு சொன்னா, விடுவாரா?

மதி: இந்த மலரைத் தருவதற்குத்தான் புறப்பட்டேன். வழியிலே வந்து விட்டீர்கள். நல்ல வேளையாக...

பணி: நல்ல வேளைதான் உனக்கு!

மதி: (கண்டிப்புடன்) சரி! மலர் தரமுடியாது என்று சொல்லிவிடு போ! மடையன்.

[பணியாட்கள் திகைக்கிறார்கள்.]

நான் அன்புக்குத்தான் கட்டுப்பட்டவனே யொழிய அதி காரத்துக்கும் அந்தஸ்துக்கும் அஞ்சிக் கிடப்பவனல்ல.

[ஒரு பணியாள் மீசையை முறுக்கக் கண்டு...]

அற்பர்களே! உங்களைப்போல் ஆளடிமை செய்து பிழைப்ப வனல்ல.

[மதிவாணன் கரத்தைப் பிடிக்கிறார்கள். பணி யாட்கள் தாக்க மதிவாணன் கோபங் கொண்டு அவர்களைத் திருப்பித் தாக்குகிறான். பூக்கூட லைகள் கீழே விழுகின்றன. பணியாட்கள் கொக் கரிக்கிறார்கள். மதிவாணன் வீரமாகத் தாக்கு வது கண்டு திகைக்கிறார்கள்.]

[சற்றுத் தொலைவிலே ஒரு குதிரை மீது யாரோ வருகிற காட்சி தெரிகிறது.]

[சத்தம் கேட்ட திலகா, ஓடி வந்து நிலைமையைப் பார்த்துக் கூவியபடி உள்ளே சென்று ஒரு கழி யைக் கொண்டு வந்து தருகிறாள்— தருமுன்னர் கொக்கரித்துக் குதிக்கும் ஆட்களைக் காலிடறிக் கீழே விழும்படி செய்கிறாள்... கழி கொண்டு. மதிவாணன் கழி கொண்டு ஆட்களை அடித்து விரட்டுகிறான்—குதிரை வீரன் அருகே வந்து

சேருகிறான். பாதையிலே நடைபெறும் கலகம் கண்டு குதிரையை விட்டு இறங்கி பணியாட்களில் இருவரின் பிடரியைப் பிடித்துக் குலுக்குகிறாள். மதிவாணன் ஒரு ஆளை நையப் புடைக்கிறான்—திலகா கழி கொண்டு இன்னொருவனைத் தாக்கு கிறாள். மிரண்டு ஓடுகிறார்கள் ஆட்கள். அந்தக் காட்சியைக் கண்டு முத்துமாணிக்கம் சிரித்த படி...]

முத்து: யார் இந்த முரடர்கள்? கள்ளர்களோ?

திலகா: (கூந்தலைச் சரிப்படுத்தியபடி, ஆட்கள் ஓடும் திக்கைப் பார்த்த வண்ணம்) இதுகள் கூலிகள். ஏவி விட்டவன் மாளிகையிலே கிடக்கிறான். (கேலியாக) மகா...ராசா! மகுடமில்லாத மகாராஜா!

முத்து: யார் அந்தப் புத்தியில்லாத பூபதி?

திலகா: (கேலிக்குரலில்) சோமநாதரு...

[முத்துவின் முகம் மாறுகிறது.]

மதி: ஊர்த்தலைவர் சோமநாதரின் அடி ஆட்கள் இவர்கள். அவருடைய மகன் வருகிறானாம் இன்று. வரவேற்பாம்!

திலகா: (பேச்சைத் தொடர்ந்து) எங்க தோட்டத்து மலர் முழுவதும் கொடுத்தாக வேணுமாம்.

மதி: மலர் தரத்தான் சென்று கொண்டிருந்தேன்.

திலகா: ஆமாம், இந்த தவசியின் சுபாவமே இதுதான்.

மதி: திலகா! ஆத்திரமாகப் பேசாதே! திலகா முதலில் மலர் தரமுடியாதென்று சொன்னதால், சோமநாதர் ஆத்திரமடைந்து அடி ஆட்களை ஏவினார், தோட்டத்தை நாசம் செய்யச் சொல்லி.

திலகா எப்படி இருக்கு நியாயம்? பணம் இருக்கு நிறைய என்கிற ஆணவம்.

[பேசிக் கொண்டே மூவரும் மதிவாணன் வீடு நோக்கிச் செல்லுகிறார்கள்...]

காட்சி—4

இடம்: மதிவாணன் வீட்டின் உள்புறம்.

இருப்: திலகா, முத்துமாணிக்கம்.

நிலைமை: திலகா ஒரு தட்டிலே கனிகள் வைத்துக் கொண்டுவந்து முத்து எதிரே வைக்கிறாள். தெருவிலே மீண்டும் கூச்சல் கேட்கிறது. திலகா திகிலடைகிறாள். வெளியே சென்று மெள்ள எட்டிப் பார்த்து விட்டு வந்து பயத்துடன்...

திலகா: அண்ணா! நிறைய ஆட்களுடன் சோமநாதர்!

[முத்து பாதி கனியைக் கீழே போட்டு விட்டு வெளியே செல்கிறான். மதிவாணனும் செல்கிறான். கழியை எடுத்துக் கொண்டு திலகாவும் செல்கிறாள்.]

காட்சி—5

இடம்: மதிவாணன் வீட்டின் வெளிப்புறம்.

இருப்: முத்துமாணிக்கம், மதிவாணன், திலகா, கற்பகம்.

நிலைமை: வெளியே வந்ததும் சோமநாதரைக் கண்டு முத்து அன்புடன் தந்தையை அணைத்துக் கொள்கிறான். அனைவரும் ஆச்சரியப்படுகிறார்கள். திலகா சிறிதளவு கூச்சமடைகிறாள். மதிவாணனை முறைத்துப் பார்க்கிறார் சோமநாதர்...

முத்து: அப்பா! வீணாக இவர் மீது கோபித்துக்கொண் டீர்கள். இப்படிப்பட்ட தன்மான வீரர்தானப்பா தமிழ் நாட்டின் செல்வம்—

[மதிவாணனைப் பார்த்து]

என் தந்தை பழைய காலத்தவர்...ஏதோ நடந்து விட்டது. பொறுத்துக் கொள்.

[சோமநாதர் பதில் ஏதும் கூறாது முத்துவை அழைத்துக் கொண்டு செல்கிறார். சோமநாத ருடன் வந்த ஆட்களும் கிளம்புகின்றனர். முத்து, மதிவாணனுக்கு வணக்கம் செய்கிறான். முத்து ஒருகணம் கனிவுடன் திலகாவைப் பார்க்கிறான்; திலகா கூச்சமடைகிறாள்.

சோமநாதர் மகனுடன் சற்றுத் தொலைவிலே செல்கிற வரையில் திலகாவும், மதிவாணனும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், தங்கள் வீட்டு வாயிற்படியில் நின்று கொண்டு.]

மதி: வேடிக்கையான சம்பவம்!

திலகா: சோமநாதரை நாம் கண்டித்துப் பேசினோமே, அண்ணா! அவர் மகன் மனவேதனை அடைந்துதானே இருப்பார்?

மதி: தங்கமான குணம்...முத்து மாணிக்கம்.

[கற்பகத்தம்மாள் பதறியபடி வருகிறார்கள் பழக் கூடையுடன்.]

கற்பகம்: என்னடா மதிவாணா! பெரிய கலகமாமே?

[மகனுக்கு எங்காவது அடி பட்டதோ என்று பார்த்தபடி பேசுகிறார்கள்.]

மதி: பிரமாதமாக ஒன்றும் இல்லையம்மா!

கற்: மதி! நாமோ ஏழைக் குடும்பம். நமக்கு விரோதம் இருக்கலாமா? அதிலும் சோமநாதரிடமா? அவரோ சீமான்...

மதி: ஏழை கோழையாகவே இருந்தாக வேண்டும் என்று விதி ஒன்றும் கிடையாதம்மா.

[மூவரும் உள்ளே செல்கிறார்கள்.]

காட்சி—6.

இடம்: சோமநாதர் மாளிகையின் உட்புறம்

இருப்: முத்து, சோமநாதர், வில்வக்காட்டார், முதியவர்.

நிலைமை: சோமநாதர் பேழையைத் திறந்து ஏதோ மாலையை எடுக்கிறார். முத்து உடையைச் சரி படுத்தியபடி...

முத்து: ஏழைகளை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணம், ஏற்பாடு-இதெல்லாம் நியாயமுமல்ல; இனி நடக்கவும் முடியாதப்பா.

சோம: சரி...சரி...வந்ததும் உபதேசம்தானா!

முத்து: உபதேசம் அல்ல அப்பா! உலகம் போகிற போக்கை...

சோம: பிறகு எடுத்துச் சொல்லு.

[எதிர்புறம் ஆடம்பர உடையுடன் ஒரு சீமான் வருகிறார். சோமநாதர் பணிவுடன் கும்பிட்டபடி, மெல்லிய மரியாதை கலந்த குரலில் முத்துவிடம்.]

சோம: வில்வக்காட்டார்.

[முத்து அவருக்கு வணக்கம் செய்கிறான். வில்வக்காட்டார் ஒரு மலர்ச்செண்டை முத்துவிடம் தர, அவன் அதைக் கண்களிலே ஒத்திக் கொள்கிறான்.]

வில்: தம்பி! ஆண்டவன் அருளாலே மேலும் மேலும் பெரிய பதவிகளைப் பெறவேண்டும்.

[சோமநாதரின் பணியாட்கள் வில்வக்காட்டாரை மரியாதையுடன் உள்ளே அழைத்துச் செல்கிறார்கள், ஆசனத்தில் உட்கார வைக்க.]

சோம: முத்து! இப்ப, வில்வக்காட்டாருடைய நிலை ரொம்ப உயர்ந்து போயிருக்கு, தெரியுமா?

[வில்வக்காட்டாரைக் கண்டதும் ஏற்கனவே ஆசனங்களில் இருந்தவர்கள் எழுந்து நிற்கிறார்கள் மரியாதையுடன். இருந்த ஆசனங்களிலே உயர்ந்த தான ஒன்றிலே அவர் உட்கார்ந்த பிறகு மற்றவர்கள் உட்காருகிறார்கள்.]

சோம: ராஜாங்கத்திலே அவருக்கு செல்வாக்கு வளர்ந்து கிட்டே இருக்கு...ஒரே மக...வயது இப்ப...

முத்து: (யோசித்தபடி) பதினாறு இருக்கும்.

சோம: (மகிழ்ச்சியுடன்) நல்லாக் கவனமிருக்கே..வில்வக்காட்டாருக்கு நம்ப குடும்பத்திடம் எப்போதுமே மதிப்பு அதிகம்.

முத்து: (யோசனையில் ஆழ்ந்தபடி) நல்ல குடும்பம்.

சோம: பெண் குணவதி—அழகி!

முத்து: (ஆர்வத்துடன்) ஆமாம் அப்பா! நல்ல குணவதி, தைரியசாலி! கள்ளங் கபடமற்ற உள்ளம்.

[முத்து வில்வக்காட்டார் மகளைத்தான் புகழ்கிறான் என்று பூரிப்படைந்து.]

சோம: உனக்கு மட்டும் என்னடா முத்து! உன் அறிவும் ஆற்றலும் யாரையும் சொக்க வைக்குமே!

[பெருமையுடன் பேசிக் கொண்டே போகிறார். சோமநாதர் அமர்ந்துள்ளவர்களுக்கு வணக்கம் கூற, அனைவரும் செல்கின்றனர். முத்து இலேசாகப் பெருமூச்செறிந்தபடி....]

முத்து: அழகான பெயர்! திலகவதி! அப்பா ஒரு பைத்யம்—விருந்தாம், வரவேற்பாம்! இனிமேலா? அவள் புன்னகை விடவா வேறு விருந்து வேண்டும்?

[உள்ளே செல்கிறான். அப்போது ஒரு முதியவர் வேகமாக உள்ளே நுழைகிறார்.]

முதி: சோமநாதா! சோமநாதா!

[முத்து திரும்பிப் பார்த்து அங்கேயே நின்று விடுகிறான். தன்னை அழைக்கும் குரல் கேட்டு சோமநாதர் வருகிறார்.]

சோம: பெரியவரே என்ன இது? வரவேற்பு வைபவம் முடிந்த பிறகு வந்தீரே!

முதி: என்ன செய்யலாம்! அந்தக் குறும்புக்காரப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டேன். நேரமாகிவிட்டது. சோமநாதா! உன் மகனுக்கு திலகா வீட்டிலேதான் முதல் வரவேற்பாமே!

[திலகா பெயரைக் கேட்டு முத்து அருகே வருகிறான். சோமநாதர் அறிமுகப்படுத்துகிறார்.]

சோம: இவர்தான் முத்து, சந்தச் சரபம் சுந்தர மூர்த்திக் கவிராயர்—பெரியவர்! என் மகன் முத்துமாணிக்கம்.

முதி: (கனிவுடன்) நல்ல பெயர்! அழகான தமிழ்ப் பெயர். வீரம் ததும்பும் முகம், அன்பு வழியும் விழிகள், அறிவாளி, முத்து! மதிவாணனும் திலகாவும், உன்னைப் பெரிதும் புகழ்கிறார்களப்பா. உட்காரலாமா? என் வாழ்த்துப் பாடலைக் கேள் சோமநாதா!

[முதியவர் நடுங்கும் குரலைச் சரிப்படுத்தியபடி பாடுகிறார்.]

[கவிராயர் வாழ்த்துப் பாடல்.]

முத்து: (எழுச்சியுடன்) அருமையான கவிதை. பெரிய வரே! தங்கள் அன்புக்கு என் வணக்கம்.

[இதற்குள் சோமநாதர் தட்டிலே பழம், தாம் பூலம், பணமுடிப்பு வைத்துக் கொண்டு வந்து தருகிறார். புலவர் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு...]

முதி: உடல் நலம் இல்லை, முத்துமாணிக்கம்! அத னால்தான் பாடலிலே இனிமை எழவில்லை. மதிவாணன் அருமையாகப் பாடுகிறான்.

முத்து: (ஆச்சரியத்துடன்) மதிவாணனா?

முதி: ஓஹோ! உனக்குத் தெரியாதா? மதிவாணன் அருமையான இசைவாணன். கவிவாணனும்கூட. ஆனால் பைத்யக்காரன். காட்டிலே காயும் நிலவு! தோட்ட வேலை செய்கிறான், தோட்ட வேலை!

[கவிராயர் விடை பெற்றுக் கொண்டு செல்ல, அவர் தந்த பாடல் ஓலையைப் பார்த்து ரசிக்கி றான் முத்து. வீரம் குடி கொண்ட முகம், நல்ல வெற்றிக்களை வீசும் கண்கள் என்ற அடிகளை முத்துமாணிக்கம் பார்த்துக் கொண்டிருக்கையில்]

காட்சி—7

இடம்: மதிவாணன் மலர்த்தோட்டம்.

இருப்: மதிவாணன், திலகா, முத்துமாணிக் கம், கற்பகம்.

நிலைமை: தோட்டத்தில் ஒரு பசுவின் முகத்தைத் தழுவியபடி, திலகா வீரம் குடி கொண்ட முகம், வெற்றிக் களை வீசும் கண்கள் என்று மெல்லிய குரலில் பாடு கிறாள்-மதிவாணன் ஒரு மலர்ப் புதர் பக்கம் இருந்து அவள் அறி

யாமல் பாடலைக் கேட்கிறான்—மீண்டும் திலகா அதே அடியைப் பாடக் கேட்டு அவள் மனநிலையை அறிந்து மகிழ்கிறான். குறும்புபல செய்பவள்அல்லவா! நாம் ஏன் இவளைக் கேலிசெய்யலாகாது என்று எண்ணி, திலகா பாடி முடித்ததும்...

மதி: வீராதி வீரனானால் உனக்கென்ன, வேலையைப் பார் வேல் விழியாளே.

[என்று பாடிட, திலகா திடுக்கிட, மதிவாணன் அவள் எதிரே வருகிறான். திலகா வெட்கமடைகிறாள்—திலகாவைக் குறும்பாகப் பார்த்தபடி.]

மதி: திலகா! மனதிலே அப்படியே பதிந்து விட்டதோ ....பாடல்!

திலகா: வெவ்வெவ்வே

[கேலி காட்டிவிட்டு கோழிக் கூண்டை திறந்து தீனி போடுவதும், புறாக்களுக்குத் தீனி தூவுவதுமாக இருக்கிறாள். மலர் பறித்தபடியே மதிவாணன் பேசுகிறான்.]

மதி: உம்...பாடு, திலகா! நான் கேலி செய்யமாட்டேன், பாடு. இனிமையாகத்தான் இருந்தது.

[முடியாது என்று செல்லப் பிடிவாதத்துடன் ஜாடை காட்டுகிறாள், தலை அசைத்து திலகா.

மதி: பாடு...பாடு...திலகா!

[என்று கேட்டுக் கொண்டபடி மதிவாணன் இருக்கவே, திலகா கோபங் கொண்டவள்போல காலை பூமியிலே உதைத்துக் கொண்டு]

திலகா: அம்மா! அம்மா! இரு...இரு...அம்மாவிடம் சொல்லி...அம்மா இங்கே வந்து...

[மதிவாணன் திலகாவின் குரல்போல் தன் குரலை மாற்றிக் கொண்டு.]

மதி: இங்கே வந்து, திலகா பாடுவதைக் கேளம்மா! வீரம் குடி கொண்ட முகம்! நல்ல வெற்றிக்களை வீசும் கண்கள்.

[மதிவாணன் பாட, திலகா கோபிப்பது போலாகி ஒரு கொய்யாக் கனியை எடுத்து மதிவாணன் மீது வீச, அவன் கனி தன் மீது விழவிடாதபடி குனிந்து கொள்ள, எதிரே வந்து கொண்டிருக்கும் முத்து கரத்தருகே கனி வருகிறது. அவன் அதைப் பந்து பிடிப்பது போல பிடித்துக் கொள்ளுகிறான். முத்து எதிர்பாராதவிதமாக அங்கு வந்தது கண்டு திலகா வெட்க மேலிட்டு வேறோர் புறம் ஓடிவிடுகிறாள். மதி திரும்பிப் பார்த்து முத்துவைக் கண்டு புன்னகையுடன் வரவேற்கிறான்.]

மதி: முத்துமாணிக்கம்!

முத்து: (ஏட்டை நீட்டியபடி) கவிராயர் இதைக் கொடுத்தார்.

மதி: இதே ஏட்டிலே உள்ள இரண்டு அடிகளைப் பற்றித்தான் இங்கே பலத்த விவாதம்.

முத்து: (தழதழத்த குரலில்)கேட்டுக்கொண்டுதானிருந்தேன், நண்பா! நான் பாக்யசாலி, உன் சம்மதம் கிடைத்தால்.

மதி: (முத்துவின் கரங்களைப் பிடித்தபடி) உன் பெருங்குணம் கண்டு மகிழ்கிறேன் முத்து! என் தங்கை திலகாவின்...

முத்து: மனதை நான் மயக்கி விட்டேன் என்கிறாயா, நண்பா!

மதி: திலகாவின் மனதிடம் எனக்குத் தெரியுமே, முத்து! மயக்கமல்ல, அவள் மனதிலே நீ பதிந்து விட்டாய்—தூய்மையான காதல்.

முத்து: காதலின் தூய்மையைக் கெடுத்திடும் கயவனாக மாட்டேன், மதிவாணா!

மதி: உன் குணத்தை நான் நன்றாக உணருகிறேன். உண்மைக் காதலைத் தடுத்திடும் உலுத்தனல்ல, நான்—மகள் மனம் அறிந்து நடக்கத் தெரியாதவர்களல்ல, தாயார் ...ஆனால்...

முத்து: ஆனாலா? அந்த ஆபத்தான சொல்லை வீசாதே மதிவாணா!

மதி: கண்டதும் காதல் கொண்டு விடுவது சுலபம்... ஆனால் பெண் குலத்துக்கு பெரும் பழிதேடிடக் காதலையே படுகுழியாக்கும் பாவிகள் பலர் உண்டு.

முத்து: அவர்களை, நான் மனிதருள் மிருகமென்பேன், மதிவாணா!

மதி: (கனிவுடன்) திலகா சிறு பெண். தோட்டத்திலே ஆடிப்பாடிக் கிடக்கும் இளமங்கை. கள்ளங்கபடமறியாதவள்.

முத்து: என் உள்ளம் சிலந்தி வலையல்ல மதிவாணா!

மதி: நான் பரிபூர்ணமாக உன்னை நம்புகிறேன். வானவில்லைக் கண்டு சொக்கிடும் சிறுவனல்ல நீ—கடமை அறிந்தவன்.

முத்து: வாழ்வின் விளக்காவாள், திலகா!

[கற்பகத்தம்மாள் வரக்கண்டு இருவரும் பேச்சை நிறுத்திக் கொள்ள.]

கற்: தம்பியா! வா, அப்பா! மதிவாணா!வந்தவர்களை உபசரிக்காமல், பேசிக் கொண்டே இருந்து விட்டாயோ! திலகா எங்கே? திலகா! திலகா!...

[அதுவரையில் மதிவாணன் முத்து பேச்சைக் கேட்டுப் பரவசமாயிருந்த திலகா, ஓடி விடுகிறாள், வேறோர் பக்கம்.]

மதி: திலகா, ஓடி ஒளிந்து கொண்டாள்.

கற்: திலகாவா? பயமற்றவள்.

மதி: பயமல்ல அம்மா, பயமல்ல.

[முத்து கூச்சமடையக் கண்டு...]

இதோ, இந்த வீராதி வீரனுக்கே வெட்கம் என்றால் திலகாவுக்கு வெட்கம் எவ்வளவு இருக்கும்!

[கற்பகத்தம்மாள் கண்களை ஒரு நொடி மூடியபடி களிப்படைகிறாள்.]

காட்சி—8

இடம்: வெளிப்புறம்.

இருப்: திலகா, முத்துமாணிக்கம்.

நிலைமை: அருவி அருகே, மலைச்சரிவில் உள்ள மாந்தோப்பில் முத்துவும் திலகாவும் ஓடி மகிழ்வதும் பாடிக் களிப்பதுமாக உள்ளனர்...

காட்சி—9

இடம்: மதிவாணன் மலர்த்தோட்டம் - ஓர் புறம்.

இருப்: திலகவதி, முத்துமாணிக்கம்.

திலகா: என் அண்ணாவை எப்படியோ உம்வசமாக்கிக் கொண்டீரே, மாயக்காரா...!

[மேலும் எதுவும் சொல்ல முடியாமல் திகைக்க...]

முத்து: மாயக்காரனல்ல திலகா! மாயக்காரிகள் நிறைந்த இடத்திலே இருந்தவன்...ஆனால் மனதைப் பறி கொடுத்திடாதவன். தெரியுமா?

திலகா: (கேலியாகப் பேசுகிறாள்). யார் கண்டார்கள்! ஆடவர்களின் பேச்சிலே நம்பிக்கை வைப்பது, அப்பப்பா... மிகமிக ஆபத்து.

முத்து: இப்படிச் சொல்லிச் சொல்லியே பெண்கள், ஆடவர்களைப் பித்தராக்கி விடுகிறார்கள். (பெண் குரல் போலப் பேசி). நான் பேதை—நீரே என் கதி என்று நம்பி இருக்கிறேன்—உம்மைக் காணாதபோது என் இரு கண்ணும் உறங்காது. (சொந்தக் குரலில்) என்றெல்லாம் வீணா கானம் மீட்டி, ஆடவரின் மனதை வாட்டி வதைத்து அடிமையாக்கி விடுகிறார்கள்.

திலகா: (கோபிப்பது போலாகி). பொய்...பொய்... முழுப் பொய்—அண்ணாவைக் கேட்போமே.

முத்து: (அவள் கரத்தைப் பிடித்திழுத்தபடி.) வா—கேட்போம்.

[இருவரும் தோட்ட வீடு நோக்கிப் போகிறார்கள்.]

காட்சி—10

இடம்: மதிவாணன் தோட்ட வீடு—உட்புறம்.

இருப்: முத்து, திலகா, மதிவாணன்

நிலைமை: மதிவாணன் ஏட்டிலே ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறான், யோசனையில் ஆழ்ந்தபடி—

மதிவாணன் நிலைமையைக் கண்டு திலகாவைத் தடுத்து நிறுத்தி விடுகிறான், முத்து—சற்று தொலைவிலேயே.

முத்து: திலகா! இப்போது தொந்தரவு தரக் கூடாது.

திலகா: (கேலியாக.) ஏன்? கவி எழுதுகிறார் அண்ணா! அதனால்தானே...

முத்து: ஆமாம்—கற்பனையைக் கெடுத்துவிடக் கூடாது.

திலகா: அண்ணா, எப்போதுதான் கவி எழுதாதிருக் கிறார்? சொர்ணாபிஷேகம் செய்கிறார்களல்லவா அண்ணா வுக்கு, எழுத வேண்டியதுதான் கவிதைகளை.

காட்சி—11

இடம்: சோமநாதன் மாளிகை—உட்புறம்.

இருப்: சோமநாதர், சிநேகிதர்.

நிலைமை: சோமநாதன் கோபமாக இருக் கிறார். தன் எதிரே நிற்கும் ஆளைப் பார்த்து உரத்த குர லில் பேசுகிறார்—எதிரே நிற் கும் ஆள், தான் மூட்டிய கலகம் பலித்தது என்ற மகிழ்ச்சியுடன் காணப்படுகிறான்.

சோம: சொர்ணாபிஷேகம் செய்யக் காத்துக் கொண் டிருக்கிறார் வில்வக்காட்டார்—இந்தப் பயல், சோற்றுக்குத் திண்டாடும் வீட்டுப் பெண்ணை வேட்டையாடிக் கொண்டி ருக்கிறான். குடும்ப கௌரவம், எதிர்கால வாழ்வு எல்லாம் என்னாவது?

சிநே: சொக்குப் பொடி போட்டு விட்டாள் அந்தச் சொகுசுக்காரி. முத்து, இதுவரை இப்படி நடந்ததுண்டா?

சோம: (ஆத்திரமாக) ஆயிரமா, இரண்டாயிரமா! பத்து ஆயிரம் பொன் கொட்டிக் கொடுத்தேன், இவனுக்கு அரச சபையிலே பதவி கிட்டுவதற்கு.

சிநே: பதவியும் உயர வழி இருக்கு. வில்வக்காட்டார் வாக்களித்துமிருக்கிறார்.

சோம: இவன் இப்படி ஒரு பட்டிக்காட்டு, பராரி குடும்பப் பெண்ணிடம் பல்லிளித்துக் கொண்டு கிடக்கிறான். நாள் தவறாமல் விளையாட்டுதானாம்! சாலையிலே, சோலையிலே, கண்ட கண்ட இடத்திலே.

சிநே: ஜாடை மாடையாகச் சொல்லிப் பார்த்தேன்.

சோம: என்னதான் சொல்கிறான் ஏமாளி?

சிநே: அவனா? இங்கே வந்ததும் ஊமையாகி விடுகிறானே...

சோம: அங்கே சிரிப்பு, பேச்சு, சரசம்.

### காட்சி—12

இடம்: மதிவாணன் மலர்த்தோட்டம்.

இருப்: திலகா, மதிவாணன், முத்து.

நிலைமை: மதிவாணனும் முத்துவும், ஒரு பெரியமரத்தடியிலேஉட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். முத்து, மதிவாணனுடைய கவிதை தீட்டப்பட்ட ஏடுகளைப் படித்து இன்புறுகிறான். திலகா அங்கு வருகிறாள்.

திலகா: அண்ணா!...அண்ணா!...

முத்து: (மெய்மறந்தவனாகி) எவ்வளவு அருமையான பாடல்!

திலகா: (குறும்பாக) சரி—உங்களுக்கும் பிடித்து விட்டதா அந்தப் பைத்யம்?

முத்து: (அவள் பேச்சைக் கவனியாமல்) அரச சபைகளிலே இப்படிப்பட்ட அருங் கவிதைகளுக்கு, எவ்வளவு சன்மானம் கிடைக்கும் தெரியுமா? புதையல் இருப்பது தெரியாமல் அதன் மீது உட்கார்ந்து கொண்டு புலம்பும் போக்கப்பா இது.

திலகா: பல ஆயிரம் தடவை சொல்லிச் சொல்லி சலித்துப் போனவள் நான்—வெற்றி உங்களுக்காவது கிடைக்கிறதா பார்ப்போம்.

மதி: பொன், பொருள், திலகாவுக்கு மலை அளவு குவிந்தால்கூட போதாது. அளவு கடந்த ஆவல்—

திலகா: அளவு ஒன்றும் அதிகமில்லை தவசியாரே!

மதி: முத்து ஆரமும், மாணிக்கப் பதக்கமும் தா என்பாய். நான் பூந்தோட்டத்தை நம்பிப் பிழைப்பவன், முடியுமா தருவதற்கு? அதனால்தான், இதோ, முத்துமாணிக்கம்! பெற்றுக்கொள் என்றேன்.

[ஏடுகளைப் படித்தபடி இருந்த முத்து...]

முத்து: உன் கற்பனைத் திறம், மதிவாணா! உள்ளபடியே எனக்கு கோபந்தான் வருகிறது. சந்தனக் கட்டையை மாட்டுத் தொழுவத்திலே போட்டு வைப்பதா? சரியா? முறையா? உன் கவிதை தரும் இன்பத்தையும் அறிவையும் நாடு பெற வேண்டாமா?

மதி: இதென்ன முத்து! அரச சபைகளிலே கவிவாணர்கள் எவ்வளவோ பேர்! என் கவிதை இல்லாவிட்டால் என்ன குறைவு வந்துவிடும்?

முத்து: பல ஆயிரம் நட்சத்திரங்கள் வான மண்டலத்திலே இருக்கும்போது நான் வேறு தேவையா என்று சந்திரன் கேட்கிறானா? அடக்கம் தேவைதான் மதிவாணா!

ஆனால் ஆமையாகி விடக்கூடாது. தோகையை விரித்து ஆட மறுக்கும் மயிலாக இருக்கக் கூடாது. என்னுடன் வா, நடு நாட்டுக்கு. அரச சபையிலே உரிய இடத்தை நான் வாங்கித் தருகிறேன். விட்டுவிடு, வீண் வேதாந்தத்தை.

[மதிவாணன் புன்னகை புரிகிறான். அதிலே இலே சாகக் கேலியும் கலந்திருக்கிறது.]

காட்சி—13

இடம்: சோமநாதன் மாளிகை—உட்புறம்.
இருப்: சோமநாதர்.
நிலைமை: சோமநாதன் தன் நண்பரின் கையை உதறிக் கொண்டு...

சோம: விடு—போகப் போக விபரீதம் வளர்ந்து போகுது—நேராகவே போய், அந்த மண்டைக் கர்வி மதிவாணனை, மானமிருக்கா, மட்டு மரியாதை இருக்கான்னு கேட்டால்தான் என் மனதிலே உள்ள கொதிப்பு குறையும்.

[சோமநாதர் கோபமாகக் கிளம்புகிறார்...]

காட்சி—14

இடம்: மதிவாணன் மலர்த்தோட்டம்
இருப்: மதிவாணன், சோமநாதர், கற்பகம்
நிலைமை: சோமநாதர் வருவது கண்ட கற்பகத்தம்மாள், தோட்டம் சென்று மதிவாணனுக்கு ஜாடை காட்ட, மதிவாணன் தண்ணீர் இறைக்கும் வேலையை நிறுத்தி விட்டு வந்து, சோமநாதரை வணக்கம் செய்து வரவேற்கிறான். சோமநாதரின் முகம் கடுங்கோபத்தைக் காட்டுகிறது. கையிலுள்ள தடியைப் பூமியில் குத்தியபடி, சோமநாதர் விறைத்துப் பார்க்கிறார்...

மதி: ஏது இவ்வளவு தூரம், உட்காருங்கள்.

[என்று கூறியபடி ஒரு கல் ஆசனத்தைக் காட்ட, சோமநாதர் உட்காராமல் கோபத்துடன்...]

சோம: மதிவாணா!

[கோபம் அதிகமாகி மேலும் பேச முடியாமல் திகைக்கிறார்.]

மதி: கோபம் ஏன் இவ்வளவு?

[ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வருகிறது, சோமநாதருக்கு.]

சோம: மகா யோக்யன்போல் பேசுகிறாயே, துளியாவது மான ரோஷம் இருந்தால் இப்படியா காரியம் நடைபெறும்?

[மதிவாணன் சோமநாதரின் கோபத்தின் காரணத்தை ஒருவாறு யூகித்துக் கொள்கிறான். அவனுக்கும் கோபம். ஆனால் அதை அடக்கிக் கொண்டு...]

மதி: ஐயா! ஆத்திரப்படாமல் பேசும். என்ன வேலையாக வந்திருக்கிறீர்? அதைச் சொல்லும்!

சோம: மண்டைக் கர்வமடா உனக்கு. பஞ்சைப் பயலே! பராரிப் பயலே!

மதி: (ஆத்திரமாக) பெரியவரே!

சோம: என் மகனை வலை போட்டுப் பிடிக்க ஒரு மாயக்காரியை ஏவி விட்டுவிட்டு, என்னை எதிர்த்தா பேசுகிறாய்? பொடிப் பொடியாக்கி விடுவேன் உன்னை.

மதி: அளவு அறிந்து பேசும், சோமநாதரே! வயது சென்றவர் என்ற ஒரே காரணத்தால், உமக்குத் தக்க பாடம் காட்டாமலிருக்கிறேன்.

சோம: (தடியை ஓங்கியபடி) போக்கிரிப் பயலே! என்னிடமா துடுக்குத்தனம்?

மதி: ஏ, காட்டுக் குணம் படைத்த கிழவா! கழுத்தைப் பிடித்துத் தள்ளுமுன், நீயாக ஓடிப்போ...போ.!

[என்று மிரட்ட, கற்பகத்தம்மாள் பயத்தால் கைகளைப் பிசைந்து கொள்கிறார்கள். தீப்பொறி பறக்கும் கண்களுடன் நிற்கிறான் மதிவாணன்.]

சோம: படுகொலை செய்து, பகற்கொள்ளை அடித்து, பணம் சேர்க்கிறவனைக்கூட மனுஷன்னு சொல்லலாம்டா! சீமான் வீட்டுப் பிள்ளையைச் சொக்குப்பொடி போட்டுப் பிடிக்கத் தங்கையை ஏவும் வெட்கங் கெட்ட வேலையைச் செய்பவனை மனுஷ ஜாதியிலே எவனாவது சேர்ப்பானா?

[கோப மிகுதியால், மதிவாணன் ஓங்கி சோமநாதர் கன்னத்தில் அறைந்து விடுகிறான். சோமநாதர் கூச்சலிடுகிறார். தன் ஆட்களை அழைக்கிறார். அவர் கூச்சலையும் மிஞ்சும்படியான குரலில் பேசுகிறான் மதிவாணன்...]

மதி: பணத்தைக் கட்டி அழும் பிணமே, உன் உயிர் போகும், இனியொரு முறை இழிவாகப் பேசினால்.

[சோமநாதர் ஆத்திரப்படுகிறார். கம்பை ஓங்குவதும், உறுமுவதுமாக இருக்கிறார்...]

மதி: உனக்கு மகனாகப் பிறந்தானே, அந்த உத்தமன், முத்துமாணிக்கம்—ஓநாயே, ஓடிவிடு, இந்த இடத்தை விட்டு.

சோம: டே, மதிவாணா! உன்னை என்ன கதியாக்குகிறேன் பார்.

மதி: பணமாம் பணம்! உன் காலடியில் கொட்டிக் காட்ட முடியும், உன் பெட்டியிலுள்ள பணத்தைப்போல் பல மடங்கு.

[இதற்குள் சோமநாதரின் அடியாட்கள் வந்து விடுகிறார்கள். சோமநாதர் மேலும் ஆணவமாகிறார். கற்பகத்தம்மாள் மூர்ச்சையாகிக் கீழே சாய்ந்து விடுகிறார்கள். மதிவாணன் இதைக் கவனிக்கவில்லை...]

சோம: வெறி நாயே! பார், வேட்டைக்காரர்களை!

[அடி ஆட்களை மதிவாணன் முறைத்துப் பார்க்க, அவர்கள் முன்பு ஒருமுறை அவனிடம் அடிபட்ட சம்பவத்தை நினைத்துக் கொண்டு சிறிது நடுக்கம் கொள்கின்றனர்...]

சோம: முத்துமாணிக்கத்துக்கு வில்வக்காட்டுச் சீமான் தன் ஒரே மகளைத் தர தவம் கிடக்கிறார். தெரியுமா? நானும் என் சம்மதம் கொடுத்திருக்கிறேன். அதைக் கெடுத்து நாசமாக்காதே. உன்னைச் சும்மாவிடமாட்டேன். உன் குடும்ப யோக்யதை என்ன? என் குடும்ப அந்தஸ்து எப்படிப் பட்டது? என் மகன் உன் தங்கையை மணம் செய்து கொள்வதா? எப்படியடா சம்மதம் தந்தாய்? பூ விற்றுப் பிழைக்கும் பராரி நீ—மறந்து விட்டாயே அதை! பூபதிகளுடன் பழகும் நிலையிலுள்ளவன் நான்—தெரியுமே உனக்கு—என் மகன் அரச சபையிலே பெரிய பதவியில் இருப்பவன்—அவனுக்குத் திலகாவா மனைவியாவது? சிங்கத்தின் உணவைத் திருடும் சிறு நரியே! சீறுகிறாயா? சீறு, சீறு! இப்போது உன்னைக் கூறு போட்டு கழுகுக்கு இரை தருகிறேன்.

[பதைக்கிறான் மதிவாணன். அடியாட்கள் பாய்ந்து சென்று அவனைப் பிடித்துக் கொள்கிறார்கள்...]

அரச சபையினர் ஒரு பத்துப் பேர், என் மகனுடைய நண்பர்கள் வந்தால், ஒரு வேளை விருந்தளிக்க, உனக்கு வக்குண்டா, வகையுண்டா?

[மதிவாணன் கண்களிலே நீர்...]

என்னடா இது, நீலிக் கண்ணீர்.

[மதிவாணனைப் பிடித்து உலுக்கியபடி...]

இதோ பாரடா அறிவற்றவனே! உன் தங்கையின் எடைக்கு எடை தங்கத்தைக் கொடுத்தால், திருமணத்துக்குச் சம்மதிப்பேன்—முடியுமாடா உன்னால்! மூடா, முடியுமா?

[மதிவாணன் ஆத்திரமும் கொள்கிறான். அழுகையும் வருகிறது...]

எடைக்கு எடை தங்கமடா தங்கம்! தர முடியுமா? பொன் காய்க்கும் மரங்களா இவை?

[மதிவாணன் கன்னத்தில் அறைந்து...]

நிலைமையை அறிந்து நட!

[ஆட்களுக்கு ஜாடை காட்டி அழைத்துச் செல்கிறார் சோமநாதர்...]

[அவர்கள் போன பிறகு மதிவாணன் நீர் கொப்புளிக்கும் கண்களுடன்...]

மதி: பஞ்சை! பராரி! உண்மைதான். உள்ளத்தைச் சுடும்படி பேசினான் அந்த உலுத்தன்—என்றாலும் உண்மைதான் அவன் சொன்னது. ஏழ்மை, இழிநிலையைத் தருகிறது; செல்வம் செருக்கைத் தருகிறது.

[கற்பகத்தம்மாள் கவலையுடன் இருக்கக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் கூற...]

கற்: ஏழைகள்தானப்பா நாம்! ஆனால் உன் அப்பாவின் சேவைக்காக நமது குடும்பத்துக்கே அரச குடும்ப மரியாதை தந்தார் மன்னர். உன் அப்பாதான் அதையும் மறுத்து விட்டார்.

மதி: அதுதானம்மா பெருங்குணம். கலங்காதே அம்மா! நமது குடும்பத்துக்கு களங்கம் ஏதும் ஏற்பட்டு விடாது, என் உயிர் இருக்கும் வரையில்.

கற்: (சோகமாக) கேட்கச் சகிக்காத பேச்சை வீசினானே அந்தச் சீமான்?

மதி: வலை வீசும் வனிதையாம், என் திலகா! ஏவி விடும் எத்தனாம் நான்.

கற்: வக்கற்றவன் - வகையற்றவன்.

மதி: பணம் படைத்தவனம்மா அவன்—புலிக்குணம், அம்மா! முத்துமாணிக்கத்தைத் திருமணம் செய்து கொள்ள நான் சம்மதிக்கப் போவதில்லை.

[உறுதியுடன்...]

கற்: ஆமாம்! இழி சொல்லும் பழியும் ஏன் நாம் ஏற்க வேண்டும்?

[கண்களைத் துடைத்தபடி கற்பகத்தம்மாள் உள்ளே செல்ல, ஆத்திரத்தை அடக்க சிரமப் பட்டுக் கொண்டு உலவிக் கொண்டிருக்கிறான் மதிவாணன். அவன் செவியில்—''பஞ்சை, பராரி, எடைக்கு எடை தங்கம்—எடைக்கு எடை தங்கம்!'' என்ற பேச்சு விழுகிறது. வேதனை மிகுதியுடன்...]

மதி: எடைக்கு எடை தங்கம்! எடைக்கு எடை தங்கம்!

[என்று மெல்ல வாய்விட்டுக் கூறுகிறான்...]

காட்சி—14

இடம்: சாலையை அடுத்த ஒரு சோலை.

இருப்: முத்து, திலகா, வீரன்.

நிலைமை: திலகா, முத்து உலவுகிறார்கள். முத்து ஆர்வத்துடன் பேசுகிறான். அவன் குரலிலே உள்ளத்தின் நெகிழ்ச்சி தெரிகிறது.

முத்து: தங்கமே! நான் பெற வேண்டிய பேறு என்றல்லவா உன்னைக் கருதுகிறேன். அரண்மனையில் உலவும் ஆள் மயக்கிகளால், என் நெஞ்சிலே இடம் பெற முடியவில்லை.

திலகா! உன்னைக் கண்டபோதுதான், என் உள்ளம் மலர்ந்தது.

திலகா: நானோ, பட்டிக்காட்டுப் பெண்—ஏழை. அரச மங்கையரைக் கண்ட கண்களால் என்னைக் காண்கிறீர்! —நான் தங்களுக்குத் தகுந்தவளா என்றுதான் சந்தேகம் எனக்கு.

முத்து: இவ்விதமெல்லாம் பேசாதே இன்பமே! என் வாழ்வுக்கு நீதான் விளக்கு.

திலகா: பேரானந்தம் தருகிறீர், தங்கள் பிரிய மொழியால்!

முத்து: தத்தை மொழியாளே! என் சித்தத்தைத் தத்தம் செய்து விட்டேன், உன்னைக் கண்டபோதே.

[திலகா பாசத்துடன் முத்துவைப் பார்க்கிறாள்.]

முத்து: அரசிளங் குமரிகளிடம் இல்லாத அழகு என்னிடம் என்ன காண்கிறீர் என்று கேட்கிறாயா?

[ஆமாம் என்பது போல முகக் குறி காட்டுகிறாள் திலகா...]

கேள் தாராளமாக, உன் முகம்...

திலகா: (குறும்பாக) அன்று அலர்ந்த செந்தாமரை.

முத்து: அல்ல; தேயாத் திங்கள். உன் கண்கள்....

திலகா: கனி ரசக் கலசங்கள்! கன்னம் ரோஜா! இதழ் பவளம்! பற்கள் முத்து! — இந்தப் பழம் பாடம் யாருக்குத் தெரியாது கண்ணாளா?

[என்று குறும்பாகக் கூறியபடி அவன் முகவாய்க் கட்டையைப் பிடித்து ஆட்டுகிறாள்.

[குதிரை வீரனொருவன் வருகிறான் அவ்வழி. காதலரைக் கண்டதும் பார்வையை உடனே வேறு பக்கம் செலுத்துகிறான். முத்துமாணிக்கம் அவனை அடையாளம் கண்டுபிடித்து...]

முத்து: ரத்னம்! ரத்னம்!

[என்று கூப்பிட குதிரை வீரன் திரும்பிப் பார்த்து அருகே வந்து வணக்கம் செய்தபடி...]

வீரன்: தாங்களா?

[திலகா வெட்கத்தால் சற்று விலகுகிறாள்.]

தங்கள் மாளிகைக்குத்தான் செல்கிறேன்.

[ஓர் ஓலையைத் தந்தபடி...]

அவசர அழைப்பு...

[முத்து ஓலையைப் படித்துவிட்டு.]

முத்து: மாளிகைக்குச் சென்று இரு. இதோ வருகிறேன்.

[வீரன் செல்கிறான்.]

முத்து: திலகா! எதிர்பாராத சம்பவம். நான் உடனே சென்றாக வேண்டும். அரசர் அழைக்கிறார்.

திலகா: (கவலையுடன்) என் இன்பத்துக்குத் தடை ஏதேனும் வந்தே தீரும் என்று தெரியுமே எனக்கு.

முத்து: (கொஞ்சும் குரலில்) பைத்யமே! இதற்குக் கலக்கமா! கடமையை மறக்கலாமா?

திலகா: பாழாய்ப் போன கடமை! காதலைக் கெடுக்க, இந்தக் கடமை தயங்குவதே இல்லை.

முத்து: ஒரு திங்கள் அல்லது இரண்டு திங்கள்—வீடு திரும்புவேன். திருமணம்—பிறகு இந்தச் சோலையும் சாலையும், நமது காதல் ராஜ்யம்.

திலகா: (செல்லக் கோபத்துடன்) இப்போதே போக வேண்டுமா?

முத்து: போக வேண்டாமா? என்னைக்கூட யாரும் குறைகூற மாட்டார்கள்—யாரோ திலகாவாம்; சொக்குப்

பொடி போட்டு விட்டாளாம், முத்துமாணிக்கத்திறகு. கடமையை மறந்துவிட்டான், அந்தக் காளை என்று உன்னைத் தான் ஏசுவார்கள்.

[முத்து, திலகாவின் சோகத்தைப் போக்க அன்புடன் கூந்தலைக் கோதி விளையாடுகிறான். அவளை அழைத்துச் செல்லுகிறான், தோட்ட வீடு பக்கமாக...]

காட்சி—15

இடம்: மதிவாணன் வீடு—உட்புறம்

இருப்: திலகா, மதிவாணன்,

நிலைமை: மதிவாணன் கவலையுடன் உலவியபடி மெல்லிய குரலில்...

மதி: எடைக்கு எடை தங்கம்! எடைக்கு எடை தங்கம்!

[என்று கூறிக் கொண்டிருக்கிறான். அவன் போக்கையும், கற்பகத்தம்மாள் ஒரு புறம் கலக்கத்தோடு இருப்பதையும் கண்ட திலகா திகைத்து..]

திலகா: அம்மா! அண்ணா, ஏன் இப்படி?...

மதி: திலகா! எங்கே முத்துமாணிக்கம்?

திலகா: மாளிகைக்குச் சென்றார், அண்ணா!

மதி: (வெறுப்புடன்) மாளிகைக்கு...

திலகா: உடனே வந்தாக வேண்டும் என்று அரச ஆணையாம். அழைத்துப் போக ஆள் வந்திருக்கிறான்.

மதி: யாரை? முத்துமாணிக்கத்தையா? நல்ல வேளை. சிக்கல் தீர வழி கிடைக்கும் இனி.

திலகா: (திகைப்புற்ற நிலையில்) என்ன அண்ணா! பேசுவது புரியவில்லையே...

[மதியும் கற்பகத்தம்மாளும் பதில் கூறவில்லை...]

[கற்பகம் திலகாவை அருகே அழைத்து, முகத்தைத் துடைத்தபடி இருக்க...]

மதி: திலகா! உன் வாழ்வு பரிமளமாக இருக்க வேண்டும் என்பதுதான் என் நோக்கம். உன் பொருட்டு நான் எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கச் சித்தமாக இருப்பவன்.

திலகா: இதென்ன அண்ணா! நான் திகில் கொள்ளும் விதமாகப் பேசுகிறாய்.

மதி: (அன்புடன்) இல்லை தேனே! திகிலூட்ட அல்ல; நாம் ஏழைகளல்லவா?

திலகா: இன்றுதானா? நெடுநாளாக!

மதி: முத்துமாணிக்கம் மாளிகை வாசி.

[திலகா திகைப்புடன் மதியைப் பார்க்கிறாள்...]

உன் மன மாளிகையிலே அவனுக்கு இடம் கொடுத்து விட்டாய். அவனும் உன்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறான். ஆனால்...

திலகா: ஆனால்...! வந்ததா பேரிடி? அண்ணா! என்ன அண்ணா அந்த ஆனால்...

மதி: சோமநாதன் கொக்கரிக்கிறான். பராரி மகளாம் நீ—பஞ்சையாம் நான். அந்தச் சீமான் மகனை, திலகா! வலை போட்டுப் பிடிக்கிறோமாம்.

திலகா: (கண் கலக்கத்துடன்) ஐயோ! என் களிப்பு கருகும் காலம் வந்து விட்டதா இவ்வளவு விரைவில்.

[மதிவாணன் திலகாவை அன்புடன் அருகே அழைத்து அணைத்தபடி.]

மதி: மானத்தை இழக்கலாமா திலகா! மறக்குடியில் பிறந்தோம்! மணியில்லை—அணியில்லை. ஆனால் நாம் என்ன ஏய்த்துப் பிழைக்கிறோமா? ஏவல் வேலை செய்து வாழ்கிறோமா? மாளிகை இல்லை—ஆனால், இதோ மலர்த் தோட்டம். நமது உழைப்பின் உருவம். உழைக்கிறோம். பிறர் கட்டளை கேட்டு அல்ல. உருட்டி மிரட்டி ஊரை

ஆட்டிப் படைக்கும் அந்த உலுத்தன், உத்தமன் முத்து மாணிக்கத்தின் தந்தை....

கற்: உன் அண்ணனைக் கேவலமாகப் பேசி, இழி வாக ஏசினான் திலகா!

மதி: ஆணவம் பிடித்தவன், என் நெஞ்சிலே வேல் பாய்ச்சினான்; தீயால் சுட்டான்.

திலகா: அண்ணா! ஐயோ, என்னால் எவ்வளவு வேதனை?

மதி: பணம் தேடி அலையும் அவனுக்குப் பண்பு என்ன தெரியும்? காசாசை பிடித்தவன்; காட்டுக் குணம் படைத்த வன்; அவன்எப்படி அறிவான் காதலின் மேன்மையை. கண்ட படி ஏசினான் என்னை—கன்னத்திலும் அறைந்தான்.

[திலகா மதியின் கன்னத்தைத் தடவ...]

அங்கு ஒன்றும் இல்லை, திலகா! அங்கு ஒன்றும் இல்லை. (ஆத்திரத்துடன், தன் மார்பில் அறைந்தபடி) இங்கே இருக் கிறது புண். என்னை வேதனைப் படுத்தும் புண் இங்கே இருக்கிறது திலகா, இங்கே! என்ன சொன்னான் தெரியுமா? உன் எடைக்கு எடை தங்கம் தரவேண்டுமாம். முத்துமாணிக் கத்தை திருமணம் செய்து கொள்ளும் நிலை உனக்கு அப் போதுதான் ஏற்படுமாம்—இந்தப் பொற்கொடி! இந்த முழுமதி!—போதாதாம்! பொன் வேண்டுமாம் பொன்! ''எடைக்கு எடை தரமுடியுமாடா மூடா!'' என்று கேட் டான், மடயன்! உன் எடைக்கு எடை தங்கம் தர முடியும் என்னால்.

[திலகாவின் முகத்திலே சோகத்தையும் பிய்த்துக் கொண்டு புன்சிரிப்பு பிறக்கிறது...]

இவனைப் போல, பல்லைக் காட்டி அல்ல; அடுத்துக் கெடுத்து அல்ல; பாதகம் புரிந்து அல்ல; என் கவிதை எனக் குக் காணிக்கை தரும் வேண்டும் அளவு. இந்தப் பணப்பித் தன் கண்டு மிரளும் அளவு. திலகா! உன் அண்ணாவின்

37107
MARAIMALAI ADIGAL LIBRARY

மானத்தைக் காக்கத் தயங்காதே. உன் எடைக்கு எடை தங்கம் சேர்த்தாக வேண்டும் முதலில். அதுவரையில் திரு மணம் இல்லை. முத்துமாணிக்கம் உத்தமனானால், உன் மீது அவன் கொண்டிருப்பது உண்மைக் காதலானால், அவன் பொறுத்திருக்க வேண்டும். திலகா! என் முடிவு கண்டு மன வேதனை அடைவாய் அம்மா! காதலின் மேன்மை அறி யாத கயவனல்ல உன் அண்ணன்.

திலகா: (அழுகுரலுடன்) போதும் அண்ணா! போதும். புரிந்து கொண்டேன் நிலைமையை. என் இதயம் இதைத் தாங்க வேண்டுமே! தாங்கிக் கொள்கிறேன் அண்ணா.

[என்று கூறிவிட்டு உள்ளே சென்று படுக்கையில் விழுந்து புரள்கிறாள்.]

காட்சி—16

இடம்: மதிவாணன் வீட்டின் வெளிப்புறம்

இருப்: முத்து, மதிவாணன்.

நிலைமை: மதிவாணன் வீட்டு வாயிற்படி அருகே சென்று நிற்க, முத்து வும், ரத்னமும் குதிரை மீது வருகிறார்கள். மதிவாணனைக் கண்டதும்...

முத்து: உடனே வரவேண்டுமென்று அரசரிடமிருந்து...

மதி: சேதி, திலகா மூலம் தெரிந்தது. சென்று வா முத்து.

முத்து: திலகா?

மதி: வெளியே சென்றாள். அவசர வேலை. நீ புறப்படு.

[வணக்கம் செய்துவிட்டு முத்து புறப்படுகிறான். அவன் அறியாமல் பலகணி வழியாக அவனைப் பார்த்து ஏக்கமடைகிறாள் திலகா...]

காட்சி—17

இடம்: மதிவாணன் வீடும் மலர்த்தோட்டமும்.

இருப்: திலகா, மதிவாணன், கற்பகம்.

நிலைமை: திலகா, கண்ணீருடன் சோகமாக வீட்டு வேலைகளைச் செய்த வண்ணமிருக்கிறாள். மதிவாணன் கவலையுடன் வேலைகளைஅரைகுறையாகவே செய்கிறான். கற்பகத்தம்மாள் கலக்கத்துடன் காணப்படுகிறாள். தோட்டத்தில் தண்ணீர் சரியாக பாய்ச்சப்படவில்லை. செடி கொடிகள் நாளாகவாக உலருகின்றன. மலர்கள் பறிக்கப் படாமல் கருகி உதிருகின்றன; தோட்டம் அழகிழந்து இருக்கிறது.

காட்சி—18

இடம்: மதிவாணன் வீட்டின் உட்புறம்.

இருப்: கவிராயர், மதிவாணன்

நிலைமை: மதிவாணன் சோகமாக இருக்கிறான். கவிராயர் வருகிறார். வணக்கம் செய்கிறான் மதிவாணன். அவன் அருகே அமர்ந்து கொண்டு பேசுகிறார் கவிராயர்.

கவி: என்னடா மதிவாணா! இன்னமுமா கவலையும் கலக்கமும்? மலை குலைந்தாலும் மனம் குலையாதவன் தமிழன். தமிழ் மறக்குடியில் பிறந்த நீ, இப்படிச் செயல் மறந்து இருப்பது தகுமா?

மதி: (சோகமாக) என்ன செய்வது?

கவி: புறப்படு, நான் சொன்னபடி.

மதி: எங்கு பெரியவரே! நரியூரில் இருக்கப் பயந்து கொண்டு புலியூர் புகுவது சரியாகுமா? சோமநாதன் செல்வச் செருக்கால் என்னை இழிவாகப் பேசினான். அதற்காக, அரச சபையில் இடம் தேடக் கிளம்பினால்—

கவி: இடம் கிடைக்காதோ என்ற அச்சமோ?

மதி: அல்ல, அல்ல; பெரியவரே! அரச சபை ஆயிரத் தெட்டு கேடுகள் நடமாடும் இடம். அங்கு சென்றால், கலையை அடகு வைத்துவிட்டு, கட்டியங் கூறித்தானே பிழைக்க வேண்டும். சரியா. முறையா?

கவி: நியாயமான கேள்வி. ஆனால் உள்ளத்தில் உரம் உண்டு உனக்கு. அரசனுக்கு அடிமையாகாமலே, கலைத் தொண்டு செய்ய முடியும். அகமும், புறமும் பாடிய அருந் தமிழ்ப் புலவர்கள், அரசர்களைக் கண்டு அஞ்சினதில்லை— இச்சகம் பேசிப் பிழைத்ததில்லை. தவறி நடந்த மன்னரை இடித்துரைக்கத் தயங்கினதில்லை.

மதி: அந்த உள்ள உரம் வேண்டுமே— எனக்கு உண்டா?

கவி: உண்டு, உண்டு. நான் அறிவேன். உன் கவிதை மக்களுக்குப் புதிய விருந்தாகப் போகிறது. புறப்படு, புறப்படு!

[ஓலை ஒன்று கொடுத்து...]

இதை என் மகளிடம் கொடு. பெரிய வணிகருக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறாள், மதிவாணா!

[வெளியே வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்கிறது]

*காட்சி—19*

*இடம்: மதிவாணன் தோட்டத்தின் வெளிப் புறம்.*

*இருப்: கவிராயர், மதிவாணன்.*

*நிலைமை: கற்பகத்தம்மாள், கண்களைத் துடைத்தபடி சாமான் சில வற்றை எடுத்து வண்டியில் வைக்கிறார்கள்.*

*திலகா ஓலைச் சுவடிகளை ஒரு பட்டுத் துண்டிலே முடிந்து கொண்டுபோய் வைக்கிறாள். தாயை வணங்கிவிட்டு, திலகா வின் கரத்தைப் பிடித்து அன்பு டன் குலுக்கி விட்டு, கவிராயரை கட்டிப் பிடித்துக் கொண்டு மதிவாணன் புறப்படுகிறான். வண்டியில் ஏறிக் கொள்கிறான்; வண்டி நகருகிறது. கவிராயர் அன்பாகப் பின் தொடர, மதி வாணன் தடுத்துநிறுத்துகிறான். கற்பகத்தம்மாளும் திலகாவும் கனிவுடன் பார்க்கின்றனர். மதி வாணன் செல்வதை—வண்டி யைத் தொடர்ந்து சிறிது தூரம் சென்ற கவிராயர்...*

கவி: ஓலையைக் கொடு, என் மகள் பூங்கோதையிடம்.

*[மதிவாணன் 'ஆகட்டும்' என்று தலை அசைக்கி றான்.]*

கவி: மந்திரமூர்த்தி என் மருமகன் பெயர். வணிகன்— சீமான் மந்திரமூர்த்தி.

*[மதிவாணன் புன்னகையுடன் 'சரி' என்று கூறும் விதமாகத் தலை அசைக்கிறான்...வண்டி செல்கிறது.]*

காட்சி—20

இடம்: நடுநாட்டு மடாலயத்தின் வெளிப்புறம்.

இருப்: பெரியமடாதிபதி, அருளாளர்.

நிலைமை: பல்லக்கு தயாராக இருக்கிறது. பெரிய மடாதிபதி, கருணை உள்ளம் படைத்தவர் என்பதை முகக் குறி காட்டுகிறது. புறப்படத் தயாராக உள்ள, நடுத்தர வயதுள்ள மடாதிபதியின் முகம், மலர்ச்சியாக இருக்கிறது. மடாலயப் பரிவாரம் அருகே நிற்கிறது. முத்துமாணிக்கம், அரச மரியாதையைக் கொண்டு வந்து, பெரிய மடாதிபதிமுன் வைக்கிறான். பெரிய மடாதிபதி, அதைப் புறப்படும் மடாதிபதிக்குத் தரச் சொல்லுகிறார். அரச மரியாதையைப் பெற்று புறப்படும் மடாதிபதி மகிழ்கிறார்...

பெரியமடாதிபதி அருளாளர்: அருமறையானந்தரே! உமது திருத்தொண்டு, நமது மதத்திலே படிந்து போயுள்ள மாசுபோக்கி, மக்களைச் சன்மார்க்கத்திலே சேர்ப்பிக்கும் விதமாக அமைய வேண்டும். எங்கும் புத்த மார்க்கம் பரவி விட்டது. மன்னர் பலர் புதிய மார்க்கத்தை ஆதரிக்க முன் வந்து விட்டனர். வேத மார்க்கம் மங்கிக் கிடக்கிறது. வேழ நாட்டு வேந்தன் வெற்றிவேலன், புராதன மார்க்கத்தை ரட்சிக்க முன் வந்தது நமது பாக்யம். தோணி கவிழ்ந்த போது தெப்பக் கட்டை கிடைத்ததுபோல வெற்றிவேலன் கிடைத்திருக்கிறான்.

அடுத்த மடாதிபதி அருமறை: அருளாளரின் மடத்தின் புகழுக்குக் கேடு வரும்படி நடந்து கொள்ள மாட்டேன்.

அரு: பரமன் உன் மனதை பரிபாலிக்கட்டும்.

[அருமறையானந்தர் வணக்கம் செய்கிறார். பல்லக்கு புறப்படுகிறது...பரிவாரத்துடன்.]

''அருளாளர் வாழ்க! அருளாளர் வாழ்க!''

[என்ற முழக்கம் கிளம்புகிறது. அருளாளர் மடாலயத்துக்குள்ளே செல்கிறார். முத்துமாணிக்கம் வணக்கம் செய்துவிட்டு செல்கிறான்.]

காட்சி—21

இடம்: சாலையோரம்

[பல்லக்கும் பரிவாரமும் சென்று கொண்டிருக்கிறது. அருமறை முகத்திலே யோசனைக் குறிகள். பல்லக்கில் இருந்தபடி, தன் பதவி உயர்வுக்கான பத்திரத்தைப் பிரித்துப் படித்து மகிழ்கிறார். பல்லக்கு செல்லும்போது பாதையிலே பலரும் கண்டு பரமானந்தப்படுகிறார்கள். அவர் செவியில்...

''அருளாளர் வாழ்க! அருளாளர் வாழ்க!''

[என்ற முழக்கம் கேட்கிறது. முகத்திலே இலேசாக மாறுதல் கண்டிருக்கிறது. பல்லக்கின் பக்கத்திலே ஓடி வந்து கொண்டிருக்கும் காரியக்காரனை அழைக்கிறார், ஜாடை காட்டி—அவனிடம் இரகசியமாக ஏதோ கூறுகிறார். அவன் வேறு சிலரிடம் ஏதோ கூறுகிறான். சில விநாடிகளிலே...

பரிவாரம்: அருமறையானந்தர் வாழ்க! அருமறையானந்தர் வாழ்க!

[என்று முழக்கமிடுகின்றது. அருமறையானந்தரின் முகத்திலே களிப்பு கூத்தாடுகிறது...]

[ஊரைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது பல்லக்கு, பரிவாரத்துடன். அருமறையானந்தர் ஆனந்தமாகக் கண்களை மூடிக் கொண்டு இன்பக் கனவு காண்கிறார், தமது எதிர்காலம் பற்றி. பரிவாரத்தின் கடைசி வரிசையில் பார வண்டிகள் செல்கின்றன. கொழுத்த எருதுகள் பூட்டப்பட்டு, அலங்காரம் செய்யப்பட்ட வண்டிகள். இரு பக்கமும் திருநீற்றுப்பட்டையும் வேலும் சின்னங்களாக பொறிக்கப்பட்டிருக்கின்றன. பரிவாரத்தின் முன் வரிசையிலே குதிரைகள் மீது செல்கின்றனர், சில மடத்து வீரர்கள். அவர்கள் ஏந்தியுள்ள கொடிகளிலும் திருநீற்றுப்பட்டையும் வேலும் சின்னங்களாக பொறிக்கப்பட்டிருக்கின்றன.]

காட்சி—22

இடம்: சாலையோரம் – இன்னோர் புறம்.

இருப்: வண்டியோட்டி, மதிவாணன்.

நிலைமை: மதிவாணன் புறப்பட்ட இரட்டை மாட்டு வண்டி வந்து கொண்டிருக்கிறது. வண்டியோட்டி உள்ளே நிம்மதியாக சாய்ந்து கொண்டிருக்கிறான்...

வண்டியோட்டி: தம்பி! வியாபார வேலையாகவா, வேழ நாடு புறப்பட்டே?

மதி: இல்லை. நான்....(தயங்குகிறான்)

வண்டி: போர்வீரனா?

மதி: வாட்போர் வீரனல்ல.

வண்டி: அப்படீன்னா?

மதி: நான் ஒரு கவிவாணன்.

வண்டி: பாட்டு பாடுவதா? அப்படீன்னா அரச சபையிலே இடம் நிச்சயமாக கிடைக்கும்—ஆடல் பாடல் இல்லாத அரச சபை உண்டா? வேறே எது இல்லாது போனாலும், ஆடலும் பாடலும் நிச்சயமாய் இருக்கும்.

மதி: இந்தக் காலத்து அரசர்கள் போக்கே தனி. முன்பு நமது ஏடுகளைப் பார்த்தா...

வண்டி: பார்த்தா?

மதி: நமது மன்னர்களின் பெருமை விளக்கமாகத் தெரிகிறது.

பாடலின் கருத்து :

முடியுடை வேந்தர்கள்
    தமிழகத்தை ஆண்டு வந்தனர்.
அப்போது வீரமும் அன்பும்
    அறமும் குடிகொண்டிருந்தன.
மறக்குடி தமிழன் மானம் பெரிது
    உயிர் சிறிது என்று எண்ணுபவன்.
வடக்கே நெடுந் தொலைவில் கங்கைக்
    கரையருகே இருந்த கனக விசயரெனும்
வடவாரிய மன்னர்கள் தமிழ்நாட்டு
    மன்னர்களைத் தாழ்வாகப் பேசினர்.
வந்தது கோபம், சேரன் செங்குட்டுவனுக்கு!
    வாட்படை வீரருடன் சென்றான்
வாகை சூடினான். வாய்க் கொழுப்பால்
    வம்பு பேசிய கனகவிசயன் தலையில்
கல் ஏற்றிக் கொண்டு வந்து
    கண்ணகி கோயில் கட்டினான்.
வீரத்தைப் போற்றி வாழ்ந்ததால்
    அறிவுக்கு ஆட்சி இருந்ததால்
தமிழகம் வாழ்ந்தது.

[பாடலைக் கேட்டு ரசித்த வண்டியோட்டி மதிவாணனைப் பார்த்து...]

வண்டி: தம்பி! அப்படிப்பட்ட தமிழ் நாடு இப்போது தேய்ந்து வருகிறதே, ஏன்?

மதி: பண்பை இழந்ததால்தான்! பாதையிலே படுகுழி இருந்தால் வண்டி என்ன ஆகும்?

வண்டி: படுகுழியிருப்பது ஏன் தம்பி தெரியவில்லை?

மதி: படுகுழி தெரியாதபடி மேலே பச்சிலை போட்டு மூடி வைத்து இருந்தால் எப்படித் தெரியும்?

வண்டி: உண்மைதான் தம்பி! நீ பாதையைப் பார்த்து ஓட்டு வண்டியை.

காட்சி—23

இடம்: ஊர் வெளிப்புறத்தே உள்ள சாலை

இருப்: மதிவாணன், ஆட்கள், வண்டியோட்டி

நிலைமை: மதிவாணனுடைய வண்டி ஊருக்குள் பிரவேசிக்கிறது. நாலைந்து ஆட்கள் வண்டியை மடக்கி வேறு பக்கமாக போகச் சொல்லுகிறார்கள்...

மதி: ஏன்? இந்தப் பாதை வழியாகத்தான் போக வேண்டியிருக்கு.

ஆள்: அப்படியானா, வண்டியை ஏதாவது மரத்தடியிலே நிறுத்தி வை. மடாதிடதியோட பல்லக்கு போன பிறகு போகலாம்.

[வேறோர் பாதையிலிருந்து பல்லக்கு பரிவாரம் வருவது தெரிகிறது. வண்டியோட்டி இறங்கி வண்டியை ஓரமாக நிறுத்துகிறான். மதிவாணன் கீழே இறங்குகிறான். ஆட்களில் ஒருவனைப் பார்த்து...]

வண்டி: யாரு வருவது?

ஆள்: மடாதிபதி அருமறையானந்தர்!

மதி: எங்கே போகிறார்?

ஆள்: அவர் வேழநாட்டு மடாதிபதியாக இருக்கிறார். அங்கேதான் போகிறார்...

மதி: வேழ நாட்டுக்கா? நானும் அங்கேதான் போகிறேன், வேறு வேலையாக.

வண்டி: தம்பி பாடுவது கேட்டா, மயில் ஆடும்.

ஆள்: பாடுவாயா?

மதி: சுமாராகப் பாடுவேன். கவிதையும் எழுதுவதுண்டு!

ஆள்: (மற்றவர்களைப் பார்த்து) அண்ணே, அண்ணே! இங்கே வாங்க. இதோ, இந்தத் தம்பி கவி எழுதுதாம்! பாடுமாம்.

ஆட்: (மதிவாணனைப் பார்த்து) ஆளைப் பார்த்தா..!

ஆள்: காதிலே குண்டலம், கழுத்திலே தாவடம், பட்டாடை இல்லையேன்னு யோசனையா? நெஜமாத்தான் அண்ணேன்! அருமையான கவி இந்த தம்பி; பெரியவரு சொல்றாரு, கேளேன்.

ஆட்: வா தம்பி! வா. ஊருக்கு ஒரு உபசாரம், மடாதிபதிக்கு உபசாரம் செய்ய வேணும். ஒரு கவி பாடு.

[மதிவாணனை அழைத்துச் செல்கிறார்கள்...]

காட்சி—24

இடம்: ஊர்ப் பொதுமண்டபம்.

இருப்: மதிவாணன், அருமறை, மக்கள்.

நிலைமை: அருமறையானந்தர் அமர்ந்திருக்கிறார், ஆடம்பரமாக.

ஊரார், ஆடவரும் பெண்டி ருமாக உள்ளனர். மதிவாணன் பாடுகிறான்.
இசைத் திறனுடன் பாடியது கேட்ட அருமறையானந்தர் பூரித்து, காரியக்காரனிடம் ஏதோ கூறிவிட்டு, மதிவாணன் அருகே அழைத்துப் பட்டாடை யும் பரிசும் தந்து...

அருமறை: பரமன் உனக்கு அரிய ஞானத்தை தந்திருக் கிறார். அவன் புகழ் பாடு; திரு அருள் நாடு; உன் இசையால் அஞ்ஞான இருள் நிச்சயம் நீங்கும்.

காட்சி—25

இடம்: மதிவாணன் மாளிகையில் ஓர்கூடம்
இருப்: மதிவாணன், திலகவதி.
நிலைமை: பல பேழைகள். அவைகளைத் திறந்து பார்க்கிறான்; பூரிப் படைகிறான். தங்கக் கட்டிகள் உள்ளன. திலகாவைக் கூப்பிடு கிறான். ஒரு தராசு கட்டி தொங்க விடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு தட்டிலே திலக வதியை நிறுத்தி, மறுதட்டிலே தங்கக் கட்டிகளைப் போட்டு நிறுக்கிறான். நிறை சரியில்லை. கவலையுடன் திலகவதியை அனுப்பி விட்டு உலவுகிறான். அவன் செவியில்...

'எடைக்கு எடை தங்கம். எடைக்கு எடை தங்கம்'

[என்று சோமநாதர் முழக்கமிட்ட வார்த்தை கள் விழுகின்றன. கவலையுடன் உலவுகிறான். மெல்லிய குரலில்...

மதி: எடை குறைகிறது...குறைகிறது.

காட்சி—26

இடம்: மந்திரமூர்த்தி வீட்டின் உட்புறம்.

இருப்: வணிகன், மாது, ஆள்.

நிலைமை: நடுத்தர வயதுள்ள வணிகன் சிறிய தராசில், ஒரு நகையை எடை போட்டுப் பார்த்தபடி எதிரே உள்ள ஆளிடம்...

வணி: எடை குறையுதே. ஏம்பா! சரியா எடை போட்டுப் பார்க்க வேணாமோ? இப்படி இருந்தா, என் வியாபாரத்திலே கல்லைத்தான் போடுவே. போ...போ...போய்ச் சொல்லிவிட்டு வா, எடை குறையுதுன்னு.

[அந்த ஆள் போகக் கிளம்பும்போது]

எங்கே எஜமானியம்மா, உள்ளேயா? இல்லை, தர்பாருக்குப் போயிருக்காங்களா?

ஆள்: அம்மா, சங்கத்துக்கு போயிருக்காங்க.

வணி: சங்கத்துக்கா? அட அடா! இப்படி வந்து வாய்ப்பாளா எனக்கு! சரி, சரி! நீ போ...

[ஆள் சென்ற பிறகு வணிகன் சிறு பேழையிலிருந்துப் ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்து, நவரத்னக் கற்களைக் கொட்டி அழகு பார்த்தபடி இருக்கிறான். அழகிய முகத் தோற்றமும் அன்பு வழியும் கண்களும் கொண்ட மாது வரக்கண்டு விறைத்துப் பார்த்தபடி...]

வணி: (கேலியாக) வாங்க. எங்கே போயிட்டு வாரிங்க? கொண்டு வந்த தங்கக் கட்டிகளைக் கொட்டிடுங்க எதிரே.

மாது: (புன்னகையுடன்) சங்கத்திலே தங்கத்தைவிட மேலான குணம்தான் கிடைக்கும். தங்கம் கிடையாது. இலாப வேட்டைக்காரர்களை மதிக்கவும் மாட்டார்கள் சங்கத்தவர்.

வணி: இலாப வேட்டைக்காரர்கள்! சகலகலாவல்லியே! நீ சாய்ந்து கொள்கிறாயே, சர்ப்பாசனம்—அது சந்திரசேகரனுக்குச் சாக்கு விற்றதில் கிடைத்த லாபத்திலே வாங்கினதுதான்! மாலையில், நீ மினுக்கிக் கொண்டு நிற்கிறாயே நிலக்கண்ணாடி முன்பு, அது ஏது தெரியுமா? எல்லப்பன் கடையை ஏலத்தில் எடுத்தேனே, அங்கு கிடைத்தது. இங்கே உள்ள ஒவ்வொரு பொருளும் அப்படித்தான். உன் உடை, உணவு, உல்லாசம், மாளிகை, தோட்டம், வண்டி, வாகனம், விதவிதமான ஆபரணம் இவைகளை வேதாந்தம் தேடித்தரவில்லை; மாயத்தால் கிடைத்ததல்ல.

[மாது கோபம் கொண்டு.]

மாது: எப்படிக் கிடைத்தன என்பது எனக்குத் தெரியுமே! ஏமாளிகளிடம் தட்டிப் பறித்தவை.

வணி: (கோபம் அதிகமாகி) மக்கள் மன்றத்திலே மடமன்னார்சாமிகள் முன்பு கூவினீர்களாம் இப்படித்தான். இலாப வேட்டை! கொள்ளை லாபம்! உம்...

மாது: இலாப வேட்டைதான்; கொள்ளை லாபம் தான்; சந்தேகமென்ன?

வணி: ச்சீ! வாய்க்கொழுப்பைக் காட்டாதே, மேலும் மேலும். கொள்ளையாம் கொள்ளை! அந்தக் கொள்ளை லாபம் கொடுத்த பொருள்கள்தான் உன்னைச் சூழ இருப்பவை.

[தன்னைச் சுற்றியுள்ள போக போக்கியப் பொருள்களை மாது பார்க்கிறாள், வெறுப்புடன்]

ஏழைகளின் இரத்தத்தைக் குடிக்கிறார்கள் என்று கொக்கரித்தீர்களாமே. அந்த இரத்தத்தைக் குடித்தவர்கள்தான் நீயும். இலாப வேட்டையாம், இலாப வேட்டை! உனக்காகத் தான் நான் அந்த வேலை செய்தேன்.

மாது: (கேலிச்சிரிப்புடன்) எனக்காக!

வணி: உன் அழகுக்கு ஏற்ற அந்தஸ்தை தேடிக் கொடுத்தேன்.

[வணிகரின் குரலில் கோபத்துடன் சோகமும் தோய்ந்து வருகிறது.]

பரம திருப்தியுடன் பாலும், பழமும் சாப்பிட்டுவிட்டு, பரிமள வாடை கொண்ட பஞ்சணையில் நீ படுத்து உறங்கின போதெல்லாம், நான் பாழும் கணக்கு, கணக்கு என்று அதிலே மூழ்கிக் கிடந்தேன். உனக்கு இவ்வளவு போக போக்கியத்தை அளித்தேன்.

[மாதின் முகத்தில் இலேசாகப் பச்சாதாப உணர்ச்சி தோன்றுகிறது.]

மாது: நான் கேட்கவில்லையே, ஏழைகளைக் கெடுத்து இவைகளைத் தாருங்கள் என்று.

வணி: கோபத்தைக் கிளறாதே! மனிதனை மிருகமாக்கிவிடாதே. எங்கோ கிடந்த உன்னைத் தேடி எடுத்துச் சீமாட்டியாக்கினேன். நீ சீறிச் சீறிப் பேசினாயாம், மன்றத்திலே.

மாது: தங்களைக் கண்டித்துப் பேசுவேனா? முறையைக் கண்டித்தேன். நாடு சீரழியும் காரணம் என்ன என்று எடுத்துப் பேசினோம்.

வணி: அறிவு கெட்டவளே! வியாபாரி நான். இலாபம் பெறுவது என் தொழில். அதை அனுபவிப்பவள் நீ. நீ கண்டிக்கிறாய், கொள்ளை லாப முறையை.

மாது: உமது செயலுக்கு நான் உடந்தை அல்லவே. உம்முடன் இருக்கிறேன், மனைவியானதால்—அவ்வளவு தான்.

வணி: நான் சாமர்த்தியமாய் தொழில் நடத்தியிராவிட்டால், நீ எங்கு இருப்பாய் தெரியுமா?

மாது: (கம்பீரமாக) அக்ரமம் நுழைய மறுக்கும் என் தந்தை வீட்டில் இருப்பேன், தமிழ்ச் சுவடியைப் படித்துக் கொண்டு.

வாணி: (கோபமாக) ஏ, பூங்கோதே! என் கோபத்தைக் கிளறாதே! மானம் போகுது உன்னாலே.

மாது: மானம் போகுதா? என்னாலா? தங்களுக்கா?

வணி: (ஆத்திரமாக) சங்கமாம் சங்கம். அங்கே என்ன வேலை உனக்கு? அன்னக் காவடிகளோட கூடிக்கொண்டு, ஆகாத விஷயமெல்லாம் பேசிக் கொண்டு.

மாது: அன்னக்காவடிகள்! ஆகாத விஷயம்! கேலிப் பேச்சு பேசுகிறீர்!

வணி: கேலியல்ல, கேலியல்ல. கேள், என் பேச்சை! உங்க சங்கத்தை ஒழித்துக் கட்ட அரசாங்கத்திலே திட்டம் போட்டாச்சி. ஆபத்து வருது—அதை அறிந்ததாலே சொல்கிறேன். உன் கழுத்திலே ஒரு கயிறு கட்டி தொலைச்ச தோஷத்திற்காக—ஆப்பை அசைத்து விட்டு அவதிப்படுகிற குரங்கு அவதிப்படட்டும். உனக்கு வேணாம், அந்த நிலைன்னு சொல்கிறேன், கடைசி தடவையாக. ஆமாம். உன்னோட அப்பன், அந்தக் கவிராயனுக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறேன். உனக்கு இங்கே இருக்க மனமில்லை; சொல்லு, அனுப்பி விடுகிறேன். சுவடி படி சுவடி, உன் அப்பனோடு.

மாது: காட்டு முறையைப் போக்கி நாட்டை இன்பபுரியாக்கும் நல்லறிவு பெறுவேன்.

வணி: வாயாடி! வகையற்றவளே! சோற்றுக்கே திண்டாடும் கவிராயன் மகள்தானே! உனக்கு எப்படி அறிவு இருக்கும்?

[என்று கூறியபடி வணிகன் அங்கு கிடந்த படிக்கல் ஒன்றை எடுத்து அவள்மீது வீச, அவள் நெற்றியில் பட்டு இரத்தம் சிறிதளவு கசிகிறது.]

காட்சி—27

இடம்: வெற்றிவேலன் மாளிகையில் ஓர் கூடம்.

இருப்: வெற்றிவேலன், அமைச்சர்.

நிலைமை: வெற்றிவேலன் வேட்டைக்குக் கிளம்புவதற்காக, தனி அறையில் உடை அணிந்து கொண்டிருக்கிறான். பணியாள் உடைகளை எடுத்து அணிவித்துக் கொண்டிருக்கிறான். கூர்மையான சொருகு ஈட்டியைத் தடவிப் பார்த்தபடி இருக்கிறான் வெற்றிவேலன். வெற்றிவேலனின் வேட்டையாடும் திறமையை விளக்கும் அறிகுறியாக மிருகங்களின் தலைகள் அங்கு காணப்படுகின்றன. மார்புப் பட்டையைக் கட்டும் போது பணியாளிடம்...

வெற்றி: இழுத்துக் கட்டு.

[பணியாள் இழுத்துக் கட்ட...]

போதாது. இன்னும்...உம்...அப்படி...போதும்...சரி, சீக்கிரம்.

[உள்ளே அமைச்சர் நுழையக் கண்டு...]

தவனக் காட்டு கருப்புலி இன்னும் சிக்கவில்லை. இன்று எப்படியாவது அதைக் கொன்றாக வேண்டும். வருகிறீரா, அமைச்சரே?

அமை: இல்லை வேந்தே! இங்கு நான், நாட்டிலே உள்ள நரிகளை ஒழித்திடும் காரியத்தைக் கவனிக்க வேண்டும், அவசரமாக.

[வெற்றிவேலன் முகத்திலே இலேசாகக் கோபக் குறி. பணியாள் முழங்காலுக்குக் கீழே உள்ள பட்டையைக் கட்டியபடி இருக்கிறான்...]

வெற்றி: சதிகாரர்களின் தொகை வளர்ந்து விட்டது. அப்படித்தானே?

அமை: தொகை மட்டுமல்ல, துடுக்குத்தனமும்.

வெற்றி: (கோபமாக) வேழநாட்டிலேயே இந்த நிலை என்றால், மற்ற இடங்களிலே எப்படி இருக்கும்—சரி, என்ன செய்தாவது சதிகாரக் கூட்டத்தை அழித்தாக வேண்டும். இழுத்துக் கட்டடா, முட்டாள்! வரவர, வறண்ட தலைப் பயல்களுக்கு மண்டைக் கர்வம் வளருகிறது.

[ஒரு ஓலையைத் தருகிறார் அமைச்சர்.

அமை: (ஓலை தந்தபடி) இந்தக் கும்பலைப் பிடித்து அடைத்துவிட்டால், சதித்திட்டம் தவிடு பொடியாகும்!

வெற்றி: இவர்களெல்லாம்.

அமை: தூண்டிவிடும் தலைவர்கள்.

வெற்றி: (ஓலையைப் படித்தபடி) நவரத்ன வியாபாரி, மந்திரமூர்த்தியின் மனைவி... பூங்கோதை! இந்தப் பெண்ணுமா?

அமை: பெயர்தான் வேந்தே, பூங்கோதை; புயல் காற்று—சொல், செயல்.

வெற்றி: சீமானின் மனைவி?

அமை: ஆம்! சீமான்களை ஒழிக்க திட்டம் தீட்டுகிறாள்.

வெற்றி: (உரத்த குரலில்) பிடித்து அடையுங்கள் சிறையில்—இந்தச் சதிகாரர்களை இன்றே—உடனே...

[ஓலையை வீசி எறிய, அமைச்சர் பிடித்துக் கொண்டு வெளியே செல்கிறார்.]

காட்சி—28

இடம்: அரண்மனை வெளிப்புறம்

இருப்: படைத்தலைவன், அமைச்சர்.

நிலைமை: அமைச்சருடைய ஜாடை பார்த்து சிறு படைவரிசை அணிவகுத்து நிற்கிறது. அதன் தலைவனிடம் ஓலையைத் தரு கிறார். அவன் படித்து விட்டு வணக்கம் செய்கிறான். போகும் படி தலை அசைக்கிறார் அமைச்சர். படை புறப்படு கிறது. தலைவனிடம் அமைச் சர்...

அமை: மாளிகையில் இருந்தாலும், மலை உச்சியில் ஒளிந்து கிடந்தாலும், இவர்கள் அனைவரும் சிறையில் தள் ளப்பட வேண்டும், உயிருடன் பிடிபட்டால்! பிணமானால் சந்தைச் சதுக்கத்தில் தொங்க விடு. சதிகாரர்கள் என்ன கதி அடைகிறார்கள் என்பதைச் சகலரும் காணட்டும்.

[தலைவன் வணக்கம் செய்துவிட்டு அமைச்சர் தந்த ஓலையைச் சுருட்டிக் கொண்டு செல்கி றான்.]

காட்சி—29

இடம்: மந்திரமூர்த்தி மாளிகையின் உட் புறம்.

இருப்: வணிகன், கவிராயர், பூங்கோதை, படைத்தலைவன்.

நிலைமை: உட்புறத்திலே புறப்படச் சித்த மாக உள்ள நிலையில், கவிராய ரும் மகளும். மகள் தன் மீதிருந்த

ஆபரணங்களை அகற்றி விட்டிருக்கிறாள். முகத்திலே கவலையைவிட உறுதியே நன்றாகத் தெரிகிறது. சீமான் ஒருபுறமாகக் கண்ணாடி எதிரே நின்று கொண்டு, நெற்றியில் நீறு பூசிக் கொண்டே பேசுகிறான்...

வணி: தொலைந்தால் போதும்—தாலி கட்டின தோஷத்துக்காக! ஏதாவது பணம் வேண்டுமானால் அழுகிறேன்.

கவி: (கேலியாக) பணமா? வேண்டாமப்பா! உன்னிடம் இருப்பது அது ஒன்றுதானே! கட்டிக் காத்துக் கொண்டிரு.

[மகளைப் போகலாம் என்று சொல்லும் முறையில் பார்க்கிறார். மகள் தகப்பனின் அறிவுரை கேட்டு அகமகிழ்ச்சியுடன் இருக்கிறாள்....]

வணி: (சீறி) கிழவா! மன்னனிடம் கொண்டு போய் நிறுத்தவா உன்னை?

கவி: (மகளின் கரத்தைப் பிடித்தபடி) வா, அம்மா! அவருக்கு ஏன் வீண் சிரமம்?

[இருவரும் புறப்படுகின்றனர். சீமான் அவர்கள் போவது கண்டு சிறிது சோகம் கொள்கிறான். மறுகணம் அதை மாற்றிக் கொண்டு, உடையை சரிப்படுத்திக் கொண்டு, கண்ணாடியில் உருவத்தைப் பார்த்துக் கொள்கிறான்.]

காட்சி—30

இடம்: வீதி

இருப்: கவிராயர், பூங்கோதை, படைத் தலைவர்.

நிலைமை: வீதியின் ஒரு புறத்திலே, படை வீரர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்...பாதையில் மற்றோர் கோடியில், கவிராயரும் மகளும் நடந்து சென்றுகொண்டிருக்கின்றனர்...

கவி: ஊர் போகு முன்பு, என் நண்பன் மதிவாணனைப் பார்த்துவிட்டுப் போகலாம்.

மகள்: மதிவாணனையா அப்பா! உனக்கு நண்பனா, அந்த உல்லாசபுரி ஊழியன்?

கவி: கெட்டு விட்டானா அவனும்?

மகள்: கெடவில்லையே! மக்களைக் கெடுக்கிறான், மதுர கீதத்தால்! மதுரகீதம் மடத்து ஆயுதமாகி விட்டது. மந்தகாசமான வாழ்வு அவனுக்கு.

கவி: (சோகமாக) செல்வம் அவனைச் சீரழித்து விட்டது.

மகள்: அருமறையானந்தரின் ஆதிக்கம் வளருவதே, அவனால்தானப்பா! அந்தக் கபடவேடதாரிக்கு, இந்தக் கலை வாணிபன் ஏவல் செய்கிறான்.

கவி: பரிதாபம்...பரிதாபம்....

[எதிர்ப்புறமிருந்து வரும் படையினரில் ஒருவன் தலைவனிடம்....]

படை: அதோ, பூங்கோதை! சீமான் மந்திரமூர்த்தியின் மனைவி.

தலை: சீமான் மனைவியா?

படை: புதிய கோலம்!

தலை: கிழவன்?

படை: சதிகாரரில் ஒருவன்.

தலை: பிடி—விடாதே!

[விரைந்து சென்று இருவரையும் பிடித்து இழுத்து வருகிறார்கள்.]

தலை: உன் பெயர் பூங்கோதையா?

மகள்: ஆமாம்.

தலை: சீமான் மந்திரமூர்த்தியின்.....

கவி: மனைவி—என் மகள். நான் ஒரு கவிராயன். ஊருக்கு அழைத்துச் செல்கிறேன்.

தலை: ஊருக்கு. நட...நட...

[இழுத்துச் செல்கிறார்கள்.]

கவி: மகளே!

மகள்: (கலங்காமல்) சதிகாரி நான்! சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்வார்கள். பெரிய கட்டிடமாம்பா...பாடு பட்டும் பலன் காணாதவர்கள் ஏராளமாக இருப்பார்கள் அங்கே.

காட்சி—31

இடம்: மதிவாணன் மாளிகை வீதி.

இருப்: மதிவாணன், கவிராயர், படைத் தலைவன், பூங்கோதை.

நிலைமை: வேறோர் வீதி வழியாகப் போகும்போது மதிவாணன் மாளிகை இருக்கிறது. அதைக் காட்டுகிறாள் பூங்கோதை.

மகள்: கழுகுக்கு இரை தேடித்தரும் குயில் இங்கு தானப்பா.

[மாளிகைக்கு உள்ளே இருந்து மதிவாணன் மலர்ந்த முகத்துடன் வெளியே வருகிறான். வீட்டெதிரே கவிராயரைக் கை பிடித்து இழுத்துக் கொண்டு படைவீரர் செல்வது கண்டு பதறி, ஓடிச் சென்று...]

மதி: என்ன இது! கவிராயரா?

[படைவீரரைப் பார்த்து...]

இதென்ன செயல்?

ப. தலை: இசை அரசே! இவர்கள் சதிகாரர்கள். அரசன் ஆணைப்படி சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்கிறோம்.

கவி: (கேலியாக) இசை அரசே! மகனே! ஆடம்பரம், அலங்காரம் அமோகமாகிவிட்டது. அறிவு ஒளி மங்கிவிட்டது கண்களில்.

மதி: (கலங்கி) பெரியவரே! தங்கள் குமாரியா?

கவி: (பெருமையுடன்) ஆமாம். என் மகள், பூங்கோதை —ஓலையை கொடுத்தேனே உனக்கு—இந்தச் சதிகாரியிடம் தருவதற்குத்தான்.

மதி: இந்தக் கோலத்திலா நான் காணவேண்டும் உங்களை?

மகள்: இதிலே என்னப்பா ஆச்சரியம். நான் மாளிகையைத் துறந்தேன். என் ஞானகுரு, அரண்மனையைத் துறந்தார்; அறியாயா? மறந்தே போனேன். அறிந்ததை எல்லாம் மறந்து போன பெரியவனல்லவா நீ.

மதி: (கலக்கமாகி) அம்மா! பெரியவரே! எப்படியும் நான் உங்களுக்கு விடுதலை பெற்றுத் தருவேன்.

மகள்: இன்னும் என்னப்பா குறை! காப்பாற்றி விடுவார், கலைவாணர்! நிச்சயமாக. நாம் குற்றமற்றவர்கள் என்பதாலே அல்ல; இவருடைய செல்வாக்கு உனக்கு விளங்க வேண்டும் அல்லவா, அதற்காக.

கவி: மதிவாணா! குஷ்டம் பிடித்தவன் எடுத்துத் தரும் வெண்ணெயை விரும்புவாயா நீ?

மதி: பெரியவரே!

கவி: உன் உதவியும் எனக்கு அப்படித்தான். அழைத்துச் செல்லுங்கள் ஐயா!

மதி: என் மீது கோபம் ஏன் பெரியவரே! நான் செய்த குற்றம் என்ன?

மகள்: குற்றமா? மலத்தில் விழுந்த மலர் ஆனால்...

[படைத்தலைவன் மதிவாணனுக்கு வணக்கம் செய்து விட்டு, கவிராயரையும் மகளையும் இழுத்துச் செல்கிறான்—மதிவாணன் திகைத்துப்போய் நிற்கிறான், கண் கலக்கத்துடன்.]

காட்சி—32

இடம்: வெற்றிவேலன் அரண்மனையில் ஓர் புறம்.

இருப்: வெற்றிவேலன், அமைச்சர், மரகதம், மாசிலாமணி

நிலைமை: அம்புபட்டு இறந்த மான்கள் கீழே கிடக்கின்றன. சிறு மேடை மீது உள்ள ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான் வெற்றிவேலன், வேட்டையாடிய களைப்புடன்! உடையைக் கலைந்து கொண்டிருக்கிறான் பணியாள். வேறோர் பணியாள், பழ ரசக் கோப்பை கொண்டு வந்து தருகிறான். மயில் விசிறி கொண்டு விசுறுகிறான், மற்றோர் பணியாள். காலை எடுத்து சிறிய பீடத்தில் வைக்கிறான் வெற்றிவேலன். கால் பட்டையைக் களைகிறான் பணியாள் பயத்தோடு....

[அமைச்சர் வருகிறார்...]

வெற்றி: அமைச்சரே! கரும்புலி கிடைக்கவே இல்லை.

[பணியாள் கால் பட்டையைக் களையும்போது, முழங்காலில் இருந்த சிறு காயத்தில் அவன் கரம் பட்டுவிட வெற்றிவேலன் அவன் தலை மீது தட்டியபடி...]

வெற்றி: முட்டாள்! தெரியவில்லையா இது?

[பணியாள் பார்க்கிறான். அமைச்சர் பதறி...]

அமை: இதென்ன?

வெற்றி: (புன்னகையுடன்) கரும்புலியைத் துரத்திய திலே கிடைத்தது. சரி, என்ன ஆயிற்று, சதிகாரர் விஷயம்?

அமை: பிடிபட்டு விட்டார்கள்...

வெற்றி: அனைவருமா...?

அமை: முக்கியமான சிலர் சிக்கவில்லை...

வெற்றி: கரும்புலி தப்பி விடுகிறது! கலைமான் கிடைக் கிறது - எனக்கும் உமக்கும். (வேடிக்கையாக சிரித்து விட்டு) ஆனால் அமைச்சரே! சதிகாரர்களின் கொட்டத்தை அடக்கி யாக வேண்டும். எவ்வளவு துணிவு பிறந்து விட்டது?

[மன்னன் முன் ஒரு பழத் தட்டை காட்டுகிறான் ஒரு பணியாள்—ஒரு பழத்தை எடுத்துத் தின்றபடி வேறோர் பணியாளிடம்...]

வெற்றி: மான் குட்டியைக் கொண்டுபோய்க் கொடுடா மரகதமணியிடம்...

அமை: இளவரசி, மான்குட்டியுடன் விளையாடக் கண் டேன், அங்கு....

வெற்றி: மரகதமணி! மரகதமணி!

[மரகதமணி மான்குட்டியை இழுத்துக் கொண்டு வருகிறாள். குழந்தையைத் தூக்கி முத்தமிட்ட படி கொஞ்சுகிறான் மன்னன். குழந்தையோ கீழே கிடக்கும் மானைக் கண்டு மிரண்டு...]

மரக: அப்பா! செத்துப் போச்சா? இந்த மானோட அம்மாவா?

வெற்றி: ஆமாம் கண்ணே!

[என்று கூறியபடி குழந்தையை வேறு பக்கம் திருப்பி விட்டு, பணியாட்களைப் பார்த்துக் கோப மாக...]

முட்டாள்! ஏனடா இன்னும் இங்கே வைத்திருக்கிறீர்கள்?

[மானை எடுத்துச் செல்கிறார்கள் பணியாட்கள். வெற்றிவேலன் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டே...]

வெற்றி: சதிகாரர்களின் பேச்சை ஏன் நம்பி நாச மாகிறார்கள் மக்கள்?

அமை: பசி, பட்டினி—இவைகளைக் காட்டித் தூண்டு கிறார்கள் தந்திரக்காரர்கள்.

[திராட்சைக் கொத்தை மரகதமணிக்குத் தருகி றான் வேந்தன். குழந்தை அதை மான்குட்டிக்குத் தருகிறது. மான்குட்டி தின்னவில்லை. மாசிலா மணி வருகிறான்.]

வெற்றி: கட்டுக் காவலை மீறும் துணிவு பிறந்து விட்டது.

மாசி: யாருக்கு? மக்களுக்குத்தானே! ஏன் துணிவு பிறக்காது. பாவ புண்யம் பற்றிய பயம் குறைந்துவிட்டதே.

[மரகதமணி மாசிலாமணியைப் பார்த்து...]

மர: அப்பா! நான் அங்கே போறேன்; எனக்கும் பயமா இருக்கு, இவனைப் பார்த்தா.

[வெற்றிவேலன் சிரித்தபடி குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு...]

வெற்றி: போ, கண்ணே! போய் விளையாடு. டே!.. போ கூட....மான்குட்டி!

[குழந்தை மான்குட்டியை இழுத்துக் கொண்டு பணியாளுடன் செல்கிறது.]

அமை: புது மார்க்கம் புயல் போலக் கிளம்பிவிட்டது; பழைய முறை அழிந்துவிடும் போலிருக்கிறது.

மாசிலா: நாம் காலம் அறிந்து பணிபுரியாவிட்டால் நிச்சயம் அழியும்...

வெற்றி: கடுமையான சட்டம் இருக்க வேண்டும்...

மாசி: போதாது வேந்தே! போதாது. மக்களின் மன மாசு போக வேண்டும்.

[பணியாள் வெற்றிவேலனின் இரத்தக் கறை படிந்த சொருகுவாளைக் கழுவித் துடைக்கிறான்...]

மடாலயத்திலே புதிய திட்டம் தயாராகிறது.

அமை: அருமறையானந்தரின் உழைப்பு பலன் தருகிறது.

மாசி: (குழைவாக) வேந்தரின் ஆதரவு கிடைத்துவிட்டால் விதண்டாவாதிகளை ஒழித்துவிட முடியும்—சதி, தானாகச் சாயும்.

[பணியாட்கள், அமைச்சருக்கும் மாசிலாமணிக்கும் பழரசக் கோப்பை தருகிறார்கள்...]

வெற்றி: என் ஆதரவு எப்போதும் உண்டு.

மாசி: (கோப்பையை ஏந்தியபடி) பிரச்சாரம் வேண்டும், புதிய மார்க்கத்துக்கு...

அமை: (கோப்பையைக் கீழே வைத்துவிட்டு) பணம் தானே தருகிறோம்...

மாசி: கலை மூலம் நமது காரியத்தைச் சுலபத்திலே முடித்து விடலாம். வேந்தே! மதிவாணனின் மதுர கீதம், மக்களைச் சொக்க வைக்கிறது.

வெற்றி: கேள்விப்பட்டேன்! அருமையான இசைத் திறமை. அமைச்சரே! மதிவாணனை ஆஸ்தானக் கவியாக நியமித்தால் என்ன?

மாசி: அதைக் கூறவே வந்தேன்.

[கோப்பையைப் பார்க்கிறான், அருவருப்புடன்...]

வெற்றி: இதிலென்ன கஷ்டம்?

மாசி: மண்டலத்தின் புகழ் பரவும்; மார்க்கம் தழைக்கும்...

[மன்னன் புன்னகை புரிகிறான். 'சரி' என்று மன்னன் ஜாடை காட்ட, அமைச்சரும் மாசிலாமணியும் புறப்படுகிறார்கள். மாசிலாமணி கோப்பையைக் கீழே வைக்க, அமைச்சர்...]

அமை: பருகவில்லையோ பழரசம்?

மாசி: இல்லை. பூச்சி விழுந்து விட்டது...

[இருவரும் போகின்றனர். மன்னன் வேறு பக்கம் உள்ளே செல்கிறான். பணியாள் பானக் கோப்பையில் கிடந்த பூச்சியை எடுத்து எறிந்துவிட்டு யாரும் காணாதபோது பருகிவிட்டு...]

பணி: பூச்சி புழு விழுந்தாத்தானே, நமக்குக் கிடைக்குது, இந்தப் பானமெல்லாம்! பூச்சி புழுக்களே, வாழ்க, வாழ்க...

காட்சி—33

இடம்: வெற்றிவேலனின் கொலுமண்டபம்

இருப்: வெற்றிவேலன், மதிவாணன், அமைச்சர், பணியாட்கள்.

நிலைமை: பிரமுகர்களும் அமைச்சர்களும் உள்ளனர். மதிவாணன் முக

மலர்ச்சியுடன் அமர்ந்திருக்கிறான். மன்னன் பக்கத்தில் குழந்தை மரகதமணியும் வீற்றிருக்கிறாள். நியமனப் பத்திரத்தை அமைச்சர் மன்னரிடம் தருகிறார். மன்னர் அதைப் பெற்றுக் கொண்டு மதிவாணனை அன்புடன் பார்த்துவிட்டு...

வெற்றி: இன்று முதல் மதிவாணனை நமது ஆஸ்தானக் கவியாக நியமித்திருக்கிறோம். இதோ, அதற்கான பட்டயம்!

[மதிவாணன் எழுந்து நின்று வணக்கம் செய்துவிட்டு மன்னன் அருகே செல்ல, மன்னன் பட்டயத்தைத் தருகிறான். அமைச்சர் ஜாடை காட்ட ஒரு பணியாள் பட்டு, பீதாம்பரம் உள்ள தட்டைத் தருகிறான். மரகதமணி புன்னகையுடன் மதிவாணனைப் பார்க்கிறாள்.]

[மன்னனிடம் பட்டயத்தைப் பெறும்போது சபையினர் கரகோஷம் செய்கிறார்கள். அப்போது மரகதமணியும் கரகோஷம் செய்கிறாள்...]

காட்சி—34

இடம்: வெற்றிவேலன் அரண்மனைத் தோட்டம்.

இருப்: மரகதமணி, மதிவாணன்.

நிலைமை: மதிவாணன் மரகதமணிக்குப் பாட்டு சொல்லித் தருகிறான். மரகதமணி ஓரிரு அடிகளைக் கொஞ்சுமொழியில் பாடிவிட்டு,

மர: மாமா! நீயே ஒரு தடவை முழுப் பாட்டும் பாடு! நான் நாளைக்குப் பாடறேன்.

மதி: நானே பாடவா?

மர: நீ பாடினா கேட்கக் கேட்க நல்லாயிருக்கு மாமா!

[மரகதமணியை அன்பாக, மெதுவாகக் கன்னத்தில் தட்டிவிட்டு மதிவாணன் பாடுகிறான். மதிவாணன் பாடலைக் கேட்டு மரகதமணி மகிழ்கிறாள்.]

காட்சி—35

இடம்: மடாலய உட்புறம்

இருப்: அருமறை, மாசிலாமணி, முத்து மாணிக்கம், மதிவாணன்.

நிலைமை: அருமறையானந்தர் கெம்பீர உடை அணிந்து கொண்டு, அலங்காரமான பீடத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறார், ஒரு ஓலையைப் படித்தவண்ணம். பக்கத்தில் மாசிலாமணி நின்று கொண்டிருக்கிறான்... எதிரே அடக்கமாக முத்து மாணிக்கம் நின்று கொண்டிருக்கிறான். ஓலையை ரசித்துப் படிக்கிறார் அருமறை. மாசிலாமணியைப் பார்த்துப் பெருமிதத்துடன்...

அரு: நடுநாட்டரசர் ஓலை! இங்கு குறை ஏதும் இல்லையே—ஏதேனும் உதவி தேவையா என்று கேட்டிருக்கிறார். நம்மிடம் அவ்வளவு பற்று.

மாசி: நாதன் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் நடுநாட்டரசருக்கு.

அரு: அதிலென்ன சந்தேகம்?

[முத்துவைப் பார்த்து....]

மன்னரிடம் சொல்லு, இங்கு வேழநாட்டு வேந்தன் வெற்றி வேலன், நமக்கு நல்ல ஆதரவு தருவதாக! குறை ஏதும் இல்லை.

மாசி: மடாலயத்தின் கீர்த்தி மண்டலமெங்கும் பரவி விட்டது.

அரு: மாசிலாமணி போன்ற மெய்யன்பர்களின் தொண்டுதான் காரணம். உன் பெயர்...

முத்து: முத்துமாணிக்கம்.

அரு: மெத்த மகிழ்ச்சி. மடாலயத்திலே சிலநாள் தங்கி இருக்கலாம்.

[மதிவாணன் வருகிறான், மடாதிபதிக்கு வணக்கம் செய்தபடி...]

[முத்துமாணிக்கமும் மதிவாணனும் சந்தித்து அன்புடன் தழுவிக் கொள்ளக் கண்ட மடாதிபதி]

ஓ! இருவரும் நண்பர்களோ! முத்துமாணிக்கம்! மடாலயத்தின் புகழ் பரவக் காரணமே, மதிவாணனின் மதுரகீதம் தான். ஆஸ்தான கவி இப்போது, மதிவாணன்.

[முத்து, மதிவாணனைப் பெருமையாகப் பார்த்துப் பூரிக்கிறான்...]

மதி: எல்லாம் தங்கள் அருளின் பலன்தானே!

[வணக்கம் செய்துவிட்டு இருவரும் செல்கின்றனர்...]

காட்சி—36

இடம்: தோட்டம்.

இருப்: முத்துமாணிக்கம், திலகா, கற்பகம், மதிவாணன்.

நிலைமை: திலகா மலர்ச் செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருக்கிறாள். முத்துமாணிக்கம் அங்கு வருகிறான். அவளைச் சற்று தொலைவிலே இருந்து பார்த்தபடி ரசித்துவிட்டு...

முத்து: திலகா! திலகா!

[என்று அழைத்திட அவள் திரும்பிப் பார்க்க, அவள் காணாத முன்பு ஒரு புதர் அருகே மறைந்து கொள்ளுகிறான். திலகா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு யாரும் காணாததால் மீண்டும் வேலையில் ஈடுபடுகிறாள். கற்பகத்தம்மாள், தோட்டத்துக்கு வருகிறார்கள், கையில் ஒரு கோப்பையுடன்...]

கற்: முத்து! தம்பி!

[மீண்டும் திலகா திரும்பிப் பார்க்கிறாள், ஆவலுடன். கற்பகத்தம்மாள் சுற்றும் முற்றும் பார்த்தபடி...]

திலகா! எங்கே முத்துமாணிக்கம்? பழரசம் சாப்பிடச் சொன்னேன். கொடு என்றான். கொண்டு வருவதற்குள் இங்கே வந்துவிட்டானே.

திலகா: யார்? அவரா...வந்தாரா! எப்போது?

[புதரருகே மறைந்திருக்கும் முத்து வெட்கமடைகிறான்.]

கற்: என்னடி திலகா இது...விளையாட்டு மயம்தானா! எங்கே முத்து...?

திலகா: அம்மா! நீயும் கேலி செய்வதா?

கற்: கேலி அல்லடி கண்ணே! உண்மைதான்! முத்து வந்தான் இங்குதான்.

[முத்து ஒளிந்திருக்கும் இடம் தெரிந்து விடுகிறது, கற்பகத்தம்மாளுக்கு. உடனே, திலகாவுக்கு ஜாடை செய்து விட்டுச் சென்று விடுகிறார்கள். திலகா குறும்புப் பார்வையுடன் கற்பகத்தம்மாள் காட்டிய பக்கம் சென்று முத்து ஒளிந்திருக்கும் புதரிலே தண்ணீர் தெளிக்க, முத்து மீது தண்ணீர் விழ, அவன்...]

முத்து: திலகா!... திலகா!...

[என்று கூறியபடி எழுந்து, அவள் கரத்தைப் பிடித்துக் கொள்கிறான். திலகா பாசம் மிகுந்த முறையில் முத்துவைப் பார்க்க...]

முத்து: மாயக்காரக் கள்ளி! ஒரு பார்வையிலே என்னைப் பரவசப்படுத்தி விடுகிறாயே!

[திலகாவை அருகே அழைத்து அணைத்துக் கொள்கிறான். திலகா அவன் பிடியைத் தள்ளி விட்டு...]

திலகா: போதும் சரசம்! மனம் இரும்பு—பேச்சு கரும்பு உங்களுக்கு. விடுங்கள், வேலை இருக்கிறது எனக்கு.

முத்து: கோபமா திலகா! செய்த குற்றம் என்னவோ?

திலகா: குற்றமா? சேச்சே! இது ஒரு குற்றமாகுமா? காதலிப்பது, கனிமொழி பேசுவது, பிறகு கண்ணெடுத்தும் பார்க்காமல் தான் உண்டு தன் காரியம் உண்டு என்று இருந்து விடுவது—இது ஆடவரின் போக்கு. குற்றமாகுமா இது?

[கூறிக் கொண்டே முத்துவை விட்டு விலகித் தொலைவாகப் போகிறாள் திலகா. அவளைத் தாவிப்பிடித்து, அவள் முகத்தை உற்று நோக்கியபடி.]

முத்து: அடா அடா! எடுத்ததற்கெல்லாம் கோபந் தானா? நான் காடு, மலை, வனம், வனாந்திரங்களைக் கடந்து வந்திருக்கிறேன், உன்னைக் காண. அன்பே! ஆருயிரே! இன்பமே! என்று பேசுவாய்—பேரானந்தம் அடையலாம் என்று வந்தேன்.

திலகா: (கேலியாக) அதனால், அடியாள் உடனே, 'ஸ்வாமி, வாருங்கள்! உட்காருங்கள்' என்று உபசரித்துக் காதல்மொழி பேசவேண்டும். அல்லவா? எவ்வளவு வேதனை மூட்டிவிட்டிருந்தாலும், மறந்துவிட வேண்டும்—அப்படித் தானே?

முத்து: வேதனை மூட்டினேனா? நானா?

திலகா: ஓலைகூட அனுப்ப ஓய்வு இல்லை உமக்கு.

முத்து: தவறுதான்—வேலை அதிகம். இங்கு வர வாய்ப்பு கிடைக்கவில்லை.

திலகா: கண்ணாளா! எவ்வளவு வேதனை தருகிறது தெரியுமா உமது பிரிவு?

முத்து: வேண்டுமென்று செய்வேனா திலகா! உன்னைக் காண்பதே எனக்குக் களிப்பு.

திலகா: கோபிக்காமல் ஒரு கேள்விக்குப் பதில் கூற வேண்டும்....

முத்து: கேள்வியா? (கேலியாக) உத்தரவு மகா ராணி.

திலகா: (குறும்பாக) மாதரின் மனதைக் களவாடிய கள்வனுக்கு என்ன தண்டனை தரவேண்டும், மதியூக மந்திரியாரே.

முத்து: (ஒரு கணம் யோசித்து) ஊருக்கு வெளியே, ஒரு மாளிகை கட்டி, அதிலே அக் கள்வனை சிறை வைத்து, மனதைப் பறி கொடுத்த மங்கையைச் சிறை அதிகாரி ஆக்கி விடவேண்டும்.

[முத்துவின் காதைப் பிடித்துக் கிள்ளியபடி.]

திலகா: எவ்வளவு குறும்பு! மாளிகையிலே சிறைவாசம்! அதுதான் தண்டனையா?

முத்து: திலகா! இந்தத் தேன்மொழி கேளாமல் நான் அங்கே தீயிலே விழுந்து தவிக்கிறேன்.

திலகா: இன்பமே! ஆமாம். ஒவ்வொரு நாளும் என் நினைவு வருமா உங்களுக்கு?

[முத்து அவள் கரத்தைக் கையிலெடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு...]

முத்து: ஒவ்வொரு விநாடியும்.

திலகா: இது முழுப் பொய். நான் நம்பவே மாட்டேன்

முத்து: நெஞ்சிலே நிறைந்து இருக்கிறாய் திலகா.

திலகா: வேறு யாருடைய அழகும் உம்மை மயக்கவில்லை? உண்மையைச் சொல்ல வேண்டும்.

முத்து: என் இதயத்திலே யாரும் புக முடியாது— இடம் ஏது? உன் மாளிகையாகி விட்டதே என் மனம்...

திலகா: (நெகிழ்ச்சியுடன்) நான் இனி மயக்கமடைவேன் துரையே!

முத்து: திலகா! அண்ணா என்னதான் சொல்லுகிறார்? திருமண நாள் குறிக்க ஏன் இன்னும் தயக்கம்?

திலகா: சபதம் ஒன்று நிறைவேற வேண்டும் என்கிறார் அண்ணா.

முத்து: சபதம்! பாழாய்ப்போன சபதம். எப்போது நிறைவேறுவது? என் சஞ்சலம் எப்போது தீருவது? நிலவின் அழகைக் காண, அண்ணாந்து பார்க்கப் பார்க்க, ஒரு மேகத்திலிருந்து மற்றோர் மேகத்திலே நுழைந்துவிடுகிறதே, நிலவு அதுபோல இருக்கிறதே நிலைமை. என்னால் தாங்க முடியாது திலகா!

[அவன் மீது சாய்ந்து கொண்டிருக்கும் திலகா குறும்பாக...]

திலகா: தாங்க முடியாதா கண்ணாளா! அவ்வளவு பாரமா?

[என்று கேட்டபடி திலகா எழுந்திருக்க, அவளைப் பழையபடி சாய்ந்திருக்க வைக்கிறான் முத்து...]

முத்து: குறும்பு போதும் திலகா! நாள் குறித்தாக வேண்டும்...ஆமாம்.

[திலகா அவசரமாக எழுந்து செல்கிறாள். முத்து திகைத்து...]

முத்து: திலகா! திலகா! எங்கே?

திலகா: அண்ணாவிடம் நாள் குறித்துக் கொண்டுவர.

முத்து: குறும்புக்காரி!

[என்று கூறியபடி அவளைப் பிடிக்கச் செல்கிறான். அவன் பிடியிலே அகப்படாமல் அவள் ஓட, அவன் துரத்துகிறான். தோட்டப் பக்கம் வந்த மதிவாணன் இந்தக் காதல் காட்சியைக் கண்டு களிப்படைகிறான்...மறுகணம் அவன் செவியில் 'எடைக்கு எடை தங்கம், எடைக்கு எடை தங்கம்" என்று செவியில் விழுகிறது. முகம் மாறுகிறது. தலையை அசைத்தபடி உள்ளே செல்கிறான்.

காட்சி—37

இடம்: மடாலய உட்புறம்.

இருப்: அருமறை, மாசிலாமணி.

நிலைமை: அருமறையானந்தரின் தனி அறை, விசேஷ அலங்காரத்துடன் இருக்கிறது. மாசிலாமணியிடம் மடாதிபதி பேசிக் கொண்டிருக்கிறார்.

அருமறை: சொர்க்கவாசல்! பெயரைக் கேட்டதும் மக்கள் சொக்கி விடுவர்—உள்ளே ஒரு புறம் கைலாயம்; நமது புராண ஏடுகளில் உள்ள வர்ணனைப்படி.

[படம் போட்டுக் காட்டுகிறார் தரையில்...]

மாசி: ஆகா! அருமையாக இருக்கும்.

அரு: மற்றோர் புறம் வைகுந்தம்.

மாசி: அரியும், அரனும் வேறு வேறு அல்ல என்ற கோட்பாட்டை விளக்க.

அரு: ஆமாம். (படம் போட்டபடி) பிரம்மலோகம், இந்திர லோகம் எல்லாம் புராண வர்ணனைப்படி அமைக்க வேண்டும். இங்கு கற்பக விருட்சம்; இது காமதேனு! பளிங் கால் உருவம்.

மாசி: மக்கள் பரவசமடைவர் குருநாதா!

அரு: செலவு ஏராளமாக ஆகும். காணிக்கை கிடைக்குமா?

மாசி: சந்தேகமா? காணிக்கைச் சீட்டுக்கள் இலட்சக் கணக்கிலே தயாரித்து, நமது உபதேசியார்கள் மூலம் நாடெங்கும் பரப்பினால் காணிக்கை குவியும்.

அரு: நல்ல யோசனை—காணிக்கை சீட்டு...உம்... பெயர் அவ்விதம் இருப்பதைவிட அருள் சீட்டு என்று இருந்தால் நல்லது...

மாசி: அருள் சீட்டு! அருமையான பெயர். வேந்தனிடம் நானே முதல் சீட்டு தருகிறேன்.

அரு: நடுநாட்டரசருக்கு நான் இதுபற்றி ஓலை அனுப்புகிறேன்.

மாசி: திருமுகம் கண்டதும் நடுநாட்டரசர் தாராளமாக காணிக்கை தருவார்.

காட்சி—38

இடம்: மதிவாணன் மாளிகை வெளிப்புறம்

இருப்: மதிவாணன், முத்துமாணிக்கம்.

நிலைமை: முத்துமாணிக்கம் மதிவாணனிடம் விடைபெற்றுக் கொள்கிறான். சற்று உட்புறமிருந்து திலகா முத்துவைப் பார்க்கிறாள் கனிவுடன். முத்துவும் அவளைப் பாசத்துடன் பார்க்கிறான். நிலைமையைப் புரிந்து கொண்ட மதிவாணன், புன்னகை புரிகிறான்...

மதி: முத்து! விரைவிலே திருமண ஏற்பாடு! கவலை வேண்டாம்.

[முத்து வெட்கமடைந்தவன்போலத் தலையைக் கவிழ்த்துக் கொள்ளுகிறான்.]

முத்து: அருமறையானந்தரைப் பார்த்துவிட்டுப் புறப்படுகிறேன்.

மதி: போய் வா முத்து! பூரிப்புடன் புறப்படு.

முத்து: நான் எப்போதும் இவ்வளவு பூரிப்புடன் இருந்ததில்லை.

மதி: (குறும்பாக) கூத்தாடுகிறதே களிப்பு, கண்களில்!

முத்து: என் நண்பன் ஆஸ்தானக் கவி என்றால் களிப்பு கூத்தாடாமலா இருக்கும். வருகிறேன்.

[வணக்கம் செய்துவிட்டுப் புறப்படுகிறான்.]

காட்சி—39

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—பாசறைக் கூடம்.

இருப்: வெற்றிவேலன், சிற்பி, மாசிலாமணி, பணியாள்.

நிலைமை: பாசறைக் கூடத்தில், விதவிதமான ஆயுதங்கள், கவசங்கள் உள்ளன. சுவற்றிலே போர்க்களக் காட்சிகளின் ஓவியங்கள் தொங்கவிடப் பட்டுள்ளன. வெற்றிவேலன் ஒரு உயரிய பீடத்தில் அமர்ந்திருக்கிறான். எதிரே இரு பணியாட்கள் ஒரு கோட்டை அமைப்புப் படத்தைத் தூக்கி நிறுத்திக் காட்டிக் கொண்டிருக்கின்றனர், வெற்றிவேலனுக்கு. கோட்டைக் கட்டட அமைப்பாளன், விளக்கம் கூறிக் கொண்டிருக்கிறான்... வெற்றிவேலன் கோட்டைப் படத்தைக் கூர்ந்து கவனிக்கிறான்...

வெற்றி: (ஒரு இடத்தைக் காட்டி) இது சுரங்கப் பாதையா?

சிற்பி: ஆமாம் வேந்தே! இதிலே நுழைந்தால், இதோ, எதிர்ப்புறம் தெரிகிறதே குன்று—அங்கு போகலாம்.

வெற்றி: (வேடிக்கையாக) கோட்டை கட்டும் போதே ஓடுவதற்குத்தானா வழி அமைக்க வேண்டும்? சரி...இந்த இடம்?

சிற்பி: முற்றுகையை முறியடிக்க உணவுப் பொருள் வேண்டுமல்லவா? இதுதான் கிடங்கு—ஏராளமான உணவுப் பொருளைச் சேமித்து வைக்கலாம். (வேறோர் குறியைக் காட்டி) இது நீர் ஊற்று—இங்கே...

[மாசிலாமணி வருகிறான், கோட்டை ஓவியத்தைப் பார்த்தபடி...]

மாசி: ஈசன் திரு உள்ளமே உள்ளம்! இங்கே மன்னர், நாட்டைக் காக்கும் கோட்டை கட்டும் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கிறார். அங்கே குருநாதர் ஆத்ம சக்தியைக் காக்கும் கோட்டை கட்டும் திட்டம் தயாரிக்கிறார்.

வெற்றி: மாசிலாமணியாரே! என்ன கோட்டை தாங்கள் கூறுவது.

[மாசிலாமணி ஒரு சுருணையைப் பிரித்து மன்னர் முன் வைத்து]

மாசி: சொர்க்கவாசல். மன்னா! மக்களின் மனமாசு போக்கும் மாமருந்து. ஆத்ம பலம் பெருகும் அருமையான திட்டம்.

[மன்னன் படத்தைப் பார்க்கிறான். கோட்டைப் படத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த பணியாட்கள் மெள்ள அதைக் கீழேவைத்துவிட்டு மாசிலாமணி காட்டும் படத்தை ஆவலுடன் பார்க்கிறார்கள். கோட்டை அமைப்பாளன் ஓரளவு அருவருப்படைகிறான்.]

மாசி: இதோ வேந்தே! இங்கு கைலாயம்! இங்கு வைகுந்தம்!

வெற்றி: (படத்தைப் பார்த்தபடி) ஆமாம். பிரம்ம லோகம்—இந்திரலோகம், இதெல்லாம் என்ன?

மாசி: சொர்க்கவாசல். மன்னா! மக்கள் கண்முன், சொர்க்கலோக மகிமையைக் காட்ட விரும்புகிறார் அருமறையானந்தர். இந்தத் திட்டப்படி ஒரு பிரம்மாண்டமான ஆலயம் அமைத்து...

சிற்பி: புதிய ஆலயமா?

மாசி: பல கோயில்கள் உள்ளன. ஆனால் இது பத்தோடு பதினொன்று அல்ல. நமது புராதன மார்க்கப் பாது காவல் கோட்டை! கைலாயத்தை யார் கண்டார்கள்? வைகுந்தம் யார் கண்டது? என்று பேசும் விதண்டாவாதிகளின் வாய்க் கொழுப்பை அடக்க, இந்த ஏற்பாடு. முட்

டானே, இதோ பார்! இவ்விதம்தான் கைலாயம் இருக்கும். வைகுந்தத்தின் வசீகரத்தைப் பார் என்று ஏடுகளைக் காட்டுவதைவிட இப்படி ஒரு இடமே அமைத்துக் காட்டினால், மந்த மதியினரும் புரிந்து கொள்வார்களல்லவா?

வெற்றி: உண்மைதான்!

மாசி: உள்ளத்திலே உயர்ந்த எண்ணம் மலரும்.

சிற்பி: புதிதாக இதுபோலக் கட்டத் திட்டமா?

மாசி: திரு அருளின் துணை கொண்டு, அருமறையானந்தர் இந்தப் புனிதக் காரியத்தைத் துவக்கி விட்டார். செலவு பற்றிய கவலை, சிரமத்தைப் பற்றிய சஞ்சலம், பஞ்சு பஞ்சாகப் பறந்து விட்டது, குருநாதருக்கு, நான் உறுதி கூறினதும்.

வெற்றி: என்ன உறுதி கூறினீர்?

மாசி: சொர்க்கவாசல் கைங்கர்யத்துக்குத் தங்களின் பேருதவி தாராளமாகக் கிடைக்கும் என்று உறுதி கூறினேன்.

சிற்பி: பெருஞ் செலவு! கோட்டை கட்டவே செலவு ஏராளமாகப் பிடிக்கும். பிறகு வருகிறேன் மன்னா!

[வணக்கம் கூறிவிட்டுச் செல்கிறான் வெறுப்புடன். பணியாட்கள் மாசிலாமணியின் படத்தை எடுத்துத் தூக்கி வைத்துக் காட்டுகிறார்கள்.]

வெற்றி: அருமையான ஏற்பாடு! என்னால் ஆக வேண்டியது என்ன? கட்டளையிட்டால் செய்கிறேன். சொர்க்க வாசல் கைங்கரியத்துக்கு நமது மண்டலத்துப் பிரபுக்களும் தாராளமாகக் காணிக்கை தருவர்.

மாசி: பக்தி பட்டுப் போகிற இந்தச் சமயத்திலே, சத்காரியத்துக்குப் பணம் தருவார்களா என்ற சந்தேகம் குருநாதருக்கு.

வெற்றி: நானே பிரபுக்களுக்குச் சொல்கிறேன். சொர்க்கவாசல் மகிமையைப் பற்றி.

மாசி: அவ்வளவு சிரமம் தங்களுக்குத் தர வேண்டுமா?

வெற்றி: சிரமமா? என் கடமை அல்லவா இது!

[மாசிலாமணி யோசனை செய்துவிட்டு.]

மாசி: காணிக்கை தர வேண்டும் என்று தாங்கள் கூறுவதைவிட...

வெற்றி: வேறு முறையிருந்தால் சொல்லுங்கள்; செய்வோம்.

மாசி: பரலோகத்திலே விசேஷப் பலன் கிடைக்கும், காணிக்கை செலுத்துவோருக்கு—பாவம், பஸ்மீகரமாகும்; புண்யம் கிடைக்கும் என்றாலும்...

வெற்றி: என்றாலும்...

மாசி: இகத்திலே இங்கே இப்போது பலன் உண்டு என்று விளங்கி விட்டால் காணிக்கை செலுத்த துளியும் தயக்கம் இராது.

வெற்றி: விளக்கமாகச் சொன்னால் நல்லது.

மாசி: ஆண்டவன் அருள் பாலிப்பான் அங்கு! காணிக்கை செலுத்துவோருக்கு அதற்கு முன்பே தேவகுமாரனாகிய அரசரின் ஆதரவு கிடைத்துவிடும். இப்போதே இது தெரிய வேண்டும் பிரபுக்களுக்கும், சகலருக்கும். அதாவது யாரார் காணிக்கை செலுத்தி அருள் சீட்டு பெறுகிறார்களோ, அவர்களுக்கு அரசாங்க மரியாதை, பதவி உயர்வு இவை தரப்படும் என்று ஒரு திட்டம் ஏற்பட்டுவிட்டால்...

வெற்றி: இதிலென்ன சிரமம்! அருள்சீட்டுதான் இனி நமது ஆதரவு கோருவோர் காட்ட வேண்டிய அனுமதிச் சீட்டு என்று கூறிவிடுகிறேன்.

மாசி: போதும் வேந்தே! அந்த ஒரு ஏற்பாடு போதும், குருநாதரின் திட்டம் நிறைவேற.

வெற்றி: சொர்க்கவாசல் படம் என்னிடம் இருக்கட்டும்; பிரபுக்களிடம் பேசும்போது காட்டலாம்.

மாசி: ஆஹா! சொர்க்கலோகம் ஐதீகப்படி அமைக்கப் படும். நான் சென்று குருநாதருக்கு கூறுகிறேன்; களிப்புக் கடலில் மூழ்குவார்.

[மன்னன் வணக்கம் செய்ய, மாசிலாமணி செல் கிறான். அவன் பின்னால் சென்ற பணியாள்...]

பணி: ஒரு சிறு சந்தேகங்க, படத்தைப் பார்த்ததிலே!

மாசி: மர மண்டே! என்னடா சந்தேகம்?

பணி: யாருக்கும் ஏற்படக்கூடிய சந்தேகம்தாங்க.

மாசி: சொல்லுடா, என்ன சந்தேகம்?

பணி: சொர்க்கலோகப் படத்திலே, கைலாயம் வைகுந்தம், அந்த லோகம், இந்த லோகம் எல்லாம்தான் இருக்குது—ஆனா...

மாசி: ஆனா...என்னடா, ஆனா...?

பணி: சொர்க்கலோகம் எப்படி எப்படி இருக்கும் என்றுதான் படம் காட்டுதே தவிர, இங்கே இருந்து அங்கே போகிற பாதை தெரியலிங்களே படத்திலே...

மாசி: போடா போக்கிரி.

பணி: பாதையைக் காட்டாத காரணம் என்னங்க—தெரியாததாலா? தெரியக் கூடாது என்பதாலா?

[மாசிலாமணி முறைத்துப் பார்க்க, பணியாள் அசட்டுச் சிரிப்புடன் சென்று விடுகிறான்.]

காட்சி—40

இடம்: நடுநாடு.—முத்துமாணிக்கம் விடுதி.

இருப்: சோமநாதர், முத்துமாணிக்கம், பணியாள்.

நிலைமை: சோமநாதர் தன் மகனின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். பணியாள் ஒருவன் அவருடன் பேசிக்கொண்டிருக்கிறான்.

சோம: பாதை நல்லாத்தானே இருக்கு, வேழ நாட்டுக்கும், நடு நாட்டுக்கும்?

பணி: பாதை, மேடு பள்ளம் நிறைந்ததுதானுங்க. இருந்தாலும் என்னங்க, அவருக்குப் பழக்கமான பாதை தானுங்க. பலமுறை போயிருக்கிறாரே.

சோம: வேழ நாட்டுக்கா?

பணி: ஆமாங்க—சொந்த வேலையாகவும் போவாரு; ராஜாங்க வேலையாகவும் போவதுண்டு. இப்ப அரசாங்க அலுவலாகத்தான் போயிருக்காரு.

[வெளியே யாரோ வருகிற சத்தம் கேட்டுப் பணியாளரும் சோமநாதரும் பார்க்கிறார்கள். முத்துமாணிக்கம் உள்ளே வருகிறான். சோமநாதரைக் கண்டதும் அன்புடன்...]

முத்து: அப்பா, தாங்களா? தகவலே இல்லையே, வருவதாக.

[என்று கூறியபடி தழுவிக் கொள்கிறான்.]

சோம: முத்து! வேழநாடு போய்விட்டா வருகிறே? உடைவாளை எடுத்து வை. உட்கார் இப்படி.

முத்து: (தந்தை எதிரே உட்கார்ந்தபடி) என்னப்பா?

சோம: வில்வக்காட்டார் கோபமாக இருக்கிறார் முத்து. திருமண விஷயமாக நீ இன்னமும் முடிவு செய்யாதிருக்கிறே! சரியில்லை.

முத்து: (தயக்கத்துடன்) அப்பா!

சோம: பெரிய இடத்துப் பகை கூடாது முத்து! அதனால்தான் உன்னைக் காண நடுநாடு வந்தேன். வில்வக்காட்டார் வீட்டு சம்பந்தம் சாமான்யமாகக் கிடைக்கக் கூடியது அல்ல.

முத்து: என் மனம் ஒரு நிலையில் இல்லை அப்பா!

சோம: (வேடிக்கையாக) மனமாவது, நிலையாவது! வில்வக்காட்டாரு நடுநாட்டரசருக்கு உறவினர்—தெரியுமா? ஒரு வார்த்தை சொன்னால் போதும்; பதவி மளமளன்னு உயரும்.

முத்து: (சலிப்புடன்) பதவி, பணம்...அப்பப்பா! இதே வேட்டைதானா?

சோம: (அன்பும் கேலியும் கலந்த குரலில்) அடே வேதாந்த சிரோன்மணி! எந்தத் தகப்பனுக்குத்தானடா ஆசை இருக்காது, தன் மகன் சீமானாக வாழ வேணும் என்று. வீண் பேச்சு ஏன்? அரசரிடம் சொல்லி, திருமண ஏற்பாட்டை முடித்துவிடத்தான் வந்திருக்கிறேன்.

முத்து: (உறுதியாக) திருமண ஏற்பாடு எனக்குச் சம்மதமில்லையப்பா—வில்வக்காட்டார் மகளை நான் மணம் செய்து கொள்ள முடியாது.

சோம: (சிறிது கோபமாக) வில்வக்காட்டார் மகளை.. என்ன...என்ன...முத்து! இப்படி என்னைப் பார்த்துப்பேசு.

முத்து: அப்பா! நான் திலகவதியைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டேன்.

சோம: முட்டாள்தனமாகப் பேசாதே முத்து! அதிகம் பேச முடியாது என்னால். ஆத்திரம் அலை அலையாகக் கிளம்புது. வில்வக்காட்டார் மகளைத்தான் நீ கல்யாணம் செய்து கொண்டு ஆகணும்.

[முத்து ஏதோ பேச முயற்சிக்க...]

பதில் பேசாதே! நீ ஓராயிரம் காரணம் காட்டினாலும், என் காதிலே ஏறாது—வில்வக்காட்டார் மகளுக்கு மாலை சூட்ட வேணும் நீ—நான் கண்ணாலே அதைக் காண வேணும்.

முத்து: (மேலும் உறுதியாக) முடியாதப்பா! நான் திலகாவுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன்.

சோம: (கோபமாக) யாரைக் கேட்டு? ஏலே, முத்து! இப்படிப் பார்த்துப் பேசு. நீ கொடுத்த வாக்குதான் பிரமாதமா? நான் வாக்கு கொடுத்திருக்கேண்டா, வில்வக்காட்டாருக்கு, பத்து பெரிய மனுஷாள் முன்னாலே.

முத்து: (தீர்மானமாக) அப்பா! வற்புறுத்திப் பயன் இல்லை. நான் திலகாவைத் தவிர வேறோர் பெண்ணைத் தீண்டமாட்டேன்.

சோம: (ஆத்திரமாக) விபரீதம் ஏற்படும் முத்து! விவரமறியாமல் வீண் பிடிவாதம் செய்யாதே! வில்வக்காட்டார் இலேசில் விடமாட்டார் என்னை.

[முத்துமாணிக்கம் வெளியே போய்விடுகிறான். சோமநாதர் திகைப்புடன் அவன் போன திக்கைப் பார்த்தபடி இருக்கிறார். முகம் கலக்கத்தைக் காட்டுகிறது.]

காட்சி—41

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—உட்புறம்.

இருப்: வெற்றிவேலன், முரடன், பணியாள், அமைச்சர்.

நிலைமை: தாழ்வாரத்தின் வழியாகப் பணியாளும் முரடன் ஒருவனும் வருகிறார்கள். பணியாள் ஒரு தைலக் கோப்பையை எடுத்துக் கொண்டு வருகிறான்...

பணி: தைலத்தைப் போட்டு நீயும் 'தேய், தேய்'னு தேச்சபடிதான் இருக்கிறே, ஆனா, அவருக்கு ஆயாசம் மட்டும் தீர்ந்தபாடில்லே.

முர: ஆயாசம் போக்கவா தைலம் போட்டுத் தேய்க்கிறது.

பணி: வேறே?

முர: உனக்கு ஒரு இழவும் தெரியறது இல்லை— வாலி பரா மன்னர்? வயது ஆகிவிட்டதேல்லோ.

பணி: எதுக்கு?

முர: பொதுவாத்நாம்பா கேக்கறேன். வயோதிகப் பருவம்.

பணி: வந்திருக்கு—ஆனால் சொல்லப்படாது.

முர: வயோதிகமானவர்களை வாலிபமாக்கும் இந்தத் தைலம்! பஞ்ச மூலிகைத் தைலம்.

பணி: சரி—இந்தத் தைலத்தாலே, அவருக்கு ஒரு குணமும் தெரியக் காணோமே—என்ன காரணமோ? ஒரு வேளை தேய்க்கத் தேய்க்க, தைலம் உன் உடம்புக்குள்ளே தான் ஊறிப் போகுதோ, என்னவோ? வா...வா...

[வெற்றிவேலன் தைலம் தேய்த்துக் கொள்ள, மேல் சட்டையைக் களைந்துவிட்டு உட்கார்ந்திருக்கிறான். தைலத்தை இலேசாகத் தடவியபடி மன்னனின் உடலைப் பிடித்து விடுகிறான் முரடன். பணியாள், தைலத்தில் கொஞ்சம் உள்ளங்கையில் ஊற்றிக் கொண்டு மன்னர் அறியாமல் தன் காலில் தடவிக் கொள்கிறான். அதைப் பார்த்தபடி அமைச்சர் வருகிறார். பணியாள் விழித்து விட்டு, மன்னர் இருக்கும் இடத்தைக் காட்டுகிறான்.]

வெற்றி: இடது காலுக்கு...போதுமடா, வலது பக்கம் —இடது காலுக்கு.

[முரடன் இடது காலில் தைலம் தடவிப் பிடிக்க, அமைச்சர் அருகே வருகிறார். மன்னன் திரும்பிப் பார்த்து...]

வெற்றி: இந்தத் தைலம் வீண் நோக்காடுதான்—ஒரு பலனும் காணோம்.

அமை: பலன் காணோமா? வேந்தே! தங்கள் உடலிலே புதிதாக ஒரு மினுமினுப்பு தெரிகிறது.

வெற்றி: பைத்யக்காரர்! தைலம் தடவினால் மினு மினுப்பு இராதா?

அமை: அதுமட்டுமல்ல, உடற்கட்டும் வளமாகி வருமாம்! வைத்தியர் சொன்னார்.

வெற்றி: எனக்கும்தான் சொன்னார். இது வீண் வேலை. அடிக்கடி வேட்டையாடினால் போதும். உடலும் வளமாகும்; உள்ளமும் சுறுசுறுப்பாகும்.

அமை: கலை விழாவாம் வேந்தே, சோலை நாட்டில்.

வெற்றி: அழைப்பிதழோ?

அமை: ஆமாம் அரசே! வேழநாட்டுக் கலைவாணர்களை அவசியம் அனுப்ப வேண்டுமாம்.

வெற்றி: (அலட்சியமாக) சரி! வேறு முக்கியமான ஓலைகள்?

அமை: (ஆர்வத்துடன்) வேந்தே! இதைவிட முக்யமானது வேறு என்ன இருக்க முடியும்? நமது மதிவாணன் கலை விழாவிலே வெற்றி பெற்றால், வேழநாட்டின் புகழ் பரவும்.

வெற்றி: கலைவிழாவிலே வெற்றி பெற்று விட்டால் போதுமா?

அமை: போதாது. ஆகவேதான், அரசே! தங்கள் திருமணத் திட்டத்தையும் இதே சமயம் நிறைவேற்றிவிடவேண்டும் என்று கூறுகிறேன். சோலைநாட்டில் ஒரு கன்னி, கட்டழகி! குமாரதேவி ஆட்சி தெரியுமே தங்களுக்கு?

[வேந்தன் முகத்தில் இலேசாக மலர்ச்சி ஏற்படுகிறது...]

வெற்றி: பலரும் கூறக் கேட்டிருக்கிறேன், குமாரதேவியைப் பற்றி—புகழ்ந்து பேசுவர், அரசியின் அறிவாற்றலை —அழகை.

அமை: நாடு வளமானது வேந்தே! வேழநாட்டைவிடப் பெரிது அளவில்—திருமணமாகி விட்டால், வேந்தே! வேழநாடு பேரரசு ஆகிவிடும். அரசுகள் பல அச்சத்தாலேயே வேழநாட்டின் கொடியின்கீழ் வந்துவிடும்.

வெற்றி: வளமான நாடுதான். ஆனால் அரசி அகம் பாவக்காரியாம். அரசர்கள் பலரை அவமதித்தவளாம்.

அமை: வதந்தி! வீணான வதந்தி, வேந்தே! எட்டாப் பழம்—எட்டிப்பழம் என்பார்களே, அதுபோல.

வெற்றி: நமக்கு மட்டும் குமாரதேவியின் சம்மதம் கிடைக்கும் என்று எப்படி நம்புவது?

அமை: ஏற்பாடு செய்ய முடியும் வேந்தே! கலை விழாவே அதற்குத் துவக்கம்.

வெற்றி: முதலில் குமாரியின் உண்மையான குணம் தெரியவேண்டும் எனக்கு.

அமை: மதிவாணன் அதை அறிந்து கூறுவான். அவனிடம் நான் என் திட்டத்தை விளக்கமாகக் கூறி அனுப்பி வைக்கிறேன்.

[மன்னன் சம்மதம் தெரிவிக்கிறான். அமைச்சர் களிப்புடன் வெளியே செல்கிறார்...]

காட்சி—42

இடம்: முத்துமாணிக்கம் விடுதி

இருப்: வேலையாள், முத்துமாணிக்கம்.

நிலைமை: முத்துமாணிக்கம் களிப்புடன் உடை அணிந்து கொண்டிருக்கிறான். வேலையாள் ஒருவன் அவசர அவசரமாக ஓடி வருகிறான்.

வேலை: நல்ல வேளை—வெளியூர் போயிட்டிங்களோன்னு பயந்து கொண்டே வந்தேன். புறப்படுங்க—அப்பாவுக்கு பெரிய ஆபத்து.

முத்து: (திகைத்து) என்ன, என்ன! அப்பாவுக்கு ஆபத்தா?

வேலை: ஆமாங்க...வேட்டையாடப் போனாரு.

முத்து: அப்பாவா?

வேலை: இல்லிங்க...வில்வக்காட்டாரு அப்பாவையும் அழைத்துக் கொண்டு போனார். அங்கே அப்பாவை புலி அடித்து விட்டதாம்.

முத்து: (கதறியபடி) ஐயோ, புலியா? புறப்படு! புறப்படு!

[அவசர அவசரமாக உடையைச் சரிப்படுத்திக் கொண்டு கிளம்புகிறான்.]

காட்சி—43

இடம்: அரண்மனையில் அமைச்சர் கூடம்

இருப்: மதிவாணன், அமைச்சர்

மதி: சிக்கலான காரியம். பழக்கமற்றவன் நான். பாடுவேன்—பாடல் தீட்டுவேன்—அரசியல் நுட்பம் தெரிந்தவர்கள் செய்ய வேண்டிய காரியத்தை என்னிடம் ஒப்படைக்கிறீர்.

அமை: உன்னிடம் எனக்கு அவ்வளவு நம்பிக்கை மதிவாணா! மன்னருக்கு அந்த மங்கை கிடைத்தாக வேண்டும். வேழநாட்டின் எதிர்கால வாழ்வு அந்தத் திருமணத்தைப் பொறுத்திருக்கிறது.

மதி: தூதுவர்கள் சென்றால் சுலபமாக முடிந்துவிடுமே! என்னால் என்ன ஆகும்?

அமை: தூதுவர்கள்! அவர்களுக்கு மனதை உருக வைக்கத் தெரியாதே! இசையுள்ளம் வேண்டுமே, இந்தக் காரியத்துக்கு. படையின் அளவு தெரியும் அவர்களுக்கு; மனதை பக்குவப்படுத்தும் முறை தெரியாதே! வீணாக ஏன் தயக்கம்? மதிவாணா! நான் சொல்கிறபடி நடந்து கொள். வெற்றி கிடைத்தே தீரும்.

[மதி விடை பெற்றுக் கொள்ளுகிறான்.]

காட்சி—44

இடம்: வள்ளியூரில் சோமநாதன் மாளிகை —உட்புறம்.

இருப்: முத்துமா ணிக்கம், வேலையாள்.

நிலைமை: சோமநாதர் உடலெல்லாம் கட்டுகள். மரணப்படுக்கையில் இருக்கிறார். முத்துமாணிக்கம் அந்த நிலை கண்டு பதறிக் கதறுகிறான்.

முத்து: ஐயோ! அப்பா...அப்பா!

[உடனிருந்த வேலையாட்கள் விம்முகிறார்கள். பேச முடியாத நிலையில் சோமநாதன் முத்து மாணிக்கத்தை அழவேண்டாம் என்று ஜாடை காட்டுகிறார்.]

முத்து: (அழுகுரலில்) என்னப்பா நேரிட்டது?

வேலை: புலி அடித்து விட்டது.

முத்து: புலி இவரை அடிக்கும்போது, வில்வக்காட்டான் என்ன செய்து கொண்டிருந்தான்?

['கூவ வேண்டாம்' என்று சோமநாதன் ஜாடை காட்டுகிறார். சோமநாதன் முகத்திலே பயம் படிந்திருக்கிறது. வேலையாட்களை வெளியே போகச் சொல்லிவிட்டு...]

சோம: நீ நம்பல்லே, நான் சொன்னபோது—இதோ பார், புலி செய்த வேலையை.

முத்து: புலியா?

சோம: ஆமாம்! வில்வக்காட்டுப் புலியோட வேலை தான். வெளியே சொல்லாதே—நீ அவன் மகளைத் திரு மணம் செய்து கொள்ள மறுத்துவிட்டாய். அவமானமாம் அவனுக்கு. அதனாலே இந்தக் கதி.

முத்து: (கோபமாக) நாட்டிலே இருக்கிறானே இப் படிப்பட்ட கொடியவன்.

[சோமநாதனின் நிலைமை மோசமாகிறது. முத் துவைச் சேர்த்துக் கலங்கியபடி உயிர் விடுகிறார்]

முத்து: (கதறி] அப்பா! அப்பா! பாவி நான்தான்! உங்களைக் கொன்றேன்.

காட்சி—45

இடம்: வில்வக்காட்டார் மாளிகை

இருப்: முத்துமாணிக்கம், முரடர்கள், வில்வக்காட்டார்.

நிலைமை: கூடத்தில் முத்துமாணிக்கம் கோபமாகச் செல்கிறான். அங்கு இருந்த முரடர்களைக் கண்டு...

முத்து: எங்கே வில்வக்காட்டார்?

முர: அடே! சூரன் யாரு? புதுசா இருக்கே!

மற்ற முர: இதுவா? புலி அடிச்சுப் போட்டுதே, கிழ சோமநாதனை. அவனோட மகன்.

[மற்ற முரடர்கள் சிரிக்கிறார்கள். வில்வக்காட் டார் வருகிறார் உட்புறமிருந்து—முத்துமாணிக் கத்தைக் கண்டு கோபமடைகிறார்.]

வில்வக்காட்டார்: (கேலியாக) வாங்க மாப்பிள்ளை, வாங்க. எப்ப வந்தீங்க?

[கேலிப் பேச்சு கேட்டுக் கோபம் கொண்டு முத்து முறைத்துப் பார்க்கிறான்.]

வில்: (கேலியாக) மாப்பிள்ளைக்குக் கோபம். சீர் வரிசையோட வரவேற்கல்ல பாரு, அதனாலே! தடிப் பசங் கடா நீங்க. மரியாதை தெரியல்லையே உங்களுக்கு—மாப் பிள்ளை வருகிறாரு, நம்ம மாளிகைக்கு! மரக்கட்டைபோல இருக்கிறீங்களே...

[குறும்பாகப் பேசி முரடர்களைப் பார்க்க, அவர் கள் பாய்ந்து சென்று முத்துமாணிக்கத்தைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.]

வில்: கொண்டுபோய், பன்னீரிலே ஸ்நானம் செய்வித்து சோடசோபசாரம் செய்து அனுப்புங்க...இழுத்துச் செல்லுங் கள் நாயை. கொல்ல வேண்டாம்—செத்தால் போதும் என்று கதறவேண்டும் பயல்—அப்படிச் செய்து துரத்துங்கள்.

[முரடர்கள் முத்துவை இழுத்துச் செல்கிறார்கள்]

காட்சி—46

இடம்: மதிவாணன் மாளிகை—உட்புறம்.

இருப்: திலகா, மதிவாணன், கற்பகம்.

நிலைமை: விசாரத்துடன் வீடு திரும்பிய மதிவாணனைக் கண்டதும் திலகா களிப்புடன்...

திலகா: அண்ணா, அண்ணா! கலை விழாவுக்குப் போகிறாயாமே, சோலை நாட்டுக்கு?

மதி: ஆமாம்—அனுப்புகிறார் அமைச்சர்.

திலகா: அதென்ன அண்ணா, அவ்வளவு சலிப்பு?

மதி: கலையை விலையாக்கச் சொல்லுகிறார் திலகா!

திலகா: அடடா! ஒரே வேதாந்த மயம், உன் பேச்சு. அண்ணா! சோலை நாட்டிலே, புது விதமான நகைகள், ஆடைகள் இருக்கும்.

மதி: இருக்கும். அதெல்லாம் உனக்கு வேண்டும்! அவ்வளவுதானே?

திலகா: (செல்லப் பிடிவாதத்துடன்) ஆமாம்—வேண்டும்—ஏன் கேட்கக் கூடாதா? என் அண்ணனைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது?

மதி: (குறும்பாக) வேறு யாரும் இல்லையா?

திலகா: (புன்சிரிப்பை அடக்கிக்கொண்டு) வேறு யாரும் கிடையாது.

மதி: உண்மையாகவா?

திலகா: ஆமாம்.

மதி: திலகா! சொல்லி விடுவேன்.

திலகா: எதை? யாரிடம்?

மதி: உன் காதலனை!

திலகா: போங்கண்ணா! கேலிதான் எப்போதும்.

[ஓடி விடுகிறாள், கூச்சப்பட்டுக் கொண்டு. இக் காட்சியைக் கண்டு கற்பகத்தம்மை மகிழ்ந்து]

கற்: மதிவாணா! திலகாவின் திருமணத்தை முடித்து விடவேண்டுமடா சீக்கிரம்.

மதி: ஆமாம்மா! சோலைநாடு போய்த் திரும்பியதும் முதல் வேலை அதுதான்—அவனும் நிரம்ப கோபித்துக் கொள்கிறானாம்.

காட்சி—47

இடம்: வெற்றிவேலன் அரண்மனை — சிங்காரத் தோட்டம்.

இருப்: மதிவாணன், மாசிலாமணி, மரகதம்

நிலைமை: மதிவாணன் கழுத்திலே ஒரு பச்சைக் கொடியைப் போட்டு இழுத்தபடி, மரகதமணி விளை யாட்டுக் குரலில்.

மர: மாமா! எங்கேயோ போய்ப் பாடப் போறயாமே! அந்த ஊர்லேயிருந்து என்ன வாங்கி வரப் போறே?

மதி: உனக்கு என்ன வேணும்? சொல்லு கண்ணே! தந்தப் பொம்மை வேணுமா? ஆடும் குதிரை வேணுமா?

மர: இதெல்லாம் இங்கேயே இருக்கே மாமா! எனக்கு ஒரு ராஜாத்தி பொம்மை வாங்கி வர்றியா?

மதி: உனக்கு ராஜாத்தி பொம்மை வேணும்; உங்க அப்பாவுக்கோ ராஜாத்தி அம்மாவே வேணுமாம்.

மர: அப்பா என்ன, சின்ன பாப்பாவா, பொம்மை கேட்க! எனக்குத்தான் வேணும்.

மதி: ஆகட்டும் செல்வம், வாங்கி வர்ரேன்.

[குழந்தை கன்னத்தில் முத்தமிட்டுவிட்டுக் கிளம்புகிறான்; மாசிலாமணி எதிர்ப்படுகிறான்.]

மாசி: மதிவாணா! சோலை நாட்டுக் கலை விழா விலே உனக்கு வெற்றி கிடைக்கும். அருமறையானந்தர் ஆசிர்வதித்து இருக்கிறார்.

மதி: கலை வேலை மட்டுமல்லவே! அமைச்சர், வேறோர் பணியும் தந்திருக்கிறார்.

மாசி: கேள்விப்பட்டேன். அதிலென்ன கஷ்டம்? அமைச்சரும் உனக்கு ஒரு பணி தருகிறார்.

மதி: (திகைத்து) அவர் என்ன பணி தருகிறார்.

மாசி: சோலைநாடு புது மார்க்கத்துக்கு ஆதரவு தரு கிறதாம். ஏன்? எந்த அளவு? இது தெரிய வேண்டும்.

மதி: (சலிப்புடன்) சரி...விசாரிக்கிறேன்.

மாசி: வெளிப்படையாக விசாரிக்கக் கூடாது. புது மதக்காரர்களிடம் எவ்வளவு பொருள் இருக்கிறது? பணம் எப்படி திரட்டுகிறார்கள்? இதெல்லாம் தெரிய வேண்டும்.

மதி: என்னென்ன கருத்துக்களைக் கூறுகிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்கிறேன்.

மாசி: (அலட்சியமாக) தெரியுமே அது. எல்லோரும் ஓர் குலம். ஏற்றத்தாழ்வு கூடாது. தியானம் போதும்—திருவிழா வேண்டாம். இப்படியேபேசுவார்கள். மதிவாணா! இவர்களின் மண்டையில் அடிப்பது போல நமது புராதன மார்க்கத்தின் பொன்மொழிகளைக் கொண்ட கவிதா மழை பொழிய வேண்டும்.

[மாசிலாமணியாரிடம் விடை பெற்றுக் கொண்டு செல்கிறான் மதிவாணன்.]

காட்சி—48

இடம்: வல்லியூரை அடுத்துள்ள காட்டில்.

இருப்: முத்துமாணிக்கம், வில்வக்காட்டு முரடர்கள்.

முத்: ஐயய்யோ! ஐயோ!

[என்ற கூக்குரல் கேட்கிறது. நாலைந்து முரடர்கள் வருகிறார்கள். முத்துமாணிக்கத்தின் முகம் ஒரே இரத்த மயமாக இருக்கிறது...கீழே உருட்டப் பட்டிருக்கிறான், அலங்கோலமான நிலையில்... எழுந்திருக்கவும் முடியாத நிலைமையில் முத்து மாணிக்கம் ஊர்ந்து செல்கிறான், முள்ளும் கல்லும் நிரம்பிய பாதையில்! எங்கும் நிசப்தம்... வலி தாங்கமாட்டாமல் முத்துமாணிக்கம் போடும் கூச்சல் மட்டுமே சத்தமாக இருக்கிறது...

காட்சி—49

இடம்: சோமநாதன் மாளிகை—உட்புறம்

இருப்: பணியாட்கள்

நிலைமை: வேலையாட்கள் கவலையுடன் உள்ளனர்.

ஒரு பணி: சின்ன எஜமானனையும் புலி அடிச்சுவிட்டதே! சோமநாதரையாவது சாகடிச்சுது புலி; இவரைப் பாவம் சித்ரவதை செய்து விட்டதே. காலம் முழுவதுமல்லவா இருக்கும் சீரழிவு.

காட்சி—50.

இடம்: சோமநாதன் மாளிகை—வேறோர் கூடம்.

இருப்: முத்து, முத்துவின் நண்பன், மருத்துவர்.

[முத்துமாணிக்கம் மூர்ச்சையடைந்திருக்கிறான். முகத்திலேயும், உடலிலேயும், பல இடங்களில் கட்டுக்கள்...மருத்துவரும் அவருடைய நண்பர் ஒருவரும் முத்துவின் பக்கத்தில் இருக்கிறார்கள், மருந்து வகைகளை தயாரித்துக் கொண்டு...]

காட்சி—51

இடம்: வேழநாட்டு ராஜ வீதி

இருப்: கவிராயர், பூங்கோதை.

நிலைமை: கவிராயர் மாலையுடன் வருகிறார். பூங்கோதையும் வேறு சிலரும் அவருடன் வருகிறார்கள். வேழநாட்டு அரச வீதியில் மதிவாணன் அலங்கார உடை அணிந்து கொண்டு, அரச சின்னம் பொறிக்கப்பட்ட, கொடி ஏந்திய குதிரை வீரர்கள், முன்னும் பின்னும் செல்ல, இரட்டைக் குதிரைகள் பூட்டப்பட்ட அழகிய அரண்மனை வண்டியிலே செல்கிறான்.

கவி: பூங்கோதை! மக்கள் அதிகம் இல்லையே கழகத்தில்?

பூங்: ஐயனே! நாம் இசைவிருந்து தரவில்லையே! வேழ நாடு இப்போது இசையிலே மூழ்கிக் கிடக்கிறது...அறநெறி அறிய அவகாசம் இருப்பதில்லை மக்களுக்கு...

[பாதையிலே போவோர் வருவோர் அவனைக் கண்டு வணக்கம் செய்கிறார்கள். மதிவாணனும் புன்னகை புரிந்தவண்ணம் வணக்கம் செய்கிறான்...]

கவி: கவலைப்படாதே பூங்கோதை! கவலைப்படாதே. மக்கள் நிச்சயமாக அறநெறி வந்து சேருவர்...

[பாதையில் மூலை திரும்பும்போது, அலங்கோலமான நிலையில் கவிராயரும், அவர் மகளும் தள்ளாடிச் செல்கின்றனர். வேகமாக ஓடிவரும் வண்டியின் சப்தம் கேட்டு, மிரள்கிறார் கவிராயர் பாதையில். மகள் அவர் கரத்தைப் பிடித்து நிறுத்துகிறாள். மதிவாணன் செல்வத்தைக் காண்கிறார்கள். மதிவாணன் அவர்களைப் பார்க்கவில்லை. மாடி ஒன்றிலிருந்து வீசப்பட்ட பூச்செண்டை பிடிப்பதிலே ஈடுபட்டிருக்கிறான். புன்னகை செய்கிறாள், கவிராயர் மகள்.]

பூங்: தெரிகிறதா ஐயனே!

கவி: யார், மகளே! இளவரசன்போல.

பூங்: இளவரசனல்ல—இசை அரசன் மதிவாணன்.

கவி: அவனா?

[வேகமாகச் சென்ற வண்டி கிளப்பிய தூசியில், திணறி இருமுகிறார் கிழவர். தடி ஊன்றி நடந்து செல்கிறார்—மகளிடம் ஒரு சிறு மூட்டை இருக்கிறது. அவளைப்பார்த்துப்பெருமூச்செறிந்தபடி...

கவி: மேனி வாடி வதங்கி விட்டது, மகளே!

பூங்: மனம் வளமாகிவிட்டது அப்பா.

கவி: கறுத்துப்போய் விட்டிருக்கிறாய் கண்ணே!

பூங்: உடல்தானே! உள்ளத்திலே புது ஒளி இருக்கிற தப்பா, இப்போது!

[வழியில் செல்வோர் அவளை ஏளனமாகப் பார்க்கிறார்கள்]

ஒருவன்: பார்த்தாயா, பூங்கோதையை...புருஷன் விரட்டிவிட்டான்.

இன்: சிறையிலே இருந்து இதுகளை வெளியே விட்டாச்சா?

ஒரு: பல்லைப் பிடுங்கியாச்சு, பாம்புகளுக்கு..பாம்புப் புத்தையும் அழிச்சாச்சி—தெரியுமேல்லோ! இதுகளெல்லாம் கூடிக் கொக்கரிக்குமே சங்கம், அந்தச் சங்கத்தையும்கூடக் கலைச்சாச்சு மன்னர்.

[அவர்கள் அருகே வந்து...]

ஒருவன்: என்னங்க, புரட்சி எப்ப வருதுங்க? இந்த ஆடியிலேயாவது வரும்ங்களா?

இன்: டே! அதோ, கிழவன்! கைத்தடியைப் பார்த்தாயா?

ஒரு: (கேலியாக) ஆமாம் டோய்—மந்திரக்கோலு.

கவி: ஏம்பா! ஏழைகளை ஏளனம் செய்கிறீங்க?

பூங்: அவர்களும் ஏழைகள்தானேப்பா! அவர்கள் பேசுகிறார்கள்—பாபம்!

[கவிராயரும் மகளும் மேலும் செல்கிறார்கள். வம்பர்கள் பூனைபோல் கூவிவிட்டுச் சென்று விடுகிறார்கள், கேலியாகச் சிரித்தபடி...]

கவி: அறிவுப் பிரச்சாரம், ஆபத்தான காரியம் அம்மா! தொல்லையும் துயரமும் தொடர்ந்து வந்து தாக்கும். பார்த்தாயல்லவா, அந்த பித்தர்களின் போக்கை.

பூங்: சிறையிலே, தனி அறையிலே இருந்தபோது எதையும் தாங்கும் இதயம் பெற்றேன்.

கவி: பெருமை அடைகிறேன் மகளே! பெருமை அடைகிறேன்.

[எதிர்ப்புறமிருந்து மடாலய ஆட்கள் ''அருமறையானந்தர் வாழ்க! அருமறையானந்தர் வாழ்க! அருமறையானந்தர் வாழ்க!'' என்று முழக்கமிட்ட வண்ணம், விருதுகளும் கொடிகளும் ஏந்தியபடி வருகிறார்கள்..கவிராயரும் மகளும், ஒரு வீட்டின் படிக்கட்டிலே ஏறி நின்றுகொண்டிருக்கிறார்கள். அருள் சீட்டு உடையாரே, அரன் அருள் பெறுவாரே; பொருள் தேடி அலைவீரே, பொன்னடியை மறந்தீரே!' என்ற பதிகம் பொறிக்கப்பட்ட விளம்பரக் கொடியும்...அருள் சீட்டு உடையார், அரண்மனை உடையார்...சொர்க்கவாசல் கைங்கரியம்! இன்றே பெறுவீர் அருள் சீட்டு...இகபர சுகம் தரும் அருள்சீட்டு இன்றே பெறுவீர் மெய்யன்பர்களே...மார்க்கம் தழைக்க மாநிலம் செழிக்க அருள்சீட்டு பெறுவீர்...'' என்று விதவிதமாக பொறிக்கப்பட்ட விளம்பரத்தாள்களை ஏந்தியபடி மடாலயத்தவர், ஊர்வலமாக வரக் கண்டு...]

கவி: புதிய திட்டம்! பார்த்தாயா?

பூங்: ஏமாளிகள் இருக்கும் வரையில், எத்தன் இருந்து தானே தீருவான்.

கவி: உண்மைதான்! ஆனால், எத்தன் இருப்பதால் தானே, ஏமாளிகள் உண்டாகிறார்கள்.

பூங்: அதுவும் உண்மைதான். அந்த நிலையைத்தான் நாம் போக்க வேண்டும்.

கவி: நிச்சயம் போக்குவோம்!

காட்சி—52

இடம்: வேழநாட்டு மடாலயத்தின் உட்புறம்.

இருப்: மடாதிபதிகள்.

[மடாலயத்தில் அருள்சீட்டு தயாரிக்கிறார்கள். மடாதிபதி முத்திரையிடுகிறார் சீட்டுக்களில். அருள் சீட்டுக் குவியலைக் காட்டியானதும் பிரமுகர்கள் பலரிடம் அருள்சீட்டு இருக்கும் நிலையைத் தொடர்ச்சியாகக் காட்டுவது.]

[ஒருவர் கண்களில் ஒற்றிக் கொள்கிறார், அருள் சீட்டை. ஒருவர் ஒரு கத்தை அருள் சீட்டை ஒரு பேழையில் வைத்துப் பூட்டுகிறார்.]

"அருள் சீட்டு உடையாரே
அரனடி சேர்வார்
பொருள் தேடி அலைந்தது போதும் பாந்தரே
ஐயன் அருள் தேட வாரீர் இன்றே
அருள் சீட்டு உடையார்
அரண்மனை உடையார்."

[என்ற விளம்பரப் பலகைகள் பல காணப்படுகின் றன். மடாதிபதியின் பேழை நிறைகிறது, அருள் சீட்டு குவியல் குறையக் குறைய...]

அருள் சீட்டு உடையாரே! அரனடி சேர் வாரே.

[என்ற ஒலி கேட்கிறது...]

காட்சி—53

இடம்: வெற்றிவேலன் அரண்மனையில் ஓர் கூடம்.

இருப்: அமைச்சர், வெற்றிவேலன்

நிலைமை: அரசன் உலவும் காட்சி. எதிரே அமைச்சர் சுவடிகளைப் பிரித் துப் பார்த்தபடி இருக்கிறார்.

அமை: சந்தனக்காட்டின் ஏகபோக உரிமையை, சீமான் சபாபதிக்குத் தருவதாக...

[ஒரு சீட்டை மன்னன்முன் நீட்ட]

வெற்றி: சீமான் சபாபதிக்கா! ஏன்? பாஸ்கரப் பிரபுவுக்கு வாக்களித்தோமே?

அமை: (மன்னனைக் குறிப்பாகப் பார்த்தபடி) சீமான் சபாபதி அருள்சீட்டு பெற்றிருக்கிறார்.

வெற்றி: மறந்து போனேன். பிரபுவைவிட...

அமை: இவர் பத்து மடங்கு அதிகம் செலுத்தியிருக்கிறார்.

[அருள்சீட்டைத் தர மன்னன் வாங்கிப் பார்த்து விட்டு]

வெற்றி: சீமான் சபாபதிக்குத்தான் சந்தனக்காடு—சரி, ஆயுதச் சாலையில் களவு சம்பந்தமாக...

அமை: துப்பு கிடைத்துவிட்டது.

வெற்றி: குற்றவாளி யார்?

அமை: (தயக்கத்துடன்) கைது செய்திருக்கிறேன்.

வெற்றி: யார்?

அமை: குமாரசாமியார்...

[மன்னர் முகம் மாறுகிறது; அமைச்சர் விழியிலே குறும்பு தெரிகிறது.]

வெற்றி: ஆதாரங்கள்?

அமை: அப்பழுக்கில்லை.

வெற்றி: அமைச்சரே! குமாரசாமியார்...

[அமைச்சரை பரிதாபத்துடன் பார்க்கிறான்]

அருள் சீட்டு பெற்றிருக்கிறார்.

அமை: தொகையின் அளவும் பெரிது. களவும் செய்து தான் இருக்கிறார்.

வெற்றி: குமார சாமியார் மட்டுந்தானா, இந்தக் களவிலே குற்றவாளி?

அமை: வேறு சிலரையும் காட்ட முடியும்.

வெற்றி: காட்டியாக வேண்டும். குமாரசாமியாரை விடுதலை செய்தாக வேண்டும்.

அமை: இதை எதிர்பார்த்தே, நான் அவரைக் கைது செய்யாமலே இருந்து விட்டேன்.

[வெற்றிவேலன் புன்னகை புரிகிறான்.]

காட்சி—54

இடம்: ஒரு வியாபார ஸ்தலம்.

இருப்: இரு வணிகர்கள்.

நிலைமை: இரண்டு வணிகர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

ஒருவன்: எப்படி முடிந்தது அங்காடி அமளி?

மற்றவன்: எதிர்பாராத முடிவு—பஞ்சாயத்துக்காரர்கள் எல்லோரும், பால்வண்ணர் பக்கம் இருப்பார்கள் என்றுதான் நம்பினார்கள்.

ஒரு: ஆமாம்! நியாயமும் அவர் பக்கம்தானே?

மற்: இருந்து?அருள்சீட்டு சொக்கநாதரிடம் இருந்ததே! தந்திரக்காரனல்லவா அவன்?

ஒரு: அதனால்தான் தீர்ப்பு அவன் பக்கம் கிடைத்ததா?

மற்ற: அருள்சீட்டு சாமான்யமா?

காட்சி—55

இடம்: ஓர் கோயில் மண்டபம்

இருப்: இரண்டு பண்டாரங்கள்

ஒருவன்: ஆறும் தீந்து போச்சா?

மற்றவன்: நூறு இருந்தால்கூட தீர்ந்து போகும்—ஊரிலே ஒரே திண்டாட்டம்.

ஒரு: ஆறுமுகத்தாச்சிக்கு ஒரு சீட்டுத் தருவதாக வாக்களித்துவிட்டேன்—தரவில்லையானா...

மற்: தட்டினா கதவு திறக்காது—ஏன், அதுதானே கவலை?

ஒரு: கேலி கிடக்கட்டும்; தள்ளு ஒரு சீட்டு—

மற்: விலை எப்படி தெரியுமேல்லோ?

ஒரு: உள்ளதுதானே?

மற்: அது போன மாதம்—இப்ப உங்களுக்கு ஒன்பது பத்துகூட...

ஒரு: அக்ரம விலையாயிருக்கே—நமக்குள்ளே கூடவா இப்படி?

மற்: சிவனாணையா என்னிடம் கிடையாது சீட்டு. சிற்றம்பலத்திடம் வாங்கித் தருகிறேன்—நூறு ஒன்பது நூறு.

ஒரு: நூறு ரூபா அருள்சீட்டுக்கு ஒன்பது நூறு ரூபாயா தரவேண்டும்?

காட்சி—56

இடம்: மடாலயத்தின் உட்புறம்

இருப்: மாசிலாமணி, நிர்வாகி

நிலைமை: மாசிலாமணி, காரியாலய நிர்வாகியிடம்

மாசி: இம்மாதம், புதிதா ஒரு ஆயிரம் அருள் சீட்டு தயாரிக்க ஏற்பாடு இல்லையா?

நிர்: தயாராகுதே!

மாசி: வேண்டாம். நிறுத்தி வை.

நிர்: தேவையாயிருக்குதுன்னு ஊர்லே பலபேர்...

மாசி: பேசுவது தெரியும் எனக்கு. அதனாலேதான் இப்ப வேண்டாம், புதுச் சீட்டுன்னு சொல்றேன். பழைய சீட்டுக்கள் பறக்குதப்பா, ஒண்ணுக்கு பத்து விலைக்கு. பலருக்கு நல்ல லாபம்—புதுச்சீட்டு வெளியிட்டா விலை படுத்துவிடும்.

நிர்: ஆமாங்க.

மாசி: உன்னிடம் எத்தனை இருக்கு? சொல்லய்யா! கூச்சம் என்ன?

[நிர்வாகி தயங்க...]

நிர்: நாலு...

மாசி: நாலே நாலுதானா? சரி, என்ன விலைக்கு வந்தா கொடுத்துவிடலாம்?

நிர்: உங்க இஷ்டமுங்க.

மாசி: சாமர்த்தியக்காரன். சரி, கொடு நாலையும்—தொகை என்ன?

நிர்: நாலும் ஆயிரம் ரூபா சீட்டுத்தான்.

மாசி: மொத்தத்திலே நாலாயிரம்.

நிர்: உள்ளதுங்க.

மாசி: பன்னிரண்டு வாங்கித் தந்து விடுகிறேன்—எடு நாலையும்.

நிர்: என் தம்பியோட சீட்டு எட்டு இருக்குங்க.

மாசி: பலே ஆசாமி—சரி, அதையும் அதே விலைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

காட்சி—57

இடம்: ஊர்ச் சாவடி

இருப்: கவிராயர், பூங்கோதை, மக்கள்

நிலைமை: கவிராயரும் மகளும் நிற்கிறார்கள். எதிரே சிறு கூட்டம். கவிராயர் உணர்ச்சியுடன் பேசுகிறார்.

கவி: மோசம்! அக்ரமம்! அருள்சீட்டு பெறாதீர்—அறிவை இழக்காதீர். அன்பு, அறம், அகிம்சை, தொண்டு, தூய்மை, வாய்மை—இவைகளைத்தான் ஆண்டவன் கேட்கிறான். அருள்சீட்டு அல்ல. கொலை செய்தேன்; தண்டிக்காதீர்—இதோ அருள் சீட்டு என்று காட்டினால் கடவுள் விடமாட்டார். கற்பழித்தேன்—ஆனால் அருள் சீட்டு இருக்கிறது என்றால் ஆண்டவன் விடமாட்டார். மோசாண்டிகளின் பேச்சைக் கேட்டு ஏமாறாதீர்கள். அருள்சீட்டு வாங்க வேண்டாம்—கிழித்தெறியுங்கள்—கொளுத்துங்கள்.

[சிறு கூட்டத்தில் பரபரப்பு உண்டாகிறது. கல் விழுகிறது. காட்டுக் கூச்சலிடுகின்றனர். கிழவரை வேறு இடம் அழைத்துச் செல்ல மூதாட்டி முயற்சிக்கிறாள். அவர் இசையவில்லை...]

[கூட்டத்தில் ஒரு குரல்]

ஒரு குரல்: பைத்யம்! கிழப் பைத்யம்!

கவி: நானா?

குரல்: நாங்களா? பாருங்கள், பாருங்கள்! நம்மைப் பைத்யம் என்கிறான்—துரத்துங்கள்.

[மேலே சிலர் பாய்கிறார்கள். பண்டாரங்கள் கிழவனைப் பிடித்து இழுத்துச் செல்கிறார்கள். பலர் தாக்குகிறார்கள். சகித்துக் கொண்டே முதியவர் ''மெய் கண்டான்'' பாடல் பாடுகிறார். மக்கள் வெறியடங்கி கூட்டம் கலைந்ததும் மூதாட்டி கவிராயரை மெதுவாகக் கூட்டிச் செல்கிறார்கள்.]

காட்சி—58

இடம்: பாழடைந்த கோயில்.

இருப்: கவிராயர், பூங்கோதை, சேவகர்கள்

நிலைமை: கவிராயரும் அவர் மகளும். குருடு, முடம், நொண்டி ஆனவர்களுக்குச் சோறிடுகிறார்கள்,

ஒரு பழைய கலனான கோயி
லில். அவர்கள் சாப்பிட்டுக்
கொண்டிருக்கும்போது, அர
சாங்க சேவகர்கள் உள்ளே
நுழைந்து...]

சேவகர்: ஏ, கிழம்! இதென்ன தண்டச் சோற்று மட மாக்கிவிட்டீங்க, தண்டாயுதபாணி கோயிலை.

மகள்: கோயில் கலனாகி விட்டது. யாரும் இப்போது இங்கு வருவதில்லை.

சேவ: அதனாலே, இதுகளுக்கு வீடு ஆக்கி விட்டாயா, கோயிலை?

மகள்: வௌவால்கள்தானய்யா இங்கு வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன!

சேவ: வாயாடியாச்சே நீ! தெரியுமே! தேவாலயத்தை அசுத்தமாக்கினால் என்ன தண்டனை தெரியுமா?

மகள்: அசுத்தமாக்கவில்லையே! இங்கே இருந்த குப்பை கூளங்களை, நான்தான் கூட்டி எடுத்துச் சுத்தம் செய்தேன்.

கவி: இந்தப் பஞ்சைகளுக்கு வேறே இடம் இல்லே தங்க?

சேவ: (கேலியாக) அதனாலே, கோயிலிலே குடியேறி விட்டிங்களா? ஏ, கிழவா! நாளை காலையிலே வந்து பார்ப் பேன்—இடம் காலியா இருக்க வேணும். தெரிந்ததா? இல்லே பிறகு, ஆமாம், நான் மனுஷனாக இருக்க மாட்டேன்—சொல்லிவிட்டேன்.

[கவிராயரும், மகளும் பஞ்சைகளைப் பார்த்துப் பரிதாபப்படுகிறார்கள்.]

மகள்: இந்தக் கண்றாவிக் காட்சியைக் காண மறுக்கி றார்கள் கருணாமூர்த்திகள்.

கவி: நேரம் ஏது மகளே! தேரும் திருவிழாவும், அபி ஷேகமும், ஆராதனையும் காணவே காலமெல்லாம் செல வாகிவிடுகிறது. கால் கை போனதுகளையும், கண் போனது களையும் காண நேரம் கிடைக்குமா?

மகள்: வேறு எங்கே போவது?

கவி: எங்கே போனார் புத்தபிரான்? காடு மேடு எங் கெங்கோ சென்றாரே, அழகான அரண்மனை அவருக் கென்று இருந்தும். அன்னக் காவடிகள் நாம்—எங்கு போனா என்ன? வா, மகளே! மரத்தடியெல்லாம் நமக்கு மாளிகை தானே!

[சற்று தொலைவிலே ஒரு ஆலமரம் தெரிகிறது. அதை மகளுக்குக் காட்டி...]

கவி: அதோ, புதிய மாளிகை...

[மரத்தடியில் வந்து சேருகிறார்கள், பஞ்சைக் கூட் டத்தினர். 'அன்பு நிலையம்' என்று மரத்தடி யில் செதுக்குகிறார் கவிராயர்.

காட்சி—59

இடம்: சோலைநாட்டு அரண்மனை உட் புறம்.

இருப்: குமாரதேவி, செந்தாமரை.

நிலைமை: சோலைநாட்டு மயில் கொடி கெம்பீரமாகப் பறந்து கொண் டிருக்கிறது, அரண்மனை முகப் பில். இந்தச் சின்னம் அணிந்த படைவீரர்கள் அங்கு மிங்கும் காவல் இருக்கிற காட்சி தெரி கிறது. அரண்மனை உட்புறம், தனி அறை. சுவற்றிலே மயில் கொடிச் சின்னம் பொறிக்கப் பட்டிருக்கிறது. பெரிய ஆசனம்

எதிரே மேஜை. அதன் மீது பல ஓலைகள்—அவைகளைப் பிரித்துக் கொடுத்தபடி இருக்கிறாள் ஒரு பணிப்பெண். அழகிய தோற்றமும், அறிவு ஒளி வீசும் கண்களும் கொண்ட குமாரதேவி, ஓலையைப் பார்த்தபடி...

குமார: செந்தாமரை! இந்த ஆண்டு கலை விழா அதிக சிறப்பாக இருக்கும்.

செந்: எப்போதுமே சோலைநாட்டுக் கலை விழா சிறப்பாகத்தானே இருக்கும்!

குமார: அல்லடி! இந்த ஆண்டு கலை விழாவில் கலந்து கொள்ள கலைவாணர்கள் பலர் வருகிறார்கள். இதோ பார்த்தாயா, தொண்டை நாட்டுக் கலைவாணர் ஓலை இது. அடே, வேழ நாடு! வேழ நாட்டிலே கூடவா, கலை...!

செந்: அதென்ன தேவி! அப்படிச் சொல்லுகிறீர்கள்?

குமார: வேழநாட்டு வேந்தன் வெற்றிவேலன், மண்ணாசை பிடித்தவன்—கலையை எப்படி வளர்க்க முடியும்? என்ன அதிசயமோ தெரியவில்லை, வேழ நாட்டிலிருந்து மதிவாணன் என்ற கலைஞன் வருகிறானாம்.

செந்: பலர், ஏற்கனவே வந்து விட்டார்கள் தேவி! கலை விழாவுக்கான ஏற்பாடே, கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

குமார: கள்ளி! பார்த்துவிட்டு வந்துவிட்டாயா, நீ மட்டும்?

செந்: ஆமாம், தேவி! தாங்கள் பாசறையைப் பார்வையிடப் போனீர்களே!

குமார: அப்போது தலைவலி என்று என்னிடம் சொன்னாயே?

செந்: வேறு என்ன சொல்வது தேவி!

குமார: (அவளைக் கிள்ளி) என்னை ஏய்த்து விட்டா போயிருந்தாய்? சரி! இரு, இரு...நான் போகப் போகி றேன் கலைவிழாக் காட்சிகளைக் காண—இங்கேயே நீ இருக்க வேண்டும்.

செந்: தனியாகத்தான்.

குமார: தனியாகத்தான்! ஏன்? ஏனடி செந்தாமரை, வளை அணிந்த கரமாயிற்றே என்கிறாயா?

செந்: நான் சொல்வேனா தேவி! அந்தக் கரம் வாள் ஏந்தி வீரத்தை விளக்கியதைக் கண்டவள் அல்லவா, நான். ஆனால், தேவி! எனக்கு இப்போது ஒரு வேலையும் இல்லை, அரண்மனையில்.

குமார: அதனால்?

செந்: தங்களுடன் வருவதால் வேலை ஏதும் கெடப் போவதில்லை.

குமார: (யோசனை செய்து) ஏன், வேலை இல்லை உனக்கு—மறந்தே போனேனடி செந்தாமரை! நான் விழாக் காட்சிகளைப் பார்த்துவிட்டு வருவதற்குள், நீ விழாவில் பரிசு பெறும் கலைவாணருக்கு, வரவேற்பு உபசாரம் செய்ய வேண்டுமே! அதற்காக அரண்மனையில் விருந்துக் கூடத்தை அலங்காரம் செய்து வை—நிரம்ப வேலை இருக்குமே?

செந்: (சோகமாக) ஆகட்டும், தேவி! இப்போதே புறப் படுவதாகத் தீர்மானமோ?

குமார: (எழுந்து) ஆமாம், ஆமாம்! இப்போதே தான். ஆனால் இப்படி அல்ல.

[புன்சிரிப்புடன் உள்ளே செல்கிறாள். செந் தாமரை, குமாரி உள்ளே செல்வதை பார்த்துக் கொண்டிருக்கிறாள். உட்புற அறை ஒன்றிலிருந்து குமாரியின் குரல்.]

குமாரி: செந்தாமரை!

செந்: தேவி!

குமார: கண்டதும் காதல் கொண்டு விடுவாயோடி நீ?

செந்: ஏன் தேவி, இந்தக் கேள்வி?

குமார: யார் கண்டார்கள், காதலின் சக்தியை. சரி... சரி! நீ கண்களையாவது மூடிக்கொள்.

செ: ஏனாம்?

குமார: அழகுள்ள வாலிபன் ஒருவன் வரப்போகிறான்! அவனிடம் அசடே, மனதைப் பறிகொடுத்து விடாதே.

செந்: (புன்சிரிப்புடன்) நான் அவ்வளவு விவரமறியாத வளா?

[உள்ளிருந்து களிப்புடன் மெல்லிய குரலில் இசை கேட்கிறது...]

தேவி! பெயர் என்ன?

குமார: யாருடைய பெயர்?

செந்: அந்தரத்திலிருந்து வரப் போகிறார் என்றீரே, யாரோ சுந்தர புருஷர்—அவருடைய பெயரைத்தான்.

குமாரி: அவர் பெயரா? தங்கவேலன்.

செந்: எவ்வளவு சாகசம்?

[இசை கேட்கவில்லை. செந்தாமரை மேஜைமீது இருந்த ஓலைகளை ஒழுங்காக அடுக்கி வைத்து விட்டு]

தேவி!...தேவி!.

[பதில் இல்லை.]

செந்: (சற்று உரத்த குரலில்) தேவி!

[பதில் இல்லை...அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே செல்கிறாள் செந்தாமரை. அறையின் கோடியில் உள்ள கதவு மூடப்படுவது கண்டு புன்னகையுடன்]

செந்: இரகசிய வழியாகவே புறப்பட்டு விட்டாரா, தேவியார்.

காட்சி—60

இடம்: கண்காட்சி சாலை.

இருப்: மதிவாணன், ஒரு ரசிகர், ஒரு வாலிபன்.

நிலைமை: கண்காட்சி கூடத்தைப் பார்த்த மதிவாணன்...

மதிவாணன்: அழகான ஓவியம்—தீட்டியவர் திறமை சாலி.

ஒரு ரசிகர்: சாமான்யமான திறமைசாலியல்ல—இது போலத் தீட்டக் கூடியவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

மதி: அப்படிச் சொல்லிவிடக் கூடாது.

ஒரு ரசி: (வாலிபர்) ஏனாம்! இதைவிட அழகாகத் தீட்டுபவர் யார்? ஓவியம் தீட்டுபவரோ நீர்...

மதி: இல்லை, தம்பி! நான் பாடகன். ஓவியம் தீட்டிய வர் திறமைசாலிதான்—ஆனால்...

வாலி: ஆனால் என்ன?

மதி: அனுபவம் போதாது.

வாலி: அனுபவம் போதாதா? எங்கள் நாட்டிலே கீர்த்தி வாய்ந்தவர் தீட்டிய ஓவியம் இது—குறை என்ன காண்கிறாய் இதிலே?

மதி: நிலவு, மேலே.

வாலி: ஆமாம்—பால் வண்ண நிலவு!

மதி: குளம் கீழே.

வாலி: ஆமாம்—நிலவின் ஒளி அதிலே அழகாகத் தெரி கிறது!

மதி: அல்லி மலர்ந்திருக்கிறது.

வாலி: ஏன், அழகாக இல்லையோ அல்லி?

மதி: அற்புதமாக இருக்கிறது, தம்பி! அற்புதமாக இருக்கிறது—ஆனால் அதோ, தாமரை பார்த்தாயா?

வாலி: அதுமட்டுமென்ன அழகாக இல்லையோ!

மதி: கண் படைத்தவன் எவனும் அப்படிக் கூறமாட்டான். ஆனால், மேலே நிலவு, கீழே குளத்தில் தாமரை. இருக்கலாமா? (இலேசாகச் சிரித்தபடி) நிலவு உதித்ததும் தாமரை குவிந்துவிடும்—அல்லி மலரும்.

வாலி: (யோசித்தபடி) ஆமாம்.

மதி: கதிரவனைக் கண்டு கமலம் மலரும்—நிலவைக் கண்டு அல்லி மலரும்.

வாலி: உண்மைதான்.

மதி: தாமரை மலர்ந்த நிலையில் இருக்கக் கூடாது. குவிந்து இருக்க வேண்டும்.

வாலி: மன்னிக்க வேண்டும். தாங்கள், கலை விழாவுக்கு வந்திருக்கிறீரா? இசைவாணரா?

மதி: பாடத் தெரியும். வேழநாடு.

வாலி: ஓவியத்தை நானுந்தான் கூர்ந்து பார்த்தேன். இந்தக் குறை எனக்குத் தெரியவே இல்லை.

மதி: ஓவியம் அழகாக இருப்பதால் குற்றம் சுலபத்தில் தெரியாது.

[இருவருமாக வேறு பல ஓவியக் காட்சிகளைக் காண்கிறார்கள். ஒவ்வொரு ஓவியத்தைப் பார்க்கும்போதும் மதிவாணன் மகிழ்கிறான், காட்சியில் ஈடுபட்டு. வாலிபனும் மகிழ்ச்சி அடைகிறான். என்றபோதிலும், மதிவாணனை கனிவுடன் அவ்வப்போது பார்த்து மகிழ்கிறான். ஒரு ஆடவனின் ஓவியத்தை இருவரும் கூர்ந்து கவனிக்கிறார்கள். முகத்தில் கோபக் குறியில் இருக்கிறான் ஆடவன்.]

மதி: என்ன காரணம் இவன் கோபத்துக்கு? சொல், பார்க்கலாம்.

வாலி: (கேலியாக) ஆடவரின் கோபத்துக்குக் காரணம்கூட வேண்டுமா? யாரிடமாவது சண்டை போட்டிருப்பான். நையப் புடைத்திருப்பார்கள்.

மதி: தவறு. சண்டை போட்டிருந்தால் உடையாவது கலைந்திருக்குமல்லவா? அலங்காரமான உடை. அழகு இல்லாதவனுமல்ல.

வாலி: யாராவது காதலிக்க மறுத்திருப்பார்களோ?

மதி: உண்மைக்குச் சமீபமாக வருகிறாய்—ஆனால் முழு உண்மை அது அல்ல—உண்மைக் காதல் கொண்டவனாக இருந்தால், கோபம் குறைவாகவும், ஏக்கம் அதிகமாகவும் இருந்திருக்கும், கண்களில்.

[வாலிபன் அந்த உரை கேட்டு ரசித்து...]

வாலி: பெரிய அனுபவசாலி போலிருக்கிறதே!

[இன்னோர் ஓவியத்தைக் காட்டி]

இதோ, பார்! மனைவியிடம் சிக்கிக் கொண்டு அவதிப்படும் கணவன். (சிரித்தபடி) காதைப் பிடித்தே திருகி விடுகிறாளே!

மதி: அப்போதும் அவன் முகத்திலே, இலேசாகப் புன்னகை பார்த்தாயா?

[வேறோர் படத்தைக் கண்டு வாலிபனை இழுத்துக் கொண்டு அந்தப் பக்கம் சென்று]

மதி: இதைப் பார்த்தாயா, பேராசைக்காரன்! அசல் சோமநாதரே'தான்! கனவு காண்கிறான். அவனைச் சுற்றி மாடமாளிகை, கூட கோபுரங்கள்! பார்த்தாயா? மேகங்களெல்லாம் அவ்வித உருவமாகத் தெரிகின்றன அவனுக்கு. சோமநாதரேதான்.

வாலி: யார், சோமநாதன்?

மதி: எங்கள் கிராமத் தலைவர். காசாசை பிடித்த கிழம்—வா, தம்பி! மற்ற இடங்களையும் பார்க்கலாம்.

வாலி: ஏதேது! பாவம், வெளியூராயிற்றே, துணை யாகச் சிறிது நேரம் இருக்கலாம் என்று இருந்தேன். உன் கூடவே எவ்வளவு நேரம் பொழுதை ஓட்டுவது?

மதி: தம்பி! என்கூட இருப்பது சலிப்பாகி விட்டதா உனக்கு—இதற்குள்?

வாலி: (குழைந்து) இல்லை...இல்லை..உன்கூட இருப் பது ஆனந்தமாகத்தான் இருக்கிறது.அதனால்தான் என்னை மறந்து சுற்றுகிறேன், உன்னோடு.

மதி: சரி, வா...போகலாம்.

வாலி: நேரமாகிவிட்டது. நீ ஒவ்வொரு காட்சியையும் பார்த்துக் கொண்டே இருந்தால், காலம் அதிகமாகும். பட்டிக்காட்டான்போல பளபளப்பு கண்டதும் நின்று விடு கிறாய்.

[மதிவாணன், வாலிபன் கன்னத்தைக் கிள்ள வாலி பன் வெட்கப்படுகிறான்.]

மதி: அடே! இதென்னடா வெட்கம்,இளநங்கைபோல!

[வாலிபனை உற்றுப் பார்த்தபடி]

ஆனால், தம்பி! இந்த அரும்பு மீசை மட்டும் இல்லையா னால் நீ இளமங்கை போலவேதான் இருப்பாய்.

[இருவரும் வேறு பல காட்சிகளைக் காண்கிறார் கள்...நடனக்காட்சிகள், வேடிக்கைக் காட்சிகள், குரங்காட்டம் போன்றவைகள்... பழக்கடையி லிருந்து பழம் வாங்கித் தருகிறான் மதிவாணன். இருவருமாக கைகோத்துக் கொண்டு ஓடுகிறார் கள் மகிழ்ச்சியுடன்...ராட்டினம் ஏறிச் சுற்று கிறார்கள். சிறிது நேரமானதும் வாலிபன்..]

வாலி: உன்னோடு விளையாடிக் கொண்டே இருந்து விட முடியாது. வேலை இருக்கிறது. நான் போயாக வேண்டும்.

மதி: போவதாவது—இதற்குள்? தம்பி! வா, என் விடுதிக்கு.

வாலி: உன் விடுதிக்கா? இல்லை, இல்லை...நான் வருவதற்கில்லை.

[வாலிபனின் கரத்தைப் பிடித்து தன் கட்கத்தில் வைத்துக் கொண்டு]

மதி: வாடா தம்பி! எனக்கென்னமோ, உன்னைக் கண்டதும்...

வாலி: (குறும்பாக) கண்டதும்...

மதி: (சிரித்தபடி) ஒரு விதமான களிப்பு—விடுதிக்கு வா—விருந்து உனக்கு இன்று.

வாலி: விடுதி வரையில் வேண்டுமானால் வருகிறேன். வேலை நிரம்ப இருக்கிறது. நான் பாடகனல்ல, உன்னைப் போல்; பாடுபட வேண்டியவன்.

மதி: (குறும்பாக) என்ன வேலை? எவளாவது மை விழியாளைச் சந்திக்கும் வேலையா?

வாலி: (குறும்பாக) இருக்கலாம்! ஏன் கூடாதோ?

மதி: ஏன் கூடாது? இளமை, அழகு, இனிமையான பேச்சு எல்லாம் திரண்டு உருண்டு இருக்கிறதே.

[வாலிபன் ஒரு கணம் வெட்கமடைந்து, மறு கணம் சமாளித்துக் கொள்கிறான். மதிவாணனுடன் தயக்கத்துடனேயே செல்கிறான்.]

## காட்சி—61

இடம்: மதிவாணன் விழா விடுதி.

இருப்: மதிவாணன், வாலிபன்.

நிலைமை: விடுதிக்கு முன்னால் வேழ நாட்டுக் கொடி நாட்டப்பட்டிருக்கிறது. ''இன்ப நிலையம்'

என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கண்ட வாலிபன் ஏன் அந்தப் பெயரிடப்பட்டிருக்கிறது என்று கேட்பது போல் பார்க்கிறான். மதிவாணன் அதைக் கவனித்துவிட்டு...

மதி: இன்பம்தானடா தம்பி, வாழ்வின் இலட்சியம்.

வாலி: (ஆசனத்தில் உட்கார்ந்தபடி) இருக்கலாம் புலவரே! ஆனால் இன்பம் என்றால் என்ன? எது இன்பம்?

மதி: என்னடா தம்பி! வேட்டு! புரியவில்லையா உனக்கு, இன்பம் என்னவென்று?

[வாலிபன் குறும்புப் புன்னகையுடன் புரியவில்லையே என்று கூறுவதுபோல கையை விரிக்கிறான்...மதிவாணன் மேல்சட்டையைக் கழற்றிவிட்டு வாளை எடுத்து வைத்துவிட்டு...]

மதி: புரியும்படி சொல்லட்டுமா? இதோ பாரடா தம்பி, அழகான ஆற்றோரம்—மாலை நேரம்.

வாலி: (குறும்பாக) மந்த மாருதம், மலர்ச்சோலை, மதுர மொழியாள்—அவன் பாடுகிறான்—அவள் ஆடுகிறாள். அந்தப் பழைய பாடம்தானே சொல்கிறாய்?

மதி: ஏதேது, தம்பி! அனுபவம் அதிகம் போலிருக்கிறதே—

வாலி: சாமான்யமான அறிவுதான். அனுபவமல்ல—அது கிடக்கட்டும், காதல் காட்சியைக் கூறவந்தீர்...உம்!

மதி: ஆமாம்.

வாலி: இன்பம் அதுதான் என்கிறீரா?

மதி: ஆமாம். ஏன், அதிலே இன்பம் இல்லையா?

வாலி: அதிலே மட்டுந்தானா என்று கேட்கிறேன்.

மதி: என்னடா இது, வம்புக்காரனாகி விட்டாய்! இன்பத்துக்கு ஒரு உதாரணம் அது.

வாலி: காதலன் காணும் இன்பத்தை மட்டும்தான் இன்பம் என்று கூறுகிறீரா என்கிறேன்?

மதி: (முகமலர்ச்சியுடன்) புத்தியுள்ளவனடா நீ. தம்பி! இன்பம் ஒவ்வொருவருக்கு, ஒவ்வொரு சமயத்திலே, ஒவ் வொரு விதத்திலே கிடைக்கிறது. குழந்தையின் மழலை தாய்க்கு இன்பம், காதல் மொழி உன் போன்ற வாலிபனுக்கு இன்பம், வீரனுக்கு வெற்றி இன்பம். இன்னமும் கூறவா?

வாலி: வேண்டாம்—பாடு.

மதி: பாடவா? இசையிலே இன்பம் தேடுகிறாயா தம்பி?

வாலி: இசையில் மட்டுமல்ல; உன் பேச்சு, பார்வை எல்லாமே இன்பம் தருவதாகத்தான் இருக்கிறது. இந்த இன்பத்தை நான் அரண்மனையிலே...

[உடனே பேச்சை வாலிபன் தயக்கத்துடன் நிறுத் திக் கொள்கிறான்.]

மதி: அரண்மனை வாசியா?

வாலி: (திடுக்கிட்டு) ஆமாம். அரண்மனைச் சேவகன்.

மதி: ஓஹோ! அதனால்தான் அலங்காரம் இருக்கிறது, உன் உடையிலே; குறும்பு இருக்கிறது, உன் பேச்சிலே.

[வாலிபன் பூரிப்படைந்து...]

வாலி: என் மொழியிலே குறும்பா இருக்கிறது?

மதி: ஆமாம். ஆனால் விழியிலோ.

வாலி: (குழைந்து) விழியிலே...

[மதிவாணன் வாலிபன் அருகே சென்று, அவன் முகத்தை தன் இரு கரங்களிலும் பிடித்துக் கொண்டு, தன் முகத்தருகே கொண்டு வந்து பார்த்தபடி...]

மதி: விழியிலா?...தம்பி! உன் விழியிலே வழிந்தோடும் இளமை! அட, அடா! நான் எங்கும் கண்டதில்லை.

வாலி: (சொக்கியபடி) எங்கும் கண்டதில்லையா? என்ன காண்கிறீர், என் விழியில்?

மதி: (மெய்மறந்தவனாகி) கலையைக் காண்கிறேன். காவியத்தைக் காண்கிறேன். இன்பம் எது எதில் உண்டோ அவ்வளவும் ஒன்று கூடி, உன் இரு விழியிலே குடிபுகுந்திருக்கக் காண்கிறேன்.

வாலி: (குறும்பாக) போதும், போதும், புலவரே! போய் உட்காரும், அந்த ஆசனத்தில்.

[மதிவாணன் ஆசனத்தில் அமர்ந்து மகிழ்ச்சியுடன் பாடுகிறான். பாடலைக் கேட்டு வாலிபன் மிகவும் இரசிக்கிறான். பாடல் முடிந்ததும்]

மதி: இன்னும் ஓராயிரம் கூறலாமடா தம்பி, இன்பம் எது என்பதற்கு.

வாலி: ஆயிரமாயிரம் கூறலாம். ஆனாலும், திட்டமிட்டு, இதுதான் இன்பம் என்று கூற முடியாது. சரி, நான் வருகிறேன்.

[போக முயற்சிக்க எழுந்து நின்ற வாலிபனை ஆசனத்திலே தள்ளி...]

மதி: போகவாவது! யார் உன்னை போக விடுவார்கள்?

வாலி: ஐயையோ! நான் போயாக வேண்டும்—நான் போகாவிட்டால், அரண்மனையில் ஒரே அமளியாகிவிடும்.

[வாலிபன் எழுந்திருக்க அவனை மீண்டும் ஆசனத்தில் தள்ளி...]

மதி: தம்பி, இதோ பார்! நான் கலை விழாவுக்காக மட்டும் சோலைநாட்டுக்கு வரவில்லை; வேறு காரியம் இருக்கிறது. உன் உதவி வேண்டும்.

வாலி: (ஆச்சரியத்துடன்) வேறு காரியமா?

மதி: ஆமாம்! எங்கள் வேழநாட்டு மன்னர் திருமண விஷயமான வேலை. தம்பி! இந்த நாட்டு அரசியை உனக்கு நன்றாகத் தெரியுமே—

வாலி: (திகைத்து) தெரியும்—அரண்மனைச் சேவகன் தானே நான்.

மதி: அழகியா உங்கள் ராணி.

வாலி: (புன்சிரிப்புடன்) அழகி என்றுதான் எல்லோரும் கூறக் கேட்டிருக்கிறேன்.

மதி: (அவன் தோளைத் தட்டி) உன் அபிப்பிராயம் என்ன? அதைச் சொல்லடா தம்பி! நீ நல்ல ரசிகன். அதனால்தான் கேட்கிறேன்.

வாலி: (கெம்பீரமாக) எங்கள் நாட்டு ராணியின் அழகு பற்றி உனக்கு என்ன அக்கரை?

மதி: (விளக்கம் கூறும் பாவனையில்) நான் கலைஞன்! கலையிலே ஒரு பகுதி அழகு. அது எங்கெங்கு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் உரிமை எனக்கு உண்டு. மேலும் யாரிடமும் சொல்லி விடாதே, இரகசியம். உன்னிடம் மட்டும் சொல்கிறேன்! எங்கள் மன்னர் வெற்றிவேலர் இந்த ராணியைத் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்.

வாலி: (இரகசியமாகப் பேசுவது போலக் கேலி செய்து) அப்படியா! தூது கூற வந்திருக்கிறீரா?

மதி: கேலி போதும்—அழகி என்றாயே, அரசிக்கு; அறிவு எப்படி?

வாலி: (இரகசியமாகப் பேசும் முறையிலேயே) ஏன்? அதிகமோ வேழநாட்டில் அறிவுப் பஞ்சம்?

மதி: (வாலிபன் காதைத் திருகியபடி) அளவு கிடையாதா உன் குறும்புக்கு? ஒரு பெரிய அரசன் திருமண காரியமாகப் பேசும்போது, கேட்பதற்குப் பதில் வேண்டும் இனி?

வாலி: (கேலியாக) உத்தரவு. புலவர் பெருமானே!

மதி: அரசி அறிவுள்ளவளா?

வாலி: (கோபம் கொண்ட முறையில்) எங்கள் அரசி அழகுள்ளவள், அறிவுள்ளவள், வீரமுள்ளவள், வெற்றிவேலர் களை விரும்பாதவள்.

மதி: யாரிடமாவது காதல்?

வாலி: மனதைப் பறி கொடுத்துவிட்டாள்.

மதி: யார் அந்தப் பாக்கியசாலி.

வாலி: (குறும்பாக) உன் வயதுதான் இருக்கும்.

மதி: ஏதேது! என்னைப் போலவே இருப்பான் என்று கூடக் கூறிவிடுவாய் போலிருக்கிறதே.

[வாலிபன் போக முயற்சிக்க, மதிவாணன் மீண்டும் தடுக்கிறான். மதிவாணனைத் தள்ளிவிட்டு வாசற்படி வரை செல்கிறான் வாலிபன். மதி வாணன் அங்கு பாய்ந்து சென்று அவனைப் பிடித்துத் தடுத்து...]

மதி: உட்காரடா தம்பி!

வாலி: (பதறி) இதேதடா தொல்லை. நான் போய்த் தீர வேண்டும்.

மதி: ஏனாம்? இங்கே புலியா, பாம்பா?

வாலி: பெற்றோர் கவலைப்பட மாட்டார்களா?

மதி: தத்தி விளையாடும் குழந்தையல்லவா நீ— உட்கார். (மிரட்டும் பாவனையில்) உட்கார்—இதோ பார், உன்னைப் பிடித்துக் கட்டிப் போட்டுவிடப் போகிறேன்.

[வாலிபனைச் சேர்த்துக் கட்டிப் பிடிக்க முயல் கிறான். வாலிபன் அவன் பிடியிலிருந்து தப்பித் துக் கொள்கிறான். ஓரளவு பயம் தோன்றுகிறது வாலிபன் முகத்தில்]

வாலி: சரி...சரி...நான் இருக்கிறேன். என்னைத் தொல்லை செய்யாதே.

மதி: இது நல்ல தம்பிக்கு அழகு! உட்கார்—சொல்லு, உங்கள் ராணி அகம்பாவக்காரியா?

வாலி: கயவர் கண்களுக்கு குமாரதேவி அப்படித்தான்.

மதி: வெளிநாட்டு வேந்தர்களை மதிப்பதே இல்லையாம்.

வாலி: குமாரதேவியைக் கொலுப் பொம்மையாக்கி விடலாம் என்று எண்ணும் கோமான்களை மதிப்பதில்லை—ராணி! புகழ்வர், மயங்குவதில்லை; அச்சமூட்டுவர், அரசியின் அலட்சியப் பார்வை அவர்களுக்கு அச்சமூட்டும்.

மதி: வாயாடி, வம்புக்காரி!

வாலி: என்றெல்லாம் வசைபாடுவர், வாதத்தில் தோற்றவர்கள்.

மதி: மகிழ்கிறேன் தம்பி! மகிழ்கிறேன். குமாரதேவி தான் எமது மன்னருக்கு ஏற்ற மங்கை.

வாலி: இவ்வளவு கூறிய பிறகுமா அந்தப் பித்தம்? சரி...நான் வருகிறேன்.

[எழுந்திருக்க மதி, வாலிபன் கரத்தைப் பிடித்துக் கீழே இழுத்து உட்கார வைத்து]

மதி: அதுதானே முடியாது. இன்று இரவு இங்கேதான் விருந்து. காலையில்தான் விடுதலை, உனக்கு.

வாலி: ஐயையோ! முடியாது, போய்த் தீர வேண்டும்.

[மதிவாணன் எழுந்து வாலிபன் கரத்தைப் பிடித்துத் தூக்கியபடி]

மதி: சரி, புறப்படு. உன் வீட்டுக்கே போவோம். எனக்கு அங்கு விருந்து.

வாலி: (கலக்கத்துடன்) இதேதடா சங்கடம். என்னுடன் வரக்கூடாது.

மதி: போக்கிரியடா நீ! நீயும் இங்கே இருக்க மறுக்கிறாய்; நானும் உன் வீட்டுக்கு வரக் கூடாது என்கிறாய். நான் என்ன, உன் வீட்டு விருந்தாளியாக வருவதற்குக்கூட யோக்யதையற்றவனா?

வாலி: (கொஞ்சும் முறையில்) ஐயய்யோ! தவறாக எண்ணி விட்டீரே! நான் விளக்கம் கூறுவதற்கு இல்லை. கோபிக்க வேண்டாம். நாளைய தினம் நானே இங்கு வருகிறேன்.

மதி: பாகுமொழிதான்! பசப்புக்காரா! இங்கு இன்றிரவு இருந்தால் என்ன?

[அரண்மனை மணியோசை. வாலிபன் அது கேட்டுத் திடுக்கிட்டு...]

வாலி: நாளைய தினம் என்னென்ன காரியம் என்று உத்தரவு தயாரிக்கும் நேரம். அரண்மனை மணி அதற்குத்தான்.

மதி: அரண்மனையிலே அடிக்கடி மணி அடிப்பார்கள்! உனக்கென்ன அதைப்பற்றி?

வாலி: எனக்குக் கடமை இருக்கிறதே! கவனித்தாக வேண்டுமே!

மதி: கடமை! ஊர்க் காவல் வேலையோ! இருந்தால் இங்கு இரு—இல்லையானால் உன் வீடு போகலாம் வா...

வாலி: என் நிலையறியாமல் பேசினால், நான் என்ன செய்ய முடியும்? (சற்றுக் கண்டிப்பாக) நான் போய்த்தான் ஆகவேண்டும்.

மதி: அதுதான் கூடாது.

[பழத் தட்டு, பலகாரத் தட்டுகளை எதிரே மேஜை மீது வைத்து, ஒரு ஆசனத்தில் வாலிபனைத் தள்ளி தானும் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு...]

மதி: சாப்பிடு! உம்...நெடு நேரமாகப் பேசிய களைப்பு உனக்கு. சாப்பிடு.

வாலி: பசியில்லை! தொல்லையாகி விட்டதே.

[மதிவாணன் ஒரு பழத்தை எடுத்து வாலிபன் வாயிலே திணிக்க முயல்கிறான்.]

சரி...சரி...நானே சாப்பிடுகிறேன்.

[வாலிபன் பழம் சாப்பிட...]

மதி: அடியாத மாடு படியாது என்பார்களே, சரியாகத்தான் இருக்கிறது. அதோ, அந்த மாதுளையை...

வாலி: போதும்.

மதி: பலாச்சுளை?

வாலி: மூன்று தின்றேனே!

மதி: அண்டப் புளுகன்—நான் அந்தத் தட்டிலே வைத்ததே மூன்று. அப்படியே இருக்க...

[வாலிபன் மேற்கொண்டு தகராறு செய்யாமல் சாப்பிட்டு, அவன் சாப்பிடுவதைக் கண்டு களித்த படி...]

மதி: உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

வாலி: ஏற்பாடாகி விட்டது. விரைவிலே நடைபெறும்.

மதி: பெண் எந்த நாடு...பால் சாப்பிடு...எந்த ஊர்? அழகியா?

வாலி: (பால் சாப்பிட்டுவிட்டு) விவரம் நாளையதினம் கூறுகிறேன். இதோ பார், நேரமாகி விட்டது.

மதி: தூக்கம் வருகிறதா இதற்குள்?

வாலி: கோபம் வருகிறது பிரமாதமாக.

[கவலையுடன் உலவுகிறான் வாலிபன். அவன் நிலை கண்டு மதிவாணன் ஆச்சரியமடைகிறான். வாலிபன் மதிவாணனைக் கோபமாகப் பார்க்கிறான் ஒரு கணம். மதிவாணன் பாசத்துடன் பார்க்கக் கண்டு வாலிபனின் கோபம் தானாகத் தணி

கிறது. அதைக் கண்டதும் மதிவாணன் புன்னகை புரிகிறான். அவன் நிலை கண்டு வாலிபன் வாய் விட்டுச் சிரித்தபடி...]

வாலி: என்ன செய்வதென்றே தெரியவில்லையே! என்னைப் போகவிடமாட்டீர்கள்?

மதி: ஊஹூம்...

வாலி: (பூமியில் காலை குழந்தைபோல உதைத்துக் கொண்டு) என்ன சங்கடம் இது! இதைக் கேளுங்கள்... நான்...நான்...

மதி: என்ன? சொல்லு...

வாலி: ஒன்றுமில்லை. பலரை நான் பரிதவிக்கச் செய் திருக்கிறேன். இப்போது நான் சிக்கிக்கொண்டு தவிக்கிறேன். பெண் புத்திதான் பின்புத்தி என்பார்கள்! என் புத்தியுமா அப்படி இருக்க வேண்டும்?

[வாலிபன் பலகணி வழியாக வெளிப்புறத்தைப் பார்க்கிறான். மதிவாணன் பின்புறம் சென்று, வாலிபன் தோளின்மேல் தன் கரத்தை வைத்து]

மதி: தம்பி! எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு பலமான யோசனை?

[மதிவாணன் தன் தோளின் மேல் கை வைத்ததும் வாலிபன் திரும்புகிறான், மதிவாணன் கரத்தைத் தள்ளியபடி—அவன் முகத்திலே ஒருவிதமான கூச்சம் தெரிகிறது. ஏதோ, முடிவு செய்தவனாகி வாலிபன் படுக்கையில் உட்காருகிறான்.]

மதி: (வெற்றிக் களிப்புடன்) அப்பா! இவ்வளவு பிடிவாதமா? சரி, படு. தூக்கம் வருகிற வரையில் பேசலாம்.

[வாலிபன் படுக்கையில் சாய்ந்து கொள்கிறான். மதிவாணன் விளக்கைக் குறைத்து விடுகிறான். வாலிபன் முகத்திலே இலேசாகத் திகில் உண்டா கிறது.அதைக் கண்ட மதிவாணன் மீண்டும் விளக்கைப் பெரிது ஆக்கியபடி...]

மதி: விளக்கொளி வேண்டுமா? சொல்வதுதானே! அதற்குள் ஏன் முகத்தை முக்கோணமாக்கிக் கொள்கிறே? (படுக்கையில் சாய்ந்தபடி) தம்பி! குமாரதேவியாரைத் திருமணம் செய்து கொள்ள எந்த மன்னரும் முயற்சி செய்யவில்லையா, இதுவரையில்?

[வாலிபன் கோபமாகப் படுக்கையில் உட்கார்ந்து, சலிப்புடன்...]

வாலி: அட, அடா! திருமணப் பேச்சுக்கு ஒரு அளவே கிடையாதா? 9 அரசர்கள், 16 சிற்றரசர்கள், 20 படைத் தலைவர்கள், குமாரதேவியாரைத் திருமணம் செய்து கொள்வதற்காகப் படை எடுத்து தோற்றுப் போனார்கள்—வரிசையாக அவர்கள் பெயரைக் கூறவா, விடிகிற வரையில்...

மதி: (சிரித்தபடி) சலித்து விட்டதா?

[அங்குமிங்கும் பார்த்துக் கோபமாக எழுந்து, அங்கே கிடந்த ஒரு இசைக் கருவியை எடுத்து, மதிவாணன் காதருகே கொண்டு போய், வாலிபன் வேகமாகவும், விடாமலும் வாசிக்க, மதிவாணன் சிரித்தபடி, வாலிபன் கரத்திலிருந்து இசைக் கருவியைப் பறித்துக் கீழே வீச...]

வாலி: எப்படி இருக்கிறது? இசைக் கருவிதானே! காது குடைகிறதல்லவா! அளவு அதிகம் அதனால்! அதே போலத்தான் இருக்கிறது உன் அன்புத் தொல்லை.

மதி: கெட்டிக்காரனடா நீ! அளவு அதிகமானதால் காது குடையவில்லை. உனக்கு அனுபவமில்லை, இசைக் கருவியை வாசித்து...

வாலி: (சிரித்தபடி) அதுவும் உண்மைதான். அனுபவம் இல்லை, இதுபோல்.

[வாலிபன் படுக்கையில் படுத்துக் கொள்ள, மதிவாணன் தாலாட்டு இசையை மெல்லிய குரலில் பாட, வாலிபன் கண்களை மூடியபடி இரசிக்கிறான். மதிவாணன் விளக்கின் ஒளியை மீண்டும் குறைக்கிறான். வாலிபன் மீண்டும் திகைக்கிறான்.

வாலிபன் படுக்கை அருகே செல்கிறான் மதிவாணன். வாலிபன் பதறி எழுந்து உட்கார்ந்து கொள்கிறான் படுக்கையில். மதிவாணன் சிரித்து விட்டு...]

மதி: வீராதி வீரன் போல் பேசுகிறாய்—ஏன் திகில்?

வாலி: (முகத்தில் அசடு வழிய) ஒன்றுமில்லை—போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்.

[மதிவாணன் சட்டையைக் கலைத்தபடி]

மதி: தம்பி! மேலங்கி, தலையணி — இவைகளைக் களைந்துவிட்டுப் படுத்து உறங்கு. கொடு (அருகே சென்று) மேலங்கியை.

வாலி: (மேலும் திகைத்து) வேண்டாம், வேண்டாம்!

மதி: ஏன்? என்னடா தம்பி! உன் போக்கே விசித்திரமாக இருக்கிறது.

[அருகே நெருங்கி வாலிபனின் மேலங்கியைக் களைய முற்பட, வாலிபன் பதறி, மதிவாணன் கரங்களை உதறியபடி.]

வாலி: தொல்லையாகிவிட்டது உங்கள் போக்கு. இனி நான் வெளியே போய்விடுவேன்.

மதி: (கொஞ்சும் முறையில்) வேண்டாம், வேண்டாம்! ...உன் இஷ்டம்போல், மேலங்கியுடனேயே படுத்துக் கொள். பிடிவாதக்காரன்.

[இருவரும் எதிர் எதிர் படுக்கையில் படுத்துக் கொள்கின்றனர். ஒருவர் அறியாமல் ஒருவர் பார்ப்பதும், தூங்குவதுபோலப் பாசங்கு செய்வதுமாக உள்ளனர். வாலிபன் போக்கு மதிவாணனுக்குச் சந்தேகத்தை உண்டாக்குகிறது. வாலிபன் கையை வீசிக் கொள்கிறான் காற்றுக்காக. ஆனால் மேலங்கியை களைய மறுக்கிறான். வாலிபன் முகத்திலே வியர்வை அரும்புகிறது. விசித்திரமான போக்காக இருக்கிறதே என்று மதிவாணன் யோசிக்கிறான்.]

வாலி: (மெல்லிய குரலில்) திருமணம் ஆகிவிட்டதா?

மதி: எனக்கா? இல்லை; இப்போது கிடையாது.

வாலி: ஏன்?

மதி: என் தங்கை திலகா திருமணம் முதலில். பிறகு தான் என் திருமணம்.

வாலி: இதுவரையில்—காதல்?

மதி: நேரமே கிடையாதடா தம்பி!

வாலி: அழகு மங்கையர் கிடையாதோ வேழநாட்டில்?

மதி: ஏன் இல்லை? அழகிகள் ஏராளம். நான் மயங்கு பவனல்ல.

வாலி: (கேலியாக) கலைஞன் என்கிறீர்?

மதி: ஆமாம். காமுகன் என்றா அதற்குப் பொருள்?

வாலி: பொருள் இல்லை; ஆனால் பெரும்பாலும் நட வடிக்கை...

மதி: கன்னியின் கடைக் கண்ணைக் கண்டதும் கருத்துக் குழம்பி விடுபவன், உண்மைக் கலைஞன் அல்ல — கலைஞனாக முடியாது.

வாலி: (கேலியாக) ஐயா! வேதாந்த வித்தகரே! போதும், அளவுடன் பேசும்—அழகிகளைக் கண்டால் நமது மனதிலே அலை மோதுவதே கிடையாதோ?

மதி: (தீர்மானமாக) கிடையவே கிடையாது.

வாலி: மலர் முகவதியின் மொழியும் விழியும்?

மதி: மன மயக்கத்தை அல்லடா தம்பி! கலை ஆர்வத்தைக் கிளறும்—முழு நிலவு கண்டால் களிப்புதானே!

வாலி: ஆமாம்...

மதி: நிலவைப் பிடித்து வந்து நமது கூடத்திலே விளக்காக்க வேண்டும் என்றா முயல்கிறோம். இல்லையல்லவா? பார்க்கிறோம் — மகிழ்கிறோம் — அதேபோன்ற மகிழ்ச்சி

தான் எனக்கு, அழகு மங்கையின் முக விலாசத்தைக் கண்டால்—புரிகிறதா?

வாலி: (சிரித்தபடி) ஏன் புரியவில்லை. புலமை வளமாக இருக்கிறது, தங்களிடம். அது நன்றாகப் புரிகிறது.

மதி: நம்பவில்லையா என் பேச்சை. பைத்யக்காரா! கருங்குழலிலே கார் மேகத்தைக் காண்கிறேன். இன்பவல்லிகளின் இசையிலே குயிலையும், ஆடலிலே மயிலையும், விழியிலே கெண்டையையும் காண்கிறேன்.

வாலி: காதலைத் தவிர மற்றதெல்லாம் காண்கிறீர்.

மதி: உண்மைதான்.

வாலி: யார் நம்புகிறது இதை? இசை இருக்கிறது, இனிமையாக.

மதி: எதற்கு? காதல் கீதம் பொழியத்தானா?

வாலி: (அவன் பதிலைக் கவனியாமல்) இளமை, அரசசபையிலே இடம் என்றாலும் காதல் கணையைக் கண்டதே இல்லை—நம்பவே முடியவில்லையே.

[மதிவாணன் எழுந்து வாலிபன் படுக்கை அருகே சென்றபடி]

மதி: (வேடிக்கையாக மிரட்டும் குரலில்) நம்ப...

வாலி: முடியவில்லை.

மதி: (அருகே நெருங்கி) முடியவில்லையா?

[வாலிபன் படுக்கையில் இருந்தபடி, சிரிப்பை அடக்க முயற்சித்தபடி, இல்லை என்று தலையசைத்து ஜாடை காட்ட, மதிவாணன் வாலிபனிடம் மிகவும் நெருங்கி அவன் தோளைப் பிடித்துத் தூக்க முயற்சித்துக் கொண்டே.]

மதி: நம்ப....முடியவில்லையா?

[வாலிபன் அவனைத் தள்ளி விட்டபடி...]

வாலி: நம்புகிறேன்...நம்புகிறேன்.

[மதிவாணன் மீண்டும் தன் படுக்கைக்குச் சென்று உட்கார்ந்தபடி வாலிபனைப் பார்க்க, அவன் புன்சிரிப்புடன் போர்வையை இழுத்து முகம் மறைகிற அளவுக்குப் போர்த்துக் கொள்கிறான். மதிவாணனும் படுத்துக் கொள்கிறான். சில விநாடிகள் இருவரும் பேசாமலிருக்கிறார்கள்.]

[மதிவாணன் கண்களை மூடிக் கொண்டதைக் கண்ட பிறகு, வாலிபன், தன் மேலங்கியை சிறி தளவு தளர்த்திக் கொண்டு ஒரு புறம் சாய்ந்து படுக்கிறான்...]

[வாலிபன் செயலை அவன் அறியாமல் கவனித்து வருகிறான் மதிவாணன். தலைப்பாகையை மெல்லக் களைந்துவிட்டு, சரேலெனப் போர் வையை இழுத்துப் போர்த்துக் கொள்கிறான், வாலிபன். மதிவாணன் சரேலென எழுந்து விளக் கைப் பெரிதாக்குகிறான். வாலிபன் திடுக்கிட் டுத் திரும்பிப் பார்க்கிறான். காற்று வீசுகிறது. மேல் போர்வை விலகுகிறது. வாலிபன் மிரட்சி யுடன் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொள்கிறான். மதிவாணன் தன் படுக்கை அருகே செல்வது போல் பாவனை செய்கிறான்...]

[ஆபத்து இல்லை இனி என்று சொல்வதுபோல வாலிபன் பெருமூச்செறிகிறான்.]

[வேகமாகத் திரும்பி, போர்வையை இழுத்து விடு கிறான் மதிவாணன். மேலங்கி பாதி அளவு கலை யப்பட்டிருக்கிறது. பயமேலிட்டு பதைக்கிறாள், ஆண்வேடமிட்ட பெண். ஆச்சரியத்தால் அவ ளையே உற்றுப் பார்க்கிறான், மதிவாணன், கண்களை அகலத் திறந்தபடி. அவன் முகத்திலே புன்னகை. அவள் முகத்திலே அச்சம், வெட்கம்— 'இப்படியா இருக்கிறது விஷயம்' என்று கேட்பது போலத் தலையை அசைக்கிறான் மதிவாணன். அரும்பு மீசையை எடுத்து எறிகிறாள் பெண்...]

மதி: (அன்பும் ஆச்சரியமும் கலந்த குரலில்) கள்ளி!

பெண்: (அச்சத்துடன்) மெள்ளப் பேசுங்கள்.

மதி: இன்பமே!

பெண்: அன்பரே!

[அருகே அமர்ந்த மதிவாணன் அவளைப் பார்க்கிறான். அவள் விழியிலும் அன்பு வழியக் கண்டு மெய் மறந்தவனாகி]

மதி: ஆருயிரே!

பெண்: என்னை மன்னிப்பீரா? சாகசக்காரி என்று எண்ணுகிறீரா? எவ்வளவோ முயன்று பார்த்தேன். என் அரசே! என் மனம் என் வசம் இல்லை.

மதி: எங்கெங்கோ தேடினேன் கலாதேவியே! கதிரவனைக் கண்டு களிக்கும் தாமரையில்,கார் முகிலைக் கிழித்து எழும் திங்களில், மலர் மணத்தை வாரி வழங்கும் தென்றலில், மலை உச்சியில், சிங்காரச் சிற்றூரில், எங்கெங்கோ தேடினேன்! காணவில்லை. இங்கே காண்கிறேன், என் கலா தேவியை.

பெண்: செந்தேன்—இதுநாள்வரை நான் கேட்டறியாத கீதம்.

மதி: இன்பமே! யார் நீ? உன் பெயர் என்ன?

பெண்: என் பெயரா! இசைச் செல்வரே! நான்...நான்

மதி: தயக்கம் ஏன், தங்கமே?

பெண்: என் பெயர் தங்கம்தான்...

மதி: எவ்வளவு பொருத்தமாக பெயரிட்டிருக்கிறார்கள் உன் பெற்றோர்!

பெண்: அரண்மனைத் தாதி!

மதி: வேடமிட்டு வந்த காரணம்?

பெண்: குமாரதேவியின் கட்டளைப்படி நான் மாறு வேடம் அ ிந்து ஊரார் போக்கை அறிவது வழக்கம். இன்று தங்களைக் கண்டேன். கடமையை மறந்தேன். காதலில் கட்டுண்டேன். என் செயலைக் கண்டு செல்வமே! சீரழிவான குணம் எனக்கு என்று எண்ணி விடுவீரா? என்னை நம்ப வேண்டும், மணியே! நான் மாசற்றவள்.

மதி: (இரு கரத்தைப் பெண் நீட்டியது கண்டு கரங்களைப் பற்றிக் கொண்டு) தங்கம்! என் வாழ்வின் விளக்கே! மன்னன் திருமண விஷயமாக வந்தேன்—காதல்மணம் எனக்குக் கிடைத்து விட்டது. கனியே! உன் பெற்றோரைக் கண்டு பேசி...

பெண்: சம்மதம் பெறுவது சுலபம் கண்ணாளா! ஆனால், இந்த விழா முடிந்த பிறகுதான் திருமணப் பேச்சு! விளக்கம் கேட்க வேண்டாம். நான் இனி உமது பொருள். என் வாழ்க்கைக்கு, நீரே இனி வழிகாட்டி. என் காதலைக் காணிக்கையாக்கிவிட்டேன். நான் யாராக இருப்பினும் செல்வமே! என்னால் தங்களுக்கு எவ்விதமான இன்னல் வந்தாலும் என்னை ஏற்றுக் கொள்ளும் உறுதி இருக்குமா?

மதி: ஆழ்கடலில், அலை நிரம்பிய கடலில், சுறாவுக்கும் சுழலுக்கும் இடையேயுள்ள முத்து எடுக்கும் தமிழ் இனம் நான், தங்கமே! உன் உள்ளத்தில் எனக்கு இடம் உண்டு என்று நீ கூறியான பிறகு, உத்தமி! படை பல வரினும், தடை பல நேரிடினும், கலங்குவேனா? உன்னை என்னிடமிருந்து பிரிக்கும் வலிமை கொண்டவர் எவரும் இருக்க முடியாது, என் கரத்தில் வாளும், கருத்தில் நீயும் இருக்கும் வரையில்.

பெண்: என்னைக் களிப்புக் கடலில் தள்ளாதீர், கண்ணாளா!

மதி: கலாதேவி! இனி நான் செய்ய வேண்டியது என்ன? கட்டளையிடு.

பெண்: கட்டளையா? நானா? நான் தங்களைக் கேட்டுக் கொள்வது ஒன்றே ஒன்றுதான்.

மதி: என்ன அது, இன்பமே!

பெண்: என்னை நானாகக் கூறுமுன், நான் யார் என்று அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டாம், சில நாட்கள்.

மதி: என் இன்பம் நீ! வேறு நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது? என் தங்கம் நீ! வேறு விளக்கம், நீயாகக் கூறினாலொழிய எனக்கு ஏன்?

பெண்: என் வீடு, எரிமலையின் உச்சியில் இருக்கக் கூடும்.

மதி: உன் வீடு, நாடு, எது? எங்கே? எனக்குத் தேவையில்லை அந்த விளக்கம். என் குடும்ப விளக்கு நீ—அவ்வளவு தான் எனக்குத் தெரியும்.

பெண்: இன்று இரவு முழுவதும் இப்படியே இருக்கத்தான் தோன்றுகிறது. ஆனால், கடமை கட்டளையிடுகிறது.

மதி: கட்டிக் கரும்பே! காதலும் ஒரு கடமைதானே! வாலிபர்கள் மீறக் கூடாத கடமை.

பெண்: ஆமாம்—ஆனால் கருத்துக் குருடர்கள் இதை அறிவதில்லை.

மதி: எனக்கென்னவோ அச்சமாகவே இருக்கிறது.

பெண்: அச்சமா? ஏன்?

மதி: எனக்கா இப்படிப்பட்ட பரிசு என்று எண்ணும் போது அச்சம்தான் உண்டாகிறது.

பெண்: பரிசு பெற்றவள் நான், குணாளா!

மதி: இல்லை, இல்லை! பரிசு எனக்குத்தான். கலை விழாவிலே பரிசு பெற வந்தேன். விழாவுக்கு முன்பே, பரிசு, இதோ எனக்கு.

[அவளை அருகே அழைத்து அன்புடன் பார்க்கிறான்.]

பெண்: இந்தப் பரிசு போதுமா அன்பே?

மதி: இதைவிட மேலான பரிசு ஏது குயிலே! இனி தான் என் கலை கனியப் போகிறது. என் வாழ்வே, இனி கலையாகப் போகிறது.

பெண்: செங்காய், கனியாவதற்குக் காலம் வேண்டுமல்லவா?

மதி: வேண்டும், கனியே!

பெண்: நமது காதல் கனிவதற்குக் காலம் தேவை—தாமதம் கண்டு அஞ்சக் கூடாது.

மதி: மனம் உடையும்படிப் பேசாதே, மலரே! என் நெஞ்சிலே நீ, உன் இதயத்திலே நான்! இது உறுதிதானே?

பெண்: உலகமே எதிர்த்தாலும் அசைக்க முடியாத உறுதி உயிரே!

மதி: நரை, திரை, மூப்பு மேலிடுகிற வரையில், காலதாமதம் ஆவதானாலும், காத்துக் கிடப்பேன் உனக்காக!

பெண்: என்னால் முடியாது கண்ணாளா, இவ்வளவு அன்பு மொழியைக் கேட்டுத் தாங்கிக் கொள்ள!

[அவன் மீது சாய்கிறாள்.]

மதி: துவளும் கொடியே! தூக்கிச் செல்கிறேன் உன்னை!

பெண்: எங்கே?

மதி: இன்ப உலகுக்கு! நமது உலகுக்கு.

[ஒரு கணம் இருவரும் மெய்மறந்து இருக்கிறார்கள்.]

பெண்: (திடுக்கிட்டு) நேரமாகிவிட்டது கண்ணாளா! தாதிகள் தேடுவர்—(தடுமாற்றத்துடன்) என்னோடு வேலை செய்யும் தாதிகள்...

மதி: அரசிக்கு காவலோ?

பெண்: ஆமாம். பணிவிடை செய்பவள்—சதா அரசியுடனேயே இருப்பேன். வேடிக்கையாகக் கேலிகூடச் செய்வார்கள். 'தங்கத்துக்கு என்னடியம்மா! தங்கமேதான் குமாரதேவி. குமாரதேவிதான் தங்கம்' என்றெல்லாம்.

மதி: இன்பமே! என் கலைத் திறனைக் கண்டு அரசி, பரிசு தர வருகிறபோது...

பெண்: வருகிறபோது...

மதி: குமாரதேவியாரே! நான் கேட்கும் பரிசு தர வேண்டும் என்று கூறுவேன்.

பெண்: (குமாரி பேசும் பாவனையில்) கேள், கொடுக்கப்படும். ஆனால் முறையும் நெறியும் அறிந்து கேள் (சொந்த முறையில் பேச்சு) என்று எங்கள் அரசி கூறுவார்கள். ஏனெனறால், சில பிடிவாதக்காரர்கள், ராஜ்யத்தில் பாதியும், அரசகுமாரியும் வேண்டும் என்றுகூடக் கேட்டு விடுவார்களல்லவா?

மதி: எனக்கு ஏன் புதிதாக ஒரு ராஜ்யம்—என் காதல் ராஜ்யத்துக்கு ராணியாக இருக்கும்படி தங்கத்தைத் தர வேண்டும்—நான் விரும்பும் பரிசு அதுதான் என்று கூறுவேன்.

பெண்: நான் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டு நிற்பேன்.

மதி: அரசி, உன்னைப் பார்த்துப் பூரிப்படைவார்கள்.

பெண்: தாதிகளெல்லாம் கேலி பேசுவார்கள்.

மதி: வெற்றி வீரனான நான், நான் விரும்பும் பரிசு பெற்று வீடு செல்வேன்.

பெண்: வீடு சென்று, திலகாவிடம் என்னைத் தருவீர்கள்.

மதி: அம்மா உன்னைக் கண்டதும்...

பெண்: கண்டதும்...

மதி: (தாயார் பேசுவது போல) 'வாடி, என் கண்ணே' என்று அன்புடன் கூறி...

[அவள் கரங்களைப் பிடித்து இழுத்து அணைத்துக் கொள்ளும் நிலையில்...]

அணைத்துக் கொண்டு, உச்சி மோந்து முத்தமிடுவார்கள்...

பெண்: அந்த நாள்தான், திருநாள்!

மதி: வாழ்விலோர் திருநாள்—

பெண்: (தயக்கத்துடன்) இனியும் இருப்பது முறையல்ல.

மதி: போகத்தான் வேண்டுமா, தங்கம்?

பெண்: கடமை! தவிர்க்க முடியாத கடமை!

மதி: சரி! பணியத்தான் வேண்டும் பாகுமொழியாளே. நாளை மாலை...

பெண்: நாளை மாலையும் இன்னும் நாலு நாட்களும், நான் இந்த இன்பத்தைப் பெற முடியாது. அரண்மனையிலே வேலை.

மதி: (உருக்கத்துடன்) நாலு நாட்கள்! நான் எப்படிச் சகிப்பேன்? நீ வரவேண்டாம். நான் வந்து காண்கிறேன். ஏதாவது ஒரு இடம் குறிப்பிடு. ஆமாம்...தங்கம்! கண்ணே! அரண்மனைத் தோட்டப் பக்கம் சந்திக்கலாமா? வருகிறேன்.

[மதிவாணன் முகவாய்க்கட்டையை அன்புடன் பிடித்துக் கொண்டு...]

பெண்: அங்கெல்லாம் என்னைக் காண முடியாது செல்வமே! அரசியைக் காண்பது என்றால் சுலபமான காரியமா?

மதி: இல்லை...முடியாதுதான்.

பெண்: அதே போலத்தான் என்னையும் பார்க்க முடியாது, நாலு நாட்கள்! நாலே நாலு நாட்கள்...

மதி: (பெருமூச்சுடன்) ஒரு நாளல்ல, இரு நாளல்ல, நான்கு நாட்கள்.

பெண்: நாலு நாட்கள், கண்ணாளா! (விரலை வேகமாகத் தட்டிக் காட்டியபடி) ஒன்று, இரண்டு, மூன்று, நாலு—நாலே நாலு நாட்கள்...பிறகு...

மதி: பிறகு...?

[பாசத்துடன் பார்க்கிறான். அவள் புறப்பட, மதிவாணன் கூடக் கிளம்புகிறான். அவள் வர வேண்டாம் என்று தடுக்கிறாள், ஜாடை மூலம்]

மதி: இருளாக இருக்கிறதே, தங்கம்! தனியாகச் செல்வதா?

பெண்: காதல் ஒளி வழி காட்டும் அன்பே! என் சொல்லைக் கேட்டாக வேண்டும்—என்னைத் தொடர்ந்து வர வேண்டாம்.

[மதிவாணன் ஏக்கத்துடன் நிற்கிறான். மேலங்கி, தலையணி, சட்டை ஆகியவைகளைச் சரிப்படுத்திக் கொண்டு வெளியே வருகிறாள் தங்கம்...]

காட்சி—62

இடம்: இன்ப நிலையத்தின் வெளிப்புறம்.

இருப்: குமாரதேவி, மதிவாணன்.

[மதிவாணன் குதிரை கொண்டு தர, அதன் மீதேறிக் கொள்கிறாள்...]

[நாலடி முன்னே சென்றதும் குதிரையை வேகமாகத் திருப்பி, ஏக்கத்துடன் நின்று கொண்டிருக்கும் மதிவாணன் கன்னத்தை அன்புடன் தட்டிவிட்டு குதிரையைத் திருப்பி, வேகமாகச் செலுத்திக் கொண்டு போகிறாள்...]

[குதிரை செல்லும் வழியைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு விடுதிக்குள் செல்கிறான்]

காட்சி—63

இடம்: இன்ப நிலையம்—உட்புறம்.

இருப்: மதிவாணன்.

[உள்ளே நுழைந்த மதிவாணன் கீழே கிடக்கும் அரும்பு மீசையைக் கண்டு களிக்கிறான். "இதுவே இன்ப மயம்" என்று மெல்லிய குரலில் பாடுகிறான்.]

காட்சி—64

இடம்: குமாரதேவியின் அந்தப்புரம்.

இருப்: குமாரதேவி, தோழியர்.

[அரண்மனையின் அந்தப்புரத்தில் ஆண் உடையைக் களைந்து எறிந்தபடி, பெண் உடை தரித்துக் கொண்டு...]

''இதுவே இன்ப மயம் இசை அரசே!
இனியே இன்ப மயம்''

[என்று மெல்லிய குரலில் பாடுகிறாள் குமாரி. தோழி செந்தாமரை, குமாரதேவியை ஆச்சரியத்துடன் பார்க்கிறாள்...]

காட்சி—65

இடம்: கலை விழா மண்டபம்—கூத்தரங்கத்துடன்.

இருப்: மதிவாணன், விழாத் தலைவர்.

நிலைமை: சோலை நாட்டிலே கலைவிழா நடைபெறுகிறது. இசை அரங்குகள், கூத்து மேடைகள், ஓவியக் காட்சிகள், பல நாட்டு நடனங்கள்...

மக்கள் திரள் திரளாகச் சென்று களிக்கிறார்கள். மதிவாணனின் இசை, விழாவினரைப் பெரிதும் மகிழ்விக்கிறது...

சோலை நாட்டுக் கலை விழாக் குழுத் தலைவரும், அவர் நண்பர்களும் கூடிப் பேசி, ''கலை மன்னன்'' என்ற விருது தருகிறார்கள் மதிவாணனுக்கு. மதிவாணன் அவர்களுக்கு வணக்கம் கூறி...

மதி: நன்றி, பெரியவர்களே! மிக்க நன்றி. இந்தப் பெருமை வேழ நாட்டுக்குரியது. எமது வேந்தன் வெற்றி வேலரின் கலை ஆர்வம் எனும் பேரொளியிலே வளர்ந்தது என் இசை. வேழ நாட்டுக்கு கலைத் துறையிலே பணி புரியும் பேறு எனக்குக் கிடைத்தது. என்னை இவ்வாண்டு கலை விழாவிலே ''கலை மன்னன்'' ஆக்கிய உங்கள் பெருந் தன்மைக்கு என் நன்றி.

விழாத் தலைவர்: என்ன பணிவு! என்ன பண்பு! கலை மன்னா வா!

காட்சி—66

இடம்: சோலை நாட்டுக் கொலுமண்டபம்
இருப்: குமாரதேவி, மதிவாணன்.

[மதிவாணன் அரசியின் கொலுமண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அருகே சென்று வணக்கம் கூறிவிட்டு, அரசியைப் பார்க்கிறான். அரசி, தன் தங்கமாக இருக்கக் கண்டு திடுக்கிடுகிறான். அவனால் நம்ப முடியவில்லை. ஆச்சரியத்தால் சிலை போல நின்று கொண்டு இமை கொட்டாது அரசியைப் பார்க்கிறான். சபையினர் சிறிதளவு அருவருப்படைகின்றனர். இந்தப் போக்கு கண்டு அரசி முதலிலே ஒரு விநாடி தன் ஆவலை வெளிப்படுத்தும் விழியுடன் காணப்படுகிறாள். மறு கணம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். அமைச்சர் அவளுடைய கையொப்பம் பெற, பரிசு பட்டயத்தை அரசியின் முன்காட்ட, அரசி, அதிலே தன் கையொப்பத்தை பொறித்துவிட்டு, பட்டயத்தைப் பெற்றுக் கொள்ளும்படி மதிவாணனை அழைக்கிறாள், தன் புன்னகையால். சொக்கிய நிலையிலிருந்து மாறாதவனான மதிவாணன் அரசி அருகே சென்று பட்டயத்தைப் பெற்றுக் கொண்டு மீண்டும் வணக்கம் செலுத்தி விட்டு நிற்கிறான். இருவரின் விழிகளும் சந்திக்கின்றன. நிலைமையைச் சரிப்படுத்த அரசி தீர்மானித்து...]

அரசி: மதிவாணரே! அரசிகளைக் கண்டதே கிடையாதோ, இதற்கு முன்பு—எப்போதும்?

மதி: (பூரிப்புடன்) கண்டதில்லை. தங்களைப் போன்ற தங்கக் குணம் படைத்த அரசிகளைக் கண்டதில்லை.

[தங்கம் என்ற சொல் கேட்டு ஒரு விநாடி குமார தேவிக்கு கூச்சம் தோன்றி மறைகிறது]

குமார: கலாவாணரே! உமது கலைத் திறமை கண்டு இந்நாடு களிப்படைகிறது.

மதி: புது மனிதனானேன், பாராட்டும் பரிசும் பெற்றதால்...

குமார: எமது விருந்தினராக சில நாட்கள் இருக்க...

மதி: உத்தரவு மகாரா ணி!

குமார: அன்பழைப்பை மறுக்க மாட்டீர்?

மதி: முடியுமா அரசியாரே?

[குமாரதேவி எழுந்திருக்க சபை கலைகிறது. மதிவாணனை ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் செல்கின்றனர்.]

[உபசாரத்துடன்...]

[அமைச்சரும் படைத்தலைவரும் வேறோர் பக்கம் சென்றபடி மெல்லிய குரலில் பேசிக் கொள்கின்றனர்...]

[மதிவாணன் சென்ற திக்கை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறாள் குமாரதேவி...]

[தோழி செந்தாமரை அரசியைக் குறும்பாகப் பார்க்கிறாள். அது கண்ட அரசி நிலைமையை உணர்ந்து கொள்கிறாள். இருவரும் அந்தப்புரம் நோக்கிச் செல்கின்றனர்...]

காட்சி—67

இடம்: கொலு மண்டபத்தின் வெளிப்புறம்

இருப்: அமைச்சர், படைத்தலைவன், புல

நிலைமை: கொலு மண்டபத்திலிருந்து புறப்பட்ட அமைச்சர், படைத் தலைவர் இருவரும் பேசிக் கொண்டு போகிறார்கள். மண் டபத்துக்கு வெளித் தாழ்வா ரத்தில் அமைச்சர், கோபமாகப் பேசும் படைத்தலைவரை குறும் பாகப் பார்த்தபடி...

அமை: அரசியின் அகமும் முகமும், கலைவிழாவால் புதிய ஒளி பெற்றதே! கண்டீரல்லவா?

ப.த.: பார்த்தேன், பார்த்தேன்—பித்தம் நிச்சய மாகத்தான்—பாடிப் பிழைப்பவன் வருகிறான்; பல்லிளிப் பதா பட்டத்தரசி

அமை: கலை வலையில் சிக்கி விட்டாள் கன்னி.

ப.த: நாட்டின் நிலை என்ன ஆவது? அரச குடும்பத் துக்கு உள்ள வரைமுறை என்ன கதியாகப் போவது? அமைச் சரே! இந்நாட்டின் கீர்த்திக்காக இரத்தம் கொட்டுவதற்கு நாம்—பாட்டுப் படுவான் ஒரு பராரி! அவனிடம் பரிவு காட்டுவாள் அரசி—இதென்ன நியாயம்?

அமை: நியாயமான கேள்விதான். ஆனால் என்னிடம் கேட்கிறீரே! நான் அறிவேன், உமது ஆற்றலை.

ப. த: குமாரதேவி கொடி கட்டி ஆள்வது, எனது வாளின் துணையால்—இசையால் அல்ல.

அமை: நான் மறுக்கவில்லை—மாவீரர் தாங்கள் என் பதை இந்த மண்டபமும் மறுக்கவில்லை.

ப. த: மணிமுடிகளை நான் விரும்பினால், மலர்ச் செண்டுகள்போல் எடுத்து விளையாட முடியும்.

காட்சி—68.

இடம்: அரசியின் தனி அறை.

இருப்: குமாரதேவி, மதிவாணன்.

நிலைமை: மதிவாணன் அலங்காரம் நிறைந்த தனி அறையிலே கவலையும் பீதியும் கொண்ட நிலையிலே இருக்கிறான். உட்புறக் கதவொன்று திறக்கப்பட்டு அரசி மெல்ல உள்ளே நுழைகிறாள். மதிவாணன் திடுக்கிட்டு எழுந்திருக்கிறான். அவனையுமறியாமல் மரியாதை உணர்ச்சி ஏற்படுகிறது. வணக்கம் செலுத்துகிறான். அவன் நிலை கண்டு அரசி கேலியாகச் சிரித்தபடி...

குமார: இதென்ன வேடிக்கை? கொலு மண்டபத்தில் காதலைப் பொழிகிறீர்—இங்கு தனி அறையில் தர்பார் பொம்மைபோலாகிறீர்.

மதி: குமாரதேவியாரே!

குமார: இப்படி அழைத்திருக்க வேண்டும் அங்கு.

[அவன் அருகே சென்று கரங்களைப் பிடித்துக் கொண்டு கனிவுடன்]

இங்கு குமாரி அல்லவா வந்திருக்கிறாள்—அரசி அல்ல—குமாரி, தன் மணாளனிடம்...

மதி: (உருக்கமாக) தங்கமே! தணலில் அல்லவா இருக்கிறாய்—இன்பமே! என்னை ஏன் சந்தித்தாய்? என் வாழ்வின் விளக்காகப் போவதாகக் கூறி என்னைப் பித்தனாக்கி விட்டாயே!

குமார: கண்ணாளா! என்ன கலக்கம்? என்மீது கோபமா? நான்தான் அரசி என்று கூறாததால் கோபமா? என் நிலைமை அப்படி—துரையே! நான் என்ன செய்வேன்?

மதி: நிலைமை! ஆமாம் தங்கமே! நாட்டை ஆளும் மகாராணி நீ—ஏட்டைத் தூக்கும் ஏமாளி நான்.

குமார: (பெருமிதத்துடன்) மகா கவி—மண்டலாதி பதிகள் போற்றிப் புகழத்தக்க மகா கவி!

மதி: தங்கம்?

குமார: என்ன கண்ணாளா?

மதி: இன்னமும் ஏன் அந்த இன்னமுது கொடுத்துக் கொல்கிறாய்? தங்கம்! எனக்கு விடை கொடு.

குமார: விடை கொடுப்பதா?

மதி: காதலே விஷமாகி விடும் முன்பு எனக்கு விடை கொடு தேவி—பாவி ஏன் வந்தேன், இந்த விழாவுக்கு? தங்கம்! குமாரதேவி! என் அன்பே! அரசாளும் ஆரணங்கே!

குமார: இதென்ன குழப்பம் கண்ணாளா—அரசியாக இருப்பதா தவறு?

மதி: தவறு அல்ல—பெரு நெருப்பு. நம்மைப் பிரித்து விடும் பெரு நெருப்பல்லவா? தங்கத்தை நான் பெற முடியும்; குமாரதேவியாரை...

குமார: குமாரதேவி நாட்டவருக்கு—மற்றவருக்கு—தங்களுக்கு நான் என்றும் தங்கம்தானே!

மதி: பாடிப் பிழைப்பவன் நான்—நாட்டுக்கரசி நீ—

குமார: அந்தக் குற்றத்தை மன்னித்து விடு குணாளா! நான் அரசி—ஆயினுமென்ன? ஒரு பெண்ணல்லவா?

மதி: வேந்தன் வெற்றிவேலன், என்னைச் சூதுக்காரன், துரோகி என்று தூற்றுவார். உன் நாட்டுத் தலைவர்களோ, ஊர் பேர் அறியாதவன், எப்படியோ அரசியின் மனத்தை மயக்கி விட்டான் என்று ஏசுவார்கள் தங்கம்!

குமார்: என் திருமணத் திட்டத்துக்குத் தடை போட யாருக்கும் அதிகாரம் கிடையாது.

மதி: சட்டத்தைவிட சம்பிரதாயம் பலம் பொருந்தியது தங்கமே!

[பேசிக் கொண்டே இருவரும் செல்கின்றனர்.]

காட்சி—69

இடம்: சோலைநாட்டு இயற்கை வெளி.

இருப்: மதிவாணன், குமாரதேவி.

நிலைமை: குமாரியின் முகம் மலர்ந்திருக்கிறது. மதிவாணன் முகத்திலோ இலேசாக மருட்சி தென்படுகிறது. அழகான இயற்கைக் காட்சிகள் உள்ளன. ஆடும் மயிலும், துள்ளியோடும் மானும் உள்ள சிங்காரச் சோலைகளின் வழியாகச் செல்கிறார்கள். தொலைவிலே உழவர் பாடிடும் இனிய ஒலி கேட்கிறது. ரசித்தவண்ணம் செல்கிறாள் குமாரதேவி.

மதி: என்ன சொல்லப் போகிறார்களோ தர்பார் வீரர்கள்—அரசிக்கு அடுக்குமா, இப்படி ஒரு கவிவாணனுடன் சரிசமமாகச் செல்வது என்று கூறுவர்—சிறுவர்.

குமார: கண்ணாளா! விசாரம் வேண்டாம்—காதல் பாதையிலே செல்லும்போது கவலை தரும் பேச்சே கூடாது. நான் கட்டளையிடுகிறேன்.

மதி: பட்டத்தரசிதானே! கட்டளையிட அதிகாரம் இல்லையா, என்ன?

குமார்: (மதிவாணனை கனிவாக பார்த்தபடி) காதல் ராஜ்யத்திலே உலாவுகிறோம் கண்ணாளா! அதோ பாருமே!

[தோகை விரித்து ஆடும் மயில்—துள்ளியோடும் மான்—இவைகளைக் காண்கிறான்.]

[குமாரி குதூகலத்துடன் பாடுகிறாள்; மதிவாண னும் இசையில் ஈடுபடுகிறான்.]

குமார: மானும் மயிலும் பெற்றிடும் காதல் மாதெனக் கில்லையா மன்னவா? மாதெனக்கில்லையா?

மதி: மாது நீ! எனினும் மணிமுடி அன்றோ தரித்திடும் நிலை பெற்றாய்.

குமார: மணிமுடி இருந்திடின் மனமதில் காதல் மல ருமே தோன்றாதோ, அதிலே மணமும் வீசாதோ?

மதி: மொழியால், விழியால், பழி வாங்கிடும் புது முறையில் வல்லவளே! என் ஆசைக் கிளியே! ஏது சொல் வேன்?

[கஞ்சிக் கலயம் எடுத்துக் கொண்டு செல்கிறாள் ஒரு மாது—ஓர் புறம்]

குமார: கஞ்சிக் கலயம் தாங்கி களிப்புடன் சென்றிடும் காரிகையைப் பாராய்.

மதி: அவள் காதல் கனிரசம் நாடி உழைத்திடும் கண வனைக் காண்பாயே! கழனியில் கணவனைக் காண்பாயே!

[உழவன் கழனியில் வேலை செய்வதைத் தேவிக்குக் காட்டுகிறான் மதிவாணன்.]

குமார: இன்னமுது எந்தன் காதல் என்று சொன்னீரே அன்று; இன்று ஏற்க மறுக்கும் விந்தையை எண்ணி என் சொல்வேன் நானே!

[மலர்த்தோட்டத்திலே ஒருவன் மலர் பறித்துக் கொண்டிருக்கிறான்.]

மதி: தேடிப் பறிக்கிறான் பார்—மலர்தனைத் தேடிப் பறிக்கிறான் பார்.

குமார: தேவனைத் தொழுதிடும் பக்தர் தமக்கே தரு வான் மலர்க்குவியல்.

மதி: ஆமாம்...

குமார: தருவான் மலர்க் குவியல்...

மதி: எனினும் தேடிச் சிறந்த மலர்களைச் சேர்த்தொரு செண்டும் கட்டி முடிப்பான்.

குமார: செண்டா?

மதி: மலர்ச்செண்டும் கட்டி முடிப்பான்—அவள் செந்தேன் தந்து பெறுவாள்—காதல் செந்தேன் தந்து பெறுவாள்.

குமார: அன்பு மலரை நான் அர்ப்பணித்திருக்கிறேன்—ஆகாது என்கிறீர் துரையே, ஆகாது என்கிறீர்.

மதி: அரண்மனை மலர்—அதில் ஆபத்து உண்டென்ற அச்சம்தான் கண்ணே! அச்சம்தான் கண்ணே!

குமார: கோழை நான் அல்ல கோமளமே! இந்தக் குவலயம் எதிர்த்தாலும் கொண்ட காதலை இழந்திட மாட்டேன் எனக் கூறினவரும் நீரே—முத்து இருக்கும் கடலுக்குள்ளே—மூலிகை இருக்கும் மலைக்கு மேலே—இருக்குமிடத்து இடர்பல கண்டு ஓடிடுவோர் உயர் பண்பினராகார்!

மதி: வென்றாய்—வென்றாய்—என் பயமதனைக் கொன்றாய்.

[பாட்டு முடிகிறது...]

குமார: கண்ணாளா!

மதி: வெற்றி பெற்று விட்டாய் குமாரி. இனி நான் உன் கைதி.

குமார: அதோ! சிறைச்சாலை.

[முதலில் அவர்கள் சந்தித்த விடுதிக்குள் செல்கின்றனர்...தொலைவிலிருந்து அவர்கள் போவதைக் கண்டுவிட்டுச் செல்கிறான் படைத் தலைவனின் ஆள்...]

காட்சி—70

இடம்: குமாரதேவியின் அரண்மனையில் ஓர்அறை

இருப்: படைத்தலைவன், அவன் கையாள்.

[படைத்தலைவனின் ஆள் படைத்தலைவனிடம் இரகசியம் கூற, படைத்தலைவன் அமைச்சரின் அறைக்குச் செல்கிறான் கோபமாக.]

காட்சி—71

இடம்: அமைச்சர் கூடம்

இருப்: படைத்தலைவர், அமைச்சர், குமார தேவி.

நிலைமை: அமைச்சர் கவலையுடன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். படைத்தலைவரைக் கண்டதும் அமைச்சர் தமது எதிரே கிடந்த பல ஓவியங்களை அலட்சியமாகத் தள்ளி வைத்துவிட்டு, படைத் தலைவரை அமரும்படி ஜாடை காட்டுகிறார். உட்காரு முன்பே பேசத் தொடங்குகிறார் படைத்தலைவர்.

படைத்தலைவர்: திருமணமே வேண்டாம். நான் கன்னியாகவே இருந்துவிடத் தீர்மானித்து விட்டேன், நாட்டின் நன்மைக்காக என்று பேசினதெல்லாம் வெறும் பசப்பு.

அமை: அவந்தி நாட்டரசனைக் கலியாணம் செய்து கொள்ளலாமே என்று கூறுவேன் நான். உடனே பயப்படுவது போலாகி, அமைச்சரே, அவந்தி நாட்டரசனுக்கும் அயோத்திக் கோமகனுக்கும் தீராப்பகை இருக்கிறதே, நான் அவந்தி மன்னனை திருமணம் செய்து கொண்டால், அயோத்தி அரசன் நமது நாட்டின்மீது போர்தொடுப்பானே! நாட்டுக்கு ஆபத்து ஏற்படுமே? என்று கூறி வாயை அடைத்தாகி விட்டது முன்பு.

ப.த: ஒரு முறையா, இரு முறையா அமைச்சரே! ஒவ்வொரு முறையும்தான் தோல்வி.

அமை: நாம்தான் மடத்தனமாக அரசியின் பசப்பு மொழிகளை நம்பித் தொலைத்தோம். ஏமாற்றப்பட்டோம், தந்திரத்தால் இருவரையும் ஏமாற்றிவிட்டார் அரசியார்.

ப.த: தந்தினம் பாடுகிறார்கள், இப்போது காதலர்கள், இன்ப நிலையத்தில். தைரியமாக, இசைவாணனுடன் சென்று இன்ப நிலையம் என்ற விடுதியில், சேச்சே, அமைச்சரே! எனக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது—எப்படி இதைச் சகித்துக் கொண்டிருக்க முடியும்? அனுமதிக்கலாமா? இந்த நாட்டை யார் மதிப்பார்கள்?

அமை: அதே கவலைதான் எனக்கும்!

ப.த: அறிவென்னும் அரண் அமைத்திருக்கிறீர், இந்த அரசுக்கு. காதல் கணை கொண்டு அரணைப் பிளக்கிறான் ஒரு பாடகன்.

அமை: ஆபத்தான விளையாட்டில் ஈடுபட்டிருக்கிற அரசியை...

ப.த: தடுத்து விடத்தான் வேண்டும். நாட்டின் கீர்த்தி, நமது கீர்த்தி நாசமாகலாமா? தலையா போய்விடும். போவதானால்தான் என்ன? தலை குனிந்து கொண்டு வாழ்வதை விடத் தலையை இழப்பது மேல். வீரமும் அதுதான்; விவேகமும் அதுதான்.

அமை: (விசாரத்துடன்) எடுத்துக் கூறுகிறேன் குமாரதேவியிடம்.

[வெளிப்புறமாக குமாரி செந்தாமரையைக் கூவி அழைத்தபடி செல்கிறாள்.]

குமார: செந்தாமரை! செந்தாமரை.

[என்று குதூகலமாகக் கூப்பிடும் குரல் ஒலி கேட்கிறது.]

ப.த: (மெல்லிய குரலில்) குமாரதேவி! வாரும், சென்று கடமையைச் செய்வோம்.

அமை: இப்போதா?

ப.த: (கேலியும், கோபமும் கலந்த குரலில்) திருமணத்திற்குப் பிறகா? புறப்படுமய்யா!

[இருவரும் கிளம்புகின்றனர்.]

காட்சி—72

இடம்: குமாரதேவியின் தனி அறை.

இருப்: குமாரதேவி, செந்தாமரை, அமைச்சர், படைத்தலைவர், பணிப் பெண்.

நிலைமை: குமாரதேவி சாய்வு வாகனத்தில் வீற்றிருக்கிறாள். தோழி செந்தாமரை குறும்பாகப் பார்த்துக் கொண்டே பேசுகிறாள்.

செந்தாமரை: எப்படி தேவி இருக்கிறது ஊர்?

குமார: திருவிழாக் கோலமடி செந்தாமரை! எங்கும் அழகும் அன்பும் தாண்டவமாடுகின்றன.

செந்: ஆடாமல் என்ன?

குமார: கேலியா செந்தாமரை! மனதிலே மகிழ்ச்சி துள்ளி விளையாடும்போது, உலகம் உல்லாச கூடமாகத் தான் மாறிவிடுகிறது.

[பணிப் பெண் வருகிறாள்.]

பணி: அமைச்சரும்—படைத்தலைவரும்!

குமார: (ஆச்சரியமடைந்து) வருகிறார்களா! இங்கா?

பணி: அனுமதி கோரி நிற்கிறார்கள் அங்கு.

குமார: (முகம்மாறி) வரச்சொல், செந்தாமரை! புயல் கிளம்புகிறது.

[பணிப்பெண் வெளியேறுகிறாள். படைத்தலைவரும் அமைச்சரும் வருகிறார்கள்...அமரும்படி சைகை காட்டுகிறாள் குமாரி. அமருகிறார்கள் அவர்கள். இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடி]

குமார: கவலையுடன் இருக்கக் காரணம்? படைத் தலைவர் முகம் பயங்கரமாக இருக்கிறது. ஏதாவது பகை மூண்டு விட்டதா?

படைத்: மூண்டுவிடும் என்ற பயம்தான் அரசியாரே! கூறும் அமைச்சரே!

அமை: தேவி! கோபங் கொள்ளாமல் இருக்க வேண்டும், நாங்கள் கூறப்போவது கேட்டு. அம்மணி! மதிவாணன் கலைச் செல்வன்—எனினும் அவனிடம் தாங்கள் இவ்வளவு பாசம் காட்டுவதும்...

படைத்: ஊர் பார்க்கும்படி அவனுடன் உலவச் செல்வதும், பேசி மகிழ்வதும், துளியும் சரியில்லை.

குமார: உங்கள் அரசி, சரசக்காரி என்று பழிசுமத்துவார்கள் ஊரார் என்றுதானே பயப்படுகிறீர்?

அமை: பொறுப்பான பதவியில் உள்ளவர்களுக்கு அந்தப் பயம்தானே பொன்னாபரணம்.

குமார: பயப்பட வேண்டாம்—ஊரார் உள்ளம் மகிழும் வண்ணம் நடந்து கொள்ளத் தீர்மானித்து விட்டேன். அமைச்சரே! மதிவாணரை திருமணம் செய்து கொள்வது என்று தீர்மானித்துவிட்டேன்.

படைத்: ஆபத்தான தீர்மானம், அரசியாரே! அசட்டுத்தனமான முடிவு—

குமார: அமைச்சரே! படைத்தலைவரே! வீண் வாதங்கள் வேண்டாம். மிரட்டலுக்கு அஞ்சுபவளல்ல நான். அதே போல மிரட்டி உங்களைப் பணிய வைக்கவும் விரும்ப மாட்டேன். திருமணம்—என் சொந்த விஷயம். என்வாழ்க்கைக்கு ஒளி தேடும் உரிமை எனக்கு உண்டு. இதிலே குறுக்கிடும் அதிகாரம் உங்களில் யாருக்கும் கிடையாது.

படைத்: இந்த நாட்டின் நலத்திலே நாட்டங் கொண்டவர்கள் நாங்கள்—தங்கள் திருமண விஷயமாகக்கூட யோசனை கூற உரிமை கொண்டவர்கள்தான், அரசியாரே!

குமார: என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பும் மனதிலே இருக்கும்போது, படைத்தலைவரே! நிச்சயமாகத் தங்கள் மேலான யோசனையைக் கேட்பேன். இந்த விஷயமாக, தெளிவாக, திட்டமாக முடிவுக்கு வந்தாகி விட்டது. (திட்டமாக) நான் கூற வேண்டியது அவ்வளவுதான்.

[எழுந்திருக்கிறாள். இருவரும் எழுந்து செல்கிறார்கள். படைத்தலைவன் கோபமாகச் செல்கிறான். அமைச்சரின் முகம் சோகமாக இருக்கிறது. அவர்கள் சென்றபிறகு சோர்வடைகிறாள்குமாரி. செந்தாமரை அவளைத் தாங்கிக் கொள்கிறாள்.]

செந்: பூங்கொடியே! புயலின் ஆரம்பமே கடுமையாக இருக்கிறதே! என்ன செய்வது?

குமார: (பரிதாபம் நிரம்பிய கண்களுடன்) செந்தாமரை! அவருக்குத் தெரியக் கூடாது, இந்த அமளி. அச்சம் அதிகரிக்கும் அவருக்கு—புயலை வெல்ல வேண்டும்.

காட்சி—73

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—குளிக்கும் இடம்.

இருப்: வெற்றிவேலன், பணியாள், அமைச்சர்.

நிலைமை: மன்னன் நீராடுவதற்காக அமைக்கப்பட்ட அழகிய சிறு செயற்கைத் தடாகம். குளத்துக்கு நீர் நிரப்ப யானை முக அமைப்பு. துதிக்கை வழியாக நீர் குளத்திலே விழுகிறது. மற்றோர் பக்கம் பெண் சிலை, கரத்தில் தட்டை ஏந்தியபடி அமைக்கப்பட்டிருக்கிறது. தட்டிலே, பரிமளப் பொடிக் கலயங்கள் உள்ளன. படிக்கட்டுகள் அழகுற உள்ளன. நாலு தாதிகள் அழகிய குடங்களில் பன்னீர் நிரப்பிக்கொண்டு வந்து குளத்திலேகொட்டுகிறார்கள்—பணியாள் உடல் துவட்

டும் துணியைக் கொண்டு வரு கிறான். தாதிகள் பன்னீர் நிரப் பக் கண்டு...

பணி: அன்ன நடைன்னு எந்தப் புலவனோ எழுதித் தொலைச்சாலும் தொலைச்சான், இதுக என்னடான்னா, ஒரு வேலையச் செய்து முடிக்க இவ்வளவு நேரமாகுது.

[தாதிகள் குறும்பாக அவனைப் பார்த்துவிட்டு நடக்க, அவன் அவர்களிடம் சற்றுக் கடுமையா கப் பேசுவதுபோல பாவனை செய்து]

பணி: சரிதான்—அன்ன நடை போட வேண்டாம். வேலை ஆகட்டும் சுருக்கான்னா, இதுக ஆமை நடை போடு துக.

[அவர்கள் போன பிறகு...]

சும்மாவா, தெரியாமலா எழுதினாங்க புலவருங்க, அன்ன நடைன்னு...பார்க்கப் பார்க்க அழகாத்தான் இருக்கு—நடையும், உடையும்—உம்...

[பெருமூச்செறிகிறான். வெளிப்புறமிருந்து வெற்றி வேலனின் குரல் கேட்டு திடுக்கிட்டு.]

பணி: அடடா! அவர்தான்!

[பரபரப்படைகிறான். இரண்டு பணியாட்களுடன் வெற்றிவேலன் வருகிறான். மேலங்கியைக் களைந்தபடி. பணியாள் ஒருவன் அதை வாங்கி வைத்துக் கொள்கிறான், அடக்கத்துடன். குளத்தில் இறங்கி நீராடுகிறான். ஒரு பணியாள் மன்னனுக்கு உடல் தேய்த்து விடுகிறான். வெற்றி வேலன் களிப்புடன் இருக்கிறான். அவன் களிப் பாக இருப்பதால் பணியாளும் களிப்பாகவே இருக்கிறான். திடீரென்று வெற்றிவேலன், இடி முழக்கமிடுவது போன்ற குரலில்...]

வெற்றி: மடயன்! அமைச்சர் எங்கே?

பணி: அவர்...அவர்...

வெற்றி: என்னடா அவர்...

[உடல் தேய்க்கும் ஆளைப் பார்த்து]

என்னடா செய்கிற இப்போ? என்ன இது? உடல்தானே!

பணி: (பயந்து) ஆமாங்க.

வெற்றி: இதைப் புண்ணாக்கிவிடவா வந்திருக்கிறே?

பணி: என்னங்க...

வெற்றி: கையைக் காட்டுடா இப்படி...

[பயத்துடன் கையை நீட்ட அதைத் தடவியபடி]

சனியன்! இப்படிக் கரடு முரடான கரத்திலே தேய்த்தா!

[வெளியே நிற்கும் பணியாளைப் பார்த்து...]

வெற்றி: ஏண்டா அறிவற்றவனே! தோட்ட வேலைக்கும் இவனேதானா?

பணி: ஆமாங்க.

வெற்றி: அவனேதான் இங்குமா?

[பணியாள் பயத்துடன் தலையசைக்க...]

போடா, போதும்.

[தேய்த்துக் கொண்டிருக்கும் பணியாள் வெளியே செல்கிறான். பயத்தால் படிக்கட்டிலே நழுவி, மீண்டும் குளத்திலே விழ, கடுங்கோபம் கொண்ட வெற்றிவேலன் அவன் முதுகிலே அடித்து...

வெற்றி: எருமைகள்...இவனை...

[பணியாள் போகிறான்—வெளியே உள்ள பணியாளைப் பார்த்து...]

போடா, போய்க் கொண்டுவரச் சொல்லு சீக்கிரம்.

[பணியாள் ஓடுகிறான்—வெற்றிவேலன் தண்ணீரை வாரி வாரி இறைத்துக் கொள்கிறான். பணியாள் பலகாரத் தட்டுடன் வருகிறான்... அதைக் கண்டு வெற்றிவேலன் கோபங்கொண்டு

வெற்றி: புத்தி துளிகூடக் கிடையாது...போய், இன்றைய ஓலைகளைக் கொண்டுவரச் சொல்லுடா, அமைச்சரை, அறிவிலி—(பணியாள் ஓட) பலகாரம் கொண்டு வருகிறான் பலகாரம்...

[பணியாள் ஓடும் போதே பலகாரத்தில் ஒரு துண்டு எடுத்துப் போட்டுக் கொள்கிறான்...]

[மீண்டும் திடீர் யோசனை கொண்டவனாகி]

டேய்!...

[பணியாள் நிற்கிறான்.]

கொண்டு வாடா தட்டை.

[பணியாள் கொண்டு வருகிறான், வாய் திறவாமல். பலகாரத் தட்டைக் கவனியாமல்.]

என்னடா இருக்கு, பலகாரம்?

[பணியாள் பேச முடியவில்லை—வேந்தன் கோபமாக]

நீட்டடா இப்படி...

[பணியாள் நீட்ட, ஒரு துண்டு எடுத்து வாயில் போட்டுச் சுவைத்தபடி...]

போதும்....ஓடு! அழைத்து வா, அமைச்சரை!

[பணியாள் பெருமூச்சுடன் போகிறான். போகும் தருவாயில், அமைச்சர் வந்து சேருகிறார். முகத்தில் கவலைக் குறிகளுடன்]

வெற்றி: என்ன சேதி, இன்று?

அமை: (தயக்கத்துடன்) வேந்தே, சோலை நாட்டி விருந்து ஓலை...

வெற்றி: (களிப்புடன்) வந்ததா ஓலை—மதிவாணன் இசையிலே மட்டுமல்ல, ராஜ தந்திரத்திலும் கெட்டிக்காரன். அப்போதே தெரியும் எனக்கு!

அமை: அரசே!

வெற்றி: ஏன், என்னய்யா அழுகுரல்? ஓலையிலே என்ன எழுதியிருக்கிறான்? குமாரதேவியைக் காணவே முடிய வில்லையாமா?

அமை: கண்டிருக்கிறான் வேந்தே!

வெற்றி: (ஆவலாக) கண்டு...

அமை: காதகன்!

வெற்றி: (ஆத்திரம் எழும்பிய நிலையில்) காதகனா! யார்? என்ன இது இழுப்புப் பேச்சு—என்ன சேதி சொல் லும்...

[குளத்தின் நடுவிலே எழுந்து நிற்கிறான்.]

[அமைச்சர் ஓலையைத் தருகிறார் வேந்தனிடம். வேந்தன் அதை வாங்கி அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு, முகம் கடுமையான நிலையில் வெளியே எழுந்து வந்தபடி...]

வெற்றி: துரோகி! அடுத்துக் கெடுக்கும் அற்பன்! எவ்வளவு நெஞ்சழுத்தம்! (கோபமாக உலவியபடி) சித்ர வதை செய்கிறேன் சிறுமதியாளனை—ஊர் திரும்பட்டும்! திருமணமாம் திருமணம். அவள் அறிவுச் சூன்யம்! அரசியாம் அரசி! கலை வலையில் வீழ்ந்துவிட்டாள், கருத்துத் தெளி வற்றவள்—மலரைப் பறித்து வரச் சொல்லி மந்தியை அனுப் பினேன். நான் ஒரு மடையன்—யாரங்கே...

[பணியாட்கள் இருவர் ஓடிவருகின்றனர்.]

போய் இழுத்து வாருங்கள் மதிவாணனின் தாய், தங்கையை!

அமை: (நயமாக) வேண்டாம், வேந்தே! அந்த வானம் பாடி மீது தாங்கள் போர் தொடுப்பது அழகாய் இராது. எங்களிடம் விட்டு விடும். அவனை அழித்துவிட தக்க சமயம் இதுவல்ல...

வெற்றி: ஏன், நால்வகைப் படைகளுடன் இங்கு வரப் போகிறானோ?

அமை: நாடோடி வேந்தே அவன். அதை அறியாத வனா நான். நான் கூறுவது வேறு...

வெற்றி: என்ன அந்த வேறு—வேறு!

அமை: இப்போது அவனைத் தண்டித்தால் இழிவாக ஏளனமாகப் பேசுவர், விவரமறியாத பாமர மக்கள். நமது மண்டலத்தில் மட்டுமல்ல, பல நாடுகளிலும், பாடகனாம் ஒருவன், பட்டத்தரசி அவனைக் காதலித்தாளாம்! பொறாமை கொண்ட வேந்தன் பாடகனைப் படுகொலை செய்து விட்டாராம் என்று பரிகாசமாகப் பேசுவர்.

வெற்றி: உண்மைதான். பெரிய தியாகி ஆகிவிடுவான்.

அமை: மேலும், தங்கள் காதல் திட்டத்தை, பாடிடும் பராரி ஒருவன் தகர்த்து விட்டான் என்று வெளியே தெரிவது நல்லதா?

வெற்றி: கேலி பேசுவர் பலரும்—இலவு காத்த கிளி என்பார்கள்.

அமை: அதனால்தான் வேந்தே, கூறுகிறேன். துரோகியைத் தண்டிக்க இது சமயம் அல்ல. இந்தக் காரணத்தைக் காட்டித் தண்டிப்பதும் அழகாக இராது. அலட்சியமாக இருந்து விடும் அரசே! ஆதரவுகூடத் தருவதாகக் கூறும்—அசடன்தானே! பூரித்துப் போவான். பொன்னான சமயம் வருகிறபோது, துரோகியைத் தொலைத்து விடலாம்.

['அதுதான் சரி' என்று முடிவுக்கு வந்தவனாகி வெற்றிவேலன் தலையை அசைக்கிறான்.]

காட்சி—74

இடம்: சோலைநாட்டில், காட்டாற்றின் ஓரம்.

இருப்: மதிவாணன், குமாரதேவி.

நிலைமை: அரசி மதிவாணனுடன் கல்லணை கட்டப்பட்டு இருக்கும் காட்டாற்றின் பக்கம் சென்று கொண்டிருக்கிறாள்.

மதி: குமாரி! வெற்றிவேலர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

குமார: வாழ்த்துச் செய்தியா? வேந்தன் பெருங் குணம் படைத்தவராகத்தான் இருக்கிறார்.

மதி: நான் ஊர் சென்று...

குமார: ஏன் இதற்குள்?

மதி: மன்னனிடம் நேரிலே கூறவேண்டாமா? தாய், திலகா இவர்களிடம் பேசி மகிழ வேண்டாமா?

குமார: மகிழ்ச்சியில் மூழ்கி என்னை மறந்து விடப் போகிறீர்.

மதி: எப்படி முடியும் இன்பமே!

[இருவரும் பாசமாகப் பார்த்துக் கொள்கின்றனர்]

குமார: மறந்தே போனேன். இன்று ஆயுதக் கிடங்கை பார்வையிட வேண்டும். அமைச்சர் காத்துக் கொண்டிருப் பார்.

[இருவரும் கிளம்புகின்றனர்.]

காட்சி—75

இடம்: வல்லியூரில் சோமநாதன் மாளிகை—உட்புறம்.

இருப்: முத்துமாணிக்கம், மருத்துவர், நண்பன்.

நிலைமை: முத்துமாணிக்கம் உடல் நலமான நிலையில் இருக்கிறான். என்றாலும் சோகமாகவே காணப்படுகிறான். மருத்துவரும் அவர் நண்பரும், அவனுடன் காணப்படுகிறார்கள்.

முத்து: (சோகமாக) ஐயோ! நான் சாவதை ஏன் தடுத்தீர்கள்? இந்த வாழ்வும் ஒரு வாழ்வா?

மருத்துவர்: உன்னைக் காப்பாற்ற நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல முத்து—அதிலும் இவருடைய உதவிக்கு ஈடாக எதையும் சொல்ல முடியாது.

நண்பன்: (முத்துவை நன்றாக உற்றுப் பார்த்தபடி) முத்து, பழைய முத்துவேதான். சந்தேகம் துளியும் வேண்டாம். என் சாமர்த்தியம் முழுவதும் உபயோகித்திருக்கிறேன்.

முத்து: (சலித்து) சாமர்த்தியம்! செத்திருக்க வேண்டிய என்னைப் பேசும் பிணமாகச் செய்துவிட்டிருக்கிறீர்.

நண்: உன் மனதிலேதான் முத்து, இப்படிப்பட்ட குழப்பம், பயம், சந்தேகம் இருக்கும். முத்துமாணிக்கம் பழைய முத்துமாணிக்கமேதான். உலகிலே எவருக்கும், உன் திலகாவுக்கும்கூட...

முத்து: (தலையிலடித்துக் கொண்டு) ஐயோ, ஐயோ! அவள் பெயரைச் சொல்ல வேண்டாம். என் கனவு, அந்தக் காதல், நான் தீண்ட முடியாத தேவி திலகா!

நண்: பைத்யக்காரா! திலகாவைத் திருமணம் செய்து கொள்வதிலே என்ன தடை? என்ன ஆபத்து?

முத்து: (கோபமும், வெறுப்பும் கொண்டவனாகி) திலகாவைத் திருமணம் செய்து கொள்வது? யார்?...நான்! எவ்வளவு கடினமனமய்யா உனக்கு! அந்தப் பூங்கொடி, புழுத்துப் போன எனக்கா? வேண்டாம்—வேண்டாம். இனியொருமுறை சொல்ல வேண்டாம். திலகா! என் இன்பக் கனவு. நான் இழக்கத்தான் வேண்டும், என் திலகாவை.

நண்: வீண் சஞ்சலம்—காரணமில்லாத பயம்...

முத்து: (ஆத்திரமாக) உனக்குத் தெரியாது நான் திலகாவிடம் கொண்டுள்ள காதலின் மகிமை. அவளை மகிழ வைப்பதைத் தவிர, அவளுக்கு பெருமை தேடித் தருவதைத் தவிர வேறு வேலையும் வேண்டாம் எனக்கு என்று இருந்தவன் நான்.

நண்: அந்த எண்ணத்தை இப்போதும் கைவிடத் தேவை இல்லையே!

முத்து: உயிர் கொடுத்த உத்தமர்களே! இதுபற்றி இனிப் பேசவேண்டாம். மனம் பதறி நான் ஏதாகிலும் பேசி விடுவேன். நன்றி கெட்டவன் என்று சொல்வீர்கள் பிறகு. வேண்டாம்—என்னை வேதனைக்கு ஆளாக்க வேண்டாம்.

மருத்: உன் இஷ்டம்போலச் செய் முத்து...

[மருத்துவர் நண்பரைப் பார்த்துவிட்டு வெளியே செல்கிறார்.]

முத்து: (உருக்கமாக) திலகாவை நான் இழந்து விடுவதுதான், திலகாவுக்கு நான் செய்யக் கூடிய உதவி. என் காதல் உத்தமமானது என்றால், அதுதான் செய்ய வேண்டும் நான்.

[இதயத்தைத் தொட்டுக் காட்டியபடி...]

திலகா எப்போதும் இங்கு இருப்பாள்.

[முத்துமாணிக்கத்தை நண்பர் அன்புடன் பார்க்கிறார். முத்துமாணிக்கம் கண்ணில் தோன்றிய திவலையைத் துடைத்தபடி உருக்கமாக...]

எப்போதும் இங்கு இருப்பாள்—திலகா! என் இதய வீணை அவள்.

நண்: சித்திர நடை போதும்—இன்று வருகிறாள் திலகா! இங்கு.

முத்து: (பயந்து) திலகாவா! இங்கா?...ஐயோ! ஏன்?

நண்: (கேலியாக) ஏன்? என்ன கேள்வி கேட்கிறாய் முத்து?

முத்து: (பதறி) அவள் இங்கு வரக் கூடாதே! நான் அவளைப் பார்க்க மாட்டேன். முடியவே முடியாது. நான் எங்காவது ஓடிவிடுகிறேன். உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.

நண்பர்: (அவனைத் தட்டியபடி) பைத்தியக்காரா! பதறாதே! திலகாவின் காதலைத் துச்சமாக எண்ணாதே!

[மருத்துவர் வருகிறார்.]

மருத்: திலகா! தோட்டத்தில்...

முத்து: (ஆவலாக) தோட்டத்திலா? உண்மையாகவா? பார்த்துப் பல நாளாகிவிட்டது. திலகா! திலகா!...

[தயக்கத்துடன் நிற்கிறான்.]

நண்: பயப்படாமல் போ முத்து.

[முத்துமாணிக்கம் நண்பனைப் பார்க்கிறான். அவன் நிலை கண்டு நண்பன் பரிதாபப்படு கிறான்...]

என்னை நம்பு முத்து—போ!

[முத்து தயக்கத்துடன் செல்கிறான்.]

காட்சி—76

இடம்: முத்துமாணிக்கம்—மாளிகைத் தோட்டம்

இருப்: முத்துமாணிக்கம், திலகா.

நிலைமை: தோட்டத்திலே திலகா அவன் வரு கைக்காக ஆவலுடன் இருக்கிறாள். தொலைவிலே அவளைப் பார்த்ததும் ஆவலாக ஓடுகிறான் முத்து...

முத்து: திலகா! திலகா!

[என்று கூறியபடி—திலகா ஆவலுடன் அவன ருகே ஓடி வருகிறாள். கரங்களைப் பற்றிக்கொள் கிறாள்.]

திலகா: ஆருயிரே! என்னை மறந்து விட்டீரா?

முத்து: நானா? உன்னை மறப்பதா! அப்பா இறந்த பிறகு இங்கே பல தொல்லை. அதனாலேதான்.

திலகா: என்னைக் காண வரவில்லை. ஆனால் சேதி அனுப்பக் கூடவா முடியவில்லை...

முத்து: (உருக்கமாக) என்னை மன்னித்துவிடு திலகா! என்னை மறந்துவிட முடியுமா திலகா?

[திலகாவின் முகம் திகிலடைகிறது.]

திலகா: (தழதழத்த குரலில்) என்ன சொல்லுகிறீர் இன்னுயிரே, என்ன சொல்கிறீர்?

முத்து: (உருக்கமாக) வேடிக்கைக்கு கேட்டேன் கண்ணே! இவ்வளவு நாளாகி விட்டதே என்று கேட்டேன்.

திலகா: கேட்கத் துணிந்ததே உமக்கு.

[முத்து அடிக்கடி வேறு பக்கமாகப் பார்க்கிறான்—திலகா வேறு பக்கம் பார்க்கும்போது அவளைக் கண்டு பெருமூச்செறிகிறான். அவளைக் காணும் போது புன்னகை. அவள் காணாதிருக்கும்போது கலக்கம்...ஒரு பெரிய மரத்தடியில் இருவரும் உட்காருகின்றனர்.]

காட்சி—77

இடம்: முத்துமாணிக்கம் மாளிகை—உட்புறம்.

இருப்: நண்பன், மருத்துவர்,

நிலைமை: பலகணி வழியாக மருத்துவரும், நண்பரும் பார்க்கிறார்கள். மருத்துவரின் முகம் மலருகிறது. நண்பன் முகம் சுளித்துக் கொள்கிறான்.

நண்: பெருந்தவறு செய்து விட்டேன்.

[தன்னையுமறியாமல் கூறிவிடுகிறான். மருத்துவர் திடுக்கிட்டு...]

மருத்: என்ன சொன்னீர்? அந்தக் காட்சியிலே சொக்கிப் போயிருந்தேன். உமது பேச்சைக் கவனிக்கவில்லை.

நண்பன்: (சமாளித்துக் கொண்டு) ஒன்றுமில்லை.

காட்சி—78

இடம்: முத்துமாணிக்கம் மாளிகைத் தோட்டம்

இருப்: திலகா, முத்துமாணிக்கம், இளமங்கை, வயதான ஒரு மாது.

நிலைமை: திலகா, முத்துவின் முகத்தைத் தன் கரங்களிலே எடுத்துத் தன் முகத்தருகே கொண்டு போகும்போது, சாமர்த்திய மாக முத்து விலகிக் கொள்கிறான்.

திலகா: (குறும்பாக) தவசியாரே! இன்னும் எவ்வளவு காலம் இந்தத் தபோவனத்தில்...

முத்து: (திணறியபடி) வேலை நிரம்ப இருக்கிறது. திலகா! வந்து விடுகிறேன் விரைவில்.

[ஏதோ கூச்சல் கேட்டு இருவரும் திடுக்கிட்டு கூச்சல் வந்த பக்கம் சென்று பார்க்கிறார்கள்...]

[வயதான ஒரு மாதும், இளமங்கையும் வருகிறார்கள். மங்கையைத் துரத்திப் பிடிப்பவள்போல வயதான மாது வருகிறாள்...]

வ.மாது: கண்ணே! வேண்டாம்டி...இதோ பாரம்மா!

[இளமங்கையை திலகா பிடித்து நிறுத்துகிறாள். இளமங்கை கண்ணீர் விடுகிறாள். வயதான மாதும் வந்து சேருகிறாள்.]

திலகா: என்னம்மா, என்ன?

வ.மாது: கொழுந்தை என் மக. உயிரைப் போக்கிக் கொள்ளப் போறேன்னு ஓடி வருது. நல்ல வேளை, நீங்க தடுத்து நிறுத்தினீங்க.

திலகா: (இளமங்கையைப் பார்த்து) ஏன்? சாகத் துணிந்த காரணம் என்ன? (வயதான மாதைப் பார்த்து) என்னம்மா தகராறு?

வ.மாது: என்ன தகராறு கிளம்பும்! கல்யாண விஷய மாத்தான்.

இ.மங்கை: (ஆத்திரமாக) கல்யாணமாம், கல்யாணம். என்னைப் படுகுழியிலே தள்ள ஏற்பாடு செய்துவிட்டு, பசப்பிப் பேசறியா? கேளம்மா நியாயத்தை—எனக்கு என்ன குறை? பெரிய அழகி இல்லை. ஆனா அவலட்சணமா நான், என்னை ஒரு நொண்டிக்குக் கல்யாணம் செய்து கொடுக்க?

திலகா: (திடுக்கிட்டு) நொண்டிக்கா?

[முத்துமாணிக்கம் கலக்கமடைகிறான்.]

திலகா: (ஆத்திரமாக) எப்படி அம்மா மனம் இடங் கொடுத்தது, ஒரு நொண்டிக்கு இவளைக் கல்யாணம் செய்து தர? உலகம் பழிக்குமே என்கிற பயம்கூட இல்லையா? நொண்டியைக் கல்யாணம் செய்து கொண்டு, பாவம், அவ மானத்தை சகித்துக்கொண்டு இருக்க வேணுமா?

வ.மாது: (பயத்துடன்) சொத்து கொஞ்சம் இருக்குது. கால் நொண்டி ஆனாலும், மனுஷரு தங்கமானவர்—குண சாலி.

திலகா: (கோபமாக) குணசாலி! நாமோ நொண்டி, நமக்கு ஏன் கல்யாணம்? நம்மைக் கல்யாணம் செய்து கொண்டா எந்தப் பெண்ணுக்குத்தான் மனம் நிம்மதி யாக இருக்கும். அவ புருஷன் நொண்டி, ஒரு கால் கிடை யாது! இப்படித்தானே பல பேர் ஏளனமாகப் பேசுவாங்க. நம்மாலே ஒரு பெண்ணுக்கு இழிவும் பழியுமா கிடைக்க வேணும். சேச்சே! கல்யாணமே வேண்டாம்னு தீர்மானம் செய்திருந்தா, அந்த ஆள் தங்கமானவர், குணசாலி! புத்தி யில்லாத காரியம் செய்யாதே! குருடு, முடம், நொண்டி, ஊமை, இதுகளுக்கெல்லாம் கல்யாணம் வேறயா?

வ. மாது: (தன் மகளைப் பார்த்து) வாடி கண்ணு, வா! சத்யமா அந்த நொண்டிக்கு நான் உன்னைத் தரமாட் டேன்.

[இளமங்கை மகிழ்கிறாள். இளமங்கையைப் பார்த்து]

அப்படி ஏதாவது மறுபடியும் இந்த அம்மா ஏற்பாடு செய்தா இதோ இவர் இருக்காரே!

[முத்துமாணிக்கத்தைப் பார்க்கிறாள். அவன் வெகுதூரம் சென்றுவிட்டிருக்கக் கண்டு...]

சரி! போய்வாம்மா!

[என்று கூறிவிட்டு முத்துமாணிக்கத்தைத் தொடரு கிறாள்—திலகா வயதான மாதிடம் பேசிக் கொண்டிருந்த சமயம் முத்துமாணிக்கம் வேத

னைப்படுகிறான். பேசாமல் செல்கிறான், தன்னை மறந்து. திலகா ஓடிவந்து முத்துமாணிக்கத்தின் கரத்தைப் பிடித்து...]

இதென்ன கள்ளன்போல...

[என்று கேட்டுக் கொண்டே திலகா, முத்து கண்ணீர் வடித்தபடி இருக்கக் கண்டு கலங்கி...]

கண்ணாளா! என்ன இது?

முத்து: (சமாளித்தபடி) ஒன்றுமில்லை திலகா! நம் திருமணத்தைக் காண அப்பா இல்லையே என்ற விசாரம்.

திலகா: கண்ணாளா! எதையோ மறைக்கிறீர்.

முத்து: (புன்னகையை வருவித்துக் கொண்டு) ஒன்றுமில்லை, திலகா! இன்னும் பத்து நாளில் வந்து சேருகிறேன். புறப்படு கண்ணே! நேரமாகிறது. துணைக்கு யார்?

திலகா: தும்பை வந்திருக்கிறாள் அங்கே.

முத்து: இங்கே எனக்கு ஒரு அவசரமான அலுவல்!

திலகா: பத்து நாட்களில்...

முத்து: ஆமாம் திலகா!

['போய் வரவா' என்று ஜாடையாகக் கேட்கிறாள். அவளுடைய கரங்களை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டு உருக்கமாக...]

முத்து: போய் வா, திலகா!

[திலகா செல்கிறாள். அவள் செல்லும் திக்கை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டே நிற்கிறான் முத்து, சில கணம். பிறகு தள்ளாடி நடந்து செல்கிறான். அவன் செவியில்...]

குருடு, முடம், நொண்டி, ஊமை இதுகளுக்கெல்லாம் கல்யாணம் வேறு, கல்யாணம்!

[என்று திலகா கூறிய சொற்கள் செவியில் விழுந்த வண்ணம் இருக்கின்றன. நண்பன் வருகிறான் எதிரே.]

நண்: தங்கச்சிலை, திலகா! நான் இவ்வளவு அழகி என்று எண்ணவில்லை.

முத்து: திலகா, எப்போதும் போலத்தான் என்னிடம் நடந்து கொண்டாள்.

நண்: அவளுக்கு என்ன தெரியும் உன் நிலைமை?

முத்து: துளியும் தெரியவில்லை. ஆனால் என் மனம் தான் படபடவென்று அடித்துக் கொண்டது. என் முகத்தை தன் முகத்தருகே கொண்டு போனாள். அப்போது நான் பட்ட வேதனை...

நண்: பார்த்தேன், பலகணி வழியாக...

[முத்துவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி...]

உண்மையாகவே அபூர்வமான வெற்றிதான் எனக்கு. துளியும் தெரியவில்லை...

[முத்துவின் முகத்தில் மலர்ச்சியில்லை.]

நீயோ, நானோ, மருத்துவரோ கூறினால் உண்டு; தானாகத் தெரிந்து கொள்ள முடியாது திலகாவால்.

முத்து: (பதறி) ஆனால், தெரிந்து விட்டால்?

நண்: பதறுவாள்! பாவி, பாதகா என்று தூற்றுவாள். என்னையும் கூடத்தான். உலகம் உன்னையும் ஏசும்; என்னையும் ஏசும். திலகா, திகைத்துப் போவாள்.

முத்து: (அழுகுரலில்) நண்பா! அப்படிப் பேசாதே. என்னால் தாங்க முடியாது.

நண்: அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா வேதனையை? எப்படி உலகிலே உலவுவாள். உலகம் என்ன எண்ணும்? நினைத்தாலே பயமாக இருக்கிறது.

முத்து: (பதறி) உண்மை! உண்மை! ஓராயிரம் தடவை கூறினேன் நான். தடுத்தாய், என் வாதத்தை.

நண்: ஆமாம்...இன்றுதான் உண்மையை உணர முடிந்தது.

முத்து: (நண்பனின் போக்கு கண்டு திடுக்கிட்டுப் போகிறான். நண்பனைப் பிடித்துக் குலுக்கியபடி) என்ன செய்வது நான்?

நண்: திலகாவை மறந்துவிடு.

[முத்து பதறுகிறான் ஒருகணம். மறுகணம் சமாதானமாகி...]

முத்து: திலகாவை மறந்து விடத்தான் வேண்டும். என்னைக் கணவனாகக் கொண்டு உலகிலே அவள் எப்படி உலவ முடியும், பூரிப்புடன்? பெருமையுடன்? இழிசொல் தானா என் இன்பவல்லிக்கு நான் வாங்கித் தரும் பரிசு? வேண்டாம், வேண்டாம். அவள் வாழ வேண்டுமானால் நான் அவளை இழக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை.

[கீழே சாய்கிறான் மயக்கமுற்று. நண்பன் அவனை ஏந்திக் கொள்கிறான். வீட்டுக்குள் மெள்ள அழைத்துச் செல்கிறான்.]

காட்சி—79

இடம்: முத்துமாணிக்கம் மாளிகை—உட்புறம்.

இருப்: முத்துமாணிக்கம், பணியாள்.

நிலைமை: முத்துமாணிக்கம் ஒரு ஆசனத்தில் அமர்ந்து ஆழ்ந்த யோசனையில் ஈடுபடுகிறான். அவன் மனக்கண்முன் நொண்டியைக் கல்யாணம் செய்துகொள்ள வற்புறுத்திய வயதான மாதை திலகா கண்டித்துப் பேசிய காட்சி தோன்றி மறைகிறது. கண்களை மூடித் திறக்கிறான். திலகாவுடன் இன்பமாக ஓடி ஆடிய காட்சிகள் பலவும் தோன்றுகின்றன.

முத்து: என் ஆயுள் பூராவும் இந்தக் காட்சிகளைக் கண்டு களிப்பேன்.

[ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவனாகி.]

யாரங்கே?

[பணியாள் வருகிறான்]

இனி திலகா இங்கு வந்தால் பார்க்க முடியாது என்று கூறி விடு கண்டிப்பாக.

[பணியாள் திகைக்கிறான்.]

திலகா அனுப்பியதாக யாராவது வந்தாலும் தயவு தாட்சண்யம் வேண்டாம்.

[திகைத்தபடி பணியாள் வெளியே செல்கிறான்.]

காட்சி—80

இடம்: வெற்றிவேலன் அரண்மனையில் ஓர் கூடம்.

இருப்: வெற்றிவேலன், மரகதம், துணை அமைச்சர்.

நிலைமை: வெற்றிவேலன் தன் தனி அறையில் கவலையுடன் உலவுகிறான். துணை அமைச்சன் உடனிருக்கிறான். வெற்றிவேலனின் சிறு பெண் விளையாடிக் கொண்டே வருகிறது.

மரகதம்: அப்பா! மாமா வரப் போகிறாராம்! சொல்லவே இல்லையே எனக்கு—உனக்குத் தெரியாதா?

வெற்றி: (குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு) தெரியும் மரகதமணி.

மர: (அவன்போல் காட்டி) ஏன் சொல்லல்லே அப்பா! தலைவலியா? முகம் ஏன் இப்படி இருக்கு?

வெற்றி: வேலை அதிகம். போ மணி! போய் விளையாடு.

மர: விளையாடமாட்டேன்—அப்பா! எனக்கொண்ணு வேணும்பா—தரமாட்டாயா?

வெற்றி: சொல்லம்மா, தராமலிருப்பேனா?

மர: (கொஞ்சும் குரலில்) மாமா வருதே இப்போ...

வெற்றி: மாமா மாமான்னு அடிக்கடி சொல்லாதே அம்மா! நீ இந்த ராஜா மக—இல்லையா? மதிவாணன் நம்ம ராஜாங்கத்திலே வேலை செய்கிறவன்தானே?

மர: (முகத்தைச் சுளித்தபடி) வேலை செய்தா? மாமா தான். மாமாவை மாமான்னுதான் கூப்பிடுவேன்!

து. அமை: குழந்தைதானே, அப்படித்தான் பேசும்.

மர: ஏம்பா! மாமாவைக் கலியாணம் செய்துக்கபோற அக்கா, ஒரு ராணியாமே.

வெற்றி :ஆமாம்...ஆமாம். அதனாலே என்னம்மா? உனக்கு என்ன வேணும், சொல்லு. வேலை இருக்கிறது; போகணும்.

மர: அப்பா! ஒரு கிரீடம் கொடு அப்பா!

வெற்றி: கிரீடமா?

து. அமை: விளையாடுது...குழந்தைதானே?

[பணியாள் வருகிறான்.]

வெற்றி: (அரசன் கோபமாக) இளவரசியை அழைத்துக் கொண்டு போ உள்ளே.

மர: அப்பா, கிரீடம்.

வெற்றி: சனியனை இழுத்துக்கொண்டு போயேண்டா, மரமே!

[பணியாள் மரகதமணியை இழுத்துக் கொண்டு போகிறான்.]

காட்சி—81

இடம்: மதிவாணன் மாளிகையின் உட்புறம்

இருப்: மதிவாணன், திலகா, கற்பகத்தம்மாள்.

நிலைமை: மதிவாணன் வருகிறான். தாயும் திலகாவும் அன்புடன் வரவேற்கிறார்கள்.

திலகா: அண்ணா!

மதி: அம்மா! ஏன் சோர்வு?

திலகா: சோர்வா! அம்மாவுக்கா? அப்பா இல்லையே உனக்குத் திருமணம் நடப்பதைப் பார்க்க என்கிற கவலை தான்!

மதி: திலகா! போதுமா இவ்வளவு ஆபரணம்?

திலகா: போ அண்ணா! கேலிதான் எப்பவும்—அண்ணா! அண்ணி என்ன என்ன நகை போட்டிருக்கா—சொல்லு.

மதி: பாரம்மா! வந்த வழியிலே என்னென்ன கண்டே? எவ்வளவு கஷ்டம்? இதையெல்லாம் கேட்கல்லே! நகை என்ன போட்டிருக்கா அண்ணி—இது தெரிய வேணும் முதலிலே. இப்படி ஒரு நகைப் பைத்யம் இருக்கே.

திலகா: சொல்லு அண்ணா—வைரமாலை இருக்கும்—முத்துவடம் நிச்சயமாய் இருக்கும்—ராஜாத்தியாச்சே! அண்ணிக்கு இதெல்லாம் கூடவா இருக்காது?

கற்: ராஜாத்தியாச்சேடாப்பா மதிவாணா! கோபம், முடுக்கு இப்படி இருக்காளா ஒரு வேளைன்னு எனக்குச் சந்தேகம்—பயம்...

மதி: தங்கமான குணமம்மா குமாரிக்கு. அரசியாக இருந்தாலும், அன்பும் அடக்கமும் கொண்ட குணவதி.

கற்: குணம்தானேடாப்பா முக்கியம்.

மதி: குணத்தைக் கண்டுதானம்மா நானும் சொக்கிப் போனேன். நான் போய் வேந்தரைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

திலகா: அவர் இல்லையே இங்கே. வன போஜனத்துக்குப் போயிருக்கிறார்.

மதி: (சிறிது கவலையுடன்) அப்படியா? நான் வருவது பற்றி ஓலை அனுப்பினேன். சரி, அரண்மனைக்குப் போய் மரகதமணியைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

[வெளியே செல்கிறான்.]

காட்சி—82

இடம்: வெற்றிவேலன் அரண்மனையில் ஓர் கூடம்.

இருப்: மரகதமணி, மதிவாணன்.

நிலைமை: குழந்தை மரகதமணி மதிவாணனைக் குதூகலமாக வரவேற்கிறாள். குழந்தையைத் தூக்கி முத்தமிடுகிறான் மதிவாணன்.

மர: மாமா! மாமீ கருப்பா, சிவப்பா?

மதி: தங்க நிறம் கண்ணு.

மர: (கேலியாக) ஐயையே...மஞ்ச நிறமா?

மதி: மணி! இன்னும் ஒரு பத்து வருஷம் ஆனா நீ குமாரி போலத்தான் இருப்பே.

மர: மாமீ! உன்னைப் போல பாடுவாளா?

மதி: என்னைப் போலவா?

மரக: மாமா! எனக்கு உன் பாட்டுத்தான் உயிரு. மாமிக்குப் பாடத் தெரியுமா?

மதி: ஓ, தெரியுமே!

மர: மாமீ பாடற பாட்டு ஒண்ணு பாடு மாமா.

மதி: மாமி பாடற பாட்டா? அடடா, தெரியாதே எனக்கு.

மர: புளுகு! இவ்வளவு நாளா மாமியோட அரண்மனையிலே இருந்து விட்டு வர்ரே—ஒரு பாட்டுக்கூட மாமி சொல்லிக் கொடுத்திருக்காது? பாடு, மாமா!

மதி: என்னடா இது—சங்கடம்.

மர: பாடினாத்தான் இன்னிக்கு நான் சாப்பிடுவேன்; இல்லையானா பட்டினிதான்.

மதி: ஐயய்யோ! வேண்டாம்.

மர: அப்படியானா பாடு.

[மதிவாணன் பாட ஆரம்பிக்கிறான்.]

[மரகதமணி பாடலைக் கேட்டு மகிழ்கிறாள். குழந்தையை முத்தமிட்டுவிட்டு வெளியேறுகிறான்.]

காட்சி—83

இடம்: அரண்மனைத் தாழ்வாரம்.

இருப்: இரண்டு பிரமுகர்கள்

நிலைமை: மதிவாணன் அரண்மனையை விட்டு வெளியே சென்று கொண்டிருக்கும்போது இரண்டு பிரமுகர்கள் பேசுகையில் தன் பெயர் குறிப்பிடுவது கேட்டு அப்படியே நின்று கவனிக்கிறான் மதிவாணன்.

ஒருவர்: ஒரு ராஜ்யத்துக்கு இவள் அதிகாரி. எத்தனை ராஜாக்கள் இருக்கிறார்கள் திருமணம் செய்து கொள்ள. இவள் இந்த தரித்திரப் பயலை மணம் செய்து கொள்வதா? அந்தஸ்துக்கு ஏற்ற அறிவு இருக்க வேண்டாமோ? இல்லையே, இந்தக் குமாரியிடம்...

இன். ஒரு: நாட்டிலே பெரியவர்கள் இல்லையா, அவ ளுக்கு அறிவு புகட்ட!

ஒரு: மயக்கிவிட்டான் மதுர கீதத்தால்.

இன். ஒரு: பாம்பும் படமெடுத்து ஆடுமாமே-இசையின் இனிமையிலே சொக்கி விடுமாமே!

ஒரு: புலி கூடத்தான்! அது சரி, ஆனால் இவள் அரசி அல்லவா? பாம்பு புலி போலவா? சேச்சே!

[இவர்கள் பேசக் கேட்டு மதிவாணன் கலக்கமடை கிறான். காதுகளைப் பொத்திக் கொள்கிறான். வெளியே வேகமாகச் செல்கிறான்.]

காட்சி—84

இடம்: வீதி

இருப்: முதியவர், வாலிபன்.

நிலைமை: வெளியே வீதியில் ஒரு வாலிப னும் முதியவரும் பேசிக் கொள் கிறார்கள். அவ்வழி வந்த மதி வாணன் உற்றுக் கவனிக்கிறான், அவர்கள் அறியாமல்...

முதி: எனக்கும் செந்தேனாகத்தான் தம்பி இருக்கிறது. ஆனா...

வாலி: என்ன பெரியவரே! ஆனாவும் ஆவண்ணாவும்

முதி: அரசி—அந்த அம்மா...

வாலி: ஆமாம், அதனாலே என்ன?

முதி: ராணியோட புருஷனே தவிர, ராஜா இல்லே பாரு. வித்தியாசம் புரியுதா? ராணி ஒரு பஞ்ச வர்ணக் கிளி யையோ, பச்சை மயிலையோ ஆசையோட வளர்த்தா எப்படியோ, அதுபோலத்தான் மதிவாணனை கலியாணம் செய்து கொள்வதும்.

வாலி: உனக்கு வீணான பயம். மதிவாணனை எந்த மண்டலமும் மதிக்கும்.

முதி: உண்மையான அறிவாளிங்க அந்தஸ்துக்குத் தர மாட்டாங்க மதிப்பு. ஆனால் உலகம் என்ன, அறிவாளிங்க மட்டுமா இருக்கிற இடம்? ஒண்ணுக்கு ஆயிரம் இருக்குமே தம்பி, ஓட்டை ஒடிசலுங்க.

வாலி: ஆமாம்.

முதி: அதற்குத்தானே இப்ப காலம்.

வாலி: ஆமாம் பெரியவரே.

முதி: அதைத்தானே சொல்றேன். அன்பை அபிஷேகிக் கலாம் ராணி அம்மா. ஆனா, மதிவாணன் அரண்மனையிலே வேலை வெட்டி இல்லாத ஆளாகத்தான் இருக்க வேணும்.

வாலி: அது ரொம்ப வேதனையான நிலைதான் பெரிய வரே! ரொம்ப வேதனை...

முதி: அதிலேயும், ரோஷக்காரருக்கு வேதனை...

வாலி: தாங்க முடியாது.

['தாங்க முடியவில்லை' என்று கூறுவது போலத் தலையை ஆட்டிக் கொண்டு கலக்கமடைகிறான் மதிவாணன்.]

காட்சி—85

இடம்: வெற்றிவேலன் வனபோஜன விடுதி
இருப்: வெற்றிவேலன், துணை அமைச்சர்.
நிலைமை: வனபோஜன விடுதியில் வெற்றி வேலனும் துணை அமைச்சரும்.

வெற்றி: நல்ல யோசனை! அப்படித்தான் அவமானப் படுத்த வேண்டும்.

து. அமை: நான் ஏற்பாடு செய்கிறேன் வேந்தே! ''நையாண்டி நாடகம்'' — வேதனை தாள முடியாது மதி வாணனால்.

வெற்றி: வேடிக்கையாகக்கூட இருக்கும். நாடகம் முதல் தரமானது. ஏற்பாடு செய்துவிடு.

து. அமை: விருந்து வைத்து நாடகம் நடத்தவேண்டும்.

வெற்றி: ஆமாம். விருந்து வைத்தால் ராஜ்யப் பிரமுகர்கள் எல்லோரும் வருவார்கள். அவர்கள் எதிரிலே அவமானப் படட்டும் அற்பன்.

[சந்தோஷமாக இருவரும் உலவுகிறார்கள்.]

காட்சி—86

இடம்: வெற்றிவேலன் அரண்மனையில் விருந்து மண்டபம்—நாடக அரங்கு.

இருப்: வெற்றிவேலன், அமைச்சர், மதிவாணன்.

நிலைமை: வேந்தன் வெற்றிவேலன், அமைச்சர், மதிவாணன் முதலியோர் மற்ற விருந்தினர்களுடன் குழுமியிருக்கின்றனர். அரங்கில் பொம்மலாட்டம் நடைபெறுகிறது.

பொம்மலாட்டத்தின் கருத்து (பாடல்)

ராணி ஒருத்தி பிரியமாக ஒரு கோணங்கியை அரண்மனையில் வைத்துக் கொண்டிருக்கிறாள்.

சதி.

திடீரென்று ராணிக்கு மூளைக் கோளாறு.

ஏன்! எப்படி ஏற்படுகிறது மூளைக் குழப்பம்?

குதிரைமீதிருந்து கீழே விழ்ந்து விட்டாள். மண்டையிலே பலமான அடி. மூளை கலங்கிப் போகிறது.

சபாஷ். சரியான காரணம். பிறகு?

கோணங்கியைக் கலியாணம் செய்து கொள்கிறாள்.

பேஷ்.

கோணங்கி ஊரெல்லாம் சென்று பெருமையடித்துக் கொள்கிறான்.

வெளியூரிலிருந்து ஒரு வைத்தியர் வருகிறார். மூலிகை தருகிறார். மூளைக் கோளாறு போய்விடுகிறது.

ராணிக்கு.

ஆமாம். உடனே கோணங்கியை அடித்துவிரட்டுகிறாள்!

கோணங்கி என்ன செய்கிறான்?

'நான் உன் கணவனல்லவா?' என்று கதறுகிறான்.

கதறும்போது ராணி ஏளனம் செய்கிறாள்.

''கோணங்கி நீ! ராணி நான். எனக்கு ஏற்றவனா நீ!'' என்று பரிகாசம் செய்து அடித்து விரட்டுகிறாள் அவனை.

ஊராரும், 'அதுதான் சரி' என்று கூறி, கோணங்கியை அடித்துத் துரத்துகிறார்கள் அல்லவா?

ஆமாம்.

[பொம்மலாட்டம் முடிகிறது. மதிவாணன் வேதனையால் கோபமடைகிறான். துணை அமைச்சர் கவனியாதவர் போலிருந்து விடுகிறார்]

மதி: புரிகிறது அமைச்சரே! நன்றாகப் புரிகிறது. நாடகம், அதன் நோக்கம், எல்லாம்—

து. அமை: (திடுக்கிட்டவன் போலாகி) மதிவாணரே! என்ன ஒரு மாதிரியாகப் பேசுகிறீர்?

மதி: சித்ரவதை செய்யப்படுகிறேன்—என்னால் தாங்க முடியாது இவ்வளவு இழிவை, ஏளனத்தை.

[துணை அமைச்சர் குறும்பாகப் பார்த்தபடி]

து. அமை: எனக்கொன்றும் விளங்கவில்லை. வேதனை ஏன் உமக்கு?

மதி: பட்டத்தரசியை இந்தப் பாவி மணம் புரிந்து கொண்டால் சித்ரவதைதான் கிடைக்கும் பரிசு.

[வேதனையுடன் வெளியே ஓடுகிறான்—வேந்தன் முதலியோர் சிரிக்கின்றனர்.]

காட்சி—87

இடம்: குமாரதேவியின் அரண்மனை உட்புறம்.

இருப்: அரசி, அமைச்சர், படைத்தலைவர்.

குமார: (கோபமாக) நான் ஒரு குடிமகனை மணம் செய்துகொள்வது நாட்டுக்கு அவமானம் என்கிறீர்?

அமை: நாங்கள் கூறுவதல்ல தேவி.

ப. தலை: மக்களின் மனப்போக்கைக் கவனித்தோம்; மக்களின் சார்பாகப் பேசுகிறோம்!

குமார: (அமைச்சரைப் பார்த்து) தெளிவும் தைரியமும் கொண்ட எந்தப் பெண்ணும் தூய காதலுக்குக் கட்டுப்பட முன்வரலாம். அரசியாக அமர்ந்திருக்கும் ஒரே காரணத்துக்காக, நான் அந்த உரிமையை இழக்க வேண்டுமா? என் எதிர்காலம் பாலைவனமானால் என் நாடு சோலையாகுமா? இதுவா நியாயம்? என் வேதனையைக் கிளறாதீர். அவரை அன்றி நான் வேறொருவரை மணம் செய்துகொள்ள முடியாது...

அமை: மனம் கரைகிறது தேவி! எனினும், மண்டலத்தின் நலன், ஆபத்து உண்டாக்கக்கூடாதே என்ற அச்சம், என் மனதைக் கல்லாக்கிவிட்டது.

குமார: சரி, என் முடிவான கருத்தைக் கூறிவிட்டேன்.

அமை: எங்கள் வேண்டுகோளை நிராகரிக்க...

ப. தலை: துணிவு, தேவியாருக்கு இருக்கிறது அமைச்சரே. துளியும் உமக்குத்தான் இல்லை. இந்தத் திருமணம் நிச்சயம் என்றால் நான் படைத்தலைவனாக இருந்து பணியாற்ற முடியாது; தங்கள் திருமணத்திற்கு நான் அனுப்பக்கூடிய பரிசு அதுதான்.

அமை: தேவி! நான் மட்டும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க முடியுமா?

குமார: (படைத்தலைவரைப் பார்த்து) உள்ளத்தின் போக்கை உணரமுடியாத உம்மிடம் வாதிடுவது, வீண்

வேலை, படைத்தலைவரே! போரிலே நீர் புலி; மதிக்கிறேன். உமது சேவை நாட்டுக்கு நிச்சயமாகத் தேவை; உணர்கிறேன். அமைச்சரின் கூரிய மதியும், உமது கூர்மையான வாளின் துணையும், தாய் நாட்டுக்குத் தேவை. நிச்சயமாகத் தேவை...

[இருவர் முகங்களும் மலர்கின்றன]

நாடு இழக்கக்கூடாது; உம்மை இழக்கச் சம்மதியேன் துளியும்! ஆனால் என் தூய காதலை அழித்துக் கொள்ளவும் சம்மதிக்க முடியாது (இருவர் முகங்களிலும் மீண்டும் சோகம்)

இருவரும்: ஆகையால்?

குமார: நாட்டை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

இருவரும்: நாட்டை...

குமார: நான் முடி துறக்கத் தீர்மானித்துவிட்டேன். அமைச்சரே! இந்த நாட்டின் எதிர்காலம் உங்கள் வசம் இருக்கிறது. மக்கள் தக்க திட்டம் தீட்டிக் கொள்ளட்டும்! தலையிலே முடியும் நெஞ்சிலே பெரு நெருப்பும், தாங்கித் தவித்திட முடியாது என்னால்! ஆகவே பொதுச்சபை கூடட்டும்! நான் முடி துறந்து விடுகிறேன்!

[இருவரும் ஆச்சரியம் மேலிட்டு தயக்கத்துடன் நிற்கிறார்கள். அது கண்டு.]

குமார: போகலாம்.

[இருவரும் செல்கின்றனர் தோழி வருகிறாள். தயக்கத்துடன்...]

காட்சி—88

இடம்: மதிவாணன் மாளிகை—உட்புறம்

இருப்: மதிவாணன், திலகா.

நிலைமை: குமாரதேவியாரிடமிருந்து வந்த பணியாள் மதிவாணனிடம் ஓலைதர, அவன் அதை வாங்கிப் பார்த்துப் பூரித்துப் போகிறான்.

மதி: திலகா! திலகா! கேட்டாயா சேதியை?

திலகா: (ஆவலுடன்) என்ன அண்ணா, அரசி வருகிறாரா?

மதி: உன் அண்ணி ஒரு நாட்டின் அரசி; அவளிடம் நாம் அடங்கிக் கிடப்போம் என்று பேசினார்களல்லவா, சில பித்தர்கள்?

திலகா: பொறாமையால் பேசினார்கள்!

மதி: நிலைமையும் அதுதானே, திலகா! ஆனால், இனி அந்தக் களங்கமும் இல்லை, என் காதலிக்கு. திலகா—உன் அண்ணி — என் பொருட்டு அரசிப் பதவியை வேண்டாம் என்று கூறிவிட்டாள்.

திலகா: (திடுக்கிட்டு) ஹா!

மதி: முடி துறந்துவிடத் தீர்மானித்துவிட்டாள் (மதிவாணன் மகிழ்ச்சியுடன் திலகாவின் கரத்தைப் பிடித்திழுத்து)

வா, திலகா, உன்னை இனியும் இங்கே இருக்கவிடப் போவதில்லை.

திலகா: என்ன அண்ணா இது?

மதி: (அவள் கன்னத்தைக் கிள்ளி) கள்ளி! ஒன்றுமே தெரியாது உனக்கு! திருமணம்! முதலில் உன் திருமணம்! பிறகுதான் எனக்கு. வா! (உள்ளே சென்று தராசைக்காட்டி) வா...உம்...நில் இப்படி!

திலகா: இது ஒரு வேடிக்கை அண்ணா, உனக்கு.

மதி: (தங்கக் கட்டிகளைப் போட்டு எடை பார்த்தபடி) வேடிக்கையா? எடைக்கு எடை தங்கம் என்னால் தரமுடியாது என்றல்லவா எண்ணினான் சோமநாதன். (எடை பார்த்து மகிழ்ந்து) இதோ, எடைக்கு எடை தங்கம்! எடைக்கு மேலும் தங்கம்!

[திலகாவின் எடை அளவுக்குப் போக மீதமிருக்கும் தங்கக் கட்டிகளைக் காட்டி மகிழ்கிறான். திலகாவும் பூரிப்படைகிறாள்]

மதி: என் சபதம் நிறைவேறிவிட்டது. ஓலை அனுப்பு கிறேன், திருமண நாள் குறித்து! இதோ—இப்போதே!

[திலகா வெட்கப்பட்டு உள்ளே ஓடிவிடுகிறாள். மதி வாணன் மகிழ்ச்சியுடன் ஓலை தயாரிக்கிறான்.]

காட்சி—89

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—ஓர் கூடம்.

இருப்: வெற்றிவேலன், ஒற்றன்.

[வெற்றிவேலன் ஒற்றனிடம் பேசுகிறான்]

வெற்றி: நம்ப முடியவில்லையே! இந்தப் பராரிக்காகப் பட்டத்தைவிடச் சம்மதிக்கிறாளா? ஹும்! எவ்வளவு பைத் தியக்காரத்தனம்!

ஒற்றன்: பலர் இதுபோலத்தான் வேந்தே கேலி பேசு கிறார்கள்—குமாரதேவி எதையும் பொருட்படுத்தவில்லை.

வெற்றி: பிடிவாதக்காரி...அதோ அவன்தான்! சரி, நீ போகலாம்! (மதிவாணன் மகிழ்ச்சியுடன் அங்கே வர...) வா, மதிவாணா! கேள்விப்பட்டேன்—களித்தேன்—உன் காதலின் சக்தியே சக்தி...!

மதி: வேந்தே! குமாரதேவியின் தியாகம் மகத்தானது; நான் துளியும் எதிர்பார்க்கவில்லை! என் பொருட்டு ஒரு பெரும் அரசை இழக்க மனம் வருவதென்றால் ஆச்சரியம் தான்...!

வெற்றி: ஆம், ஆம்! இசை அரசனல்லவா நீ—பிறகு பேசுவோம்—ஒரு அவசரமான வேலை.

மதி: வணக்கம்.

[மதிவாணன் வணக்கம் கூறிவிட்டுச் செல்ல]

வெற்றி: மடையன்! நான் வேறு புகழவேண்டுமென்று எதிர்பார்க்கிறான்! மண்டைக் கர்வியாகி விடுவான். மட்டந் தட்டியாக வேண்டுமே!...(யோசித்தபடி) எப்படியாவது மட்டந்தட்டியாக வேண்டும். குமாரியும் இவனும் இங்குக்

குதூகலமாக வாழ்வது! நான் அதைக் காண்பதா? வெட்கம், வேலெனக் குத்துகிறது என் நெஞ்சை! வேந்தனாக வேறு இருக்கிறேன், இந்த இலட்சணத்தில்!

[கவலையுடன் உலாவுகிறான்.]

காட்சி—90

இடம்: முத்துமாணிக்கம் மாளிகை...ஓர் கூடம்.

இருப்: முத்து, தும்பை, திலகா.

நிலைமை: முத்துமாணிக்கம், தோழி தும்பை தந்த ஓலையைக் கண்டு பூரிப்படைகிறான் முதலில்—அவள் காணாவண்ணம், அடுத்த விநாடி அவன் முகம் மாறுகிறது. வேதனைப்படுகிறான்...ஓலையைப் பார்க்கிறான் மீண்டும். மறுகணம் ஓலையைக் காணக் கண் கூசுகிறது. கண்களை மூடிக் கொண்டு கலங்குகிறான்...தும்பை அறியாவண்ணம் தன் வேதனையை மறைத்துக் கொள்கிறான்...பலகணி வழியாக வெளிப்புறத்தைப்பார்த்தபடிநிற்கிறான்; ஓலையைக் கண்களில் ஒத்திக் கொள்கிறான். தொலைவிலே பட்சிகளின் இன்ப வாழ்வுக் காட்சி காண்கிறான்..வேதனை தாங்கமாட்டாது கண்களை மூடிக்கொள் கிறான். யோசனை செய்கிறான்...ஒரு முடிவுக்கு வந்தவனாகிறான்...இலேசாகப் புன்னகை தோன்றுகிறது...மறைத்துக் கொள்கிறான். முகத்தை கடுமையாக்கிக் கொண்டு திரும்பி, தும்பையைப் பார்த்து...ஓலையைக் கசக்கி அவள் எதிரே வீசி....]

முத்து: என்ன இது? ஏமாளி என்று எண்ணிக் கொண்டானா என்னை? திருமணமாம்...திருமணம்! (தும்பை திகைக்கிறாள்) எவ்வளவு ஆணவம்? முத்துமாணிக்கம் முட்

டாளல்ல, ஊர் பேரில்லாத் திலகாவைத் திருமணம் செய்து கொள்ள! (தும்பை கோபம் கொள்கிறாள்) ஆடிப்பாடிப் பேசினாள்; நானும் மகிழ்ச்சிக்காக விளையாடினேன். கலியாணமே செய்து கொள்வதாமே—ஊம் (கேலியாக) பெரிய பிரபு குடும்பமல்லவா? பாடிப் பிழைக்கும் பராரிக்கு எவ்வளவு பேராசை! போ...போ...போய்ச் சொல்லு உன் திலகாவிடம்! அவனிடமும் சொல்லு. திருமணம் என்ற எண்ணத்தை மறந்துவிடச் சொல்லு. என் அந்தஸ்து என்ன? குலம் என்ன? குடும்ப கௌரவம் என்ன? எப்படி அடுக்கும் இந்த சம்பந்தம் என்று கேள்? போ: ஓலையை எடுத்துச் செல்! கொண்டு போய் அவன் முகத்தில் வீசு! திலகாவைத் திருமணம் செய்துகொள்வதாம்! ஹூம்! பைத்யக்காரன்! நான் செய்து கொள்வதாம்!...நான்!

[தும்பை கண்களைத் துடைத்தபடி வேகமாகச் செல்கிறாள்..அவள் சென்றதும், முத்துவின் வேதனை மீண்டும் தோன்றுகிறது. பதறுகிறான். கீழே எறிந்த ஓலையைப் பாய்ந்து சென்று எடுத்துக் கொண்டு பாசத்தோடு மார்பருகே வைத்துப் பதறியபடி...]

முத்து: திலகா! திலகா! நான் என்ன செய்வேன்? ஐயோ! எவ்வளவு கொடுமை! எப்படித் தாங்குவாய் கண்ணே, எப்படித் தாங்குவாய்?

[தள்ளாடிச் சென்று பலகணி வழியாகப் பார்க்கிறான். எங்கும் வெட்டவெளியாகத் தெரிகிறது, அவன் கண்களுக்கு]

காட்சி—91

இடம்: சோழநாட்டில் மதிவாணன் மாளிகை—ஓர்கூடம்.

இருப்: திலகவதி, தும்பை.

[திலகாவின் தனி அறையில் தோழி தும்பையும் திலகாவும் பேசுதல். திலகா கண்ணீர் சிந்தியபடி...]

திலகா: எப்படித் தாங்குவேன்? எப்படியடி தாங்குவேன்? உயிரினும் மேலாக மதித்துவந்தேனே! அவரா திருமணம் கிடையாது என்றார்! ஏசினாரா? என்னையா? சோலையிலே, சாலையிலே விளையாடிய என் சுந்தரனா?

[தேம்புகிறாள். அவளைத் தேற்றியபடி...]

தும்பை: அக்ரமக்காரனம்மா அந்த முத்துமாணிக்கம்! வீசி எறிந்தான் ஓலையை! ஏசினான் கண்டபடியெல்லாம்! என் கரத்திலே கட்டாரி இருந்தால் குத்திக் கொன்றிருப்பேன், அந்தக் கொடியவனை!

[அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்த மதிவாணன் மனம் பதறி...]

மதி: தும்பை! என்ன...என்ன...(கோபமாக) முத்து மாணிக்கமா, இப்படிச் சொன்னான்? அவனா மோசம் செய்கிறான்? நம்ப முடியவில்லையே.

[கோபமாக வெளியே செல்கிறான். திலகா கண்ணீர் பொழியும் நிலையில் தும்பையைப் பார்க்கிறாள்.]

காட்சி—92.

இடம்: சோலைநாடு

இருப்: குமாரதேவி.

[குமாரியின் பொதுச் சபை கூடியிருக்கிறது. கவலை தோய்ந்த முகத்துடன் பிரமுகர்கள் உள்ளனர். அரண்மனை வெளியில் பெருந்திரள் கூடியிருக்கிறது, கொலு மண்டபத்தில். அதன் உட்புறக் கோடியிலிருந்து, செந்தாமரையுடன் அரசி வருகிறாள். அரசி, அரசி உடையும் தலையில் கிரீடமும் அணிந்திருக்கிறாள். அதைக் கண்டு அனைவரும் உருகுகின்றனர். நடுக்கமற்ற குரலில் படிக்கிறாள்.]

குமாரி: பொதுச் சபையினரே! நம் நாட்டு சம்பிரதாயமும், அதைக் கட்டிக் காத்திட உறுதிகொண்டவர்களும்,

நான் ஒரு குடிமகனைத் திருமணம் செய்து கொள்ளக் கூடா தென்று தெரிவிப்பதால், நான் என் காதலைத் தடைசெய்யும் இந்த அரச பதவியிலிருந்து விலகிக் கொள்வதென முடிவு செய்துவிட்டேன். இது முடி துறப்புப் பிரகடனம்! கடமைக் காகக் காதலைக் கைவிட வேண்டும் என்று வாதிட்டனர் பெரியவர்கள். காதலும் ஒரு கடமைதான். அந்தக் கடமையை நான் மதிக்கிறேன். அரசியாக இருப்பதனால் காதல் உரிமையை இழக்க வேண்டும் என்று கூறினர் பெரியவர்கள். அவர்களின் அறிவாற்றல் இந்த நாட்டுக்குத் தேவை. அவர்களை இழக்க நான் இசையவில்லை. எனவே நாட்டைப் பொதுச் சபையிடம் ஒப்படைத்துவிட்டு, நான் முடி துறந்து விடத் தீர்மானித்துவிட்டேன்.

[செந்தாமரை ஓர் எழுதுகோல் தர, தடுமாற்றமின்றிக் கையொப்பமிட்டுவிட்டு, பிரகடனத் தாளைச் சுருட்டி மேஜைமீது வைத்து கிரீடத்தை ஜாக்கிரதையாக எடுத்து ஒரு கணம் பாசத்துடன் பார்த்துப் பக்கத்தில் வைத்துவிட்டு, ''நான் விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.'' என்று தெளிவாகக் கூறிவிட்டு, கீழே இறங்குகிறாள். அமைச்சர் கண்களைத் துடைத்துக்கொள்கிறார். யாவரும் வருத்தப்படுகின்றனர். தன்னைத் தடுத்து விடுபவர்போலப் பரபரப்பு அடைபவர்களைப் புன்னகை செய்து தடுத்துக்கொண்டே மண்டபத்தின் வெளிப்புறம் வருகிறார்கள்.....அது சமயம், அலங்கோல நிலையில் ஓர் போர்வீரன் பரப்பரப்புடன் ஓடிவந்து அரசியிடம் ஓர் ஓலையை நீட்டியபடி...]

தூதுவன்: ஆபத்து, அரசியாரே! பேராபத்து! நடு நாட்டரசன் போர் தொடுத்துவிட்டான், நம் நாட்டின் மீது!

[அரசி திடுக்கிடுகிறாள். அவள் கண்கள் மேஜைமீது உள்ள முடிமீது செல்கின்றன.]

சபையோர்கள்: (அச்சத்துடன்) போர்! போர்!

[படைத்தலைவர் மீசையில் கைவைத்தபடி புன்னகை புரிகிறார்.]

குமாரி: போர் தொடுத்துவிட்டானா?

தூதுவன்: புயலென ஓடிவந்தேன் அதைக் கூற!

குமாரி: பிரகடனத்தைக் கிழித்தெறியும், அமைச்சரே! நான் முடிதுறக்கப் போவதில்லை! அரசி குமாரதேவியின் படைகள் தயாராகட்டும். நடுநாட்டின்மீது நாம் படை எடுக்கத் தீர்மானித்துவிட்டோம்!

[குமாரி செல்கிறாள். அரசவை கலைகிறது.]

காட்சி—93

இடம்: பொது வழி.

இருப்: முத்துமாணிக்கம்.

[முத்துமாணிக்கம் பூஞ்செடிகளுக்கிடையே செல்லுதல்—பிறகு, காய்ந்து கருகிய பாதை வழியே வருதல். அதுசமயம் தன்னைத் தானே நொந்து கொண்டு]

திலகா! திலகா! என்னபாடு படுகிறாயோ என்னால்! திருமணம் இல்லை என்ற உடனே வேதனை, வெள்ளம் போலாகியிருக்கும்! யார் நம்புவார்கள், முத்துமாணிக்கம் திலகாவுக்குத் துரோகம் செய்வானென்று! யாருக்குப் புரிகிறது என் துரோகத்துக்குக் காரணம் என்ன என்று! எப்படிப் புரிய வைப்பேன்?

காட்சி—94

இடம்: மதிவாணன் மாளிகை—உட்புறம்.

இருப்: மதிவாணன், தூதன்.

[விசாரத்துடன் வீடு திரும்பிய மதிவாணனிடம் குமாரியின் தூதன் ஓலை தருகிறான்]

மதி: என்ன, என்ன! முடிதுறக்கவில்லையா? முடியவில்லையா? விளக்கம் கூறுவதற்கு முடியாதா? முழு மூடனானேன்—மோசம் போனேன்!

தூதன்: ஓலையைச் சரியாகப் பார்த்துவிட்டுப் பேசும் மதிவாணரே...

மதி: ஓலை...என் களிப்புக்கு மரண ஓலை இது...

காட்சி—95

இடம்: மடாலய உட்புறம்.

இருப்: மாசிலாமணி, அருமறையானந்தர்.

[மாசிலாமணியும் அருமறையானந்தரும் பேசுதல்]

மாசிலாமணி: (ஒரு படத்தைக் காட்டி)இந்த மாளிகை, தங்கள் தங்கை கட்டிக் கொடுத்ததைவிட அழகாக இருக்கிறது இது...

அருமறை: ஆனால்...அண்ணன் மகள் தொல்லை பொறுக்க முடியவில்லை...(மற்றொரு படத்தைக் காட்டி) இதைக் கட்டிக் கொடுக்கவேண்டும். அதற்குப் பணம் கைவசம்...

மாசி: நேற்று ஆயிரம் அருள்சீட்டு விற்ற பணம் என்னிடம் இருக்கிறது...

அரு: மகரகண்டி வாங்கினோமே, அதற்குப் பணம் தந்தாகிவிட்டதோ?

மாசி: மாணிக்கப் பூபதியிடம் விற்ற அருள்சீட்டுத் தொகையை அதற்கே செலவிட்டேன்.

அரு: ஆறு கிராமங்கள் வாங்கிவிட்டு அவசரப்படுகிறாய்!

மாசி: அருமையான கிராமங்கள்; விட மனமில்லை.

அரு: பணம் தேவையாயிருக்கிறது,பல காரியங்களுக்கு.

காட்சி—96

இடம்: மடாலயத்தின் உட்புறம்.

இருப்: மடாதிபதி, மதிவாணன், ஆண்டி.

[மதிவாணன் மடாதிபதியின் தனி அறை நோக்கிச் செல்கிறான். உள்ளே மிரட்டிப் பேசும் குரல் கேட்டு வெளியே நின்று கேட்கிறான் பேச்சை— பதறியபடி]

மடாதிபதி: (ஆண்டிகளைப் பார்த்து) தடித்தாண்டவ ராயன்களே! அருள்சீட்டு விற்கக்கூடத் திறமையில்லை யென்றால் எப்படி நீங்கள் தனி மடாலயங்களைக் கட்டி ஆளப் போகிறீர்கள்?

ஓர் ஆண்டி: மக்களிடம் பணம் முன்போல் இல்லை, ஏராளமாக! ஆனால் இம்முறை அதிகச் சீட்டுகள் விற்பனை யாகும்.

மடா: வணிகர்களைத் தேடிப்பிடி. வயோதிகச் சீமான்களை விடாதே. குழந்தையில்லாக் குடும்பங்களின் கணக்கைத் தயாரித்துக் கொண்டு வேலையில் இறங்கு. இதுதானே நான் வகுத்த முறை?

ஆண்டி: சொர்க்கவாசல் துவக்கவிழா நடந்துவிட்டால் பணம் மளமளவென்று குவிந்துவிடும் என்று கூறுகிறார்கள்.

மடா: யார் இல்லை என்கிறார்கள்? இது தெரியும் எனக்கும்! ஆனால் துவக்கவிழாவுக்குப் பணம் வேண்டாமா? துதிபாடி விட்டால் விழா நடந்துவிடுமா? பணம் திரட்டுமய்யா, பணம்!

ஆண்டி: சென்று வருகிறோம்...

மடா: சென்று கூறும் சொர்க்கவாசல் துவக்கவிழாவிலே மதுரகவி, அரசியைக் காணிக்கையாய்ப் பெற்ற அமரகவி, மதிவாணன் இசைவிருந்து உண்டென்று சொல்லும்.

ஆண்டி: இசை விருந்து! சொன்னால் போதுமே! சீட்டுகள் சிட்டுப்போல் பறக்கும்.

காட்சி—97

இடம்: ஊரை அடுத்துள்ள அடவி.

இருப்: மதிவாணன், கவிராயர்.

[காட்டுப் பாதையில் மதிவாணன் செல்கிறான். சற்று தூரத்தில் கவிராயர் வரக் கண்ட மதிவாணன், 'ஐயனே, ஐயனே' என்று கதறிய வண்ணம் அவரை அடைகிறான்.]

கவி: மகனே! இது என்ன மருட்சி?

மதி: என் தலை சுற்றுகிறது! மனம் எரிமலையாகிவிட்டது!

கவி: எதனால்? உண்மையைக் கண்டதாலா?

மதி: உத்தமன் என்று ஊரெல்லாம் புகழ்கிறது, அந்த உலுத்தனை!

கவி: நீயும் புதுப் புதுப் பாடல்களைப் பாடினாயே, அவனைப் புகழ்ந்து.

மதி: காட்டுராஜாபோல் பேசுகிறான் ஆண்டிக் கோலத்தில் உள்ள அக்ரமக்காரன்! பூசுவதோ திருநீறு; ஐயோ! நாடு எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறது, இந்த நயவஞ்சகத்தை?

கவி: நாடு! யார், நாட்டு மக்களுக்கு உண்மையை உரைத்தவர்கள்? அவர்கள் உண்மையைத் தெரிந்து கொள்வதையும் தடுக்கத்தான் உன் திறமை—கவிதா சக்தி இருக்கிறதே!

மதி: ஐயனே! சொர்க்கவாசல் கட்டுகிறானாம், அந்த சோற்றுத் துருத்தி.

கவி: பொருள் திரட்டப் புது வழி!

மதி: துவக்க விழாவாம்! அதிலே என் இசைவிருந்தாம்!

கவி: சொன்னானா?

மதி: நான் அவனைக் காணவில்லையே! முடியவில்லை. அக்ரமக்காரன் ஆண்டிகளிடம் பேசினது கேட்டு ஓடோடி வந்துவிட்டேன், உம்மிடம் கூற!

கவி: சொர்க்கவாசல்! சொர்க்கவாசலா கட்டப் போகிறான்? அதன் மகிமையை மதுரகீதம் பாடி மக்களுக்குத் தெரிவிக்கச் சொல்லுகிறான் உன்னை.

மதி: அந்த அக்ரம விழாவிலே நான் ஈடுபடமாட்டேன்.

கவி: சொர்க்கவாசல்! இங்கே நரகமிருக்கிறது, நாற்றமடித்துக்கொண்டு!' ஏமாளிகளைக் கொள்ளை அடித்துச் சொர்க்கவாசல் கட்டுகிறானாம் சொர்க்கவாசல். மகனே!

நரகத்தைப் பார்த்ததுண்டா? நேரம் இருந்திராது உனக்கு. உல்லாசபுரியிலே உலவியவனல்லவா? உன் கண்களிலே நரகம் தெரிந்திராது. வா, மகனே வா! நரகத்தைக் காட்டுகிறேன் வா! நயவஞ்சகர்களால் ஏற்பட்ட நரகத்தைப் பார்க்கலாம். நல்லறிவு பெற்றவர்கள், நமக்கென்ன என்று இருந்துவிட்டதால், ஏற்பட்டுவிட்ட நரகத்தைப் போய்ப் பார்க்கலாம் வா! வா, மகனே வா...வேந்தன் வெற்றிவேலனால் ஏற்பட்ட இந்த வேதனை தரும் காட்சியைப் பார். மன்னன் நமக்கென்ன என்று இருந்துவிட்டதால் மக்கள் படும் அவதியைப் பார்.

[மதிவாணன், கவியின் உருக்கமான பேச்சால் இழுக்கப்பட்டவனாய், கவியின்பின் செல்கிறான். வெட்ட வெளியில் வசிப்போர், இடிந்த வீட்டில் இருப்போர், சாக்கடை ஓரம் இருப்பவர், அரைப் பட்டினிகள், நோயாளிகள் ஆகியவர்கள் வதைபட்டுக் கொண்டிருக்கும் காட்சிகளைக் காட்டுகிறார் மதிவாணனுக்கு.]

[காட்சிகளைக் காணக் காண மதிவாணனின் நெஞ்சில் சோகம் வளர்கிறது. கண்களில் கசியும் நீரைத் துடைத்துக் கொள்கிறான்.]

கவி: மதிவாணா! இந்த நரகத்தை மறைக்க சொர்க்கவாசல் கட்டுகிறார் மத அதிபர்! முறையா? இவர்களுக்கு இதம் செய்யப் பணத்தைச் செலவிடச் சொல் மகனே; சொர்க்கவாசலுக்கு அல்ல!

காட்சி—98

இடம்: மடாலயத்தின் உட்புறம்.

இருப்: மாசிலாமணி, மதிவாணன், மடத் தலைவர்.

[மடாலயத்தில் மாசிலாமணி மதிவாணனை அழைத்துக் கொண்டுபோய் மடத்தலைவர் முன் நிறுத்தி]

மாசி: கண்டு பிடிப்பதே கஷ்டமாகிவிட்டது. வீட்டிலே தங்குவது கிடையாதாம்.

மடா: விசாரம் மதிவாணனுக்கு! குமாரதேவியின் மோசம், மனதை உடைத்துவிட்டிருக்கும். கவலைப்படாதே மதிவாணா! எங்கே போயிருந்தாய் பல நாட்களாக?

மதி: நரகத்துக்கு!

மடா: (சிரித்தபடி) நரகத்துக்கா? மதிவாணா! என்ன மனக்குழப்பம் இவ்வளவு? காதல் கைகூடாவிட்டால் கஷ்டம்தான்! ஆனால் அதற்காக உலகை வெறுத்து விடுவதா?

மதி: காதல் சம்பந்தமாக விளக்கம் வேண்டாம்.

மாசி: கோபம் இப்படி வரக்கூடாது! அதுவும் இந்த இடத்தில்!

மதி: அழைத்த காரணம்?

அரு: சொர்க்கவாசல் விழாவுக்கு நாள் குறித்துவிட்டேன். விழாவிலே உன் இசை விருந்து— பல நாட்டு மன்னர்கள், பிரபுக்கள், கலாரசிகர்கள், பக்த கோடிகள் இவர்கள் முன்னிலையில் உன் இசை விருந்து!

மாசி: இதுவரை அப்படிப்பட்ட திருச்சபை நீ கண்டிருக்கமாட்டாய்— இனிக் காணவும் முடியாது!

மதி: இப்போதுகூட அந்தத் திருச்சபையைக் காணப் போவதில்லை நான்.

மடா: மதிவாணா!

மதி: நான் விழாவிலே பாட முடியாது. விழா அல்ல அது; வீணர் கொண்டாட்டம்.

மடா: (திகைப்புடன்) கலந்து கொள்ள..? மதிவாணா! என்ன சொல்கிறாய்?

மாசி: (கோபமாக) கலந்துகொள்ள...மாட்டாராம், இந்த ராஜாதி ராஜன்.

மடா: மதிவாணா! என் கோபத்தைக் கிளறாதே!

மதி: பாவத்துக்கு நான் உடந்தையாக இருக்கமுடியாது. வேண்டாம், இந்த வீண் விழா! நாட்டிலே நரகம் இருக்கிறது—நாற்றமடித்துக் கொண்டு! அதை ஒழிக்காமல் சொர்க்கவாசல் கட்டுவது, படுமோசம்! நயவஞ்சகம்!

மடா: துரோகி! நான் அழைக்கிறேனடா! இந்த நாட்டு மதத்துக்கு அதிபராக உள்ள நான் அழைக்கிறேன்.

மதி: நான் மறுக்கிறேன்.

மடா: எங்கோ கிடந்த உன்னை இவ்வளவு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தேன்—என் மனதைப் புண்ணாக்காதே, மதிவாணா! சொர்க்கவாசல் விழா புனிதமானது! புண்ய காரியம்!

மதி: அருமறையானந்தரே!

[தன் பெயர் கூறி அழைப்பது கேட்டு அருமறையானந்தர் திடுக்கிடுகிறார். மாசிலாமணி, மதிவாணனின் கன்னத்தில் அறைந்து]

மாசி: மடையா! அவ்வளவு ஆணவமா? குருதேவா என்று கூறாமல் பெயரிட்டா அழைக்கிறாய்?

மதி: (கலங்காமல்)குரு எனக்குக் கிடைத்துவிட்டார்கள் ஐயா! கண் திறந்துவிட்டார்கள்!

மடா: வேண்டாமடா மதிவாணா! வேக வைக்காதே நெஞ்சை.

மதி: நான் அந்த விழாவிலே பங்கு கொள்ள முடியாது.

மடா: நான் கட்டளையிடுகிறேன்—விழாவிலே பாடத்தான் வேண்டும்.

மதி: நான் மறுக்கிறேன்.

மடா: பிணமாவாய்.

மதி: பிணம் பாடாது.

மாசி: இவனுடைய மண்டைக் கர்வத்தை, மன்னனிடம் கூறி...

மடா: போ நாயே வெளியே! போக்கிடமின்றி இருந்த உன்னைப் போக போக்யத்திலே புரளச் செய்தேனே! நன்றி கெட்ட நாய்க்குட்டியே! போ, இந்த இடத்தைவிட்டு...

[மதியை மாசிலாமணி தள்ளுகிறான் வெளியே...]

காட்சி— 99

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—ஓர் கூடம்.

இருப்: அரசன், மாசிலாமணி, அமைச்சர்.

அமை: மதிவாணனைத் தீர்த்துக்கட்ட இதுதான் சமயம்—மக்கள் பாய்வர் அவன் மீது—மண்டலம் நமது பக்கம் நிற்கும்.

வேந்தன்: விளங்கவில்லையே.

அமைச்: மதிவாணன் நாத்திகன். புனித விழாவிலே பாட மறுத்தான். நாம் குற்றம் சாட்டுகிறோம். விசாரணை—தண்டனை.

வேந்: அருமையான திட்டம். அமைச்சரே, நாத்திகன்! நாடு சீறும், அந்தச் சொல் கேட்டு.

தொலையட்டும் துரோகி—விசாரணைக்கு ஏற்பாடு செய்யும்.

காட்சி—100

இடம்: வெற்றிவேலன் அரசவை.

இருப்: வெற்றிவேலன், மதிவாணன், மாசிலாமணி

[மடாதிபதி, மாசிலாமணி முதலியவர்கள் வீற்றிருக்கின்றனர். மதிவாணன் இரு போர் வீரர்களிடையே நிறுத்தப்பட்டிருக்கிறான்...]

வெற்றி: (கோபமாக)மதிவாணா! நான் கட்டளை இடுகிறேன். விழாவிலே நீ பாடத்தான் வேண்டும்.

மதி: (உறுதியாக) முடியாது வேந்தே! மான் இரத்தம் குடிக்காது—வேங்கைபோல...

வெற்: புனித விழாவிலே கலந்து கொள்ள மறுப்பது எந்தவிதமான குற்றம் தெரியுமா?

மதி: கூறுங்கள் வேந்தே.

வெற்: நீ ஒரு நாத்திகன்.

மதி: நான் நாத்திகனல்ல வேந்தே, நாத்திகனல்ல. கடவுளை மறுக்கவில்லை. பாபம் புரியும்படி தூண்டவில்லை. சத்தியம் வேண்டாமென்று சொல்லவில்லை. சன்மார்க்கம் ஏன் என்று கேட்கவில்லை. சாந்தம், ஒழுக்கம், அன்பு, தயை, நீதி, நேர்மை எதையும் நான் மறுக்கவில்லை...

வெற்: சொர்க்கவாசல் விழாவிலே கலந்து கொள்ள மட்டும் மறுக்கிறாய்...

மதி: ஆமாம் அரசே! விழா கூடாது என்கிறேன். மக்கள் வாடுகிறார்கள், வாழ்வில் சுகம் கிடைக்காமல்! நாட்டிலே நரகம் இருக்கிறது. நானே கண்டேன். எனவேதான் விழா கூடாது என்கிறேன். கடவுளை வேண்டாம் என்று கூற வில்லை...

வெற்: போதும் உன் புது ஞானம். இன்று விழா வேண் டாம் என்கிறாய். பிறகு துறவு வேண்டாம், குருமார் வேண் டாம் என்று பேசுவாய். பித்தம் வேகமாக வளரும்.

மதி: மக்களின் மனமாசு போக்க, ஒழுக்கத்தை வளர்க்க துறவிகள் தேவை என்றால், புத்தர்போல் போதிக்கட்டும், பற்றற்று. பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் படுத்து, செம்பொன்னும் ஓடும் ஒன்றெனக் கண் டுள்ளவர்களே துறவி என்று ஆன்றோரும் சான்றோரும் கூறு கின்றனர். இவர் முறை இவ்விதமாகவா இருக்கிறது?

மடா: வேதனை எப்படி இருப்பினும் தேவ காரியத் துக்கு என்று கேட்டால் தட்டாமல் தயங்காமல் காணிக்கை தருகிறார்களே மக்கள். கருத்தற்றவனே! இதன் பொருள் என்ன? காணிக்கை குவிந்திருக்கிறது குன்றுபோல...

மதி: காணிக்கை குவிந்ததே, எதற்குச் செலவிட்டீர்? சன்மார்க்கப் போதனைக்கா?

மடா: அஞ்ஞானிகள் கொட்டத்தை அடக்க! கள்ளிக் காளான்களைக் களைத்தெறியாமுன்னம் செந்நெல்லைத் தூவுவாரோ அறிவுடையோர்?

மதி: ஞான பூமியில் ஏனய்யா கள்ளிக்காளான் முளைத்தது?

மடா: உன் போன்ற பாபாத்மாக்களின் செயலால் தான்.

மதி: முளைவிட்ட கள்ளிக் காளான்களைக் காட்டுகிறோம். களைந்தெறியச் சொல்லுகிறோம். வயல், உம்மிடம் இருந்தது. உபதேசம் என்ற ஏர் கொண்டு உழுதீர். மக்களின் உழைப்பு என்னும் நீர் பாய்ச்சினீர். முளைத்துக் கிடப்பதோ கள்ளிக் காளான். தினை விதைத்தால்தானே தினை கிடைக்கும்.

வெற்: இவனிடம் ஏன் விவாதம்? வீண் வேலை! கேள்வி—பதில்—தீர்ப்பு—இதுதான் முறை.

மதிவாணா...சொர்க்கவாசல் விழாவைக் கண்டிக்கிறாய் இப்போதும்?

மதி: ஆமாம் அரசே. தேவ காரியம் அல்ல அது. தேவையான காரியமும் அல்ல அது என்று கண்டிக்கிறேன்.

வெற்: உபதேசம் செய்கிறாயோ நீ?

மதி: இல்லையே. அது அவருடைய உரிமையல்லவா? உண்மையை உரைத்தேன். உபதேசம் செய்யவில்லை. கடமையைச் செய்தேன்.

வெற்: கடவுள் காரியத்தைக் கெடுப்பதுதான் கடமையா?

மதி: கடவுள் காரியத்தைக் கெடுப்பவனல்ல நான்; கடவுளின் பெயர் கூறிக் கொண்டு கயவர்கள் வெட்டும் படுகுழியில் விழ மறுத்தேன். குன்றுபோல் குவிந்ததாமே காணிக்கை. ஏழைக்கு இதம் தரும் ஏற்பாட்டுக்குச் செலவிடக்கூடாதா என்று கேட்டேன். அறம் அதுதானே? ஆண்டவனிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கைக்குச் சான்று அதுதானே என்று கேட்டேன்.

வெற்: பேசக் கற்றுக் கொண்டான் பிரமாதமாக.

மடா: மயக்குமொழி பேசுகிறான் மக்களை வசப் படுத்த.

மதி: மக்களை மரக்கட்டைகள் என்று எண்ணாதையா! யார் எதைச் சொன்னாலும் நம்பிவிடும் நிலையிலே மக்கள் இன்று இல்லை.

மடா: பொய்யை மெய் போலப் பேசும் வித்தை தெரிந் திருக்கிறது உனக்கு.

மதி: அந்தப் பெரும் வித்தை தங்களுடைய ஏக போக பாத்யதை அல்லவா?

வெற்: விசாரணை முடிந்தது. வீணனே கேள்! உன் மீதுள்ள குற்றங்கள்: புனித விழாவில் கலந்து கொள்ள மறுத் தது, விழாவைக் கேவலமாகப் பேசியது, அருமறை யானந்தரை அவமதித்தது, அரச மார்க்கத்தை இகழ்ந்தது ஆகிய குற்றங்களைச் செய்திருக்கிறாய்.

மதி: இவைகளில் ஒன்றைக்கூட மறுக்கவில்லை. ஆனால் இவைகளைக் கூட்டிப் பார்த்து நான் நாத்திகன் என்று கூறு கிறீர்களே, அந்தத் தப்புக் கணக்கைத்தான் மறுக்கிறேன்.

வெற்: குறுக்கே பேசாதே. இவைகளைச் செய்ததால் உன்னை நாத்திகன் என்று நாம் குற்றம் சாட்டுகிறோம்.

பிரபுக்கள்: நாத்திகன்தான் இவன். நாத்திகன்தான் இவன்.

மதி: அதை நான் மறுக்கிறேன் மீண்டும். நல்லறிவை நாத்திகம் என்கிறீர், வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வித்தியாசம் தெரியாத குருடனைப்போல! நயவஞ்சகம் அல்ல, நாதன் அருளைப்பெறும் வழி என்று கூறுவதா நாத்திகம். அன்பும் அறமும் அறிந்து, உண்மையை உணர்ந்து, தன்னலத்தைத் தகர்த்தெறிந்து, பொது நலத்துக்குப் பாடு பட்டு, நாட்டைப் பொன்னாடு ஆக்கினால், மக்களை வாழ வைத்தால் இறைவன் அருளைப் பெறலாம் என்று எடுத் துக் கூறுவதா நாத்திகம்? எது நாத்திகம்? அன்பையும் அருளை

யும் செழித்திடச் செய்வதற்காக ஏற்பட்ட இடங்களிலே அக்ரமம் தலைவிரித்து ஆடினால், அறம் அறிந்தோர் கண்டிக்காமலிருக்க முடியுமா? கண்டிப்பதா நாத்திகம்?

வெற்: மண்டைப் புழு இவனுக்கு! மகான்களை ஏசும் உன்னைக் காண்பதும் மகா பாபம். இந்த நாடு இப்படிப்பட்ட மகா பாபிகளைத் தாங்கிக் கொண்டிருக்க சம்மதிக்காது. நாத்திகனே! உன்னை நாம் நாடு கடத்துகிறோம், இந்த வினாடி முதல்.

மதி: (உருக்கமுடன்) ஒரு குற்றமும் செய்யாத எனக்கா இக் கடும் தண்டனை..மக்கள் இதையா நீதி என்று எண்ணுவார்கள்...?

வெற்: நாத்திகனின் இரத்தம் இந்தப் புனித பூமியில் படுவது பாவம். எனவே கொல்லாது விட்டோம்—ஓடு, இந்த நாட்டை விட்டு...

மதி: (உருக்கமாக) உண்மைக்காகப் பரிந்து பேச ஒருவரும் இல்லையா? ஏழைப் பங்காளர் பூண்டே இல்லையா?

வெற்: நாசகாலனே! நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட பிறகு போய் அழைத்து வா உன் வீரர்களை, எங்கிருந்தாவது! புது ஞான போதகனே! போ, போய்க் கூட்டிவா உன் படைகளை—ஞான குருவை நிந்தனை செய்துவிட்டு வேழ நாட்டிலே வாழ முடியுமா? உம்...இவனுடைய விருதுகள்-சின்னங்கள் எல்லாவற்றையும் களைந்தெறியுங்கள்.

மதி: ஆத்திரமாகப் பேசுகிறேன் என்று எண்ணுவீர். அறிவுடையோரே! அருமறையானந்தரின் போக்கு என் மனதை எரிமலையாக்கிவிட்டது. கனல் கக்கினேன். 'அருள் சீட்டு வாங்குவீர். ஐயன் அருளைப் பெறுவீர்' என்று மக்களிடம் கூறினார். பொருளைத் திரட்டினார். மாளிகைக்கும், மகர கண்டிக்கும், ஆறு கிராமங்கள் வாங்குவதற்கும் செலவிட்டார். சுயநலத்திற்குச் செலவிட்டார், பஞ்சவர்ணக்கிளி கொஞ்சிப் பேசும் என்று. அருகில் செல்லும்போது, அது

கண்ணைக் குத்தினால், கடும் கோபம் வராதா? சன்மார்க்கம் தழைத்திட பணி புரிவார் என்று நம்பினோம்; இவரோ சுய நலம் பிடித்து ஆடுகிறார்; அக்கிரமம் செய்கிறார்.

வெற்: யார் முன் பேசுகிறோம் என்பதை மறந்தாய் மதியிலி; சாலையோரத்தில் கிடக்கும் வேலையற்றதுகளிடம் பேசிப் பழக்கமோ?

மதி: சாலையோரத்தில் வேலையற்றதுகள் இருப்பது தான் அரசே ஆபத்து—படையும் அழிக்க முடியாத புயல் அரசே! அந்த வேலையற்றதுகள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டன. அவர்களின் முகம் கேள்விக் குறியாகிவிட்டது. அவர்களிடம் நான் பேசுகிறேன் என்றீரே, உண்மை. என் பேச்சும் அவர்களுக்குப் புரிந்துவிட்டது. பொருள் தெரிகிறதா வேந்தே. சாலையோரத்திலே வேலையற்றதுகள்—வேலை யற்றதுகள் மனதிலே விபரீத எண்ணங்கள். வேந்தே, இது தான் காலக்குறி...

மடா: பிதற்றுகிறான்—மனக்குழப்பம்.

கவி: மிரட்டுகிறான் நம்மை யாரென்று அறியாமல்.

மதி: நாட்டைத் தமது களிநடனமடமாக்கிக் கொண்டு, அரண்மனைகளைத் தமது சிற்றின்பக் கூடமாகக் கொண்டு, அடுத்துக் கெடுப்போர் யார்? அறநெறி அறிந் தோர் யார் என்ற விளக்கமும் அறியாது துடியிடைக்கும், கொவ்வை அதரத்துக்கும், தேன்மொழிக்கும், தேக காந்திக் கும் அடிமைப்பட்டு, மக்களின் மனம் ஒரு எரிமலை; அதை ராஜபக்தி என்னும் சல்லாத்துணி கொண்டு மறைத்துவிட முடியாது என்ற சாதாரண உண்மையையும் மறந்து, வயல் கள் வெடித்துக் கிடந்தாலும், ஆறுகள் வறண்டு போயினும், மாடு கன்றுகள் செத்து, மக்கள் எலும்பும் தோலுமாகிப் போயினும், தமக்கு மகிழ்ச்சி தர மங்கையும் மதுவும் தமது கொலு மண்டபத்திலே கோணங்கிகளும் கொடிபிடிப்போரும் இருக்கவேண்டும்! ஊருக்கோர் உல்லாச கூடம் இருந்தாக வேண்டும்! வீரமில்லாவிட்டாலும் விருதுகள் வேண்டுமென்று இறுமாந்து கிடக்கும் வேந்தர்களிடம் கைகட்டி, கட்டியங் கூறி கவிபாடி காலந்தள்ளி வந்த கபோதிக்கு, அறிவுக்கண்

திறந்திடவும், அன்பு நெறி தெரிந்திடவும் செய்த ஐயனின் அருளால்...நான் ஆபத்துக்களைத் துரும்பாக எண்ணும் துணிவையும், உயிரையும் இழக்க நேரிட்டாலும் உள்ளத்திலேற்பட்ட உண்மையை உரைக்க அஞ்சலாகாது என்ற ஆற்றலையும் பெற்றேன். அரசே! தங்கக் கூண்டிலே அடைபட்டுக் கிடக்கும் கிளியல்ல; வானத்திலே வட்டமிடும் வானம்பாடி—மக்களின் கவி மண்டலங்களை ஆக்கவும் அழிக்கவும் வலிமை பெற்ற மக்களின் கவி, மணி முடிகளைத் தரவும் பறிக்கவும் உரிமை பெற்ற மக்களின் கவி—மக்களின் கவி பேசுகிறேன். மன்னா! மக்களின் கோபத்தைக் கிளறாதீர் என்று எச்சரிக்கிறேன்.

வெற்: இழுத்துச் செல்லுங்கள் நாயை...உம்...துரத்துங்கள், நாட்டை விட்டு வெளியே—நாத்திகன் மதிவாணன் ஒழிக.

[அரசன் சபையைக் கோபமாக முறைக்க, சபையினர் மறுமுறை உரத்த குரலில் 'ஒழிக' என்று கூறுகின்றனர். மதிவாணன் இழுத்துச் செல்லப்படுகிறான்.]

வெற்: மதிவாணன் குடும்பத்தாரைச் சிறையில் தள்ளு.

[காவலனுக்கு உத்தரவிடுகிறான். சபை கலைகிறது]

[வீதியில் மக்கள் செல்லக்கண்டு கற்பகத்தம்மை பதறிச்சென்று...]

கற்: ஐயா! விசாரணை முடிந்ததா? என் மகனுக்கு ஆபத்து ஒன்றுமில்லையே?

திலகா: தீர்ப்பளித்தாகிவிட்டதா?

ஒருவன்: என்னம்மா செய்யலாம்—நாடு கடத்திவிட்டாங்க, உன் மகனை.

திலகா: நாடு கடத்தி விட்டார்களா?

கற்: ஏதோ அந்த மட்டோடு போச்சே, ஆண்டவனே! என் மகன் உயிருக்கு ஆபத்து இல்லை! நாடு கடத்தினா என்ன? வேழநாட்டிலே இருக்கக்கூடாது! அவ்வளவுதானே!

[மக்களை விரட்டியபடி படைவீரர்கள் சிலர் வருகின்றார்கள். வீட்டினுள்ளே அவர்கள் நுழைவதை திலகா தடுத்து...]

திலகா: நில்லுங்கள்! உள்ளே என்ன வேலை?

படை: அவனுக்கு...இவ தங்கச்சி.

திலகா: இவ...!அக்ரமம்! என்ன துடுக்குத்தனமான பேச்சு?

[திலகாவின் கழுத்தைச் சுற்றிவிட்டபடி, இன்னொரு படைவீரன்...]

படை: ச்சீ...வாயாடி! அண்ணன் ஆஸ்தான வித்வானாச்சே என்ற கர்வமா? அது மலை ஏறிப்போச்சு!

கற்: அப்பா, அப்பா! அவ சிறுபெண். கோபிக்காதே.

[கற்பகத்தம்மை பதறிச்சென்று திலகாவின் வாயை மூட திலகா அதைத் தள்ளி...]

திலகா: விடம்மா—என்ன தலையா போய்விடும்? அண்ணனையே நாடு கடத்திவிட்டார்களாம்—இந்த நாட்டிலே நியாயமா கிடைக்கும்? (இதற்குள் சில படை வீரர்கள் உள்ளே நுழைய) பாரம்மா, பாரம்மா! உள்ளே போவதை? ஏ—சிப்பாய்...ஏ...

[வேறு சில படை வீரர்கள் திலகாவின் கரத்தைப் பிடித்துக் கொள்கிறார்கள்]

கற்: (கதறும் முறையில்) அப்பா—இது என்னப்பா—ஏனப்பா இம்சை?

படை: அட, பாரம்மா, விவரம் தெரியாமே பேசறே! இந்த வீட்டைட் பறி முதல் செய்யும்படி உத்தரவு!

இன்னொரு டடை: உங்க இரண்டு பேரையும் அரசாங்க விடுதிக்கு அழைத்துவரச் சொல்லியும் உத்தரவு இருக்கு!

திலகா: சிறையா எங்களுக்கு?

கற்: ஐயோ! ஏம்பா, என் மகனோடு நானும் திலகாவும் இந்த நாட்டைவிட்டுப் போய்விடறோம்பா.

வீரன்: உம்...உம்...நடங்க...உம்.

[படைவீரர் வீட்டை இழுத்துப் பூட்டி, கற்பகத்தையும், திலகாவையும் இழுத்துச் செல்கின்றனர். இருவரும் சிறையில் தள்ளப் படுகின்றார்கள். அரசாங்க ஆணை முரசறையப்படுகிறது.]

படைவீரன்: நாத்திக மதிவாணன் நாடு கடத்தப்பட்டான். அவனுக்குத் தங்க இடம் கொடுத்தால் தண்டனை; உணவு கொடுத்தால் தண்டனை.

[முரசொலி கேட்கிறது]

கவி: மதிவாணன் நாடு கட்டத்தப்பட்டான். மதிவாணன் நாடு கடத்தப்பட்டான்...வெற்றி...வெற்றி...கவிதைக்கு வெற்றி...தமிழுக்கு வெற்றி...ஓடுகிறார்...(வேறு சிலர் வரக்கண்டு...) இனி, அறிவுப் புரட்சி ஆரம்பமாகிவிடும்...மதிவாணன் மகத்தான பரிசு பெற்றுவிட்டான். மதிவாணா! மதிவாணா! (ஏற்கெனவே தாக்கப்பட்டு தள்ளாடி நடந்துவரும் மதிவாணனைத் தொலைவிலே கண்ட கவிராயர்...) மதிவாணா! மதிவாணா!

[எதிர்ப்புறமிருந்து அவரைக் கண்ட மதிவாணன், 'ஐயனே, ஐயனே!' என்று அழுகுரலில் கூறிக் கொண்டே ஓடி வருகிறான். கவிராயரும் மதிவாணனும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்கிறார்கள். படைவீரர்கள் தாக்குகிறார்கள்.]

கவி: மகனே!

படை: வாயாடி! வா, இங்கே!

மதி: ஏன்? எதற்காக? அடப்பாவிகளா! ஏனடா இந்தப் பெரியவரைத் தாக்குகிறீர்கள்? பேயர்களே!

மதி: ஐயோ! அக்ரமத்துக்கு ஒரு அளவே கிடையாதா? சாந்தம் தவழும் இந்த முகத்தைச் சற்றுப் பாருங்களடா! பேரறிவாளரடா! பெரியவரடா இவர்!

[மதிவாணன் தாக்கப்படுகின்றான். ஆவேசமடைந்தவன்போல், ஒரு படைவீரனின் ஆயுதத்தைப் பறித்துக்கொண்டு மிரட்டுகிறான். பலர் கூடி, ஆயுதத்தைப் பறித்துக் கொண்டு பலமாகத் தாக்கிவிடுகிறார்கள் மதிவாணனை. ஒரு பக்கமாக கவிராயரைப் பிடித்து இழுத்துச்செல்கிறார்கள். மற்றோர் புறமாக மதிவாணனை இழுத்துச் செல்கிறார்கள்.]

கவி: கலங்காதே மதிவாணா! கலங்காதே!

மதி: ஐயனே! கொடுமைக்கு ஆளான மெய்யனே!

கவி: மகனே, அஞ்சாதே! அஞ்சாதே துளியும்! வெற்றி நமதே! அஞ்சாதே.

மதி: அறிவு அளித்தோனே! அண்ணலே...

கவி: மதிவாணா! நிமிர்ந்து நில்! ஏறு நடைபோடு! வெற்றி—வெற்றி...

[மயக்கமுற்றுக் கீழே சாய்கிறார் கவிராயர்]

ஒரு படை வீரன்: வாயாடிக் கிழவன் செத்துத் தொலைந்தான்.

காட்சி—101

இடம்: ஊருக்கு வெளியே ஓர் இடம்.

இருப்: பூங்காவனம், மதிவாணன்.

பூங்காவனம்: மதிவாணரே! மதிவாணரே!

மதி: (கண் திறந்து பார்த்து, களைப்புடன்) ஐயா, நான் எங்கே இருக்கிறேன்? என்னைக் காப்பாற்றிய நீங்கள் யார்?

பூங்கா: வேழநாட்டில் இல்லை, மதிவாணரே! ஆஸ்தான கவியாக எந்த வேழநாட்டில் கொலு வீற்றிருந்தீரோ, அந்த வேழ நாடு அல்ல இது...இது ஏழைகள் நாடு...அடுத்து இருப்பது காடு...

மதி: சரியான தண்டனை எனக்கு. கவிராயர் கதி என்ன ஆயிற்றோ? ஐயா, உம் பெயர் என்ன? யார் நீங்கள்?

பூங்கா: என் பெயர் பூங்காவனம்.

மதி: பூங்காவனமா? எங்கேயோ, எப்போதோ கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே.

பூங்கா: சதிகாரன் என்று சபா மண்டபத்திலே பேசி இருப்பார்கள். மக்களை மன்னனுக்கு எதிராகத் தூண்டிவிடு பவன்—ராஜத்துரோகி என ஏசியிருப்பார்கள். கொலுமண்ட பத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்னை, வேழ நாட்டு வெறியர்கள். கவிராயருக்கு நான் நண்பன்.

மதி: (அவன் கரத்தைக் கண்களில் ஒத்திக் கொண்டு) கவிராயர் நண்பரா? அவர் கதி என்ன அய்யா?

பூங்கா: எவ்வளவு முயற்சித்தும் காப்பாற்ற முடிய வில்லை.

மதி: பாவிகள் அவரைப் பலமாகத் தாக்கிவிட்டார் கள்! எனக்கு ஆதரவளித்த அண்ணலைக் காப்பாற்றும் ஆற்றல் இல்லையே எனக்கு! முயற்சித்தேன் நானும். முடிய வில்லை.

பூங்கா: மதிவாணரே! களைப்பு நீங்கியதும் பேசலாம்.

[வேறோர் இடம், மதிவாணரும் பூங்காவனமும், வேறு சிலரும் உள்ளனர்.]

பூங்காவனம்: மதிவாணரே, அறப்போர் தொடுக்க அருமையான சமயம். போங்கள் ஊருக்குள்ளே; விழாப் பந்தலுக்கு வேண்டாம். வேறோர் பக்கம். இவர்கள் வருவார்கள் உம்முடன். சென்று எது உண்மையான சொர்க்கவாசல் என்பதைப் பாடுங்கள். மக்கள் கேட்கட்டும்.

மதி: சரி, பூங்காவனம்.

[போகின்றனர்.]

[சொர்க்கவாசல் விழா. அருமறையானந்தர் அலங் கரிக்கப்பட்ட உயரிய ஆசனத்தில் அலங்கார ஆடை

யுடன் அமர்ந்தபடி உபதேசம் செய்கிறார். 'மெய் யன்பர்களே' என்று கனிவுடன் கூறிவிட்டு, அரசரும் பிரதாணியரும் ரசிக்கின்றனரா என்ப தைக் கண்டறிய விரும்புபவர்போல அவர்களைப் பார்க்கிறார். பக்திமான்கள் என்பதைக் காட்டும் நோக்குடன் அனைவரும் அருமறையானந்தரைப் பாசம் நிறைந்த பார்வையுடன்நோக்குகின்றனர். மாசிலாமணி வெற்றிக் களிப்புடன் நிற்கிறார். மாசிலாமணி ஜாடை காட்ட மடாலயத்தார் சிலர் கை கொட்டுகின்றனர். அதே சமயம் தொலைவில், மரத்தடியில், மதிவாணன் பாடு கிறான். அருமறையானந்தர் செவியில் பலமான கரமோஷம் விழுகிறது. ஆனால் சபையோரின் கரகோஷமல்ல; வெளியே தொலைவிலிருந்து கேட்கிறது. சபையினர் முகத்தில் ஆச்சரியக் குறி கள். மன்னன் பணியாளைப் பார்க்க, பணியாள் ஜாடை புரிந்துவிட்டு வெளியே செல்கிறான். புன்னகையுடன் அருமறையானந்தர் பேசுகிறார்]

அரு: மெய்யன்பர்களே! திரு அருளைப் பெறும் மார்க் கம் எது என்பதைத் திருமறைகள் தெளிவாகக் கூறிவிட்டன.

[சபையிலே ஒரு சீமான் திருமறை என்ன என்று கேட்பவன் போலப் பக்கத்துச் சீமானைப் பார்க்க, அவர் தனக்குத் தெரியாது என அறிவிக்க உதட் டைப் பிதுக்குகிறார்—வேறு சீமான் இதைக் கவனித்து ரசிக்கிறார்.]

[அருமறையானந்தர் தொடர்ந்து பேசுகிறார்.]

அரு: மெய்யன்பர்களே! எவனொருவன் இந்திரியங் கள் எனும் துஷ்டக் குதிரைகளுக்கு, அறிவெனும் கடிவாள மிட்டு அடக்கி, நன்னெறி எனும் பாதையிலே செலுத்து கிறானோ, அவனே, இறைவனடி எனும் திருத்தலத்தை அடைவான்.

[இச் சமயம், குதிரைகள் ஓடும் சத்தமும், சாட்டையடி சத்தமும் கேட்கின்றன. சபையில் பரபரப்பு! மீண்டும் ஒரு முறை மதிவாணன் பாடல்.]

[அருமறையானந்தர் வாழ்க என்ற ஒலி கிளப்புகிறான் மாசிலாமணி—பண்டாரங்கள் மட்டும் களிக்கின்றனர். மும்முறை வாழ்க என்று கூறி பண்டாரக் கூட்டம் கலைகிறது. வேந்தனும் மடாதிபதியும் கலக்கமடைகிறார்கள்.]

[காட்டின் ஓர் பகுதி. மதிவாணன் காடு போய்ச் சேருகிறான். மலைவாசிகள் துணைக்கொண்டு. அவர்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த பூங்காவனத்திடம்...]

மதி: வெற்றி! மகத்தான வெற்றி!

மலைவாசி: விழா, பாழ்!

மதி: மக்கள் கடல்போல் கூடினர், நான் பாடுவதைக் கேட்க!

மலை: விழாவிலே, வேஷதாரிகள் மட்டும்தான்! மக்கள் நம் பக்கம்!

பூங்: (பெருமிதத்துடன்) மதிவாணரே! உமது இசைத் திறமை எனக்குத் தெரியுமே நன்றாக! பாடலின் கருத்து என்ன...?

மதி: எது உண்மையான சொர்க்கவாசல் என்பது பற்றித்தான்.

ஒரு மலைவாசி: இனி, நான்கூடப் பாடப் போகிறேன்.

2வது மலைவாசி: நான் கூடத்தான்.

பூங்: மக்களில் பலர் இன்னும் உன்னை நாஸ்திகன் என்றுதான் எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆகையால் எது ஆஸ்திகம்—எது நாஸ்திகம் என்ற ஒரு பாடலை இவர்கள் மூலம் நாட்டிலே பரப்பு...

ஒரு மலை: அண்ணே, எனக்குப் பாடத் தெரியும்...

2வது மலை: நம்ம சாரீரம், அண்ணே! ஜிலுஜிலுன்னு இருக்கும்! நம்மை மறந்துவிடாதே!

[மூன்றாவது மலைவாசி பாடுகிறான். மதிவாணன் புன்னகையுடன் அவர்களை அணைத்துக் கொள்கிறான்.]

காட்சி—102

இடம்: மடாலயத்தின் உட்புறம்.

இருப்: மாசிலாமணி, அருமறையானந்தர்.

மடாதிபதி: பாவி! கெடுத்துவிட்டானே! அவமானமாகிவிட்டது.

மாசி: பிரமுகர்கள் யாரும் வெளியே போய்விடவில்லை; ஜனக்கூட்டம்தான் வெளியே போய்விட்டது.

மடாதி: வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சீமான்கள் என்ன எண்ணியிருப்பார்கள்:

மாசி: ஆனால் காணிக்கை எதிர்பார்த்ததைவிட அதிகம்!

மடாதி: அதிகம்! மாசிலாமணி! அந்த மதிவாணன் மட்டும் விழாவைக் கெடுக்காமலிருந்தால், அதைவிட அதிகம் குவிந்திருக்கும். தெரியுமா?

காட்சி—103

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—ஓர் கூடம்.

இருப்: வெற்றிவேலன், அமைச்சர், பணியாள், இரு சாமியார்கள், மலைவாசிகள்.

பணியாள்: ஆணவக்காரனை அடித்து விரட்டினோம். ஆனால் ஊராரின் மனதை அவன் மயக்கிவிட்டிருக்கிறான்.

வெற்: எப்படி?

பணி: மதிவாணனின் கவிதைகள் மக்களிடம் பரவி...

வெற்: கவிதைகள்! கவிதைகள்! அவன் பாடுகிறானாம், அதுகேட்டு அவர்கள் ஆடுகிறார்களாம்...! சரி! நாத்திக மதிவாணனின் பாடல்களை நமது மண்டலத்திலே, இன்று முதல் யாரும் பாடக்கூடாது—பாடினால் சிறை. தடை விதிக்கிறோம்.

[பணியாள் ஓடுகிறான்.]

[வீதியில் இரு சாமியார்கள் பாற்காவடியுடன் வருகிறார்கள்—ஒரு வீட்டின் முன் நின்று]

சாமி: பால் காவடி தர்மம்! பால் காவடி தர்மம்!

மாது: தர்மம் செய்தாகிவிட்டது.

சாமி: எந்த சன்னதிக்கு?

மாது: ஏழை எளியவங்க வீட்டுக் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துவிட்டோம்.

சாமி: பாலாபிஷேகம்.

மாது: கிடையாதுங்க...

முதல் பண்டாரம்: ஆசாமி கொடாக்கண்டனாயிருக்கிறான். நாலு நாளாய் நடையாய் நடக்கிறோம்.

2—வது பண்: ஆசாமி சம்மதிக்கவில்லையே!

முதல்: நஞ்சை நிலம் அருமையானது அம்பலம்?

இரண்: தோட்டமும் சிலாக்கியம்தான்.

முதல்: எல்லாம் மடத்துக்குத்தானே தானமாக எழுதி வைக்கிறதாகச் சொன்னான்?

இரண்: என்ன, முடிஞ்சிதா?

மற்றொரு: ஆஹா முடிஞ்சுது! ஆள் போயிருக்கு, தாரை தப்பட்டைக்கு!

இரண்: ஆசாமி போய்விட்டானா! தான விஷயம்?

மற்: தானம் எழுதிவிட்டுத்தான் செத்தான். பூரா சொத்தையும் பள்ளிக்கூடத்துக்கு எழுதி வைத்துவிட்டான்!

முதல்: படுபாவிப்பய! அடியோடு கெட்டுப்போச்சு. வாங்க, வாங்க. மடாலயம் போவோம்!

காட்சி—104

இடம். கடைவீதி.

இருப்: போர் வீரன், மலைவாசி, குடியினர்.

[உரத்த குரலில் மலைவாசி ஒருவன் தடை செய்யப்பட்ட பாடலைப் பாடுகிறான்.]

[சிறு கூட்டம் கூடிவிடுகிறது. வீரர்கள் ஓடோடி வருகிறார்கள்—பிடரியில் கை கொடுத்துத் தள்ளியபடி...]

போர்வீரன்: பாடாதே!

[மலைவாசி பாடுகிறான். போர்வீரன் அவன் வாயைப் பொத்தியபடி]

பாடாதே! தடை—தடை உத்ரதிவு— தெரியாதா?

மலைவாசி: தெரியும்! மன்னனுக்குத் தடை விதிக்கத் தெரியும்! மாவீரருக்கு அதை மீறத் தெரியும்!

போர்வீரன்: போக்கிரி.

மற்றொரு போர்: முட்டாள்!

வேறோர் போர்: இழுத்து வாருங்கள்

மற்றொரு போர்: கலைந்து செல்லுங்கள். உம்... கூட்டம்! என்ன கூட்டம்!

[பாடியபடி இருக்கிறான் மலைவாசி. இழுத்துச் செல்லப்படுகிறான் போர்வீரர்களால். அவன் தெருக்கோடியில் கொண்டு செல்லப்படும்போது, வீதியின் மற்றோர் முனையில் வேறோர் மலைவாசி பாடும் குரல் கேட்கிறது. மக்கள் அந்தப் பக்கம் ஓடுகிறார்கள்...பிடிபட்ட மலைவாசி சிரிக்கிறான்.]

மலைவாசி: தடையா விதிக்கிறீர்கள் தடை! கேள் பாடலை. அதோ! அதோ! அதோ! எங்கும் கேட்கும் அந்த இன்பக்கவிதை! புல்லர்கள் கொட்டம் அழியும் வரையில் புரட்சிக் கவிதை இருந்தே தீரும். தடையாம் தடை! அதோ தடை உடைபடுகிறது.

[வெவ்வேறு இடங்களில் மலைவாசிகள் பாடுகிறார்கள். வேறு ஓர் இடம், மலைவாசிகளுடன் மதிவாணன் உரையாடல்]

1வது மலைவாசி: தடைபோட்டு விட்டான் தன்னலக்காரன்!

2வது மலை: அரசன் அதிகாரமிருக்கிறது!

1வது: மண் பொம்மைகளல்ல நாம். மதிவாணரே! தடையை மீறியாக வேண்டும்.

2வது: தடையை மீறினால் தண்டனை கடுமையாகும்.

3வது: தூக்குமேடையிலும் பாடிக் கொண்டே இறக்கச் சித்தமாயிருக்கிறேன்.

மதி: வீரனே! அரைக்க அரைக்கத்தான் சந்தனம் மணக்கும். தடை, என் கவிதையின் சக்தியை வளர்த்து விடும்.

1வது: மதிவாணரே, தடையை மீறப் போகிறேன் நான்.

2வது: நானும்தான்.

3வது: நான் மட்டுமென்ன?

எல்: நாங்கள் தயார்! தடையை மீறுவோம்!

மதி: இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? மீறுவோம் தடையை! பாடுவோம் கவிதையை!

[பாடுகிறார்கள்.]

காட்சி— 105

இடம்: வெற்றிவேலன் அரண்மனை— உப்பரிகை—

இருப்: வெற்றிவேலன், பணியாள், போர்வீரன், கிழவி.

[வெற்றிவேலன் உப்பரிகையில் உலவியபடி கோபமாக...]

வெற்றி: தடையை மீறிவிட்டார்களா? தரித்திரப் பயல்களுக்கு அவ்வளவு துணிவா? சிறையிலே கிடக்கட்டும் நாய்கள்! கஞ்சிக் கலயமும் இரும்புக் காப்பும்தான் பரிசு இதுகளுக்கு! கவிதை பாடுதுகளாம் கவிதை....(அதட்டும் குரலில்) யார் அங்கே? (பணியாள் ஓடிவர) தயவு தாட்சண்யம் கூடாது. தம்பி, அண்ணன், தாய், மக்கள், மனைவி, தகப்பன், எந்த உறவு முறை இருந்தாலும், பாடினால் பிடித்துத் தள்ள வேண்டும் சிறையிலே...

பணி: தள்ளிக் கொண்டுதானிருக்கிறார்கள்...

வெற்றி: இன்னமுமா?

பணி: ஆமாம் அரசே! பாடுபவர் ஓயவில்லையே!

வெற்றி: அடித்து நொறுக்குங்கள், ஆணவக்காரரை—தடியர்கள்...

[ஒரு வீதி, கிழவி ஒருத்தி ஏதோ பேசுகிறாள்; மக்கள் பலர் அவளைச் சூழ்ந்து கொள்கின்றனர்.]

மக்கள்: பாடுவாயா பாட்டி? பாடவா வந்திருக்கிறே?

கிழவி: பொக்கை வாய்க் கிழவி நான்—நானு என்னத்தைப் பாடறது?

[அப்போது அங்கே வருகிறான் ஒரு போர்வீரன்.]

போர்: பாடினாயா?

கிழவி: யாரு? நானா? பாட்டா? என்ன பாட்டு?

போர்: என்ன பாட்டா? உங்க பாட்டன் பாடினது!

[மக்களைத் தள்ளிவிட்டு, கிழவியைப் போகச் சொல்லிவிட்டு, அவள் போனபிறகு போர்வீரன் போகிறான்.]

கிழவி: (ஒரு சிறுமியைப் பார்த்து) கொழந்தே! என்னம்மா அமளி? என்ன பாட்டு அது?

சிறுமி: பாட்டி, உனக்குத் தெரியாதா? மதிவாணர் பாட்டு, நம்ம ராஜா தடை செய்திட்டாரு...

கிழவி: பாட்டையா? என்னடி இது, பைத்தியக்கார ராஜாங்கம்! பாட்டு பாடினா என்னவாம்...?

சிறுமி: இந்தப் பாட்டு மட்டுந்தான் பாடக்கூடாதுன்னு சட்டம், பாட்டி!

கிழவி: அந்தப் பாட்டு தெரியுமாடி கண்ணு உனக்கு?

சிறுமி: ஓ, தெரியுமே! ஆனா பாடமாட்டேன்! அடிப்பாங்க—தடியாலே—தலைமேலே!

கிழவி: (செல்லமாக) அவன் யார்டி கொழந்தையை அடிக்கிறவன்; அடிப்பானாமேல்லே! நீ பாடு கொழந்தே! எவனாச்சும் வந்தா நான் பாத்துக்கறேன்...!

[கிழவி தன் கைத்தடியைக் காட்டுகிறாள். சிறுமி பயந்து பாடுகிறாள். கிழவி பாட்டைக் கேட்டுக் களித்தபடி, இடை இடையே...]

கிழவி: நல்லாத்தானே இருக்குது பாட்டு! இதையா தடை செய்யறாங்க?

[சிறுமியின் பாடல் ஒலி கேட்டு ஓடி வருகிறான் ஒரு போர் வீரன். சிறுமியின் காதைத் திருகியபடி...]

போர்: பாடாதே! ச்சீ...பாடாதே!

கிழவி: (தடியைக் கொண்டு போர்வீரன் மேல் தட்டி) யார்டா அவன்? அறிவு கெட்டவனா இருக்கியே! கொழந்தை எவ்வளவு அழகா பாடுது, அடிக்கிறியே! புள்ளே குட்டி இல்லே உனக்கு?

போர்வீரன்: உனக்கு புத்தி கித்தி இருக்கா? இந்த பாட்டு பாடக்கூடாது! தடை உத்தரவு. தெரியுமா?

[சிறுமியைப் போர்வீரன் துரத்த அவள் ஓடிவிடுகிறாள். கிழவி முனகிக்கொண்டே இருக்கிறாள்.]

கிழவி: புத்தி கெட்டவன்—புத்தி கெட்டவன்.

போர்: உனக்கு கேட்குது பூஜை—மரியாதையா போகமாட்டே?

கிழவி: போக முடியாது! என்னா செய்து விடுவே? நாலு பேரப் பிள்ளைங்க இருக்கிறாங்க எனக்கு! உன்னுடைய எலும்பை நொறுக்கிடுவாங்க!

போர்: என்னடா தொல்லை இது! பாட்டியம்மா! ஊர் இருக்கிற இருப்பு தெரியாமே பேசாதே! போ வீட்டுக்கு.

கிழவி: ஊர் இருக்கிற லட்சணம்தான் தெரியுதே—பாடக்கூடாதாம்—பாடினா அடியாமில்லே—என் இஷ்டம்! நான் பாடுவேன்! உனக்கென்ன?

[பாட்டி தன் நடுங்கும் குரலில் பாடுகிறாள். அவளை சூழ்ந்துகொள்கிறது ஓர் கூட்டம். வேறு வழியின்றி அவளையும் இழுத்துச் செல்கிறான் போர் வீரன்...]

[சாலையில் போகிற ஒருவன் பாடுகிறான். போர் வீரர்கள் அவனைத் துரத்திச் செல்கிறார்கள். சோலையில், பெண்கள் பாடுகிறார்கள்—சிறை நிறைகிறது. சிறையில் உள்ள கைதிகளை அரசன் பார்வையிட வருகிறான். சிறைப்பட்டோரும் கைதிகளும் சேர்ந்து பாடுகிறார்கள். மன்னன் வெட்கப்பட்டுக் கொண்டே வெளியே செல்கிறான்...]

[சிறைக்கூடத்தில்]

ஒரு கைதி: அண்ணே, இது என்ன! புதுப் புது ஆசாமிகளா கொண்டு வந்து தள்ளிகிட்டே இருக்கிறாங்க? பெரிய கொள்ளைக்கூட்டம் போலிருக்கு!

மற்றோர் கைதி: ஆசாமிகளைப் பார்த்தா அப்படித் தெரியலையே! (உள்ளே வந்து தடை மீறுபவனைப் பார்த்து) கொள்ளையா? கொலையா?

மலைவாசி: (புன்சிரிப்புடன்) அதெல்லாம் இல்லை யப்பா—பாட்டுப் பாடினேன்.

ஒரு கைதி: (திடுக்கிட்டு) பாட்டுப் பாடினா?

மலை: பாடாதேன்னு அரசாங்கம் தடை போட்டது.

மற்றோர் கைதி: பாடக் கூடாதுன்னா தடை?

மலைவாசி: எல்லாப் பாட்டுக்கும் தடையில்லை—மதி வாணர் பாட்டுக்கு மட்டும் தடை—

ஒரு கைதி: அது என்ன பாட்டு தம்பி! ராஜாங்கத் துக்குப் பிடிக்காத பாட்டு...

ம. கைதி: களவு எப்படிச் செய்யறது—கொலை எப்ப டிச் செய்யறதுன்னு புதுப்புது வழி சொல்லிக் கொடுக்கிற பாட்டுப் போல இருக்கு...

மலை: அதெல்லாம் இல்லையப்பா—ஜாதி கூடாது—பேதம் கூடாது. கடவுள் பேரைச்சொல்லி ஏழைகளை ஏமாற் றக் கூடாது. இப்படிப்பட்ட விஷயமிருக்கு, அந்தப் பாட் டிலே.

ஒரு கைதி: நல்ல விஷயம்தானே?

ம. கைதி: இது பாடக்கூடாதுன்னா தடை?

மலை: ஆமாம்.

ஒருகைதி: நல்ல ராஜாங்கமா இருக்கே.

ம. கைதி: தம்பி! அந்தப் பாட்டைப் பாடு கேட்கலாம்!

மலை: தடையை மீறிப் பாடினா இங்கேயும் தண்டிப் பாங்களே.

ம.கைதி: கொலை-கொள்ளை போல அக்ரமம் செய்து தண்டனை அனுபவிக்கிறதைவிட, இந்தத் தம்பி மாதிரி

நல்ல காரியம் செய்து தண்டனை பெற்றா பெருமைதான். பாடு தம்பி! ஒரு ராஜ்ஜியமே கிடுகிடுன்னு நடுங்குது இந்தப் பாட்டைக் கேட்டுன்னா, மனுஷனாய்ப் பிறந்தவன் அந்தப் பாட்டைக் கேட்காமெ இருக்கலாமா? பாடு...

ம. கைதி: ஆமாம்—பாடு—வெளியே பாடினா, உள்ளே தள்ளினாங்க! இங்கே பாடு! வெளியே தள்ளறாங்களான்னு பார்ப்போம்!

[மலைவாசி பாடிக் காட்ட...]

ஒரு கைதி: படுபாவிப் பயலுக! இதுக்கா தடை போட்டானுங்க?

ம. கைதி: அண்ணே! இது ரொம்ப அக்ரமம்—இந்த ராஜாங்கத்துக்கு...

ஒரு கைதி: பைத்யம் பிடிச்சுப் போச்சி போல இருக்கு..

ம. கைதி: அண்ணே! தடையை நாமும் உடைக்க வேண்டியதுதான். தம்பி! அந்தப் பாட்டை எங்களுக்குச் சொல்லிக் கொடு!

ஒரு கைதி: ஆமாம்.

[மலைவாசி மகிழ்கிறான்]

## காட்சி—106

இடம்: சிறையில் பெண்கள் பகுதி.

இருப்: திலகவதி, பெண்கள், காவலாளி.

[திலகாவும் வேறு சில மாதரும் இருக்கிறார்கள். திலகாவின் முகத்திலே சோர்வு தெரிகிறது. அச்சம் இல்லை. சிறைக் கூடத்திலே ஆடவர் பகுதியிலே மன்னன் பார்வையிட்டபோது கிளம்பிய ஒலி, லேசாகக் கேட்கிறது. பெண்கள் என்ன சத்தம் என்று உற்றுக் கேட்கிறார்கள். சிறைக் காவலர் சிலர் ஓடோடி வந்து சுறுசுறுப்பாக இங்கு மங்கும் நடந்து காவல் செய்கிறார்கள்.]

ஒரு மாது: என்னப்பா கூச்சல்?

காவலாளி: அரசர் இங்குகூட வருகிறார்...

ஒரு பெண்: அரசரைக் கூடவா சிறையில் போடுகிறார்கள்?

காவ: அம்மா, புண்யவதிகளே! கொஞ்சநேரம், அவர் வந்து போகிறவரையிலே, வாயை மூடிக்கிட்டு இருங்களேன்! பெரிய தொல்லையாப் போச்சு உங்களாலே...

ஒரு பெண்: திறந்து விட்டுவிடு! உனக்கு ஏன் வீணான தொல்லை? நாங்க பேசாம வீட்டுக்குப் போயிடறோம்!

காவ: சரிதான்—என் தலை?

[பெண்கள் சிரிக்கிறார்கள்]

திலகா: பாவம், அந்த ஆளோட ஏன் வம்பு...?

காவ: என் பிழைப்பில் மண் போடாதீங்க. மகாராசிகளே! நான் புள்ளெ குட்டிக்காரன்!

திலகா: அங்கே என்னப்பா அமளி...

காவ: அமளியா? அமளி இருந்தாத்தான் வேலை சுலபமாயிடுமே! அடித்து நொறுக்கி விட்டிருப்பாங்களே! சிறையிலே இருக்கிறவங்க எல்லாம், அரசர் வருகிறபோது அந்தப் பாட்டை கும்பலா கூடிக்கிட்டு பாடறாங்க...

ஒரு பெண்: எந்தப் பாட்டை...

காவ: எல்லாம் இவங்க அண்ணன் பாட்டைத்தான்...

இன். பெண்: உனக்குத் தெரியாதா அந்தப் பாட்டு..?

காவ: சரி—எனக்கே தீம்பு வைக்க ஆரம்பமா?—துணிஞ்ச பேர்வழிங்க—எனக்குப் பாட்டும் தெரியாது; கூத்தும் தெரியாது.

இ. பெண்: புளுகு—தெரியும்—ஒரு நாள் பாடினதை நானே கேட்டிருக்கிறேனே!

காவ: யார்—நானா—பாடினேனா—அந்தப் பாட்டையா?

இ. பெண்: உரக்க இல்ல—மெதுவாக! ஆனா (திலகாவைப் பார்த்து) திலகா! இவருடைய குரல் ரொம்ப நல்லாயிருக்கு.

காவ: (புன்னகையுடன்) வம்புக்கார பொம்பளைங்க—போங்க போங்க—வரப் போறாரு மன்னரு...

ஒ. பெண்: (கெஞ்சும் முறையில்) அவர் வருவதற்குள்ளே பாடிடு. ஒரே ஒரு தடவை—பாடமாட்டாயா—இரு...இரு. நாங்க பாடறோம் பாரு இப்போ—வாங்கடி, பாடலாம்.

திலகா: அந்தப் பாட்டு வேண்டாம். நேற்று ஒரு பாட்டு கட்டினமே...

இ. பெண்: எந்தப் பாட்டு? ஓஹோ! ஏமாந்த மாப்பிள்ளை—பாட்டா?

திலகா: ஆமாம்—அதை...

இ. பெண்: பாடுவமா?

திலகா: அரசன் வருகிறபோது...எல்லாப் பெண்களும் கையைத் தட்டி...

பெண்கள்: ஆமாம்—அதுதான் சரி.

[காவலாளிகள் வருகிறார்கள். பின்னால் வெற்றிவேலன் வருகிறான். திலகா துவக்குகிறாள், பாட்டை. அனைவரும் சேர்ந்து பாடுகிறார்கள்.]

[வெற்றிவேலன் பாடலைக் கேட்டுக் கோபம் கொள்கிறான். காவற்காரர்கள் திடுக்கிட்டு மிரட்டுகிறார்கள் பெண்களை. மன்னன் ஒரு காவல்காரனைப் பார்த்து...]

வெற்றி: இங்கேதானே, அந்த மண்டைக்கர்வியின் தங்கை திலகா இருக்கிறாள்?

காவல்: ஆமாங்க!

திலகா: (கேலிக் குரலில்) ஓ! ராசாவா! என்னையா தேட றீங்க? ஏன்?

ஒரு பெண்: புதுசா, ஏதாவது தடை உத்திரவு போடு வாரு...

இன்னொரு பெண்: (குறும்பாக) ஒரு வேளை, பெண் களெல்லாம், இனி என் நாட்டிலே ஜடை போட்டுக் கொள் ளக்கூடாதுன்னு உத்திரவு பிறக்குமோ, என்னமோ?

வெற்றி: இழுத்து வாருங்கள், அந்த நாயை—சிறை விசாரணைக் கூடத்திற்கு...

[மன்னன் போகிறான் கோபமாக]

திலகா: (உரத்த குரலில்) ஐயா, வீராதி வீரரே!

கற்பகம்: திலகா பேசாதிருக்கமாட்டே?

திலகா: நீ சும்மா இரும்மா!

[மன்னன் திடுக்கிட்டு, எதிர்ப்புறம் வந்து நிற்கிறான் மமதையுடன். திலகா அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு]

திலகா: அடே! மனுஷன் போலவேதான் இருக்கிறார் ராஜா...

[பெண்கள் சிரிக்க, மன்னன் கோபங்கொண்டு...]

வெற்றி: அவன் எவ்வளவோ அடக்கமானவன். இது ஒரு அடங்காப் பிடாரி!

[காவலாளி தலை அசைக்கிறான்]

வெற்றி: ஏய், வாயாடி! பெண்ணாயிற்றே என்பதால் சவுக்கடி இன்னமும் விழாமலிருக்கிறது...

திலகா: சவுக்காலடிப்பீங்களா?...ஹா...! அது உட லைத்தான் புண்ணாக்கும் உலுத்தனே! மனதையே புண் ணாக்கிவிட்ட மாமிசப் பிண்டமே! தடை போட்டாயே,

தடை, பாடலுக்கு! முடி தாங்கியே! பார்த்தாயா உன் தடை தவிடுபொடியாவதை? வெட்கம் இருக்க வேண்டாமா உனக்கு? நீயும் ஒரு அரசனாக நாட்டை ஆளுகிறாயே நாட்டை! காட்டிலே இருந்து என் அண்ணா கட்டளையிடு கிறான்; உன் தடை உடைபடுகிறது. பூட்டி வைத்துவிட்டு வீரம் பேசுகிறாய் எங்களிடம். (கோபம் அதிகமாகிறது மன்னனுக்கு...) உருட்டு விழி என்னை ஒன்றும் செய்து விடாது! நாட்டுக்கு நீ அரசன்! ஆனால் என் அண்ணனிடம் தோற்றுப் போன உன்னை நான், அரசன் என்றா மதிப் பேன்! கொலுப்பொம்மை! கொக்கரிக்கும் கொலுப் பொம்மை!

பெண்கள்: கொக்கரிக்கும் கொலுப்பொம்மை!

திலகா: மதம் கெட்டுவிடும் என்று இந்தப் பரம பக்த ருக்குத் தாங்கமுடியாத பயம்! அதனாலே என் அண்ணனை நாடு கடத்தினாராம்! உண்மைக் காரணம் எனக்குத் தெரியும்!

வெற்றி: என்னடி உளறுகிறாய், பேதையே?

திலகா: மன்னன் நீ—உன்னை மணம் செய்து கொள்ள மறுத்தாள் குமாரதேவி—உன்னை துச்சமெனக் கருதி, இசை அரசனான என் அண்ணனிடம் காதல் கொண்டாள்! பொறாமை உனக்கு—வெட்கம் உனக்கு. ஆகவே சமயம் பார்த்துச் சாகசமாக, என் அண்ணனைப் பழி தீர்த்துக் கொண்டாய்.

வெற்றி: ச்சீ! போக்கிரிப் பெண்ணே!

திலகா: மறுக்க முடியாது உன்னால்! இந்த மண்டலம் அறிந்த இரகசியம் இது. போகிறதைப்பார்! அதிகாரத்தை நிலைநாட்ட முடியாத இவனுக்கு அரசன் என்ற பட்டம்.

[மன்னன் கோபமாக வெளியே செல்கிறான்...]

அரசன்: துரோகி (பணியாளிடம்) மதிவாணனின் தங்கை திலகவதியை தவனக் காட்டுக் கோட்டைக்கு இழுத்

துக் கொண்டு வா, இன்றிரவு! துணைக்கு, நாலு போர் வீரர்களை அழைத்துச் செல்!

[பணியாள் உத்திரவு பெற்றுக் கொண்டு செல்கிறான்...]

அர: (புதிய களிப்புடன்) அதுதான் சரி!...அவமானம் அவனை அணுவணுவாகச் சிதைக்கட்டும்! என் திட்டத்தைக் கெடுத்தான்! என் சட்டத்தை உடைத்தான்! (குரூரமான பார்வையுடன்) சிறையில் அந்தச் சிறுக்கி என்னை எவ்வளவு கேவலமாகப் பேசினாள்...அவளை...

[அரசன் போகிறான். பிறகு...]

சேவகன்: எங்கே அந்த வாயாடி?

திலகா: பாபிகளே! பெண்களிடமா இப்படி முரட்டுத் தனம்? வேண்டாம்...அக்ரமக்கூத்தாடாதய்யா.

சேவ: வாயாடி, கிளம்பு!

கற்ப: என்னப்பா இது? திலகா! நெருப்புடன் விளையாடாதே என்றால் கேட்டாயா?

தில: அம்மா...அம்மா...

கற்: ஐயா, இதென்ன அக்ரமம்?

சேவ: இது அரசன் ஆணை.

தில: அபலைகளை இம்சிக்கச் சொல்வதா? இதுவா அரசன் ஆணை?

சேவ: என்னிடம் வாதாடாதே! விடு...!

கற்ப: விடமாட்டேன்.

[சேவகன் இழுத்துச் செல்ல, திலகா, 'அம்மா, அம்மா' எனக் கதறுகிறாள். மற்றப் பெண்கள் 'திலகா! திலகா!' எனக் கூச்சலிடுகின்றனர்.]

[தவனக் காட்டுக் கோட்டை. திலகா அரசனால் கற்பழிக்கப்படுகிறாள். அரசன் வெளியில் போகும் போது அங்குள்ள சேவகனைப் பார்த்து,]

அரசன்: அவளை இஷ்டம்போல் விட்டுவிடுங்கள்! தடை செய்ய வேண்டாம்.

[திலகா அலங்கோலமான நிலையில் சுற்றுகிறாள். காட்டில் பைத்தியம் பிடித்தவள் போலாகிறாள் திலகா. பாடுகிறாள்.]

காட்சி—107

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—ஓர் கூடம்.

இருப்: வெற்றிவேலன், அமைச்சர்.

[நிம்மதியற்ற மனத்தினனாயிருக்கும் வெற்றிவேலனிடம் அமைச்சர் வருகிறார்.]

அமை: நல்ல சேதி, அரசே! நல்ல சேதி!

வெற்றி: என்ன சேதி? மதிவாணன் மாண்டானா?

அமை: அதைவிட நல்லசெய்தி, அரசே! அந்தக் குமார தேவியை அழிக்க ஓர் அருமையான சந்தர்ப்பம் கிடைத்து விட்டது.

வெற்றி: விளக்கமாகப் பேசும் ஐயா!

அமை: நடு நாட்டரசன் போர் தொடுத்து விட்டான்—குமாரிக்குப் பேராபத்து—படைகளைச் சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டான்.

வெற்றி: (சிறிது யோசித்துவிட்டு) படைகள் புறப் படத் தயாராகட்டும். நடுநாட்டரசன் படைகளை நமது படைகள் தாக்கட்டும், பின்புறமிருந்து...

அமை: (ஆச்சரியத்துடன்) அரசே!

வெற்றி: ஆமாம். குமாரியை மீட்டாக வேண்டும். வெட்கப்படட்டும் குமாரி. எந்த வெற்றிவேலனை அவள் அலட்சியப்படுத்தினாளோ அவனுடைய வாள் பலத்தால் தான் காப்பாற்றப்பட்டாள் என்ற சொல் போதும், அவள் வாழ்வைச் சுட்டெரிக்க.

[படை வீரர்கள் செல்கிறார்கள்.]

காட்சி—108

இடம்: கோட்டையின் மேல்தளம்.

இருப்: குமாரதேவி, வெற்றிவேலன்.

[நடு நாட்டரசன் படை பிளக்கப்படுவதைக் காண்கிறான், குமாரியின் ஒற்றன். தளபதி ஒருவன் குமாரதேவியிடம் சேதி கூறுகிறான். குமாரி, களிப்படைகிறாள்...வேறோர் ஒற்றன் விறைக்க விறைக்க விறைக்க ஓடி வருகிறான்...]

ஒற்றன்: நடுநாட்டரசன் படைகளை, வெற்றிவேலன் படைகள் பிளந்துவிட்டன! கடும்போர்! நடுநாட்டரசனின் படை வரிசை குலைந்து விட்டது.

குமாரி: (பூரிப்புடன்) இதுதான் தக்க சமயம், தாக்கு!

[குழல் ஊதப்படுகிறது. குமாரி தன் ராணுவ உடையைச் சரிப்படுத்திக்கொண்டு குதிரை மீது ஏறுகிறாள். படைகள் கிளம்பும் ஒலி கேட்கிறது...]

[கோட்டையின் முன்புறம் குமாரியும் காப்பாளரும் நிற்கிறார்கள். எதிர்ப்புறத்திலிருந்து வெற்றிவேலனும் துணைவர்கள் நால்வரும் வருகிறார்கள். வெற்றிவேலனின் கோலம், அவன் களத்திலிருந்து வருகிறான் என்பதைக் காட்டுகிறது. அருகே வந்ததும், குமாரி, தழதழத்த குரலில்...]

குமாரி: இந்தப் பேருதவியை என்றும் மறக்க முடியாது. என் நாடு அடிமைச் சாவடியாகியிருக்கும், தங்கள் உதவி கிடைத்திராவிட்டால்...

வெற்றி: குமாரதேவியாரே! என் கடமையைச் செய்தேன்.

குமாரி: தங்கள் வீரவாளை என் நாடு என்றென்றும் போற்றிப் புகழும்...

வெற்றி: நாடா? (சிறிதளவு பெருமூச்சு) சரி, போகலாம்.

குமாரி: (அவன் மனதை அறிந்து கொண்டு) நானுந்தான் தங்கள் வீரவாளைப் போற்றுகிறேன்.

வெற்றி: (ஒரு கணம் மகிழ்ச்சிகொண்டு மீண்டும் சோகமாக) வாளையா?

குமாரி: தங்கள் வீரவாளை அனைவரும்தான் போற்றச் செய்வர்.

வெற்றி: (சலிப்புடன் குதிரையைத் தட்டிவிட்டு) போகலாம்.

[வெற்றிவேலன் போகிறான். குமாரி அவனைத் தொடர்ந்து செல்கிறாள். இருநாட்டு வீரர்களும் அவர்கள் பின்செல்கின்றனர்.]

காட்சி—109

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—உப்பரிகை.

இருப்: மரகதமணி, பணியாள், வீரன், குமாரதேவி, வெற்றிவேலன்.

[மரகதமணி விளையாடிக் கொண்டு தடை செய்யப்பட்ட மதிவாணன் பாடலைப் பாடுகிறாள். பணியாள் மரகதமணியின் அருகே சென்று பாடாதபடி தடுக்கிறான். மரகதம் அவன் பேச்சை சட்டை செய்யாமல் ஓடி ஆடிப் பாடிக் கொண்டு இருக்கிறாள். பணியாள் பதறுகிறான்]

மரகதம்: நான் பாடுவேன்! நீ யார் தடுக்க?

பணியாள்: அப்பாவின் உத்திரவம்மா! பாடக் கூடாது.

[குழந்தை அவன் கையைக் கடித்துவிட்டு, சிரித்தபடி மேலும் பாடுகிறது. குழந்தையை அவன் பிடிக்க முயலுகிறான். குழந்தை தவறி மாடியிலிருந்து கீழே விழுகிறது. பணியாள் பதறி... 'ஐயோ' என்று கூவுகிறான். குழந்தைக்குப் பலத்த அடி. இரத்தம் கசிகிறது...]

காட்சி—110

இடம்: களம்.

இருப்: குமாரதேவி, வெற்றிவேலன், தூதுவன்.

[யுத்த களத்தில் குமாரதேவியின் கூடாரம். போர்க் களத்துப் படத்தைப் பார்த்தபடி இருக்கிறாள், வெற்றிவேலனுடன். அப்போது அவசரமாக வந்து சேர்ந்தான், வெற்றிவேலன் நாட்டு வீரன்.]

வீரன்: இளவரசிக்குப் பேராபத்து. மருத்துவர் உடனே தங்களை வரச்சொன்னார்.

குமாரி: என்ன, இளவரசிக்கா?

வெற்றி: என் குழந்தை மரகதமணிக்கா? என்னடா ஆபத்து?

வீரன்: கடுமையான ஜுரம்—பலமான அடி—ஆபத்தான நிலைமை.

குமாரி: போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்—தயங்க வேண்டாம். நிலைமை இங்கு பரவாயில்லை, புறப்படுங்கள்.

[வெற்றிவேலன் மனம் பதறியவனாய்ப் புறப்படுகிறான்...]

காட்சி—111

இடம்: வெற்றிவேலன் அரண்மனை.

இருப்: வெற்றிவேலன், மரகதமணி, மருத்துவர், பணியாட்கள்.

[வெற்றிவேலன் அரண்மனையில் ஓர் கூடம்—மரகத மணி படுக்கையில்—சேடிகள், பணியாளர்கள், மருத்துவர்கள் உள்ளனர். மரகதமணி புரண்ட படி உளறிக் கொண்டிருக்கிறாள்.

மரக: மாமா! பாடு மாமா—பாடு—மா...மா!

மருத்: (சேடியிடம்) அந்த ஒரு பேச்சுத்தான், வேறே நினைப்பு இல்லை—வேறே பேச்சு இல்லை—மாமா—பாட்டு...

சே: நெருப்பாகக் காயுது உடம்பு!

மருத்: நிலைமை ஆபத்துதான்—மன்னர் என்ன சொல்வாரோ?

[வெற்றிவேலன் இறைக்க இறைக்க ஓடிவருகிறான்...]

வெற்: கண்ணே, மரகதம்! அடடா! இவ்வளவு நிலமை மோசமாகிற வரையிலா பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? மருத்துவரே! என்ன இது?

மருத்: (மரியாதையாக) கடுமையான ஜுரம், குழந்தை. பாடியிலிருந்து விழுந்துவிட்டது.

வெற்: (மண்டைக் கட்டு இருக்கக் கண்டு பதறி) பலமான அடி—மடப்பயல்! பணியாள் தூங்கிவிட்டானா? எப்படி விழுந்தது மரகதம்?

மரக: (கண் திறக்காமல் குளறு மொழியில்) பாட்டுப் பாடு—பாடு—மாமா—ஒரே ஒரு பாட்டு.

[வெற்றிவேலன் முகம் சுளித்துக் கொள்கிறான்.]

மருத்: எனக்குத் தெரிந்த மூலிகைகள் எல்லாம் கொடுத்தாகிவிட்டது. குழந்தையின் மனம் ஒரே விஷயத்தில் பதிந்துவிட்டது. வேறு நினைவு இல்லை. இப்படியே இருந்தால் பேராபத்துதான்.

வெற்றி: உளறாதே! என்ன விஷயத்திலே மனம் பதிந்துவிட்டது?

மருத்: குழந்தை கீழே விழுகிறபோது மதிவாணன் பாட்டைப் பாடிக் கொண்டிருந்தது. தடுத்தான் காவலன்; தவறி விழுந்துவிட்டது. அதிலேயிருந்து குழந்தைக்கு மதிவாணன் மேலேயும், அவன் பாட்டின் மேலேயும் நினைவு. வேறு நினைவு எதுவும் கிடையாது.

வெற்றி: சதியா செய்கிறீர்கள்? மதிவாணன் பாட்டுதான் மருந்தாம்! மிரட்டுகிறாயா என்ன! என் சுபாவம் தெரியுமே உனக்கு! என்னிடமா இந்த வேலை எல்லாம்?

மர: மாமா...பாடு...

வெற்றி: (வேதனையுடன்) என்ன செய்வது நான்? அந்தத் துரோகியிடமா மண்டியிட வேண்டும். என் மகளின் உயிர் அவன் பாட்டிலா ஒட்டிக் கொண்டிருக்கிறது? மருத்துவரே! என்னைச் சித்திரவதை செய்யவேண்டாம்! எங்கு இருக்கும் மூலிகையாக இருப்பினும், சொல்லுங்கள்—கொண்டு வருகிறேன்.

மருத்: வீண் வேலை! மதிவாணன் சீக்கிரம் வந்தாக வேண்டும்! உள்ளம் வெந்து கிடக்கிறது குழந்தைக்கு...

[பாய்ந்து சென்று, மருத்துவரின் கழுத்தை நெறித்து விடுவதுபோல் பிடித்துக் குலுக்கி...]

வெற்றி: பாவி! என்னைக் கேலியா செய்கிறாய்? எவனை இந்த நாட்டிலே இருக்கக் கூடாது என்று கட்டளையிட்டேனோ அவனை வரவழைக்க வேண்டும் என்கிறாயே! எவ்வளவு துணிவு?

மருத்: நிலைமை புரியவில்லையா வேந்தே! மரணத்தின் பிடியில் இருக்கிறாள் மரகதம். மதிவாணன்தான் அவளைக் காப்பாற்ற முடியும்.(அவன் அருகே சென்று அணைத்தபடி) வீண் கௌரவம் குறுக்கிடக்கூடாது வேந்தே! குழந்தையைக் கொல்லாதீர்! என்னால் பொறுத்துக் கொண்டி

ருக்க முடியாது! பல கொடுமைகளைச் செய்தீர் இதுவரையில்! ஆனால் இது எவ்வளவு கொடியவனும் செய்யக்கூசும் பாதகம்! மகளைச் சாகடிக்காதீர் உமது மமதையால்! வேண்டாம்! உலகம் உம்மைச் சும்மா விடாது!

*[ஆத்திரமாகப் பேசியதால் வைத்தியர் கீழே சாய்கிறார் - வெற்றிவேலன் அவரை விறைக்க விறைக்கப் பார்த்துவிட்டு மீண்டும் ஓடி மரகதமணியைப் பார்க்கிறான். ''பாடு மாமா பாடு! ஒரே பாட்டு...'' என்று குழந்தை குளறுகிறது. வேதனை தாங்காமல், வெற்றிவேலன் பணியாளிடம், 'மதிவாணனை அழைத்து வாருங்கள்...' என்று கூறிவிட்டு படுக்கை அருகே தலைகவிழ்ந்த வண்ணம் அமருகிறான்.]*

### காட்சி—112

இடம்: காடு.

இருப்: மதிவாணன், மருத்துவர், பூங்கோதை.

*[மதிவாணனைத் தேடி மருத்துவர் வருகிறார்.]*

மருத்: மதிவாணா, மறுக்காதே! மரகதமணியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! வேந்தன் துடிக்கிறான்.

மதி: (வெறுப்புடன்) கடிக்க வரும் பாம்புகூடத்தான் மருத்துவரே அடிபட்டால் துடிக்கிறது... (தன் இதயத்தைக் காட்டி) இங்கே எவ்வளவு வேதனை குழம்பிக் கொண்டிருக்கிறது தெரியுமா?

மருத்: தெரியுமப்பா! அங்கே அன்புக்கு இடம் உண்டு என்பதும் தெரியும்.

மதி: என் தாய் சிறையில்! திலகா இருக்குமிடம் தெரியாது! நான் காட்டில்! அரண்மனையில் உள்ள புலிக்குப் பரிந்து பேச வருகிறீர் நீர்!

மருத்: மரகதமணிக்காக அப்பா! மமதைகொண்ட மன்னனுக்காக அல்ல. அவனுடைய அக்ரமத்துக்காக அந்தக் குழந்தை சாக வேண்டுமா? வா, மதிவாணா...

மதி: மருத்துவரே, என்னை மீண்டும் அந்தக் கொடிய வன் இருப்பிடமா வரச் சொல்கிறீர்? சரி! மரகதமணிக்காக வருகிறேன்! ஆனால் என் தோழர்களை விடுதலை செய்தாக வேண்டும் முதலில்! என் பாடலுக்கு விதித்துள்ள தடை நீக்கப்படவேண்டும்! என் தாயை விடுதலை செய்யவேண்டும்!

மருத்: இதைக்கூடச் செய்ய முடியாதா? வா...

மதி: செய்துவிட்டுச் சேதி அனுப்பும்!

[மருத்துவர் போகிறார். விடுதலை செய்யப்பட்ட மலைவாசிகள் வருவது கண்டு...]

மதி: விடுதலை...பூங்கோதை விடுதலை...அறப் போர் வீரர்கள் எல்லோரும் விடுதலை! வெற்றி வீரர்கள் வருகிறார்கள்! தடையை மன்னன் நீக்கிவிட்டான்!

பூங்: மக்களின் சக்திக்குமுன் மன்னன் என்ன செய்ய முடியும்?

மதி: ஆனால், பூங்கோதை! மரகதமணியைக் காப் பாற்றத்தானே மன்னன் இவ்வாறு செய்தான்!

பூங்: காரணம் அதுமட்டுமல்ல மதிவாணரே! மன் னன் நமக்கு மகிழ்ச்சி தந்தான். நாமும் அவனுக்கு மகிழ்ச்சி தருவோம்! மரகதமணியைக் காப்பாற்ற அரண்மனை சென்று வாரும்...

மதி: நான் சென்று என்ன செய்வது?

பூங்: இதோ மூலிகை! கடும் காய்ச்சலையும் மனக் குழப்பத்தையும் இது போக்கும்.

காட்சி—113

இடம்: வெற்றிவேலன் அரண்மனை—ஓர் கூடம்.

இருப்: மதிவாணன், மருத்துவர், குமாரதேவி, வெற்றிவேலன்.

[மதிவாணன் உள்ளே நுழையக் கண்டு, வெற்றி வேலன் வெட்கப்பட்டு வேறு அறைக்குச் செல்கிறான். மதிவாணன், குழந்தை அருகே சென்று அதன் நெற்றியைத் தடவுகிறான். மருத்துவர் ஆவலுடன் பார்க்கிறார். குழந்தை கண் திறக்கவில்லை.]

மருத்: பாடு மதிவாணா! மெதுவாக...

மதி: இந்த நிலையிலா?

மருத்: இந்த நிலைமை போக!

[மெல்லிய குரலில் பாடுகிறான் மதிவாணன்; மெல்லக் கண் விழிக்கிறது குழந்தை...]

[அரண்மனையில் பக்கத்துக் கூடம். பணியாள் ஓடி வருகிறான்.]

பணி: குமாரதேவியார் வருகிறார்...

[குமாரதேவி அவசரமாக அங்கு வருகிறாள். அரசனைக் கண்டதும் ஆவலுடன்.]

குமார: குழந்தை எப்படி இருக்கிறாள்?

வெற்றி: பிழைத்துக் கொண்டாள்! அதோ...

[குமாரதேவி, குழந்தை இருக்கும் அறைப்பக்கம் வேகமாகச் செல்கிறாள். மதிவாணன் இருக்கவே தடுமாற்றத்துடன் நிற்கிறாள். மதிவாணன் வெறுப்புடன் சரேலென வெளியேறுகிறான். குமாரதேவி வருத்தத்துடன் வெற்றிவேலனிடம் வருகிறாள்.]

காட்சி—114

இடம்: வெற்றிவேலன் தனியறை,

இருப்: வெற்றிவேலன், மருத்துவர்.

மருத்: வீணான விசாரம்! குழந்தை பிழைத்ததை எண்ணிக் களிப்படைய வேண்டிய நேரத்தில், ஏன் வீண் கலக்கம்?

வெற்றி: (சலிப்புடன்) சரி, சரி! அவனை இங்கே சில நாட்கள் இருக்க ஏற்பாடு செய்தீரா?

மருத்: சிரமப்பட்டு சம்மதிக்கச் செய்தேன்.

வெற்றி: குமாரதேவியாருக்கு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன்—தவனக் காட்டுக் கோட்டையில்—செல்கிறேன்—குழந்தையைக் கவனித்துக் கொள்ளும்...

[வெற்றிவேலன் போகிறான்]

காட்சி—115

இடம்: தவனக்காட்டுக் கோட்டை வெளிப்புறம்.

இருப்: காவலாளி, அரசன், அமைச்சர், திலகா.

[காவலாளிகள் பரபரப்பாக வேலை செய்கின்றனர்.]

ஒருவன்: ராணி வராங்களாமே, குமாரதேவி!

காவலாளி: மான் இங்கே இருந்தா, வேங்கை வேறு இடமா போகும்?

[கோட்டையில் ஓர் இடம். அமைச்சரும் அரசனும்]

அமைச்: வேந்தே, அலங்கார விளக்குகள் வேண்டாமா?

அரசன்: விளக்கா....ஆமாம், ஒரே இருளாகத்தான் இருக்கிறது, என் மனம் போல (உள்ளே சென்று குழப்பத் துடன் திரும்பி) அமைச்சரே! கொடுமை செய்துவிட்டேன்! மனம் நிம்மதியாக இல்லை! உலவிவிட்டு வருகிறேன்! (அமைச்சர் உடன் வருவது கண்டு) இல்லை, தனியாக!

[காட்டில், மன்னன்! திலகா, கவசத்தால் மன்ன னைத் தாக்குகிறாள்.]

அரசன்: யாரது?

திலகா: வீராதி வீரனே! அபலைகளை அணைத்து அழிப்பதிலே அனுபவம் அதிகமல்லவா உனக்கு! ஏன் இந்தக் காட்டு ராணியைக் கண்டு ஓட்டமெடுக்கிறாய்? (மீண்டும் அரசனைத் துன்புறுத்துகிறாள். அரசன் உடலிலிருந்து ரத் தம் கசிகிறது)

திலகா: அன்பின் அறிகுறி! காதல் வெள்ளம்!

காட்சி—116

இடம்: வெற்றிவேலன் அரண்மனைத் தோட்டம்

இருப்: மதிவாணன், குமாரதேவி.

[மரகதமணி, குமாரதேவியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய், ஒரு புன்னைமர நிழலில் உட்கார்ந்து கொண்டுள்ள மதிவாணனைக் காட்டு கிறாள். மதிவாணன் திடுக்கிட்டு எழுந்திருக்கிறான். முகத்திலே கோபமும் வெறுப்பும் படருகிறது..,]

மதி: (வெறுப்புடன், கேலிக்குரலில்) மஹாராணி; வணக்கம்! நம்பி மோசம் போன இந்த நாடோடியின் வணக் கத்தை ஏற்றுக் கொள்வீரோ என்னமோ?

குமாரி: (அமைதியாக) மதிவாணரே! கோபம் வரத் தானே செய்யும். ஆனால்!

மதி: ஆனால்! அரண்மனைவாசிகளான எமக்கு இது தான் பொழுதுபோக்கு என்று கூறுகிறீரா தேவியாரே?

குமாரி: உங்கள் கோபப் பேச்சிலும் கவிதை நடை இருக்கிறது.

மதி: (கோபமாக) காதல் மொழி பேசி என் கருத்தைக் கெடுத்த காதகி! ஏன் என்னைப் பித்தனாக்கினாய்? 'ஆருயிரே, அரசா பெரிது!—இதோ முடி துறக்கிறேன்' என்று மழுப்பிவிட்டு, என்னை மோசம் செய்தாய், ஒரு முடிக்காக! என்னை நடைப்பிணமாக்கினாய், அரச போகத்திற்காக!

குமாரி: பதவி மோகம் எனக்கு! அதனால் உம்மை மோசம் செய்தேன்! அதுதானே, இன்னுயிரே, உம் குற்றச் சாட்டு?

மதி: (கோபமாக) இன்னுயிர்? எவ்வளவு துணிவு அப்படி இன்னமும் சொல்ல...

[குமாரதேவியைத் தாக்குபவன்போல் செல்கிறான். அவள் விலகாமல் நிற்கிறாள். அருகே சென்ற மதிவாணன் தயக்கமடைகிறான்.]

குமாரி: (புன்னகையுடன்) ஏன், அச்சமா? உம் காதல் தணியவில்லை. அந்த ஒளி கோபமாக வெளி வருகிறது!

மதி: தர்பார் தருக்கன் எவனாவது கிடைத்தால் அவனிடம் காட்டு உன் சாகசத்தை.

குமாரி: (முகத்தில் கோபரேகை படர) எல்லைக்கு வந்தாகிவிட்டது, கண்ணாளா! என் மனமும் ஒரு அளவுக்குத்தான் தாங்கிக் கொள்ள முடியும்.

மதி: (கேலியாக) ஆஹா! என்ன உருக்கம்! எவ்வளவு நேர்மை!

குமாரி: (கோபமாக) மதிவாணரே, இதோ பாரும்!

[பிரகடனத்தை வீசி எறிகிறாள் அவன் முகத்தில். மதிவாணன் அதைப் பரபரப்புடன் படித்துப் பார்க்கிறான்...]

மதி: முடி துறக்க ஏற்பாடாகி...கடைசி நேரத்திலே...

குமாரி: ரத்து செய்துவிட்டேன்; உம்மை ஏமாற்ற அல்ல.

மதி: ஏது! அதிகாரத்தோடு பேசுகிறாய்?

குமாரி: குறுக்கே பேச வேண்டாம். நான் பட்டத்தை விட்டுவிடத் தீர்மானித்தேன். பிரகடனம் இதோ. ஆனால் நடு நாட்டரசன் போர் தொடுத்துவிட்டான்.

குமாரி: (தொடர்ந்து) காதலா? அரசா? என்ற கேள்வியல்ல கவிவாணரே! நாட்டுக்குப் பேராபத்து! நான் அது சமயம், 'கொட்டு முரசு' என்று பேசுவதா, 'கட்டிக் கரும்பே' என்று உம்மிடம் வந்து கொஞ்சுவதா? இது என் பிரச்னை—சிக்கல். களம் சென்றேன்—கவிபாட அல்ல—கடும் போரிட!

மதி: குமாரி! குமாரி!

குமாரி: நாடு காப்பாற்றப்பட்டது. இங்கே வருகிறேன் உம்மிடம்; காட்டுக் குணம் இருப்பது காண...

மதி: குமாரி! குமாரி!

[என்று கெஞ்சியபடி அருகே செல்கிறான்.]

குமாரி: பிரகடனத்தை சோலை நாட்டுக்கு அனுப்பிவிடும். நான் புத்த மார்க்கப் பிரச்சாரத்துக்காகச் செல்கிறேன், வெளிநாட்டுக்கு.

[கோபமாகத் திரும்புகிறாள். மதிவாணன் அவளைத் தடுத்து நிறுத்தி...]

மதி: (மகிழ்ச்சிமயமாகி) குமாரி! என் உயிரே! வீணான சந்தேகம்—கோபம்—எனக்கு.

குமாரி: (புன்னகை பூத்து) ஆடவர் அனைவருக்கும் உள்ளதுதான் அந்தச் சுபாவம்! கவிவாணராயிற்றே, அந்தச் சுபாவம் உங்களுக்கு இராதென்று நினைத்தேன்!

[மதிவாணன் அசடு சொட்டப் பார்க்கிறான், அவள் கன்னத்தைத் தட்டியபடி...]

குமாரி: ஆனால், இந்தக் காதல் விஷயத்திலே மட்டும் மாவீரனானாலும், மகா கவியானாலும், ஒரே அசடுகள் தான் ஆடவர்கள்.

மதி: கேலி போதும்! குமாரி! வா...வா....! உன்னிடம் எவ்வளவோ பேச வேண்டும்! வாயேன்!

காட்சி—117

இடம்: காடு.

இருப்: திலகா, முத்துமாணிக்கம்.

[திலகா ஓர் புறத்தில்—அவளுக்கு எதிர்ப்புறமாகத் தொலைவிலே முத்துமாணிக்கம் தள்ளாடிக் கொண்டு வருகிறான். அவனைக் கண்டு திலகா அலறுகிறாள். அவன் ஓடி வருகிறான், திலகா என்று தெரிந்ததும்.]

முத்து: திலகா! என் கண்ணே! காட்டிலா? இந்தக் கோலத்திலா?

திலகா: யார்? என் மாணிக்கமா? என் இன்பமா?

[என்று கூவிக் கொண்டே ஓடுகிறாள். கால் இடறிக் கீழே விழுகிறாள். அவளைத் தூக்கி மடி மீது சாய வைத்துக் கொண்டு ஆசையுடன் பார்க்கிறான், முத்து. அவன் முகத்தை அன்புடன் தடவிக் கொடுக்கிறாள் திலகா. அவன் பயப்படுகிறான்...]

திலகா: என் முத்துவா? என் மாணிக்கமா? கடைசியில் வெற்றி! காதல் பாதையில் வெற்றி பெற்றேன்! இதோ என் ஆருயிர்!

[என்று கூறிக்கொண்டிருக்கும்போது மயக்கம்மேலிடுகிறது. 'திலகா...திலகா...' என்று மனமுருகக் கூவுகிறான் முத்துமாணிக்கம்.]

காட்சி—118

இடம்: அரண்மனை.

இருப்: மதிவாணன், முத்துமாணிக்கம்.

[மதியும் குழந்தை மரகதமும் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போது...]

சேவகன்: (ஓடிவந்து) தங்கள் தங்கை திலகாவை...!

மதி: கண்டு பிடித்து விட்டார்களா, என் திலகாவை!

சேவ: திலகம்மை காட்டில் பிணமாக...

மதி: திலகா! திலகா!

[மதி ஓடுகிறான். ஒரு மரத்தடியில் திலகா பிணமாகிக் கிடக்கிறாள். பக்கத்தில் முத்துமாணிக்கம் அலங்கோலமான நிலையில் காணப்படுகிறான். மதிவாணன் அவனைக் கவனிக்கவில்லை; திலகாவைக் கண்டதும் கதறுகிறான்.]

மதி: திலகா! அரச சபை! கவிதா மண்டபம்! காதல் மேடை! எங்கெங்கோ அலைந்தேன் அறிவற்று! உன்னை இழந்தேன்! என் அருமைத் திலகமே! என் செய்வேன்— எப்படி சகிப்பேன்?

முத்து: ஒரு பாட்டுப்பாடு. அதுதானே உன் வேலை.

[மதிவாணன் அப்போதுதான் முத்து அங்கு இருப்பதைக் காண்கிறான். கோபம் கொப்பளிக்கிறது]

மதி: ஆகா! நீயா! காதல் காதல் என்று கனிமொழி பேசி, என் தங்கையின் கருத்தைக் கெடுத்த பாதகா! ஏனடா என் தங்கையைக் கைவிட்டாய்?

முத்து: நான் அவளைக் கைவிட்டேனா?

மதி: என்னடா பசப்புகிறாய்? என் காதில் நாரசம் போல் வீழ்ந்ததே அன்று உன் பேச்சு.

முத்து: என் பேச்சு? ஏமாளி! என்ன சொன்னேன் நான்? திலகாவை நான் இழக்கத்தான் வேண்டும் என்றேன்! என் தூய காதலையா சந்தேகிக்கிறாய்? திலகாவை இழக்கத் தீர்மானித்தது, மதியிலி, காதல் எனக்கு இல்லாததால் அல்ல; இந்த இதயத்தில் அவள்தானடா எப்போதும்! ஆனால், சதிகாரரின் செயலால், நான் திலகாவுக்குத் துளியும் ஏற்றவன் அல்ல என்ற நிலை பெற்றேன். விளங்காது உனக்கு!

மதி: என்னடா முத்து! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

[முத்து தனது முகத்தின் இடப்பக்கமாகக் கை வைத்து வேதனையுடன் சதையைப் பிய்த்து எடுக்கிறான். உட்புறம் கோரமான குழிகள் நிரம்பியதாக இருக்கிறது. மதிவாணன் இதைக் கண்டு, 'ஐயோ, இதென்ன முத்து?' என்று கேட்கிறான்.]

முத்து: பார்! பாரப்பா புலவனே! பார், முத்து மாணிக்கத்தை! ஆயிரம் தடவை புகழ்ந்தாள் அழகான முகம் என்று திலகா! பார்த்தாயா, எப்படி ஆக்கப்பட்டுவிட்டது!

மதி: முத்து...உனக்கா இக் கதி?

முத்து: வில்வக்காட்டுச் சீமானின் வேலை! அவன் மகளை மணக்க மறுத்தேன்! பழி தீர்த்துக் கொண்டான்! இப்படி ஆனபிறகு திலகாவை நான் எப்படி திருமணம் செய்து கொள்ள முடியும்? மனம் இடம் தருமா? தூய காதல் ததும்பும் மனமடா இது! இடம் தருமா? அதனால்தான் அவளை இழக்கத் துணிந்தேன்.

மதி: தியாகியடா முத்து நீ! வீரனடா நீ! உன் உள்ளம் உத்தமமானது! உணராமல் போனேன்! என்னை மன்னித்து விடு! (முத்துவை அணைத்தபடி) தியாகச் சின்னமே வா! திலகா எப்போதும் உன்னுடன்தான் இருப்பாள். வா முத்து! வா! (அவனை அழைத்துச் செல்கிறான்.)

காட்சி—119

இடம்: மயானம்.

இருப். மதிவாணன், முத்துமாணிக்கம்.

[மதிவாணன் மனம் வெதும்பி அழுகிறான்.]

மதி: ஐயோ திலகா! என் அருமைத் தங்கையே! உன்னை நான் இழந்தும் உயிர் வாழ வேண்டுமா? பூங்கொடியே, உன் எடைக்கு எடை தங்கம் தேடிக்கொடுத்து முத்துமாணிக்கத்துக்கு உன்னைத் திருமணம் செய்து வைக்கும் ஒரே நோக்கம் கொண்டுதானே இந்த வேழ நாடு வந்தேன்! இந்தக் கோலம் காணவா? சாலையிலும் சோலையிலும் காதற் கனிமொழி பேசி நீங்கள் மகிழ்ந்தாடுவதைக் கண்டு களிக்க வேண்டிய இந்தக் கண்கள் இந்தத் தீயையா காணவேண்டும்?

'என் அண்ணா இருக்கிறார்—எனக்கு என்ன குறை' என்று அன்பு ததும்பப் பேசி என்னை ஆனந்தத்தில் ஆழ்த்துவாயே. ஐயோ! உன் அண்ணன் உனக்குத் தந்தது என்ன? இந்தப் பெரு நெருப்பா? என் உடன் பிறப்பே! நெஞ்சிலே புகுந்துவிட்டது பெரு நெருப்பு. திலகா! இனி என்று நான் காண்பேன் உன் மலர்முகத்தை! தாயை இழந்தேன்! தங்கையை இழந்தேன்! வாழ்வின் ஒளி இழந்தேன்! பாலைவனமாகி விட்டதே என் வாழ்வு! அந்தோ, திலகா! திலகா!!

காட்சி—120

இடம்: அரண்மனையில் ஓர்புறம்.

இருப்: மாசிலாமணி, அருமறையானந்தர்.

[மடாதிபதியும் அருமறையானந்தரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

அருமறை: காலதாமதம் கூடாது. காரியம் கெட்டுவிடும். மதிவாணன் அரண்மனையில் மீண்டும் ஆதிக்கம் பெற்றுவிட்டால் நமக்குப் பேராபத்தாகும்.

மாசி: மன்னனே தொலையப் போகிறான்! மதிவாணன் என்ன செய்ய முடியும்? இந்தப் பூஜை எதற்காகத்தான்? இதோ, மன்னனை அரணடிகொண்டு சேர்க்கும் அற்புதமான ஜெபமாலை! ஒரு மண்டலம் ஜெபித்தால் போதுமே— கடும் விஷம் கக்கும் ஜெபமாலை.

அரு: ஏற்பாடு பிரமாதம்! மாசிலாமணி! நாட்டுக்கு அமைச்சனாக வேண்டியவன் நீ! சந்தேகமில்லை...!

மாசி: வாரும். மடாலயம் சென்று நமது போர் வீரர்களையும் அழைத்து வருவோம்.

[வெளியிலிருந்து மரகதமணி கேட்டுக் கொண்டிருக்கிறாள்.]

[படுக்கையில் மன்னன் சாய்ந்துகொண்டிருக்கிறான்; மரகதமணி பதறிக்கொண்டே வருகிறாள். வெற்றிவேலனிடம் இரகசியமாகக் கூறுகிறாள்)

வெற்றி: என்ன, என்ன?

மரக: ஆமாம்பா! என் காதால் கேட்டேன்!

வெற்றி: கெடுமதியாளர்கள்! பாடம் கற்பிக்கிறேன். இப்போதே...யாரங்கே?...குருதேவரைக் காணவேண்டும்!

காட்சி— 121

இடம்: சுடலை.

இருப்: மதிவாணன், போர்வீரர்கள்.

[திலகா தகனம் செய்யப்படுகிறாள். வேதனை மிகுந்தவனாகித் தள்ளாடி நடந்து செல்கிறான் மதிவாணன். இரு போர்வீரர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மதிவாணன் அவர்கள் அருகே அமர்ந்திருக்கிறான்—அவர்கள் அறியாமல்.]

ஒருவன்: கதறுகிறான் மதிவாணன். எப்படித் தாங்கிக் கொள்வான் பாபம். புள்ளிமான் போலத் துள்ளி விளை

யாடிக் கொண்டிருந்த திலகா, வேங்கையால் கொல்லப் பட்ட விஷயம் தெரியாது மதிவாணனுக்கு...

மற்றவன்: தெரிந்தால் நெஞ்சு வெடித்துவிடும்!

ஒருவன்: அன்று நான்தான் தவனக்காட்டுக் கோட்டை யில் காவல்...மன்னன்...திலகாவை...

மதி: (திடுக்கிட்டு) யாரது? திலகாவை, மன்னன் என்று பேசினது? (இருவரும் திடுக்கிட்டு)

ஒரு: ஒன்றுமில்லை மதிவாணரே.

மதி: எதையோ மறைக்கிறாய்! திலகாவையும் மன்ன னையும் சேர்த்துப் பேசிய மர்மம் என்ன? (அவன் தயங்க, மதி, அவன் கழுத்தைப் பிடித்து நெரித்தபடி உரத்த குரலில்) என்ன, என்ன?

அவன்: மதிவாணரே! மன்னன், மாசற்ற உன் தங் கையை...

மதி: (ஆத்திரமும் அழுகுரலும் கொண்டு) என் தங் கையை...ஐயையோ...சொல்லு...என் தங்கையை...

ஒருவன்: அந்தத் தீயவன் கற்பழித்துவிட்டான்...மனம் குழம்பி அந்த மலர்க்கொடி கருகிவிட்டாள்...

மதி: [ஆத்திரமுற்று] ஹா...என்ன, என்ன...! என் தங்கையை...ஐயோ...திலகா, உனக்கா இந்தக் கதி...

மதி: (போர் வீரனிடமிருந்து கட்டாரியைப் பிடுங் கிக் கொண்டு) மன்னனா இவன்...நாடா இது...திலகா வின் அண்ணன்தானா நான்...ஆஹா! பாடித் திரியும் பராரி என்று எண்ணி இப் பாதகம் புரியத் துணிந்தானா அந்தப் படுமோசக்காரன்...இதோ...இதோ... [வேகமாக நடந்த படி) இதோ, தீயவனைத் தீர்த்துக் கட்டாமல் திரும்பமாட் டேன்.

காட்சி— 122

இடம்: வெற்றிவேலன் அரண்மனை.

இருப்: மதிவாணன், அரசன், சேவகன்.

[மதிவாணன் வரக்கண்ட சேவகன், அரசனிடம்]

சேவ: மதிவாணன் கட்டாரி கொண்டு வருகின்றான் கடுங்கோபமாக.

அரசன்: வருகிறானா? என் உத்திரவின்றி அவனை ஏதும் செய்ய வேண்டாம்.

[அரண்மனையின் உட்புறக் கதவை உதைத்துத் தள்ளிவிட்டு ஆவேசமாக மதிவாணன் வருகிறான்! வெற்றிவேலன் கடைசி அறையில் ஆசனத்தில் இருக்கிறான். அவனருகே பாதுகாவலர் சிலர் உள்ளனர். மன்னனைக் கண்டதும் ஆத்திரம் கொள்கிறான் மதிவாணன். என்றாலும், தெளிவாக, உறுதியுடன் பேசுகிறான்]

மதி: கவிஞன் என்ன கனல் கக்கும் கண்களுடன், கரத்தில் கட்டாரியுடன் வந்திருக்கிறானே என்று எண்ணுகிறாயா காவலனே! திலகாவின் அண்ணன் வந்திருக்கிறேன் தீயவனே! திலகாவின் அண்ணன்— திலகாவுக்கு நேரிட்ட கதியைத் தெரிந்து கொண்டு, உன்னை அதோகதியாக்க வந்திருக்கிறேன். வேங்கையிடம் பிடிபட்ட புள்ளிமான் போல, புயலில் சிக்கிய பூங்கொடிபோல் ஆனாளே, என் திலகம்! களங்கமற்ற அந்த முகத்தைக் கண்டாயே காதகா! எப்படி உன் மனம் இடம் தந்தது இழிசெயல் புரிய? எப்படிக் கதறினாளோ என் தங்கை! எவ்வளவு கெஞ்சினாளோ! காலடியில் வீழ்ந்திருப்பாள்; கடவுளைத் துணைக்கு அழைத்திருப்பாள்— கண்ணீரைப் பொழிந்திருப்பாள். கல்மனம் படைத்தவனே! உன் மனம் இளகவில்லையா ஒரு துளி? எப்படி இளகும்? மக்களைக் கசக்கிப் பிழிந்து மதோன்மத்தனாக வாழ்ந்து வந்தவனல்லவா நீ? வறண்ட தலை, இருண்ட விழி, உலர்ந்த உதடு, சுருங்

கிய முகம், காய்ந்த வயிறு, சோர்ந்த உடலம், ஓட்டைக் குடிசை, ஒடிந்த பாண்டம், மாரடித்து அழும் மனைவி, மண்ணில் புரளும் மக்கள், தேம்பித் தவிக்கும் தாய், சாந்தியிழந்த தங்கை—உன் ஆட்சியிலே காணக் கிடக்கும் காட்சிகள் இவை. இந்தக் கொடுமைகளைச் செய்து செய்து பழக்கப் பட்டுப்போய் விட்டவனல்லவா நீ? கணக்கு தீர்க்கும் காலம் வந்துவிட்டது காவலனே! திலகாவின் கண்ணீரடா இது... கன்னியின் கண்ணீர். காதகனே! உன்னால் கற்பழிக்கப்பட்ட என் தங்கையின் கண்ணீர்! கண்கள் கூசுகிறதா, இறுக மூடிக் கொள்—உன் இதயத்தில் இதைப் பாய்ச்சாது விடேன்!

*[மதிவாணன் அரசன் அருகே செல்ல, வீரர்கள் தடுக்கிறார்கள்—சீறிப் போரிடும் அவனைத் தடுத்து நிறுத்துவது கடினமாகிறது—கோபாவேசத்துடன்]*

மதி: என்னைத் தடுத்துவிட்டால் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணாதே! இந்த ஆணவ அரசை அழித்தொழிக்கும் ஆற்றல்மிக்க வீரர்கள் வருகிறார்கள்!

*[காலடிச் சத்தம்—அருமறையும் மாசியும் வருகிறார்கள்—நிலைமையைக் கண்டு மாசி பதறுவது போலாகி)*

மாசி: என்ன அக்ரமம்! நீசா, மன்னனையா கொல்லத் துணிந்தாய்? எங்கள் மார்க்க ரட்சகனையா தாக்கத் துணிந்தாய்? மன்னா! இந்த மாபாவி...

வெற்றி (அலட்சியமாக) கட்டாரியால் குத்த வந்தான்!

மாசி: மகாபாதகன்—மகாபாதகன்—மரணதண்டனைதான் தரவேண்டும்.

*[மரகதம் ஒரு சிறு பேழையை மன்னனிடம் தந்து விட்டுப் போகிறாள்.]*

அரு: நாத்திகன்—பழிபாவத்துக்கு அஞ்சுவானா? இவனைக் கொல்லாவிட்டால்,மன்னா, தர்மம் தழைக்காது.

வெற்றி: (மேலும் அலட்சியமாக) கிடக்கிறான்! அனுபவமற்றவன்! காதகனின் கத்தியும் கட்டாரியும் என்னை என்ன செய்யும், குருதேவரின் ஆசி இருக்கும்போது! இவன் அறியான்....(பேழையைத் திறந்து அருமறையிடம் காட்டி) எனக்குச் சாகாவரம் அருள தாங்கள் தயாரித்தஜெபமாலை! எனக்காக விசேஷ பூஜை செய்து தயாரித்த ஜெபமாலை அல்லவா இது! ஜெபம் நடக்கட்டும்! (பேழையை அருமறையிடமும் மாசியிடமும் மாறிமாறிக் காட்ட இருவரும் மிரள்கிறார்கள்) கொடியவர்களே! மதவேடமிட்டுத் திரிந்து என் மதியை மாய்த்த மாபாவிகளே! ஆதிக்க வெறிக்காக ஆண்டிக் கோலமிட்ட அக்கிரமக்காரர்களே! உங்கள் படுமோசம் அறியாமல் உத்தமன் மதிவாணனுக்குக் கேடு பல செய்தேன்! நானோர் கடையன்! நில்லாதீர், என் முன்! (பணியாட்களைப் பார்த்து) இவர்களை இழுத்துச் செல்லுங்கள்...சிறைக்கு...

[இழுத்துச் செல்லுகிறார்கள்.]

மதி: (தழதழத்த குரலில்) வேந்தே... வேந்தே...

வெற்றி: (உருக்கமாக) உத்தமனே! உன்னிடம் மன்னிப்பு கேட்கிறேன்! (தள்ளாடி, அவன் அருகே வந்து, மடல் கொடுத்து)இதோ மன்னிப்பு மடல்.மக்களாட்சி மடல்! மதிவாணா! நான் திருந்தி விட்டேன்!

[சாய்கிறான்]

காட்சி—123

இடம்: வேழநாட்டு அரண்மனையில் ஓர் கூடம்.

இருப்: மதிவாணன், குமாரதேவி.

[விசாரத்துடன் இருக்கும் மதிவாணனை, குமார தேவி, மக்கள் மன்றத் தலைவர்கள் கூடியுள்ள இடத்துக்கு அழைத்துச் செல்கிறாள்.]

குமாரி: கண்ணீர் விடுவது போதும் கண்ணாளா! கடமையைக் கவனிக்க வேண்டாமா? பெரிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. நாட்டுக்கு மன்னன் இல்லை. மக்கள் மன்றம் கூடுகிறது. மனம் உடைந்துபோகக் கூடாது இப்போது.

காட்சி—124

இடம்: சிறைச்சாலைக்கு முன்புறம்.

இருப்: மதிவாணன், குமாரதேவி, அருளாளர், மக்கள்.

[அருளாளரைப் பார்த்து அருமறை வெட்கித் தலைகுனிகிறார். அருளாளர் கோபமாகப் பேசுகிறார்.]

அருளா: சன்மார்க்கம் பரப்பச் சொல்லி உன்னை அனுப்பினேன்; நீ சுயநலப் பேய்பிடித்து ஆடி அழிந்தாய்! மக்களுக்கு உழைக்கச் சொல்லி உன்னை மடாலயத் தலைவனாக்கினேன். நீயோ மக்களைக் கசக்கிப் பிழிந்து, கொழுத்தாய். உன் போன்ற தீயவர்களால் மதமே நாசமாகலாம். போ, போ! உன்னைப் பார்ப்பதும் மகா பாபம். மக்கள் மன்றம் கூடுகிறதாம்! அங்கு சென்று மன்னிப்பு கேட்டுக் கொள். மார்க்கத்தையே நாசமாக்கிவிட்டாய். மகாபாதகன் நீ! மகாபாதகன் நீ.

மதி: மக்களாட்சி மலர்கிறது வேழ நாட்டவரே! வீரரே! மக்களாட்சி மலர்கிறது.

குமாரி: இங்குமட்டுமல்ல, என் நாட்டிலும் மக்களாட்சி தான். ஓலை அனுப்பிவிட்டேன்.

மதி: மட்டற்ற மகிழ்ச்சி. மக்களாட்சியிலே உழைப்ப வரே உயர்ந்தோர். உலுத்தருக்கு இடமில்லை. உடைமை எனக்கே என்று கொக்கரிக்கும் கொழுப்பொம்மைகளுக்கு இடமில்லை. மக்களுக்கே நாடு சொந்தம். சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி. அறிவு பரப்புவோம்; அற நெறியை மறவோம்.

[இரு போர் வீரர்கள் மடாதிபதியையும் மாசிலா மணியையும் இழுத்து வருகிறார்கள்.]

மதி: மகானுபாவர்கள் வந்திருக்கிறார்கள்.

மக்கள்: அடித்து விரட்டுங்கள் இவர்களை.

மதி: வேண்டாம். இவர்கள் தாராளமாக உலவ அனு மதியுங்கள்! இவர்கள், மக்கள் மதிபெற்றனர் என்பதை எடுத் துக் காட்டும் திருத்தூதர்களாக இருக்கட்டும். பாடுபட்டுப் பிழைக்கட்டும். பஞ்சை பராரிகளைப் பார்க்கட்டும். பசி, பட்டினி இன்னது என்று தெரியட்டும். இவர்களின் கபட வேடத்தை நம்பி மோசம் போகாதீர்கள். இனி ஒரு விதி செய்வோம்; அதை எந்த நாளும் காப்போம். அன்பே கடவுள்; அறநெறியே அபிஷேகம்; தூய உள்ளமே கோயில்; மக்கள் பணியே பூஜை. அதற்காக வாழ்வோம்.

[மடாதிபதியும் மாசியும் வெளியேறுகிறார்கள்]

மக்கள்: மக்களாட்சி வாழ்க!

[மதிவாணன் கொடியேற்றி வைக்கிறான்.]

MADRAS-1
சென்னை-1

# இரு பரம்பரைகள்
(சிறுகதைகள்)

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

சமூகத்தில் இன்றளவும் தீர்க்கப்பட முடியாமல் இருக்கின்ற பல்வேறு பிரச்னைகளை அடையாளம் காட்டுவது அல்லது அவைகளை நீக்குவதற்கான பரிகாரம் காண்பது என்பது எல்லோராலும் முடியாத ஒன்று. அதுவும், 'சிறுகதை'யின் வாயிலாகத் தெரியப்படுத்துவது அல்லது அதைப் படிப்போரைத் தெளிய வைப்பதென்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல; மிகப் பெரிய ஒரு கலையாகும்.

அந்தக் கலையில் புதுவழி கண்ட பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நிரம்ப உண்டு. 'சட்'டென்று கிளம்பி, 'பொட்'டென்று தளரும் இக்கால வெறியுணர்ச்சிக் கதைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட முத்தான—முகம் பார்க்கும் கண்ணாடிபோல் பயன்படும் சத்தான கதைகளின் தொகுப்பு நூல் இது.

விலை ரூ. 5.90

**பூம்புகார் வெளியீடு**

XA:190
190



# பேரறிஞர் அண்ணா

''அண்ணாவின் பலதிற ஆற்றல் எவரையும் திகைக்க வைக்கக் கூடியது. பொதுமேடை வானில் முன்பு ஒளிர்ந்த மின்மினிகள், விண்மீன்கள், பிறைமதியங்கள் யாவும் ஒதுங்க, பேரொளி வீசிப் புதுப் பொழுது மலரச்செய்யும் ''வெங்கதிரவன்'' அண்ணா அவர்களே என்பதை அறியாதார் இலர். எழுத்துத் துறையிலும் சுவைகுன்றாது, எப்பொருள் பற்றியும் அறிவுப் பயன் நிறைவுறும் வண்ணம், எத்தனைப் பக்கம் வேண்டுமானாலும் எழுதும் திறன் அவர் தனியுரிமையே ஆகும். எழுத்துக்கு ஒரு நடை, மேடைப் பேச்சுக்கு ஒரு நடை, உரையாடலுக்கு ஒரு நடை என்பது அவரிடம் காண முடியாது. இருந்தால் இருப்பார்; எழுந்தால் எதிலும் ஓரே காளமேகந்தான்...''

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே, சென்னை-600 001.